1568
25-3-09

வெளியீடு: 21-08-2008 Issued: 21-08-2008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 29, 2008—தொகுதி 51—எண் 1**

**Tuesday, the 29th April, 2008—Volume 51—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai-600 009**

**[Price Rs. 3.00**

D
V211,31'808
808.51.1
228384

பக்கங்கள்

**4. கவன ஈர்ப்பு**—தொடர்ச்சி

வழிகாட்டி மதிப்புகள் பதிவுத் துறையால் உயர்த்தப்பட்டது—தொடர்ச்சி

திரு. வே. செந்தில் பாலாஜி — 48,49-50

**5. அறிக்கைகள் அளித்தல்**—

பொது நிறுவனங்கள் குழு — 50

**6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)**—

தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 — 50-51

**7. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி — 51-172

(அ) கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை
(ஆ) கோரிக்கை எண் 10—வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) — 51-172

* மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் — 52,89, 110, 142, 156-159, 161-168

* மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா — 73, 89, 95, 100-102, 146-156

* திரு. சி.வி. சண்முகம் — 90-99, 168-169

* திரு. எச். அப்துல் பாசித் — 102-108

திரு. கு. ஹசன் அலி — 108-113





பக்கங்கள்

**7. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை
(ஆ) கோரிக்கை எண் 10—வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) —தொடர்ச்சி

* திரு. கே.எல். இளவழகன் — 113-119

* திரு. ஞா. ஜாண் ஜோசப் — 120-123

திரு. சு. குணசேகரன் — 123-126

திரு. ரா. வரதராஜன் — 126-128

திரு. எஸ்.பி. ஜெயராமன் — 129-134

திரு. எச். வசந்தகுமார் — 134-140

* திரு. சி. துரைராஜ் — 140-146

**8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 172-173

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v-x |
| Governor and Council of Ministers | xi-xv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xvii-xix |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxi-xxxi |
| 1. **வினாக்கள்-விடைகள்—** | 1-39 |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | |
| 2. **அறிவிப்புகள்—** | 39-40 |
| (அ) ஒரே ஏவுகணையில் 10 செயற்கைக்கோள்களை விண்ணுக்கு அனுப்பிய சாதனைக்காக விஞ்ஞானிகளுக்குப் பாராட்டு | 39 |
| (ஆ) சாலை விபத்துகளால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு நிதியுதவி | 40 |
| 3. **தகவல் கோரல்—** | |
| மாண்புமிகு முதலமைச்சர்மீது உரிமை மீறல் பிரச்சினை | 40 |
| திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 40 |
| 4. **கவன ஈர்ப்பு—** | |
| வழிகாட்டி மதிப்புகள் பதிவுத் துறையால் உயர்த்தப்பட்டது | 41-50 |
| திரு. சி. கோவிந்தசாமி | 41,43-46,47 |
| மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் | 41-43, 46-47, 48, 49,50 |

D
V211,31'p08
p08-81.1

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228384
சென்னை-600 008
நூலகம்



## ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

*பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்*

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

*நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்*

**3. மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

*மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்*

**4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**5. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்



**9. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

**10. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**11. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**12. வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு

**13. சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

**14. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**15. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**16. குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

**17. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்

**18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



**19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**20. கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

**21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

**22. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

**23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

**24. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**26. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

**27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**29. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**30. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**31. கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

**2. Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

**3. Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veeraswami:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

**4. Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

**5. Minister for Co-operation** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation, Statistics and welfare of Ex-Servicemen

| | | |
|---|---|---|
| 6. **Minister for Agriculture** | .. | **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development |
| 7. **Minister for Public Works and Law** | .. | **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts |
| 8. **Minister for Higher Education** | .. | **The Hon. Dr. K. Ponmudi:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals |
| 9. **Minister for Transport** | .. | **The Hon. Thiru K.N. Nehru:** Transport, Nationalised Transport and Motor Vehicles Act |
| 10. **Minister for Health** | .. | **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Health, Medical Education and Family Welfare |
| 11. **Minister for Rural Industries** | .. | **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Rural Industries including Cottage Industries and Small Industries |



| | | |
|---|---|---|
| 12. **Minister for Revenue and Housing** | .. | **The Hon. Thiru I. Periasamy:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits, Registration of Companies, Housing, Rural Housing and Housing Development |
| 13. **Minister for Tourism and Registration** | .. | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism, Tourism Development Corporation, Registration and Stamp Act |
| 14. **Minister for Information** | .. | **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:** Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority |
| 15. **Minister for Food** | .. | **The Hon. Thiru E.V. Velu:** Food, Civil Supplies, Consumer Protection and Price Control |
| 16. **Minister for Slum Clearance and Accommodation Control** | .. | **The Hon. Thiru Suba. Thangavelan:** Slum Clearance Board and Accommodation Control |
| 17. **Minister for Backward Classes** | .. | **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees |

18. **Minister for Labour** .. **The Hon. Thiru T.M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment

19. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru K.R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

20. **Minister for Handlooms** .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

21. **Minister for School Education** .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

22. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

23. **Minister for Environment** .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

24. **Minister for Forests** .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



25. **Minister for Highways** .. **The Hon. Thiru M.P. Saminathan:**

Highways and Ports

26. **Minister for Social Welfare** .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

27. **Minister for Animal Husbandry** .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

28. **Minister for Adi Dravidar Welfare** .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

29. **Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

30. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

31. **Minister for Khadi** .. **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. கு. பிச்சாண்டி

திரு. குத்தாலம் க. அன்பழகன்

திருமதி டி. யசோதா

திரு. கி. ஆறுமுகம்

திரு. என். நன்மாறன்

திருமதி பி. பத்மாவதி

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 26-3-2008 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

11-98—2

| | |
|---|---|
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இ. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. அ.மு.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சி. நிர்மலா, பி.காம்.,பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.சி.ஏ. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - குழு அலுவலர் |



| | |
|---|---|
| திரு. ம. பன்னீர் செல்வம் | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. இ. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| செல்வி எஸ். பிலோமினா, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |

## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | - சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | - வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | - ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | - அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | - திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | - சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | - சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | - ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | - பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | - பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி–1 |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | - அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | - செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | - அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | - ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | - உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | - கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | - திருவாடானை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன்,
திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன்,
திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
44. கண்ணப்பன், திரு. மு. .. தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. .. தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. .. செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. .. காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன்,
திரு. வீ. .. தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. .. முகையூர்
52. கலீலுர் ரஹ்மான், திரு. ம.அ. .. அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. .. தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர்
(திருமதி) கே. .. மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. .. எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு.
அக்ரி எஸ்.எஸ். .. கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. .. தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. .. சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. .. குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. .. திருநாவலூர்

64. குருசாமி, திரு. எஸ்.எஸ். - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ)
74. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். - மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. - விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
90. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தர், திரு. சு. - உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்ராம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
105. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். - முசிறி
107. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி

109. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்

110. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்

111. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. - மதுரை மத்தி

113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி

114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)

115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்

116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி

117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)

118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு

119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை

120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி

121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்

122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)

123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்

124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆ.வா.)

125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்

126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்

127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு

128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்

129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)

130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு

132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)

133. துரைமுருகன், திரு. - காட்பாடி

134. துரைராஜ், திரு. சி. - மேட்டுப்பட்டி

135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)

136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு

137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை

138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை

139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி–2

140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி

141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)

142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்

143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)

144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)

145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி

146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)

147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி

148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்

149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு

150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்

151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்

152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்

153. பிச்சா[illegible], திரு. கு. - திருவண்ணாமலை

154. பிரபாவதி, திருமதி பெ. - தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். - அவினாசி (செ.வ.)
156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். - கடையநல்லூர்
157. புஷ்பராஜ், திரு. செ. - கண்டமங்கலம் (செ.வ.)
158. பூங்கோதை, டாக்டர் (திருமதி) - ஆலங்குளம்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். - திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. மு.க. - பூம்புகார்
162. பெரியண்ணன், திரு. பி.என். - பெண்ணாகரம்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - கோயம்புத்தூர் கிழக்கு
164. பொள்ளாச்சி
வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
166. பொன்னுசாமி, திரு. கே. - சேந்தமங்கலம் (ஆவா.)
167. பொன்னுதுரை, திரு. செ. - பெருந்துறை
168. போளூர் ம. வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
169. போஸ், திரு. ஏ.கே. - திருப்பரங்குன்றம்
170. மகேந்திரன், திரு. இ. - உசிலம்பட்டி
171. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. - திருவோணம்
173. மணி, திரு. எஸ். - பொங்கலூர்
174. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
175. மணி, திரு. ஜி.கே. - மேட்டூர்
176. மதிவாணன், திரு. உ. - திருவாரூர் (செ.வ.)



177. மலரவன், திரு. தா. - கோயம்புத்தூர் மேற்கு
178. மாணிக்கம், திரு. இரா. - குளித்தலை
179. மாரிமுத்து, திரு. வே. - நாகப்பட்டினம்
180. மாலைராஜா, திரு. என். - திருநெல்வேலி
181. முருகவேல், திரு. கே. - முதுகுளத்தூர்
182. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
183. மூர்த்தி, திரு. டி. - திருப்போரூர் (செ.வ.)
184. மூர்த்தி, திரு. பி. - சோழவந்தான்
185. மேகநாதன், திரு. த.அ. - காவேரிப்பட்டினம்
186. மோகன், திரு. பெ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
188. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. - வில்லிவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
191. ரவிக்குமார், திரு. து. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
192. ரவிச்சந்திரன், திரு. எல். - சேலம்-1
193. ராணி வெங்கடேசன், திருமதி - சாத்தான்குளம்
194. ராதாகிருஷ்ணன், திரு. ல. - கோவில்பட்டி
195. ராமச்சந்திரன், திரு. கா. - கூடலூர்
196. ராமநாதன், திரு. கே.வீ. - பவானி
197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். - இளையான்குடி
198. ராஜகுமார், திரு. எஸ். - மயிலாடுதுறை
199. ராஜசேகரன், திரு. மா. - தொட்டியம்

200. ராஜன், திரு. அ. .. நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்கேகே.பி. .. ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. .. திருப்பத்தூர்
203. ராஜேந்திரன், திரு. கே.எஸ்.கே. .. மதுரை மேற்கு
204. லட்சுமணன், திரு. ச. .. போடிநாயக்கனூர்
205. லதா, திருமதி ஜி. .. குடியாத்தம்
206. லீமா றோஸ், திருமதி ரா. .. திருவட்டாறு
207. வசந்தகுமார், திரு. எச். .. நாங்குநேரி
208. வரதராஜன், திரு. ரா. .. விருதுநகர்
209. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
210. விடியல் எஸ். சேகர், திரு. .. காங்கேயம்
211. விஜயகாந்த், திரு. .. விருத்தாசலம்
212. விஜயகுமார், திரு. கே.எஸ். .. கும்மிடிப்பூண்டி
213. விஜயகுமார், திரு. பெ.சு. .. பொன்னேரி
214. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. .. செய்யாறு
215. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். .. பேராவூரணி
216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. சேலம்-2
217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
218. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு
219. வேலுசாமி, திரு. இல. .. தருமபுரி
220. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்
221. வேலுமணி, திரு. சு.ப. .. பேரூர்
222. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி



223. வேல்முருகன், திரு. தி. .. பண்ருட்டி
224. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
225. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்
226. ஜாண் ஜோசப், திரு. ஞா. .. விளவங்கோடு
227. ஜெகன்மூர்த்தி, திரு. மு. .. அரக்கோணம் (செ.வ.)
228. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
229. ஜெயக்குமார், முனைவர் கு. .. நாமக்கல் (செ.வ.)
230. ஜெயபால், திரு. எஸ். .. குளச்சல்
231. ஜெயராமன், திரு. எஸ்.பி. .. வந்தவாசி (செ.வ.)
232. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி
233. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
234. ஹசன் அலி, திரு. கு. .. இராமநாதபுரம்
235. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஜி. மாசிலாமணி .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரை 17

## 2008 ஏப்ரல் 29, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க*
*சொல்லிற் பயனிலாச் சொல்."*

*பயனளிக்காத சொற்களை விடுத்து மனத்தில் பதிந்து பயனளிக்கக் கூடிய சொற்களையே கூற வேண்டும்.*

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள். வினா எண் 171, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**171—**

### அலுவலகம்

***38557—டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு தொகுதி, செய்யாறில் துணை வேளாண்மை அலுவலர் அலுவலகம் துவக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

11-98—3

[2008 ஏப்ரல் 29

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செய்யாறு தொகுதி, செய்யாறில் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், வேளாண்மை விரிவாக்க மையம் செயல்பட்டு வருகிறது. மேலும், துணை வேளாண்மை விரிவாக்க மையம், திருமனி எனும் இடத்தில், செய்யார் வட்டாரத்தில் இயங்கி வருகிறது. ஆகவே, செய்யாறில் புதிய துணை வேளாண்மை அலுவலகம் துவங்க அவசியம் எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதி, விவசாயிகள் நிறைந்த பகுதி. அந்த விவசாயிகள் நிறைந்த பகுதியிலே கூடுதல் துணை வேளாண்மை அலுவலர் அலுவலகத்தை சொந்தக் கட்டடத்தில் திறந்து, அதைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், தமிழகத்தில் எத்தனை வேளாண்மை அலுவலகங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்குகின்றன, எத்தனை வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்றன, இந்த ஆண்டு புதிதாக எத்தனை துணை வேளாண்மை அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முயற்சி செய்யும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வட்டாரத் தலைமையிடங்களில் வேளாண்மை விரிவாக்க மையங்களும் விவசாயத் தேவைக்கேற்ப வட்டாரங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட துணை வேளாண்மை விரிவாக்க மையங்களும் செயல்பட்டு வருகின்றன. வேளாண்மை மற்றும் துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள்மூலம் விவசாயிகளுக்குத் தேவையான தரமான சான்று பெற்ற விதைகள், Azospyrillum, Phosphobacterium போன்ற உயிர் உரங்கள், திட்டங்களுக்கான பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், மானிய மற்றும் முழு விலையில் வழங்கப்படுவதுடன் விவசாயிகளுக்கு

காப்பகம்
சென்னை-600 009



2008 ஏப்ரல் 29]

தொழில்நுட்பப் பயிற்சிகள் மற்றும் செயல் விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன.

மேலும், விவசாயிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு காண, அந்தந்தப் பணியிடங்களில் பணியாற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்கள் மற்றும் தோட்டக் கலை உதவி இயக்குநர்கள் தலைமையின்கீழ் உள்ள அலுவலர்கள் செயல்பட்டு வருகிறார்கள். தமிழ்நாட்டில் 379 வேளாண் விரிவாக்க மையங்களும், 501 துணை விரிவாக்க மையங்களும், மொத்தம் 880 விரிவாக்க மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 17 வேளாண்மை விரிவாக்க மையங்களும், 24 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களும், மொத்தம் 41 விரிவாக்க மையங்கள் செயல்பட்டு வருகின்றன. செய்யாறு தொகுதியில் கீழ்க்கண்ட அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன: வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகம், செய்யாறு, வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகம், வெம்பாக்கம், வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகம், அனங்காவூர். எத்தனை சொந்தக் கட்டடத்திலே இயங்குகின்றன, எத்தனை வாடகைக் கட்டடத்திலே இயங்குகின்றன என்று உறுப்பினர் கேட்டார்கள். அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வேளாண்மைத் துறையிலே மிகப் பரபரப்பாகப் பேசப்படுவது மரபணு விதை மாற்றம் குறித்து, அதனால் ஏற்படுகிற . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாதது, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கடலூர் மாவட்டம், பண்ருட்டி அருகே இருக்கின்ற நெய்வேலி பகுதியில் 350 ஏக்கர் பரப்பளவில் துணை வேளாண்மை இயக்குநர் அலுவலகம் இருக்கிறது. அங்கு 50—க்கும் மேற்பட்ட பெண்கள் தினக்கூலியாகப் பணிபுரிந்து வருகிறார்கள். ஏற்கெனவே அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டும் 10 ஆண்டு காலமாக அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். இது போன்று தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற வேளாண்மைப் பணியாளர்களை நிரந்தரமாக்க அரசுக்கு முன்மொழிவு அனுப்பியும்

11-98—3a

பணி நிரந்தர உத்தரவு வழங்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன? பணியை நிரந்தரம் செய்ய அரசு பரிசீலனை செய்யுமா? அதற்கான செயற்குறிப்பு இருக்கிறதா? விரைவில் அவர்கள் பணியை நிரந்தரம் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9—35

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையில் தோட்டக்கலைத் துறை, வேளாண்மைப் பண்ணையில் தினக்கூலிப் பணியாளர்களாகப் பணியாற்றக்கூடியவர்கள் தொடர்ந்து 20 ஆண்டுகளுக்கு மேலாகக்கூட பணியாற்றிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்ற கோரிக்கை நான்காவது முறையாக தமிழகத்திலே தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது பரிசீலிக்கப்பட்டு, 10 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியவர்களை நிரந்தரப் பணியாளர்களாக அறிவிக்கலாம் என்று முடிவெடுத்து 1996—1997—லேயே ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கினார்கள். இப்பொழுதும் இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, தோட்டக்கலைப் பண்ணையிலே பணியாற்றக்கூடிய ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களை நிரந்தரமாக்கி இருக்கிறோம். மற்றவர்களைப் படிப்படியாக நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையில் தற்பொழுது உரங்கள் மிகுந்த தட்டுப்பாட்டில் இருப்பதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். 350 ரூபாய் உர மூட்டை 700 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக தலையிட வேண்டிய ஒரு கேள்வி என்பதனால், இது குறித்து தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது DAP உரம் நம்முடைய அரசின் கையிலே 4,500 டன்னுக்குமேல் கையிருப்பு இருக்கின்றது. அதைப்போல, 20:20; 17:17:0 போன்ற உரங்கள் தயாரிப்பதற்கு DAP உரம் தேவைப்படுகிறது. அந்த DAP உரத்தை தமிழ்நாட்டிலே ஸ்பிக் நிறுவனம் முன்பு உற்பத்தி செய்து நமக்கு வழங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள், மூலப்பொருள் இறக்குமதி செய்து தயாரிப்பதிலே பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது என்று இடைக்காலத்திலே நிறுத்தியிருந்தார்கள். இருந்தாலும்கூட வெளிநாட்டிலேயிருந்து நாம் இறக்குமதி செய்து விவசாயிகளுடைய தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும், உரங்கள் வழங்கப்பட வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 30 கோடி ரூபாயை ஒதுக்கி TANFED மூலம் இறக்குமதி செய்து கடந்த சம்பா பருவத்திற்குத் தேவையான உரங்களைக் கொடுத்திருக்கின்றோம். இப்பொழுது அந்த அளவுக்குப் பற்றாக்குறை இல்லை. இயற்கையாக இந்த DAP உரத்தைப் பயன்படுத்தி 20:20; 17:17:0 தயாரிக்கின்றவர்கள் அப்படி ஒரு பிரசாரத்தை ஏற்படுத்துகின்றார்கள். எந்த மாவட்டத்திலே உரப் பற்றாக்குறை இருக்கிறதோ அந்த மாவட்டத்திற்கு எந்த மாவட்டத்திலே கூடுதலாக இருக்கிறதோ அங்கிருந்து உடனடியாக அனுப்பிவிடுகின்றோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய வினாவை அரசு கவனத்திலே கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 172, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**172—**

### தூர் வாருதல்

***2174—திரு. அ. ராஜன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் தொகுதி, ராசாக்கமங்கலம் ஒன்றியத்தில் அத்திக்கடை வாய்க்கால், சம்பங்குளம் வாய்க்கால், கோட்டாறு வாய்க்கால் ஆகியவற்றைத் தூர் வாரி, கரை கட்டி சரி செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

[2008 ஏப்ரல் 29

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகர்கோவில் தொகுதி, ராசாக்கமங்கலம் ஒன்றியத்தில் உள்ள அத்திக்கடை, சம்பங்குளம் மற்றும் கோட்டாறு ஆகிய சானல்களில் தூர் வாரி கரையை சரி செய்வதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்ட விவசாயிகள் அனைவரும் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, கோதையாறு I மற்றும் II ஆகிய அணைகளின் நீர்ப் பாசனத்தையே நம்பி இருக்கிறார்கள். பேச்சிப்பாறை அணையிலிருந்து மட்டும் கடைவரம்பு பகுதியான மணக்குடிவரை அனைத்து கிளைச் சானல்களையும், குளங்கள் நீர் வரத்து சானல்களையும் சேர்த்து சுமார் 700 கிலோ மீட்டர் நீளம் இருக்கிறது. முன்பு விவசாயிகள், சானல்களை ஓரளவு சுத்தம் செய்து அங்கு வளர்ந்துள்ள செடிகொடிகளை அவர்களே அகற்றினார்கள். இலை தழைகளை அவர்களே உரத்திற்காக எடுத்துச் சென்றார்கள். தற்போது அவர்கள் அந்தப் பணிகளில் ஈடுபடுவதில்லை. அதில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இந்த அணைகளில் இருந்து வரும் கால்வாய்கள் அனந்தனாறு, கிழக்குப் பிரதானக் கால்வாய், அத்திக்கடை சானல், கோட்டாறு சானல் மற்றும் பாண்டியங்கால்வாய், செல்லன்துருத்தி, தோவாளை கால்வாய், அனந்தனாறு எனப் பல்வேறு நிலைகளில் பிரிந்து வருகின்றன. அணையிலிருந்து வரும் தண்ணீர் மட்டுமல்ல, மழைக்காலங்களில்கூட தண்ணீர் செல்ல முடியாத அளவிற்கு சானல்கள் எல்லாம் செடிகொடிகளாலும், மண்ணால் நிரம்பியும் கரைகள் எல்லாம் உடைந்தும் மிகவும் மோசமாக இருக்கின்றன. இதனால், விவசாயிகளும், பொதுமக்களும் மிகவும் பாதிப்படைந்து இருக்கின்றனர். எனவே, இவற்றையெல்லாம் முழுமையாகச் சரி செய்ய அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.



2008 ஏப்ரல் 29]

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி அனந்தனாறு கால்வாயிலிருந்து பிரிகிற கிளைக் கால்வாயான அத்திக்கடை, கோட்டாறு, சம்பங்குளம் ஆகிய கால்வாய்கள் தூர் வாரப்படுமா என்பது குறித்து. தூர் வாரப்படுவதற்கு அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்று நான் தெரிவித்திருக்கிறேன்.

இதிலே அத்திக்கடை சேனல், கோட்டாறு சேனல் ஆகிய இரண்டுக்கும் ஏற்கெனவே 2007—2008 ஆம் ஆண்டு maintenance -லே அத்திக்கடைக்கு ரூ. 2.50 இலட்சமும், கோட்டாறுக்கு ரூ. 0.50 இலட்சமும் செலவு செய்திருக்கிறோம். ஆனால், சம்பங்குளம் என்பது அனந்தனாறு கால்வாயினுடைய உபரிநீர் storage ஆகின்ற இடமாகும். அதிலிருந்து வழிந்து போகின்ற ஒரு கால்வாயும் இருக்கிறது. அந்தக் கால்வாயைச் சீரமைப்பதற்காக இரண்டு இலட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். 31—5—2008—க்குள் அந்தப் பகுதியில் பணி முடிவடையும்.

முற்பகல் 9—40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சேனல்களின் பராமரிப்புப் பணியை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து செய்வதற்கு தற்போது வாய்ப்பில்லை. விவசாயிகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள நமது தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு கடந்த 2007—2008 ஆம் ஆண்டில் குமரி மாவட்டத்தில் சேனல்களின் மேம்பாட்டுக்காக ஒரு கோடியே 70 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருந்தது. ஆனால், குமரி மாவட்ட பொதுப் பணித் துறைமூலம் மாவட்ட முழுவதுமுள்ள சேனல்களை முழுமையாக சரி செய்வதற்கான ஒரு விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கனிவுடன் தலைவர் கலைஞர் அவர்களின் அனுமதி பெற்று, அந்தத் தொகையை உடனே ஒதுக்கீடு செய்து குமரி மாவட்ட சேனல்களைச் செப்பனிட்டு குமரி மக்களின் பாராட்டைப் பெறுவார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒரு பகுதியை கால்வாய் தூர் வாருவதற்கு அனுமதிக்கலாம். அதை தாராளமாக திரு. ராஜன் கொடுத்தால் அரசு ஏற்றுக்கொள்ளும். ஆனால், குமரி மாவட்டத்தில் இருக்கிற கால்வாய்களும், அணைகளும் செப்பனிடப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும் என்று அவர் சொன்னார். அவருக்கே தெரியும். பேச்சிப்பாறை, பெருஞ்சாணி இரண்டும் கூடுகின்ற இடம் புத்தன் டேம். அது உடைந்துபோய் எத்தனை ஆண்டு காலம் இருந்தது? கலைஞருடைய ஆட்சி முன்பு வந்தபோதும் கட்டினார்கள், இப்போது வந்த பிறகும் புதிதாகக் கட்டியிருக்கிறார்கள். இப்போது தோவாளை சேனலுக்குக்கூட 25 கோடி ரூபாய் ஒதுக்கப்படும், அதற்கான D.P.R. தயார் செய்து கொண்டிருக்கிறோம், நபார்டுக்கு அனுப்ப இருக்கிறோம் என்பதை நான் என்னுடைய மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது தெரிவித்தேன். அதேபோன்றுதான் அனந்தனாறு, பாண்டியங்கால்வாய் போன்ற பகுதிகளிலும் அப்போதைக்கப்போது, இந்த அரசு வருகின்றபோதெல்லாம் தூர் வாருகின்ற பணியை செய்து கொண்டுதான் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டா பகுதிகளிலே தூர் வாரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய மானியக் கோரிக்கையிலே அறிவித்தார்கள். அந்தப் பணி இப்போது தொடங்கப்பட்டிருக்கிறதா? நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டதா? சென்ற ஆண்டு முக்கியமான ஆறுகள் தூர் வாரப்படாததால் பல இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. அந்த மாதிரியான ஆறுகளையும் எடுத்துக்கொள்வதற்கான முயற்சி இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டும் 10 கோடி ரூபாயை முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். பொதுப் பணித் துறையினரே எந்தெந்த இடங்களில் தூர் வாரலாம் என்று சில இடங்களை நிர்ணயம்





செய்யலாம். சட்டப் பேரவை உறுப்பினர்கள் அவர்கள் தொகுதிகளில் முக்கியமாகச் செய்ய வேண்டிய பணிகள் இருந்தால், அவற்றை பொதுப் பணித் துறையினரிடத்திலே எழுதிக் கொடுத்தால் எடுத்துக்கொள்ளும்படி நான் அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாய்க்கால்கள் தூர் வாருவது மற்றும் பாசனப் பகுதிகளைப் பற்றி எல்லாம் இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய மேட்டூர் பகுதி, பாசன வசதியே இல்லாத பகுதி. மேட்டூர் அனல் மின் நிலையத்திலிருந்து அதிக அளவு தண்ணீர் வீணாக வெளியேறிக் கொண்டிருக்கிறது. நங்கவல்லி ஒன்றியம் பகுதியிலே, நங்கவல்லி, சாணாரப்பட்டி போன்ற கிராமங்களுக்குப் பாசன வசதி செய்வதற்காக, பொதுப் பணித் துறையின்மூலம் திட்டமிடப்பட்டு அந்தத் திட்டம் நீண்ட காலமாக நிலுவையில் இருக்கிறது. பொதுமக்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டு அமைச்சர் அவர்களிடத்திலே இதே மாமன்றத்தில் கேட்டபோது விரைவிலே பரிசீலித்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆண்டாவது அங்கு பாசன வசதியைப் பெருக்குவதற்கு, அந்த நீரை எடுத்துச் செல்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே திரும்பத் திரும்ப அதைத்தான் சொன்னேன். நங்கவல்லி, மேச்சேரி போன்ற இடங்களுக்கு மேட்டூரிலிருந்து தண்ணீரை பம்ப் செய்ய வேண்டும். அதற்கு எவ்வளவு செலவாகும். பம்ப் செய்தால் எவ்வளவு ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் பாயும், அதனால் என்ன நன்மை ஏற்படும் என்பது குறித்து நாங்கள் ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறோம். அதை ஒரே நாளில் செய்ய முடியாது. இப்படி பம்ப் செய்வது வேறு எந்தெந்த மாநிலங்களில் இருக்கின்றது. எவ்வளவு current செலவாகும். எவ்வளவு energy செலவாகும். இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும், monitoring எப்படிச் செய்யலாம் என்பதையெல்லாம் ஆய்வு

செய்துகொண்டிருக்கிறோம். அன்றைக்கும் சொன்னேன், இன்றைக்கும் சொல்கிறேன், ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

முற்பகல் 9—45

**திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் ராஜன் அவர்கள், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடம் இப்பொழுது கேள்வி கேட்டபோது, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தூர் வாருவதற்கு நிதியை ஒதுக்கீடு செய்யலாமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், எங்கள் மாவட்டத்தில், பொதுப் பணித் துறை அதிகாரிகள் அதற்கு அனுமதியில்லையென்று சொல்கிறார்கள். எனவே, அமைச்சர் அவர்கள் அதற்கான உறுதியை அளிப்பார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, உள்ளாட்சித் துறைகளின் எந்தெந்தப் பணிகளுக்கு ஒதுக்கலாம் என்று ஒரு வரையறை செய்திருக்கிறார்கள். குடிநீர் வசதிக்கு, சாலை போடுவதற்கு, கட்டடங்களுக்கு எவ்வளவு ஒதுக்கலாம் என்று வரையறை செய்திருக்கிறார்கள். அதேபோல், சட்டமன்ற உறுப்பினர் அவர் நினைத்த காரியங்களுக்கென்று ஒரு தொகையை ஒதுக்கி, அதை அவர் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். அதாவது, ஒதுக்கப்பட்ட பணிகளில், தூர் வாருவதற்கும் பல இடங்களுக்கு நானே கொடுத்திருக்கிறேன். எல்லோரும் கொடுத்திருக்கிறார்கள். எங்கள் தொகுதியில் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) இல்லையென்று சொன்னால், அப்படித் தருவதற்கு வழியுண்டா என்பதை அரசு பரிசீலனை செய்யும். விரைவில், சட்டமன்ற மானியக் கோரிக்கை வருகிறபொழுது, அதற்கு வழி பிறக்கும். (குறுக்கீடுகள்) பொது மானியத்திலே அல்ல. Appropriation வரும் அல்லவா, கடைசியாக. எம்.எல்.ஏ.களுக்குச் சம்பளம் கேட்பீர்கள் அல்லவா, அப்பொழுது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தூர் வாருவதற்காக இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள். எங்களுடைய மேலூர் தொகுதியிலுள்ள கொட்டாம்பட்டி பகுதி, மானாவாரி பகுதியாக இருக்கிறது. பல வாய்க்கால்கள் மற்றும் கண்மாய்களைத் தூர் வாருவதற்கு மற்ற நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்படுவதில்லை. ஆகையால், அமைச்சர் அவர்கள் சிறப்பு முயற்சியெடுத்து, அந்த மானாவாரி பகுதியிலேயிருக்கின்ற கண்மாய்களையும், ஓடைகளையும் தூர் வாருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்மீது, நானே தனிக்கவனம் செலுத்தி, அதுகுறித்து விசாரித்து, முடிந்தால் ஆவன செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 173, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**173—**

### இருக்கை ஒதுக்கீடு

***29613—திரு. து. ரவிக்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு விரைவுப் பேருந்துகளிலும், தனியார் பேருந்துகளிலும் மூத்த குடிமக்களுக்கென இருக்கைகள் ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில், தொலைதூரப் பயணிகளின் வசதியைக் கருத்திற்கொண்டு, உடனடி தளம் வழிப்பதிவுத் திட்டம்—on line reservation—மூலமாக இருக்கை முன்பதிவு நடைபெற்று வருகிறது. இது மூத்த குடிமக்கள் உள்ளிட்ட பயணிகள் அனைவரும் முன்பதிவு செய்து பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக உள்ளது. இந்நிலையில் மூத்த குடிமக்களுக்கெனப் பிரத்தியேகமாக இருக்கைகள் ஒதுக்கீடு செய்ய இயலாத நிலை உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.*

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விரைவுப் பேருந்துகளிலும், தனியார் பேருந்துகளிலும் மூத்த குடிமக்களுக்கென இருக்கைகள் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இப்பொழுது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பயன்பெறும் நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், சிலநேரங்களிலே மூத்த குடிமக்களெல்லாம் வரிசையில் நிற்க முடியாமல், முன்பதிவு செய்ய முடியாமல் அவதிப்படும் நிலை இருக்கிறது. அவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதோடு, தனியார் பேருந்துகளிலும் இப்படிப்பட்டதொரு பழக்கத்தை நாம் நடைமுறைப்படுத்த முடியுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளில் ஊனமுற்றவர்களுக்கென்றும், உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு ஆண்கள் பகுதியிலே, முதியோர், இடங்களும், பெண்கள் பகுதியிலே இரண்டு இரண்டு இடங்களும் மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் ஒதுக்கப்பட்டுள்ளன. தொலைதூரப் பேருந்துகளில், இப்பொழுது செய்கின்ற வசதியிருக்கின்ற காரணத்தால், முன்பதிவு கொள்ளலாம் என்ற வசதியிருப்பதால், முன்னாலே பதிவு செய்து ஒதுக்கீடு செய்கின்ற எண்ணம் இல்லை. தனியாக இதுவரை இட உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இருந்தாலும், மாண்புமிகு கொள்கை முடிவு. மாண்புமிகு முதலமைச்சர் இது அரசினுடைய பேசி, ஒரு நல்ல முடிவெடுக்கலாம். அவர்களுடன் கலந்து





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.*

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 174, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. வரதராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**174—**

**மருத்துவமனை**

***998—திரு. ரா. வரதராஜன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையை அனைத்து வசதிகளுடன் மேம்படுத்தவும், மருத்துவர்கள் பற்றாக்குறையைப் போக்கவும் அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருதுநகர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை 272 படுக்கை வசதிகளுடன், 10 சிறப்புப் பிரிவுகளும், அதற்குரிய சிறப்பு மருத்துவர்களுடன் இயங்கி வருகிறது. மேலும், இம்மருத்துவமனையில் சிகிச்சை பெற வரும் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர் பணியிடங்கள் போதிய அளவில் இருப்பதால் கூடுதல் மருத்துவர்கள் தேவை குறித்த அவசியம் தற்போது எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. வரதராஜன்.*

**திரு. ரா. வரதராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து . . . (குறுக்கீடுகள்)

[2008 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கையைத் தூக்கிக்கொண்டு அவர் முகத்தை மறைக்காதீர்கள்.

**திரு. ரா. வரதராஜன்:** விருதுநகர் மாவட்ட மருத்துவமனைக்கு ஆயிரக்கணக்கான நோயாளிகள் சிகிச்சை பெற வருகிறார்கள். விருதுநகர், தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஒரு பெரிய வியாபார நகரமாகும். மாவட்டத்தின் தலைநகரான விருதுநகரிலுள்ள மாவட்ட மருத்துவமனையில், போதிய மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் குறைவாக இருக்கிறார்கள். தேவையான அளவு மருத்துவர்களைப் பணியில் அமர்த்த அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9—50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினா அனுமதிக்கப்பட்ட நாள் 6—6—2006 ஆகும். அதன் பின்னர், 24 மணி நேர மகப்பேறு மற்றும் சிசு கவனிப்பு நிலையம், வெளி நோயாளிகள் பிரிவு, 100 படுக்கை வசதி கொண்ட தனி மகப்பேறு கட்டடம், இரத்த சேமிப்பு வங்கி, உள்கட்டமைப்புப் பணிகள் போன்றவை ரூபாய் 3 கோடியே 70 இலட்சத்திற்கும் மேலான செலவில் மேற்கொள்ளப்பட்டன. 272 படுக்கை வசதிகள் உள்ளன. நாளொன்றுக்கு 1,120 வெளி நோயாளிகளும், 217 உள் நோயாளிகளும், சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த மருத்துவமனையில் 11 சிறப்பு மருத்துவர்கள் மற்றும் 25 உதவி மருத்துவர்கள், ஆக 36 மருத்துவர்கள் பணியில் உள்ளனர். ஒரே ஒரு மருத்துவர் பணியிடம் மட்டும்தான் காலியாக இருக்கின்றது. 47 செவிலியர்கள் உள்ளிட்ட 167 பணியாளர்கள் தற்பொழுது பணிபுரிகின்றனர். காலியாக இருக்கும் 11 மருத்துவப் பணியாளர்கள் பணியிடங்களை விரைவில் நிரப்புவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. வரதராஜன்.

**திரு. ரா. வரதராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீரிழிவு நோய்க்கு சிறப்பு மருத்துவர் இல்லை; நரம்பு சிகிச்சை மருத்துவர் மற்றும் தலைக் காயப் பிரிவு மருத்துவர் இல்லை. மேலும், அங்கு தலைமை மருத்துவமனையில் செடியும், புதருமாக இருக்கின்றது. அங்கு பணியாற்றும் முனியாண்டி என்பவரை பாம்பு கடித்து, அவர் சிகிச்சை பெற்றார். அவ்வளவு மோசமான நிலையில் அந்த அரசு மருத்துவமனை இருக்கிறது. அந்த மருத்துவமனையை நல்லமுறையில் சீரமைத்துத் தருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2008 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதிய மருத்துவர்கள், அங்கு இருக்கிறார்கள். இம்மருத்துவமனையில் 3 கோடியே 70 இலட்சத்திற்கு மேலாக மேம்பாட்டுப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைக்கிணங்க, இந்த மருத்துவமனைக்குப் போதிய சிறப்பு மருத்துவர்கள்-Specialists-நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய பெரும் முயற்சியின் காரணமாக, பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் மருத்துவக் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டவுடன், ஏற்கெனவே மாவட்டத் தலைநகர மருத்துவமனைகளாகச் செயல்பட்டு வந்த மருத்துவமனைகள், மாவட்டத் தலைநகரங்கள் அல்லாத பிற நகரங்களுக்கு மாற்றப்பட்டன. அப்படி மாற்றப்பட்டபோது, அவற்றை மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் என்று அறிவிப்புதான் செய்தோமேயொழிய அந்த மாவட்டத் தலைமை மருத்துவமனைகளுக்குத் தேவையான மருத்துவர்களை நியமிக்கவில்லை. மாவட்ட மருத்துவமனையாக இருப்பதற்கு அரசு, என்ன தகுதிகளை, இலக்குகளை, standards-ஐ நிர்ணயித்திருக்கிறதோ, அதைப் பின்பற்றாமல் பல்வேறு இடங்களிலே மிகக் குறைவான டாக்டர்களே பணியாற்றுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கேட்க விரும்புவது என்னவென்றால், ஒரு மாவட்ட மருத்துவமனை என்று சொன்னால், அங்கு எத்தனை டாக்டர்கள் இருக்க வேண்டும்? எத்தனை செவிலியர்கள் இருக்க வேண்டும்? அப்படி அரசு நிர்ணயித்த டாக்டர்களும், செவிலியர்களும் தமிழகத்திலே இருக்கின்ற எத்தனை மாவட்ட மருத்துவமனைகளில்

[2008 ஏப்ரல் 29

இருக்கின்றார்கள்? அப்படி இல்லாத மருத்துவமனைகளிலே அந்த இடங்களை நிரப்புவதற்கு அரசு என்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது? உதாரணமாக, தென்காசி மாவட்டத் தலைமை மருத்துவமனையில் நிர்ணயிக்கப்பட்ட டாக்டர்களே அங்கு இல்லை. மிகக் குறைவான அளவு டாக்டர்களே இருக்கிறார்கள். இதற்கு அரசு என்ன ஏற்பாடுகளைச் செய்யவிருக்கிறது என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து தனிக் கேள்வியாகப் போட்டிருந்தால் நலமாக இருந்திருக்கும். ஒரு மாவட்ட மருத்துவமனையில் மருத்துவ கண்காணிப்பாளர் ஒருவர், உள்ளிருப்பு மருத்துவ அலுவலர் ஒருவர், Senior Civil Surgeon, பல் மருத்துவர் ஒருவர், முதுநிலை குடிமை மருத்துவர் ஒருவர், முதுநிலை குடிமை மருத்துவர் (அறுவை சிகிச்சை) ஒருவர், முதுநிலை குடிமை மருத்துவர் (மகப்பேறு) ஒருவர், முதுநிலை குடிமை மருத்துவர் (குழந்தை நலம்) ஒருவர், முதுநிலை குடிமை மருத்துவர் (கண்) ஒருவர், முதுநிலை குடிமை மருத்துவர் (எலும்பு முறிவு) ஒருவர், முதுநிலை குடிமை மருத்துவர் (மயக்கம்) ஒருவர், முதுநிலை குடிமை மருத்துவர் (காது, மூக்கு, தொண்டை) ஒருவர் ஆக மொத்தம் 11 Specialists இருக்கிறார்கள்.

அதேபோல, பொது மருத்துவர்கள் ஆறு பேரும், அறுவை சிகிச்சை மருத்துவர் ஒருவரும், மகப்பேறு மருத்துவர் ஐந்து பேரும், குழந்தை நல மருத்துவர் ஐந்து பேரும், கண் மருத்துவர் ஒருவரும், எலும்பு முறிவு மருத்துவர் இரண்டு பேரும், தோல் சிகிச்சை மருத்துவர் ஒருவரும், கதிரியக்க மருத்துவர் ஒருவரும், மயக்க மருத்துவர் இருவரும், ஆகமொத்தம் 25 பேர். இது Assistant Surgeon cadre—ல். ஆக மொத்தம் 36 மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள். (குறுக்கீடு) இதுபோன்று தலைமை மருத்துவமனையில் இருக்கின்றது. மொத்தமாக, கிட்டத்தட்ட 9,890 மருத்துவர்கள். கலைஞர் அவர்களுடைய ஆட்சி பொறுப்பேற்ற பிறகு இப்போதைய நிலைமை 9,337 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மொத்தமாக காலியாக உள்ள இடங்கள் – பொது சுகாதாரத் துறை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், மருத்துவக் கல்லூரிக் கல்வி என்று ஆகமொத்தம் உள்ள 9,890 மருத்துவர்களில், இப்போது 553 மருத்துவர்கள் பதவிகள்தான் காலியாக இருக்கின்றன. மீதியிடங்கள் எல்லாம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன.



2008 ஏப்ரல் 29]

*முற்பகல் 9–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி. (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக இருங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் செயல்பட்டு வருகின்ற மாவட்ட அரசு மருத்துவமனை மிகவும் பழுதடைந்து, எந்த நேரத்திலும் இடிந்து விழுகிற ஆபத்தான நிலையில் உள்ளது. நம்முடைய அமைச்சர் அவர்களும் நேரில் வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இருந்த அமைச்சர் அவர்களும் பார்வையிட்டிருக்கிறார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயும் நேரடியாக அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு சென்றிருக்கின்றேன். இந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் புதிய கட்டடத்திற்கு அறிவிப்பு வரும் என்று எதிர்பார்த்தேன். ஆனால், அந்த அறிவிப்பு வரவில்லை. முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று இந்த ஆண்டே புதிய கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, நானும் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் நேரில் சென்று பார்வையிட்டோம். மேல்தளம் சற்று பழுதாகி இருந்தது. அதற்காக பொதுப் பணித் துறை (கட்டடங்கள்) மூலமாக சென்னையிலிருந்து சிறப்புப் பொறியாளர்கள் அதன் கட்டுமான நிலைமை எப்படி இருக்கிறது என்பதைக் கண்டறிய அனுப்பி வைக்கப்பட்டு, ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. அவர்களுடைய அறிக்கை வந்த பிறகு அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கு மாற்றாக அதேயிடத்தில் கூடுதலாக புதிய கட்டடம் கட்டுவதற்கு இப்போது அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 175, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 ஏப்ரல் 29

175—

## ஏற்றுமதி மையம்

***23359—திரு. பெ. கண்ணன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, கருக்கல்வாடி மற்றும் அழகுசமுத்திரம் ஊராட்சிகளில் நார்க் கயிறு ஏற்றுமதி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட கருக்கல்வாடி மற்றும் அழகு சமுத்திரம் ஊராட்சிகளில் நார்க் கயிறு ஏற்றுமதி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் தொகுதியில், கருக்கல்வாடி, அழகு சமுத்திரம், சேலம், சூரமங்கலம், ஓமலூர், முத்துநாயக்கன்பட்டி, இளம்பிள்ளை போன்ற பகுதிகளில் சுமார் 100 நார் மில்கள் இருக்கின்றன. அவற்றில் சுமார் 5 ஆயிரம் பேர் பணிபுரிந்து வருகிறார்கள். 10 ஆயிரம் குடும்பங்கள் அந்தத் தென்னை நார் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய கயிறு தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். அங்கு உற்பத்தி செய்யப்படும் பலவகையான கயிறுகளை ஆந்திரா, கர்நாடகா, குஜராத், டெல்லி போன்ற அண்டை மாநிலங்களுக்கு எடுத்துச் செல்கிறார்கள். உற்பத்தி செய்யக்கூடிய கயிறு வகைகளை முழுமையாக விற்பனை செய்ய இயலவில்லை. எனவே, அவற்றை ஏற்றுமதி செய்யும்வகையில் அத்தொழிலைச் செய்வதற்கு அங்கு ஒரு ஏற்றுமதி மையத்தைத் தொடங்கிட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2008 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட கருக்கல்வாடி, அழகு சமுத்திரம் ஆகிய ஊராட்சிகளில் மொத்தம் 9 தென்னை நார் உற்பத்திக் கூடங்கள் உள்ளன. இந்த 9 கூடங்களில், வருடத்திற்கு சுமார் 1,920 மெட்ரிக் டன் தென்னை நார் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும் 120 கயிறு உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்களும் உள்ளன. இந்த நிறுவனங்களில் வருடத்திற்கு 12,700 மெட்ரிக் டன் அளவிற்கு கயிறு உற்பத்தி செய்யப்படுகிறது. இதுமட்டுமன்றி, இப்பகுதியில் கையினால் இயக்கப்படும் 500 ராட்டைகளும் உள்ளன. இதன்மூலம் வருடத்திற்கு 4,500 மெட்ரிக் டன் அளவிற்கு கயிறு உற்பத்தி செய்யப்படுகின்றது. ஆக, ஒட்டுமொத்தமாக வருடத்திற்கு 17,200 மெட்ரிக் டன் அளவிற்கு கயிறு உற்பத்தி செய்யப்படுகின்றது. இதற்கு 20,060 மெட்ரிக் டன் தென்னை நார் தேவைப்படுகிறது. கருக்கல்வாடி மற்றும் அழகு சமுத்திரம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள தொழிற்கூடங்களில் உற்பத்தி செய்யப்படும் தென்னை நாரின் அளவு தேவையைவிட மிகக் குறைவாகவே இருப்பதால், வெளி ஊர்களிலிருந்து தென்னை நார் கொள்முதல் செய்யப்பட்டு, கயிறு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது. தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட கருக்கல்வாடி மற்றும் அழகுசமுத்திரம் ஆகிய ஊராட்சிகளில் பழுப்பு நிற தென்னை நார் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. பழுப்பு நிற தென்னை நார் குறைவான நீளம் உள்ளதாக இருப்பதாலும், பழுப்பு நிறம் சாயம் தோய்க்க ஏதுவாக இல்லாததாலும், பழுப்பு நாரைக்கொண்டு உற்பத்தி செய்யப்படும் கயிறுப் பொருள்கள் ஏற்றுமதிக்கு உகந்ததாக இல்லை என்று சொல்லப்படுகிறது. எனவே, மேற்குறிப்பிட்ட இடங்களில் ஏற்றுமதி மையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. Coir block pith எனப்படும் தென்னை நார் கழிவுக்கட்டிகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டால், அதை அதிக அளவு ஏற்றுமதி செய்ய வாய்ப்புள்ளது. சேலம் மாவட்டத் தொழில் மையத்தில் உள்ள ஏற்றுமதி வழிகாட்டி மையத்தின்மூலம் தேவையான ஏற்றுமதி வழிகாட்டுதல்களை வழங்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2008 ஏப்ரல் 29

*முற்பகல் 10—00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பதைக் கொண்டு வந்து, கே.சி.ஏ. கயிறு நார் மில் போன்ற நிறுவனங்கள், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் கொடுக்கப்பட்ட முதலீட்டில் வாங்கிய அந்த மில் ஓட்டப்பட்டது. அதற்கு 20 சதவிகிதம் மானியம் 3 இலட்சம் ரூபாய் வழங்க இருந்ததை அந்த அரசு வழங்கவில்லை; இந்த அரசு, இந்த அமைச்சர் அதை வழங்குவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் பல்வேறு மானியங்களும் தொழில்களுக்கு நிறுத்தப்பட்டு, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஒன்றை அறிவித்தார்கள். அதன்மூலம், ஏறத்தாழ 15 கோடி ரூபாய் அளவுக்கு மானியம் தர வேண்டிய நிலையில், வெறும் 9 கோடி ரூபாய் மட்டுமே அவர்கள் வழங்கினார்கள். பாக்கித் தொகையை இந்த அரசு, கலைஞருடைய அரசு இப்போது வழங்கி வருகிறது. தாங்கள் கேட்ட அந்த மானியம் வழங்கப்படவில்லையென்றால், உரிய நடவடிக்கைகளை எடுத்து, விரைவிலே வழங்க இந்த அரசு ஏற்பாடு செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 176, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**176—**

**பட்டா**

***839—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 ஏப்ரல் 29]

வேதாரண்யம் தொகுதி, ஆறுகாட்டுத்துறை மீனவக் கிராம மக்கள் குடியிருக்கும் இடத்திற்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையை அளிக்க விரும்புகின்றேன். ஆம். ஆறுகாட்டுத்துறையில் 400 மீனவர் குடும்பங்களுக்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் ஆறுகாட்டுத்துறை கிராமத்தில் 10.13 எக்டேர் நிலம், கடந்த 1923ஆம் ஆண்டு ரங்கசாமி மற்றும் 57 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டிருந்தது. ஆனால், 1987—ல் அப்பகுதியில் செல்வாக்குள்ள ஒரு நபர், அந்த 57 பட்டாக்களையும் தனது பெயருக்கே போலியாக பட்டா மாற்றம் செய்துவிட்டார். தற்போது நீதிமன்றத்தில் தீர்ப்பு வந்திருக்கிறது. அது பொது மக்களுக்குச் சாதகமாக வந்திருக்கிறது. தற்போது அங்கே 777 குடும்பங்கள் வசித்து வருகின்றன. அதில் 400 குடும்பங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளிலே தங்க வைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, நீதிமன்றத் தீர்ப்பு நமக்குச் சாதகமாக இருக்கின்ற காரணத்தால், உடனடியாக அந்த நிலத்தைப் பிரித்து, அந்தக் குடும்பங்களுக்கு, 58 குடும்பங்களுக்கும் பட்டா செய்து கொடுத்தால் அவர்களுடைய வாரிசுகள் அதைப் பிரித்துக்கொள்வதற்கு வசதியாக இருக்கும். அங்கு குடியிருக்கும் வீட்டுச் சொந்தக்காரர்கள் இப்போது எந்தவிதப் பலனையும் அடைய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. வீட்டுக் கடன்கூட பெற முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, நமது தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், தற்போது 3 இலட்சம் பட்டாக்கள் வழங்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 3 இலட்சத்து 98 ஆயிரம் பட்டாக்களை வழங்கி சாதனை படைத்திருக்கிற இந்த அரசு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிலத்தையும் பிரித்து பட்டா வழங்கி அந்த 777 குடும்பங்களும் பயன்பெற ஆவன செய்ய அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

[2008 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் வேதாரண்யம் தேவஸ்தானத்திற்குச் சொந்தமானதாக இருந்து, ரங்கசாமி படையாச்சி மற்றும் 57 பேருக்கு, அந்தத் தேவஸ்தானப் பணிகளுக்காக ஏற்கெனவே 70, 80 ஆண்டு காலத்திற்கு முன்பாக பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. அதை நிலவுடைமை மேம்பாட்டுத் திட்டத்திலே, சேதுபதி என்ற ஒருவர் தனது பெயருக்கு மாற்றியிருக்கிறார். இப்போது நீதிமன்றத்திலே நமக்கு சாதகமாகத் தீர்ப்பு வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, நேற்றையதினமே, உடனே விரைந்து நடவடிக்கை எடுத்து, பட்டா வழங்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள மாவட்ட நிர்வாகத்திற்கு அரசு அறிவுறுத்தி இருக்கிறது.

*முற்பகல் 10—05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம்.

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட சத்தியமங்கலம் நகரத்தில் அண்ணா நகர் என்ற பகுதியில் சுமார் 30/40 வருடங்களாக வீடு கட்டி வாழ்ந்து வருகின்றார்கள். அந்தப் பகுதியிலே இருக்கின்ற அதிகாரிகளைக் கேட்டால், பட்டா ரெடியாகிவிட்டது, கூடிய விரைவில் கொடுத்துவிடுவோம் என்று எப்பொழுது பார்த்தாலும் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால், கடைசியிலே இப்பொழுது என்ன சொல்கின்றார்கள் என்றால், case இருக்கின்றது, அதனால் பட்டா கொடுக்க முடியாது என்று சொல்லி, பட்டா ரெடியான பிறகும் அவர்கள் கொடுக்காமல் காலதாமதம் செய்துகொண்டிருக்கின்றார்கள். எனவே, உடனடியாக case—ஐ முடிவுக்குக் கொண்டு வந்து அந்த மக்களுக்குப் பட்டா கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கின்றேன்.



2008 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதாகத் தெரிவித்திருக்கின்றார். அதுசம்பந்தமான விவரங்களை என்னிடத்திலே நேரிலே அளித்தால், அதற்கு உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 177, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**177—**

**திருப்பணி**

***30584—டாக்டர் க. நெடுஞ்செழியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், குன்னமலை அருள்மிகு வல்லீஸ்வரர் ஆலயத் திருப்பணியை நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், குன்னமலை அருள்மிகு வல்லீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமாக நிலங்கள் எதுவுமில்லை. திருக்கோயிலில் உண்டியலும் நிறுவப்படவில்லை. இத்திருக்கோயிலுக்கு வருவாய் தரக்கூடிய இனங்கள் எதுவுமில்லை. மேலும், இத்திருக்கோயிலைப் புதுப்பிக்க அதிக அளவில் நிதியாதாரம் தேவைப்படும் நிலையில், திருப்பணி செய்வதற்கு கிராம மக்கள் எவரும் முன்வரவில்லை. பொதுமக்களின் பங்களிப்பு பெருமளவில் கிடைத்தால், துறையின் சார்பிலேயும் நிதியுதவி அளித்து திருப்பணிகள் மேற்கொள்ள இயலும்.

[2008 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குன்னமலை அருள்மிகு வல்லீஸ்வரர் ஆலயம் மிகவும் தொன்மையான, புராதனமான கோயிலாகும். அந்தக் கோயிலில் இருக்கின்ற கல்வெட்டுகள் 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக அறியப்படுகின்றது. அதேபோல அந்தக் கோயில் வரலாற்றுத் தொடர்புடையதாக அதாவது கொல்லிமலையிலே இருக்கின்ற வல்வில்ஓரி அவர்களால் கட்டப்பட்டதற்கான சான்றும் இருக்கின்றது. அந்தப் பகுதி மக்களாலும் நல்ல சக்தி வாய்ந்த கோயிலாகக் கருதப்படுகின்ற வல்லீஸ்வரர் ஆலயத்திற்கு, திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணிகள் நிதி ஒதுக்கீட்டின் வாயிலாக மாண்புமிகு அமைச்சரவர்கள் திருப்பணி செய்ய ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதைப்போல, அது பழமையும், தொன்மையும் வாய்ந்த திருக்கோயில்தான். 13ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட அந்தத் திருக்கோயில் 300 அடி உயரமுள்ள மலையின் உச்சியிலே அமைந்திருக்கின்றது. அதற்குப் படிக்கட்டுகள் போன்ற வசதிகளைச் செய்வதற்கு பெரும் நிதியுதவி தேவைப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் எந்த அளவிற்கு இதில் ஆர்வமாக இருக்கின்றார் என்பது தெரிகிறது. துறையும் அவரின் ஆர்வத்தை மதிக்கின்றது. துறையும் அதற்கான முயற்சியிலே ஈடுபடும். மாண்புமிகு உறுப்பினர், அப்பகுதி மக்களை ஒன்று திரட்டி, திருப்பணி செய்வதற்கான பெருந்தொகையைத் திரட்டுவதற்கு, துறைக்கு உதவியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல முயற்சி மேற்கொண்டமைக்கு மாண்புமிகு அமைச்சர்



2008 ஏப்ரல் 29]

பெருமானுக்கு நன்றியைத் தெரிவித்து, எனது தொகுதியிலே மோகனூர் அருகில் மணப்பள்ளி என்ற கிராமத்திலே [illegible] நூற்றாண்டில் ராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட [illegible]ஸ்வரசுவாமி திருக்கோயில், அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. அத்திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நெடுஞ்செழியன், இந்தக் கேள்விக்கும் அதற்கும் என்ன சம்பந்தம் இருக்கின்றது?

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** திருப்பணி செய்ய வேண்டுமென்று முன்பே மாண்புமிகு அமைச்சரிடம் சொல்லியிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பனமரத்துப்பட்டி தொகுதிக்குட்பட்ட அயோத்தியாபட்டினம் பேரூராட்சி, சேலம்—அரூர் சாலையிலே அமைந்திருக்கின்றது. அயோத்தியாபட்டினம் பேரூராட்சியிலே அருள்மிகு கோதண்டராமசுவாமி திருக்கோயில் அமைந்திருக்கின்றது. அத்திருக்கோயில் திருமலை நாயக்கர் மன்னர்கள் காலத்திலேயே கட்டப்பட்டு, 5 நிலை கொண்ட ராஜகோபுரத்தைக் கொண்டுள்ளது. அந்தக் கோயிலுக்கு திருப்பணி நடத்திட வேண்டுமென அப்பகுதியில் இருக்கின்ற பக்தர்கள் கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். ஆகவே, பக்தர்களின் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அமைச்சரவர்கள் அக்கோயிலுக்குத் திருப்பணி செய்திட முன்வருவார்களா என்று தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜேந்திரன் குறிப்பிட்டதைப்போல தமிழ்நாட்டிலே இருக்கின்ற அனைத்து திருக்கோயில்களுக்கும் உரிய காலத்தில் திருப்பணிகளை செய்து, குடமுழுக்கு நடத்த வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். எல்லா திருக்கோயில்களிலும் ஒரே நேரத்திலே திருப்பணிகளைச் செய்து குடமுழுக்கு நடத்துவது என்பது இயலாது. நிதியாதாரம் மற்றும் தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன. உறுப்பினர்கள், இங்கே

[2008 ஏப்ரல் 29

அவரவர்களுடைய தொகுதியில், திருப்பணிகள் செய்வதில் ஆர்வம் காட்டுகிறார்கள். அவர்களுடைய முயற்சியை இந்தத் துறை மதிக்கிறது. குறிப்பாக, திருக்கோயில்களுக்குத் தேவைப்படுகின்ற நிதியை அரசு, துறை முழுமையாகத் தருவதில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, நம்முடைய பனமரத்துப்பட்டி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர், திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள், அவரும் தன்னுடைய முயற்சியின்கீழ், உபயதாரர்களைத் திரட்டி, ஓரளவு நிதியுதவிக்கு ஏற்பாடு செய்தால், துறையும் இணைந்து அவர்களோடு அந்தத் திருப்பணியைச் செய்து, உறுப்பினருடைய அந்த ஆசையை நிவர்த்தி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு இப்போது ஏராளமான திருக்கோயில்களில் திருப்பணி செய்து வருகிறது. அதேபோன்று, திருத்தேர்களையும் இப்போது சீரமைத்து வருகிறது. ஆனால், இப்போது திருத்தேர்களைச் செய்வதற்கு ஒப்பந்ததாரர்கள் முன்வருவதில்லை. ஏனென்று சொன்னால், விலையேற்றம் அதிகமாகிவிட்டது. அரசு கொடுத்திருக்கிற மதிப்பு ஒரு பங்கு என்றால், மூன்று மடங்காக இப்போது பொருள்களினுடைய விலை உயர்ந்திருக்கிறது. எனவே, திருத்தேர்கள் செய்வதற்கு, கூடுதலாக மதிப்பீடுகள் தயாரித்தால்தான் செய்ய முடியுமென்ற நிலை இருக்கிறது. எனவே, திருத்தேர்களைச் செய்வதற்கு விலையேற்றத்தின் காரணமாக கூடுதலான மதிப்பீட்டைத் தயார் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, தமிழ்நாட்டில் தற்போது ஓடாத நிலையில் இருக்கக்கூடிய, பழுதடைந்த தேர்கள் என்று கணக்கிடப்பட்ட தேர்களில், 250 தேர்களுக்கு இப்போது உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல தேர் திருப்பணிகள் நடைபெற்றுக்



2008 ஏப்ரல் 29]

கொண்டிருக்கின்றன. அந்த வகையில், தேரை பராமரிப்பு செய்யக்கூடிய தொழிலாளர்கள் குறிப்பிட்ட அளவில்தான் இருக்கிறார்கள் என்பது ஒன்று. அதேநேரத்தில், விலை உயர்வு என்பதும், இப்போது ஏற்பட்டிருக்கிற காரணங்களில் ஒன்று. பொதுப் பணித் துறையினைக்கொண்டு, மறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, உரிய நியாயமான தொகை அவற்றிற்கு வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருநாவலூர் தொகுதிக்குட்பட்ட திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சியில் உள்ள அருள்மிகு ஸ்ரீமங்களாம்பிகை சமேத கிருபாபுரீஸ்வரர் ஆலயத்திற்குத் திருப்பணிகள் செய்து, குடமுழுக்கு நடத்தப்படுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், இதுபோன்று தங்களுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய திருக்கோயில்களினுடைய திருப்பணிகளைப் பற்றி அக்கறை எடுத்துக் கேட்கிறார்கள். எனவே, அவர்களுக்கு உங்கள்மூலமாக நான் சொல்லிக்கொள்வது, அவர்களுடைய தொகுதியில் இருக்கக்கூடிய திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்ய வேண்டுமானால், ஓரளவு 50 சதவீதத்திற்கு மேற்பட்ட தொகையை, மதிப்பீட்டுத் தொகையில் பாதிக்கு மேற்பட்ட தொகையை அவர்கள் தயார் செய்துகொண்டு, இங்கே கேள்வியை எழுப்ப வேண்டுமென்பதில்லை. என்னிடத்திலே நேரடியாக கொடுத்தால்கூட போதும். இங்கே கேள்வி கேட்பதற்குகூட காலதாமதமாகும். ஆகவே, ஓரளவு நிதியாதாரத்தோடு, என்னை நேரிலே சந்தித்துக் குறிப்பிட்டால், உடனடியாக அந்தத் திருப்பணிகளைத் தொடங்குவதற்கு, அனைத்து உறுப்பினர்களுக்கும் ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வசதியில்லாத, வருமானம் இல்லாத, கோயில்களுக்கு 25 ஆயிரம் ரூபாய்

வீதம், அறநிலையத் துறையின்மூலமாக ஒதுக்கீடு செய்யப்படுவதாக மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதுபோல, சென்ற ஆண்டு, 2007–2008 ஆம் ஆண்டில், எத்தனை கோயில்களுக்கு அந்த 25 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டது என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் ஆதி திராவிடர்கள் வசிக்கக்கூடிய பகுதிகள் என்று இதுவரை 14 ஆயிரம் திருக்கோயில்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் திட்டத்தின்மூலமாக தமிழ்நாடு அரசு அந்தப் பணியைச் செய்திருக்கின்றது. இந்த ஆண்டு ஆயிரம் திருக்கோயில்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் திட்டத்தின்கீழ் நிதியொதுக்குவதற்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு இரண்டாயிரம் திருக்கோயில்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை சம்பந்தப்பட்ட திருக்கோயில்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 178, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**178—**

### தரம் உயர்த்துதல்

***26796—திரு. கு. சின்னதுரை:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி, சித்தேரி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தலைவாசல் தொகுதி, சித்தேரியிலிருக்கும் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோரி கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை. கருத்துருக்கள் பெறப்பட்டால், விதிமுறைகளின்படி பரிசீலிக்கப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை.

**திரு. கு. சின்னதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தலைவாசல் தொகுதியில் சித்தேரி ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியில் மொத்தம் 278 மாணவர்கள் படிக்கிறார்கள். அதிலே அரசு உயர்நிலைப் பள்ளிக்காக 4.78 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிலம் ஒதுக்கப்பட்டாலும், அந்தப் பகுதியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிட மக்கள் வசிக்கிற காரணத்தால், அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகையை அவர்களால் செலுத்த முடியாத ஒரு சூழ்நிலை உள்ளது. அதனால் அங்கே புரவலர் திட்டத்தில் 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி இருக்கிறது. அதைப் பயன்படுத்தியோ அல்லது S.S.A. திட்டத்தின்மூலமாக அரசே அந்த நிதியைக் கட்டி இந்த ஆண்டே அந்தப் பள்ளியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தரம் உயர்த்தித் தருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிட்டதைப் போல அந்தப் பள்ளியிலே 278 மாணவர்கள் படித்துக் கொண்டிருந்தாலும்கூட, எட்டாம் வகுப்பிலே ஏறத்தாழ 38 மாணவர்கள் படித்துக் கொண்டிருப்பதாக எனக்கு விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. அங்கே பொது மக்களுடைய பங்குத் தொகை இன்னும் செலுத்தப்படவில்லை. உறுப்பினர் அதற்கான காரணத்தை இங்கே தெரிவித்திருக்கிறார். S.S.A. திட்டத்தின்கீழே இதை எடுத்துக்கொள்ள முடியாது. காரணம், S.S.A. திட்டம் என்பது, துவக்க நிலை மற்றும் நடுநிலையிலே இருக்கக்கூடிய பள்ளிகளுக்காக மாத்திரம் செயல்படுத்தக்கூடிய திட்டமாகும். எனவே, இந்தப் பங்குத் தொகை செலுத்தப்பட்டால், அரசு உடனடியாகப் பரிசீலிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அல்லது, SUCCESS திட்டத்தில் வரக்கூடிய ஆண்டுகளிலே அரசு நிச்சயமாகப் பரிசீலிக்க வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை.

**திரு. கு. சின்னதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மேலும் எனது தொகுதியில் இந்த ஆண்டு சதாசிவபுரம் அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு 13–3–2008 அன்று ஒரு இலட்சம் ரூபாய் பொதுமக்களால் செலுத்தப்பட்டிருக்கிறது. அதேபோல், கிழக்கு ராஜாபாளையம் அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு 19–2–2008 அன்று ஒரு இலட்சம் ரூபாய் பொதுமக்களால் செலுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு இந்தப் பள்ளியையாவது தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய முன்மொழிவுகள் அரசுக்குக் கிடைக்கப்பெற்றால், மாண்புமிகு உறுப்பினர் கோரியிருக்கக்கூடிய பள்ளிகளைத் தரம் உயர்த்துவதற்கு அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 179, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**179—**

### சரணாலயம்

***34821—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதியில் தேவனாம்பட்டு மான்கள் சரணாலயம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடை, (அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதி, தேவனாம்பட்டில் மான்கள் சரணாலயம் அமைப்பது அரசின் பரிசீலனையில் இல்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் மற்றும் தேவனாம்பட்டு ஆகிய பகுதிகளுக்கருகில் சொரகளத்தூர் ஆர். எஃப். 2,825.98 எக்டேர் பரப்பளவிலும், கவுந்திமலை ஆர். எஃப். 2,306.15 எக்டேர் பரப்பளவிலும் Reserve forest area அமைந்துள்ளது. இந்த வனப் பகுதியில் ஆயிரக்கணக்கான மான்கள் துள்ளி விளையாடிக் கொண்டிருக்கின்றன. பல நேரங்களில் அந்த வழியாகச் செல்லும் வாகனங்களால் சில மான்கள் அடிபட்டு இறக்கின்றன. இதனைக் கருத்தில் கொண்டு இந்தப் பகுதியிலுள்ள அரிய வகை மான்களைக் காப்பாற்ற உடனடியாக பாதுகாப்புடன்கூடிய மான்கள் சரணாலயம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் தொகுதியிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல சொரகளத்தூர் காப்புக் காடு 2,306 எக்டேர் பரப்பளவிலே அமைந்திருக்கிறது. அதைப்போலவே அந்தப் பகுதியிலே மூலக்காடு காப்புக் காடும், பருவதமலை காப்புக் காடும், பெரியமலை காப்புக் காடும் 11,942 எக்டேரிலே அமைந்திருக்கிறது. அவருடைய தொகுதியிலே ஒரு பகுதியாக கேலூர் காப்புக் காடு என்பது அமைந்திருக்கிறது. ஆனால் இந்தப் பகுதியிலே நாங்கள் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் சொரகளத்தூர், தேவனாம்பட்டு, இராமாபுரம், மருவத்தம்பாடி, குளக்கரவாடி ஆகிய 5 கிராமங்களை எடுத்து அதிலே 1,250 எக்டேரிலே காடுகள் வளர்க்கப்பட்டு, நல்ல அடர்ந்த காடுகளாக இருக்கின்றன. எனவே, மான்கள் பாதுகாப்பாக இருக்கின்ற சூழ்நிலை அங்கே இருக்கின்ற காரணத்தால், தனியாக மான்கள் சரணாலயம் அமைக்கின்ற சூழ்நிலை ஏற்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் தொகுதியில் ஜவ்வாது மலையினுடைய வனப் பகுதிகள் பெருமளவில் அமைந்துள்ளன. கலசப்பாக்கம் தொகுதியில் மட்டும் 16,575.95 எக்டேர் பரப்பளவில்

[2008 ஏப்ரல் 29

வனப் பகுதிகள் உள்ளன. இதில் பல ஆயிரக்கணக்கான அரிய வகை மான்கள் உள்ளன. மேலும், பலதரப்பட்ட வன விலங்குகளும் உள்ளன. மேலும், ஜவ்வாது மலை, ஜமுனாமரத்தூர், தென் கைலாயம் என்று போற்றப்படுகின்ற பர்வதமலை ஆகிய பகுதிகளுக்குச் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகின்றனர். எனவே, கலசப்பாக்கம் தொகுதி மக்களின் நலன் கருதியும், சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதியும் இந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மான்களின் நலனுக்காகவும், அவற்றைப் பாதுகாக்கும் விதமாகவும், கலசப்பாக்கம் தொகுதியில் மான்கள் சரணாலயம் அவசியம் அமைக்க வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தி, இந்த அரசு அமைக்குமா என்று தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மான்கள் ஏற்கெனவே பாதுகாப்பாகத்தான் இருக்கின்றன என்று குறிப்பிட்டு இருக்கிறேன். சரணாலயம் அமைப்பதிலே பல இன்னல்கள் இருக்கின்றன. பொதுமக்கள் பல்வேறு இடையூறுகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். சரணாலயப் பகுதிகளிலே அடிப்படை வசதிகள் எதையும் மேற்கொள்ள முடியாது. குடிநீர்க் குழாய்கள் அமைப்பதோ அல்லது மின் கம்பங்கள் நடுவதோ அல்லது சாதாரண மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதோ முடியாது. அந்தச் சரணாலயப் பகுதிகளிலே செல்ல வேண்டுமேயானால், பொது நல ஊழியரைத் தவிர யாரும் செல்ல முடியாது. அங்கே வனத் துறை அலுவலரால் அனுமதிக்கப்பட்ட, அங்கீகாரம் பெற்ற வன அலுவலர்களிடம் அனுமதிச் சீட்டு பெற்றுத்தான் செல்ல வேண்டும் அல்லது அந்தப் பகுதியிலே குடியிருப்பவர்கள்தான் செல்ல முடியும் அல்லது அங்கே நில உரிமையாளர்களாக இருப்பவர்கள்தான் செல்ல முடியும். இப்படி பல இன்னல்கள், இடர்பாடுகள் இருக்கின்ற காரணத்தினாலே, சரணாலயம் அமைப்பதிலே தலைவர் கலைஞருடைய அரசு ஆர்வம் காட்டவில்லை. அண்மையிலே நடந்த தேசிய வன உயிரின நிறுவனக் கூட்டத்திலே நான் கலந்துகொண்டேன். தமிழ்நாட்டிலே இனி சரணாலயங்களை அதிகப்படுத்த முடியாது. ஏனென்று கேட்டால், அவர்கள் சொன்னார்கள், 25 விழுக்காடு வேண்டும் என்று. தமிழ்நாட்டைப் பொறுத்தளவில், நாங்கள் 3,840 சதுர



2008 ஏப்ரல் 29]

கி.மீட்டரிலே 16.79 விழுக்காடு என்ற அளவுக்கு சரணாலயப் பகுதிகள் வைத்திருக்கிறோம். இந்திய அளவிலே அவர்கள் 1,56,000 சதுர கி.மீட்டரிலே 20.03 விழுக்காடு அளவிற்கு சரணாலயம் வைத்து இருக்கிறார்கள். சரணாலயம் இருந்தால், இந்த இன்னல்கள் இருக்கின்றன என்று எடுத்துக்காட்டி, கன்னியாகுமரி மாவட்டத்திலே மாண்புமிகு திருவட்டாறு சட்டமன்ற உறுப்பினர் பலமுறை தங்கள் பகுதியிலே அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படவில்லை என்று சொன்ன காரணத்தினாலே, அதை சரணாலயப் பகுதியில் இருந்து தலைவர் கலைஞருடைய அரசு நீக்கி இருக்கிறது. எனவே, புதிதாக சரணாலயம் அமைப்பது, மற்ற மக்களுக்கு அவ்வளவு நல்லதல்ல. ஆனால், வன உயிரினங்களையெல்லாம் பாதுகாப்பதற்காக நாங்கள் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி.

**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் வழங்கிய விரிவான பதிலில் மான்கள் எல்லாம் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பதாக, புள்ளிவிவரத்தோடு சொன்னார்கள். இன்றைக்கு செய்தித் தாளிலே பார்க்கின்றபோது, வேளச்சேரியிலே இரண்டு மான்கள் சண்டை போட்டுக்கொண்டதாகச் செய்தி வந்திருக்கிறது. வேலி தாண்டிய வெள்ளாடு என்றுதான் நாம் கேள்விபட்டிருக்கிறோம். வேலி தாண்டி வந்து சண்டை போடுகின்ற அந்த மான்களைக் கட்டுப்படுத்துகின்ற சிறப்பான திட்டம் ஏதாவது அமைச்சரிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எமக்கு வந்த செய்திப்படி அந்த இரண்டு மான்களும், முன்விரோதம் காரணமாக இப்படிப்பட்ட பிரச்சினையில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மலையில் அரிய வகை இனமான சிங்கவால் குரங்குகள் அதிகமான எண்ணிக்கையில் பெருகி உள்ளன. அந்தக் குரங்குகள் உணவு கிடைக்காமல், தண்ணீருக்காகவும், உணவுக்காகவும்

நகரத்தின் மையத்திற்கு வரக்கூடிய நிலை இருக்கிறது. ஆள் உயர அந்தச் சிங்கவால் குரங்குகள் ஊரிலே வரும்போது மக்கள் பயப்படக்கூடிய சூழ்நிலை உருவாகிறது. ஆகவே, அந்தச் சிங்கவால் குரங்குகளை மலையின்மீதே பாதுகாப்பதற்கு நம்முடைய வனத் துறை, நடவடிக்கை எடுக்குமா? அவற்றிற்கு உணவும் தண்ணீரும் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வனப் பகுதிகளிலே எல்லா வன உயிரினங்களுக்கும் தண்ணீர் கிடைப்பதற்காக அங்கேயே குட்டைகள் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு விலங்கிற்கும் இயற்கையின் படைப்பிலேயேகூட அங்கேயே உணவுகள் கிடைக்கின்றன. பெரிய உயிரினங்கள், சிறிய உயிரினங்களை அங்கே சாப்பிடுகின்றன. அதைப்போல, மாமிசம் சாப்பிடாத சில விலங்குகள் அங்கேயே மரத்தில் கிடைக்கின்ற காய்கறிகள், கீரைகளைச் சாப்பிடுவதற்கும் ஏதுவாக இயற்கையிலேயே அப்படி ஒரு படைப்பு இருக்கிறது. சில நேரங்களில், பற்றாக்குறை காரணமாக தண்ணீருக்காகவோ அல்லது அவை விரும்புகின்ற உணவுகள் அந்தக் காட்டுக்கு அருகில் இருந்தாலோ அந்த வனத்தை விட்டு வெளியே வருவது தவிர்க்க முடியாமல் ஆகிவிடுகிறது. ஆனால், அதைக் கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை தலைவர் கலைஞர் அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. வேலிகள் அமைத்துக்கொண்டிருக்கிறோம், மற்ற பல பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வார காலமாக பத்திரிகையில் தொடர்ந்துவருகிற செய்தி, என்னுடைய தொகுதியில் வனத்தில் இருந்து குரங்குகள் எல்லாம் வெளியேறி, எனது தொகுதியில் மட்டும் இரண்டு நாட்களில் 20—க்கு மேற்பட்ட பொதுமக்களைக் கடித்துக் குதறியதால் . . .





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி மான்களைப் பற்றியது, குரங்குகளைப் பற்றியது இல்லை. குரங்கைப் பற்றி தனிக் கேள்வி போடுங்கள்.

*முற்பகல் 10–25*

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை, ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி அவர்கள் குரங்கைப் பற்றிக் கேட்டார்கள். ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று குரங்கு கடித்து மனிதர்களுக்கு ஆபத்து ஏற்படுகின்றபோது நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களால் துறையின்மூலம் இழப்பீடு தருவதற்கு வாய்ப்பு இருக்கிறதா? குரங்கு கடித்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர்மூலமாக நிவாரணம் வழங்குவதற்கு அரசிடம் குறிப்பு ஏதும் இருக்கிறதா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையிலே சாலை விரிவாக்கத்தின் காரணமாக, சாலையின் இருமருங்கிலும் இருந்த மரங்கள் வெட்டப்பட்ட காரணத்தால் அதிலே வாழ்ந்து கொண்டிருந்த குரங்குகள் ஆங்காங்கே வந்து தொந்தரவு செய்வதாகச் சொல்கிறார்கள். அவற்றை முடிந்த அளவுக்கு நாங்கள் விரட்டியடிக்கிறோம். யாரும் தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள். சிலர் மூடப் பழக்கங்களின் காரணமாக அதை வணங்குவதைக்கூட ஒரு கொள்கையாக வைத்துக்கொண்டு, குரங்கை அடிக்கக்கூடாது என்று நினைக்கிறார்கள். அதைக் கண்டால் வாழைப்பழம் போன்ற தின்பண்டங்களைக் கொடுத்து ஊக்குவிக்கின்ற காரணத்தால், அவையெல்லாம் நகரப் பகுதிகளுக்கு வருகின்றன. அவ்வாறு வந்தால், அவற்றைத் திருப்பி அனுப்புவதற்காகக்கூட ஒரு நிதியை ஒதுக்குவது குறித்து எனது மானியக் கோரிக்கையில் நான் தெரிவிக்க இருக்கிறேன். மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் பகுதி—2 திட்டத்திலே நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். எனவே, குரங்குகளுடைய தொல்லை முடிந்த அளவுக்குக் குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

11-98—5a

[2008 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. சி. ஞானசேகரன், நீங்கள் மான்களைப் பற்றித்தான் கேட்க வேண்டும். குரங்குகளைப் பற்றிக் கேட்கக்கூடாது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரணாலயம் புதிதாக அமைத்தோமென்று சொன்னால், அந்தப் பகுதிகளிலே எந்தவிதமான அடிப்படை வசதிகளையும் செய்ய இயலவில்லை; ஆகவே, சரணாலயம் அமைக்கக்கூடிய திட்டம் இல்லை என்கிற ஒரு கருத்தை இங்கே வலியுறுத்தினார்கள். ஏற்கெனவே, தமிழகத்தில் பல காடுகளில் சரணாலயங்கள் அமைக்கப்பட்டுவிட்ட இடங்களிலே அப்படிப்பட்ட சிரமங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, ஏற்கெனவே அமைக்கப்பட்டுவிட்ட அந்தச் சரணாலயங்களை எல்லாம் இரத்து செய்துவிட்டு பழையபடியே கொண்டுவந்தால் அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கக்கூடிய சாத்தியக்கூறு ஏற்படும். ஆகவே, சரணாலயம் அமைப்பதிலே எந்தவிதமான பயனும் இல்லை என்பதை உணர்ந்திருக்கிற அமைச்சர் சரணாலயங்கள் என்று அறிவிக்கப்பட்டிருப்பதை வாபஸ் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சரணாலயங்கள் தேவையில்லை என்று குறிப்பிடவில்லை. மேலும் அதிகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றேன். ஏனென்று கேட்டால், ஏற்கெனவே இருக்கின்ற சரணாலயங்களிலே இத்தனை இடர்பாடுகள் இருக்கின்றன; எனவே, அதை அதிகமாக்க வேண்டியதில்லை, இருக்கின்ற அந்த சரணாலயங்களை மட்டும் பாதுகாப்போம், அதிலே இருக்கின்ற விலங்குகளை எல்லாம் நாம் சரியாக கவனிப்போம் என்றுதான் சொன்னேனேயொழிய, வேறல்ல. இருக்கின்ற சிரமங்களை நான் ஒப்பிட்டுக் காட்டினேன். மாண்புமிகு திருவட்டாறு சட்டமன்ற உறுப்பினர் எத்தனையோ முறை இந்த அவையிலே, தன்னுடைய தொகுதியிலே அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று கூறியிருக்கிறார். குறிப்பாக, மின்கம்பங்கள் நடுவதிலேகூட இருக்கின்ற இடர்பாடுகளை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். எனவேதான் இனி விரிவுபடுத்தப்படாது என்று சொன்னேனேயொழிய இருப்பதை நாங்கள் குறைப்போம் என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.



2008 ஏப்ரல் 29]

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குரங்குகளைப் பற்றி இங்கே பேசுகின்றபோது மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் அதைக் கொல்வது—மூடப் பழக்க வழக்கம் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். மனிதனுடைய பரிணாம வளர்ச்சியில், மனிதனுடைய முந்தைய நிலை, அதாவது Darwin theory பிரகாரம் குரங்கிலிருந்துதான் மனிதன் பிறந்தான் என்ற உறுதிப்பாடு இருக்கின்றது. ஆகவே, நம்முடைய மூதாதையர்களாக குரங்குகள் இருப்பதால் அவற்றைக் கொல்வது இல்லை என்ற கருத்துதான் உண்மையான கருத்து என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 180, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**180—**

## அங்கன்வாடி மையம்

**•30210—திரு. கோ. அரி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, பட்டாபிராமபுரம் ஊராட்சி, அருந்ததியர் குடியிருப்பில் அங்கன்வாடி மையம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்தணி தொகுதி, பட்டாபிராமபுரம் ஊராட்சியில் இரட்டை மையங்கள் செயல்படுகின்றன. பட்டாபிராமபுரம் ஒன்று மற்றும் இரண்டு என உள்ளன. இதில் இரண்டாவது மையத்தில் அருந்ததியர் காலனியில் உள்ள 15 குழந்தைகள் பயன் பெறுகிறார்கள். அதுவும் இது அருந்ததியர் காலனியில் இருந்து அரை கிலோ மீட்டருக்கும் குறைவான தூரத்திலேயே உள்ளது. அதனால், புதிய மையம் ஏற்படுத்தித் தருவது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[2008 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், பட்டாபிராமபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட அருந்ததியர் காலனியில் இருந்து சுமார் 20—க்கும் மேற்பட்ட குழந்தைகள் அந்த பட்டாபிராமபுரம் கிராமத்திற்குச் செல்ல வேண்டிய சூழ்நிலையில், அந்த ஊருக்குச் செல்வதற்குப் போதுமான சாலை வசதியும் இல்லை. எனவே, அங்கே இருக்கின்ற குழந்தைகள் அவ்வளவு தூரம் செல்வதற்குப் போதுமான வசதிகள் இல்லாத காரணத்தினால், அங்கே இருக்கின்ற அந்த அருந்ததிய மக்களுடைய குழந்தைகளின் நலன் கருதி அந்தப் பகுதியிலேயே ஒரு அங்கன்வாடி மையத்தை ஏற்படுத்தித்தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இடம் அளித்தால் நிச்சயமாக அரசு இதுகுறித்து பரிசீலிக்கும்.

*முற்பகல் 10—30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு) Second Question கேட்க வேண்டுமா? (குறுக்கீடு) சொல்லுங்கள். One minute. வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே அரசுக்குச் சொந்தமான நிலங்கள் நிறைய இருக்கின்றன. அந்தப் பகுதி மக்கள் போதுமான அளவுக்கு அங்கிருந்து செல்ல முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றபட்சத்தில் அங்கே ஒரு சிறப்பு அனுமதி தந்து அந்த அருந்ததி இன மக்களுடைய குழந்தைகள் பயில்வதற்கு அந்த அங்கன்வாடி மையத்தை அரசு கண்டிப்பாக ஏற்படுத்தித் தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2008 ஏப்ரல் 29]

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் கூறியவாறு இடம் இருந்தால், இந்த வருடம் முதன்முறையாக நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் கட்டாயமாக குழந்தைகள் மையம் கட்டுவதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று வலியுறுத்தி ஆணை பிறப்பித்துள்ளார்கள். அதனைக் கருத்தில்கொண்டு அவர்கள் இடம் கொடுத்தால் அவர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியின் வாயிலாக ஒரு அங்கன்வாடி மையத்தைக் கட்டிக்கொள்ளலாம். அதற்கு அரசு சிறப்பு அனுமதி அளிக்கும் எனத் தங்களின் வாயிலாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்

### (அ) ஒரே ஏவுகணையில் 10 செயற்கைக்கோள்களை விண்ணுக்கு அனுப்பிய சாதனைக்காக விஞ்ஞானிகளுக்குப் பாராட்டு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். நேற்றையதினம் 28—4—2008 அன்று இந்திய விஞ்ஞானிகளால் உலகிலேயே முதல்முறையாக ஒரே நேரத்தில் 10 செயற்கைக்கோள்களுடன் இந்தியாவின் PSLV C 9 ராக்கெட் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. இது இந்திய விண்வெளி வரலாற்றில் மாபெரும் சாதனையாகக் கருதப்படுகிறது. இம்மகத்தான பணியில் ஈடுபட்ட இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத் தலைவருக்கும், விண்வெளி விஞ்ஞானிகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாகவும், என் சார்பாகவும், பேரவையின் சார்பாகவும் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

## (ஆ) சாலை விபத்துகளால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு நிதியுதவி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சாலை விபத்து, மருத்துவமனையில் இறப்பு போன்ற பல்வேறு நேர்வுகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்து, பாதிக்கப்பட்ட அவர்கள் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்று பேரவை விதி 55 மற்றும் 56–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகள்மீது உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கும், பாதிக்கப்பட்ட குடும்பத்தினர்களுக்கு நிவாரண உதவி அளிப்பதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. எனவே, உறுப்பினர்களின் இத்தகைய அறிவிப்புகள்மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கையை எடுப்பார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு)

## 3. தகவல் கோரல்

### மாண்புமிகு முதலமைச்சர்மீது உரிமை மீறல் பிரச்சினை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 220–ன்கீழ் அடியிற்கண்ட உரிமை மீறல் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எதிராக எழுப்பப்பட்டுள்ள பிரச்சினை குறித்து பேசுவதற்கு அனுமதி அளிக்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது ஆய்வில் இருக்கிறது. பிறகு பார்க்கலாம் (குறுக்கீடுகள்) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு (குறுக்கீடுகள்) No. எல்லோரும் உட்காருங்கள்.



## 4. கவன ஈர்ப்பு

### வழிகாட்டி மதிப்புகள் பதிவுத் துறையால் உயர்த்தப்பட்டது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். Nothing doing, எல்லோரும் உட்காருங்கள். No. (குறுக்கீடுகள்) திரு. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவுத் துறையால் வழிகாட்டி மதிப்புகள் உயர்த்தப்பட்டதால் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

### அறிக்கை

பதிவுத் துறையில் பின்பற்றப்படும் வழிகாட்டி மதிப்புகள் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை கிராமப்புறங்களுக்கும், ஆண்டுக்கொரு முறை நகர்ப்புறங்களுக்கும் திருத்தி அமைக்கப்பட்டு வந்தன. அவ்வாறே 1–4–2003–ல் இவ்விரு பகுதிகளுக்கும் திருத்தப்பட்ட வழிகாட்டி மதிப்புகள், 3 ஆண்டுகள் கழித்து, 1–4–2006–ல் கிராமப்புறங்களுக்கும், 1–4–2004, 1–4–2005, 1–4–2006, 1–4–2007 ஆகிய ஆண்டுகளுக்கு நகர்ப்புறத்துக்குமாகத் திருத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 1–4–2003–க்குப் பிறகு வழிகாட்டி மதிப்புகள் திருத்தி அமைக்கப்படவில்லை. வளர்ச்சி சதவிகிதத்தின் அடிப்படையில் நிர்ணயம் செய்யும் வழிகாட்டி மதிப்புகள், வெளிச் சந்தையில் நிலவும் சந்தை மதிப்பினை பிரதிபலிக்காமல் ஒரு சில நிலங்களுக்கு மிகக் குறைவான மதிப்புகளும், சிலவற்றுக்கு மிகவும் அதிகமான மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட்டதால் பொது மக்கள் மிகவும் பாதிப்புக்கு

[திரு. என். சுரேஷ் ராஜன்] [2008 ஏப்ரல் 29

உள்ளாகினர். குறைவான மதிப்புகள் உள்ள நிகழ்வுகளில் அரசுக்கு வருவாய் இழப்பும் ஏற்பட்டது.

எனவே, வழிகாட்டி மதிப்பினை நிர்ணயம் செய்ய ஏற்கெனவே கடைப்பிடிக்கப்பட்டு வரும் வழிமுறைகளில் உள்ள குறைகளைக் களைந்து வழிகாட்டி மதிப்புகள் சந்தை விலையை பிரதிபலிப்பதாகவும், மதிப்பு நிர்ணயிக்கும் முறையில் வெளிப்படையான அணுகுமுறை இருக்க வேண்டுமென்றும், பொது மக்களின் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து மதிப்பு நிர்ணயம் செய்வதற்கு ஏற்றதொரு நெறிமுறை கடைப்பிடிக்க வேண்டுமென்றும் பலதரப்பினரிடமிருந்தும் முறையீடுகள் வரப்பெற்றன. வழிகாட்டி மதிப்பிற்கும், சந்தை மதிப்பிற்கும் இடையே முரண்பாடுகள் இருந்ததால், ஆயிரக்கணக்கான ஆவணங்கள், சந்தை மதிப்பு நிர்ணயம் செய்ய வேண்டி தனித் துணை ஆட்சியர் (முத்திரை)—க்கு அனுப்பும் நிலையை ஏற்படுத்தியது. இதனால் பதிவு செய்த ஆவணங்களைத் திரும்பப் பெறுவதில் காலதாமதமும் குறைவு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் ஆகியவற்றை உடனடியாக வசூலிக்க இயலாத நிலையும் ஏற்பட்டது.

இந்நிலையில் வெளிச் சந்தையில் நிலவும் மதிப்பினைப் பிரதிபலிக்குமாறு அறிவியல் ரீதியாக வழிகாட்டி மதிப்புகளைத் திருத்தி அமைக்கும்வகையில் வழிகாட்டி மதிப்பினைச் சீரமைக்க மைய மதிப்பீட்டுக் குழு, மாவட்டக் குழுக்கள் மற்றும் வட்டக் குழுக்களை அமைத்து 8—6—2005—ல் அரசு ஆணையிட்டது. அதன்படி வட்ட அளவில், சம்பந்தப்பட்ட வட்டாட்சியர், சார் பதிவாளர், வழிகாட்டி சார் பதிவாளர், ஊராட்சி ஒன்றிய ஆணையர், நகராட்சி ஆணையர் ஆகியோரைக் கொண்ட வட்டக் குழு ஒவ்வொரு கிராமந்தோறும் நேரடியாகச் சென்று கிராம நிர்வாக அலுவலர், ஊராட்சி மன்றத் தலைவர், முன்னாள் கிராம முன்சிப், ஊர் பிரமுகர்கள் ஆகியோரிடம் நில மதிப்பு குறித்து விசாரணை செய்தும், கடந்த ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் சராசரி மதிப்பைக் கொண்டும் விஞ்ஞானபூர்வமாக மதிப்புகளைக் கணக்கிட்டும், நஞ்சை நிலங்களில் பாசன வசதி மற்றும் ஒரு போகம், இரு போகம் அல்லது மூன்று போகம் விளையக்கூடிய நிலங்களின் பாகுபாடுகளையும், புஞ்சை நிலங்களைப் பொறுத்தவரை கிணற்றுப் பாசனம், மானாவாரி ஆகிய தன்மைகளைக் கருத்திற்கொண்டும் மதிப்புகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

நகர்ப்புறத்தைப் பொறுத்தமட்டில் தொழிற்சாலை வர்த்தகம், குடியிருப்பு எனப் பாகுபாடு செய்து அதன் அடிப்படையில் சீராக



2008 ஏப்ரல் 29] [திரு. என். சுரேஷ் ராஜன்]

வழிகாட்டி மதிப்புகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்ட மதிப்புகள் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான மாவட்டக் குழுவில் வைத்து, பரிசீலனை செய்து அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இம்மதிப்புகளை முதலில் சார் பதிவாளர் அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் பதிவுத் துறை இணைய தளத்தில் வெளியிட்டு பொது மக்களின் கருத்துகளையும், மறுப்புகளையும் பெற்று அவை மாவட்டக் குழுவின் முன்வைத்து மீளப்பரிசீலனை செய்து பொது மக்களின் கருத்துகளை ஒட்டி மீண்டும் மதிப்புகள் சரிசெய்யப்பட்டு நிர்ணயம் செய்யப்பட்டன. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்ட மதிப்புகள் கடைசியாக 7—2—2007 அன்று பதிவுத் துறை இணைய தளத்தில் வெளியிடப்பட்டன. அத்துடன் சம்பந்தப்பட்ட சார் பதிவாளர் அலுவலகங்களிலும் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டன. இந்நிலையில் மேற்கண்ட வகையில் சீரமைக்கப்பட்ட வழிகாட்டி மதிப்புகள் 1—8—2007 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது தயாரிக்கப்பட்டுள்ள மதிப்புகள் கிராமங்களைப் பொறுத்தவரை 1—4—2003 வழிகாட்டி மதிப்பிலிருந்து சராசரியாக 91.68 சதவீதமும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரை சராசரி 80.79 சதவீதமும் மட்டுமே உயர்ந்துள்ளது. மேற்படி வழிகாட்டி மதிப்புகள் உண்மையான சந்தை மதிப்பைப் பிரதிபலிக்கும்வகையில் அமைந்துள்ளன. அந்தந்த நிலங்களின் தன்மைக்கேற்றவாறு சரியான மதிப்புகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. பொது மக்கள் பாதிப்படையும்வகையில் வழிகாட்டி மதிப்புகள் உயர்த்தப்படவில்லை. அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான குழுக்கள் இந்த மதிப்புகளை ஆய்ந்து அங்கீகாரம் செய்துள்ள நிலையில் இதில் குறைபாடுகள் ஏற்பட வாய்ப்பில்லை. ஏதேனும் குறைகள் இருப்பதாகப் பொது மக்களிடமிருந்து முறையீடுகள் வரப்பெறின் அவற்றை அந்தந்த மாவட்டக் குழுவில் வைத்து சரிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை முழுமையாகப் படித்துப் பார்த்தேன். அதிலே பல்வேறு விவரங்கள் நிலத்தினுடைய பத்திரப் பதிவுக்கான மதிப்பு திருத்தி அமைக்கப்படுவதற்காக அரசினுடைய வழிகாட்டு

[திரு. சி. கோவிந்தசாமி] [2008 ஏப்ரல் 29

நெறிமுறைகளும் அதற்காக எடுக்கப்பட்டிருக்கிற பல்வேறு நடவடிக்கைகளைப் பற்றியெல்லாம் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இறுதியாக அதிலே என்ன வலியுறுத்தப்படுகிறது என்று சொன்னால், தொழிற்சாலை, வர்த்தகம், குடியிருப்பு என்று அந்த நிலத்தைப் பாகுபாடு செய்து அதனடிப்படையில் சீரான ஒரு வழிகாட்டி மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதாக அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது ஒன்று.

*முற்பகல் 10–35*

இரண்டாவதாக, 1–8–2007 முதல் நடைமுறையில் மாற்றம் செய்யப்பட்டு அமலாக்கப்பட்டு வருகிற நிலத்தின் மதிப்பு அதிகபட்சமாக கிராமப்புறங்களில் 91.68 சதவீதமும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரை சராசரி 80.79 சதவீதமும் மட்டுமே உயர்த்தப்பட்டுள்ளதாக இந்த விவர அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. கீழேயிருந்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளால் கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு செய்தி என்று நான் இதைக் கருதுகிறேன். ஆகவே, அது கீழே நடைமுறையில் இருக்கக்கூடிய யதார்த்த நிலைமைகளுக்கு மாறான ஒரு செய்தியை அந்தத் துறையைச் சார்ந்து இருக்கக்கூடியவர்கள் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள் என்றே நான் கருதுகிறேன்.

நான் ஓர் உதாரணத்திற்கு இங்கே குறிப்பிட விரும்புவது, திருப்பூரினுடைய பத்திரப் பதிவு அலுவலகம் நம்பர் 1, அதில் நெறிப்பறச்சல் கிராமம், ஊராட்சி மன்றம்தான். அந்த நிலத்தினுடைய சர்வே எண் 255. ஏற்கெனவே 2007 ஆகஸ்ட் மாதத்திற்கு முன்பிருந்த நிலத்தின் மதிப்பு 1,31,000 ரூபாய். இந்தத் திருத்தப்பட்ட மதிப்பு நடைமுறையில் அமலான தேதி 1–08–2007–லிருந்து 69,32,400 ரூபாயாக அதனுடைய பத்திரப் பதிவுக்கான விலை மதிப்பு உயர்த்தப்பட்டிருக்கிறது. சற்றேறக்குறைய 5,292 சதவீதம் இப்போது அது உயர்த்தப்பட்டிருக்கிற விவரங்கள் தெரிய வருகின்றன. அதேபோல, வேலம்பாளையம், 3 ஆம் நிலை நகராட்சிப் பகுதி. அங்கே திருப்பூரினுடைய பத்திரப் பதிவு அலுவலகம் நம்பர் 2, அதில் பதிவு செய்யப்பட்டிருக்கக்கூடிய ஓர் இடத்தின் சர்வே எண் 25/2–ஏ. முன்பு 1,84,000 ரூபாயாக இருந்தது தற்போது மாற்றத்திற்குப் பிறகு 65,40,000 ரூபாயாக, சற்றேறக்குறைய 3,554 சதவீதம் கடந்த 1–8–2007–க்குப் பிறகு, உயர்த்தப்பட்டிருக்கிறது. அதனுடைய முழுமையான விவரங்களை பத்திரப் பதிவு அலுவலகத்திலேயிருந்து தகவல் கோரும் உரிமைச்



2008 ஏப்ரல் 29] [திரு. சி. கோவிந்தசாமி]

சட்டத்தின்மூலம் எடுக்கப்பட்டிருக்கிற விவரங்களை கையிலே வைத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் கொடுக்க விரும்புகிறேன். ஒரு விரிவான பட்டியல் இருக்கிறது. அந்தச் சதவீதம் 80.79–க்கு மேலே இல்லை, அதேபோல, கிராமங்களிலே 91.68 சதவீதத்திற்கு மேல் உயர்வு இல்லை என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், பத்திரப் பதிவு அலுவலகத்திலே இருக்கக்கூடிய விவரமோ இதற்கு நேர் மாறாக இருக்கிறது. ஆகவே, அந்த விவரங்களை முழுமையாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறையின்மூலம் மீண்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, இவ்வளவு கடுமையாக இந்த நிலத்தினுடைய மதிப்பு உயர்த்தப்பட்டிருப்பதால், சாதாரண ஏழை எளிய மக்கள் வீடு கட்டுவதற்காக ஒரு 4 செண்ட், 5 செண்ட் இடம் வாங்குகிறபோது 60,000 ரூபாய், 70,000 ரூபாய் என்று பத்திரப் பதிவுக்கே செலவிட வேண்டிய ஒரு சூழ்நிலை என்பது ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நடைமுறையிலே வெளிச் சந்தையிலே இருக்கக்கூடிய விலை என்பது மதிப்பீடு செய்யப்படுகிறது. நான் ஏற்கெனவே பல முறை இங்கே தெரிவித்திருக்கிறேன். வசதியான சில பெரிய தொழிலதிபர்கள் வங்கிகளிலே லோன் வாங்குவதற்கும் அல்லது வேறுவித காரணங்களுக்காக நிலத்தினுடைய மதிப்பை அவர்களாகவே கூடுதலாக்கி உயர்த்தி பத்திரப் பதிவு செய்கிறார்கள். அதை மட்டுமே அளவுகோலாக வைத்துக்கொண்டு அதிகபட்சம் எந்தப் பத்திரப் பதிவு கடைசியாக அதிக விலைக்குப் பதிவாகியிருக்கிறதோ, அதை மையமாகக் கொண்டு இந்தப் பத்திரப் பதிவுக்கான ஆய்வு செய்யப்பட்டு இந்தக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பது சாதாரண மக்களை மிகக் கடுமையாகப் பாதிக்கக்கூடிய ஒரு பிரச்சினை என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே, அதுபற்றிய எல்லா விவரங்களையும் நான் அமைச்சர் அவர்களிடத்திலே நேரிலே வழங்கயிருக்கின்றேன். தயவு செய்து அவர்கள் கொடுத்த அறிக்கையை நீங்கள் அப்படியே ஏற்றுக்கொள்ளாமல், உண்மை விவரங்களைக் கண்டறிந்து இந்த நில மதிப்புக்கான அரசினுடைய முடிவை மறுபரிசிலனை செய்ய வேண்டும். தொழில் நடத்துகின்றவர்களுக்கும் அல்லது வர்த்தகம் செய்யக்கூடியவர்களுக்கும் வேறுபடுத்தி இங்கே குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால், திருப்பூர் பகுதியில் அப்படிப்பட்ட வேறுபாடு இல்லை. ஒரே பகுதியிலே ஒரு சர்வே எண்ணில் தொழிற்சாலைக்காகப் பதிவு செய்யப்பட்ட இடத்திற்கும், வீடு கட்டுவதற்காக வாங்கப்பட்டிருக்கிற அதே நிலத்திற்கும் ஒரே நில மதிப்புத்தான் அங்கே நடைமுறையில்

வசூலிக்கப்படுகிறது. ஆகவே, இங்கே நீங்கள் குறிப்பிட்டிருப்பதைப்போல நடைமுறையில் இல்லை என்பதை எங்கள் திருப்பூர் தொகுதியினுடைய சொந்த அனுபவத்திலிருந்து நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, இவ்வளவு கடுமையான உயர்வால் சாதாரண மக்கள் நிலம் வாங்க முடியாத நிலை இருக்கிறது. இதைப் பரிசீலித்து, இதை மாற்றியமைக்க வேண்டுமென்று நான் நம்முடைய அரசினுடைய கவனத்திற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கும் இதைக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழிகாட்டு மதிப்பினைப் பொறுத்தமட்டில், வட்டக் குழுக்களாகவும், மாவட்டக் குழுக்களாகவும் இரண்டாக பிரிக்கப்பட்டு, வட்டங்களைப் பொறுத்தமட்டில், வட்டாட்சியர் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அவர்கள் ஆய்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலே இயங்கக்கூடிய அந்தக் குழுக்கள் இடத்திலே ஒப்படைக்கிறார்கள். எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதைப் பரிசிலனை செய்து, அந்தப் பகுதி பொது மக்களுக்குத் தெரியப்படுத்தும்விதத்தில், பொது மக்களுடைய பார்வையில் வைக்கப்பட்டிருக்கிறது. பொது மக்கள் அதில் ஏதாவது குற்றம்குறைகளை எடுத்துக்கூறினால், அதனை மீண்டும் பரிசிலனை செய்து அரசுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக பரிந்துரை செய்யப்படுகிறது. 2–8–2007 ஆம் நாளன்று முதல் அரசு வழிகாட்டி மதிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலப்பாளையத்திலும், திருப்பூரிலும் 5,000 சதவீதம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். பொது மக்கள் பாதிக்கக்கூடாது என்ற நோக்கத்தின் அடிப்படையில், அவர்கள் appeal செய்வதற்காக, மாவட்ட அளவில் அதற்காக ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர்களிடத்தில் appeal செய்து, அதுகூட அவர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை என்று சொன்னால், பதிவுத் துறைத் தலைவர் ஐ.ஜி. அவர்களுக்கு மீண்டும் மேல்முறையீடு செய்வதற்கும் ஒரு வாய்ப்பு இருக்கிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளை, இதுபோன்ற நிலைமைகளை உடனடியாக இந்தத் துறை பரிசிலனை செய்து ஒரு



நல்ல முடிவை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக, அந்த ஆய்வுகள் நடைபெறுகின்றபோது, வெளிப்படையாக இதிலே குறிப்பிட்டு இருப்பதைப்போல, திருப்பூர் தொகுதியைப் பொறுத்தவரையிலே நடைபெறவில்லை என்பதை நான் இங்கே பணிவோடு மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே, நானும் அந்த ஊரிலேதான் இருக்கிறேன். அந்தமாதிரி எந்த ஏற்பாடும் இல்லை. நடந்ததாக ரெக்கார்டுகள்தான் தயாரிக்கப்பட்டு உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அதை நீங்கள் ஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, நீங்கள் appeal செய்யலாம் என்று சொல்கிறீர்கள். அதுவும் செய்து பார்த்துவிட்டோம். 5 சதவீதத்திலிருந்து. 10 சதவீதத்திற்கு மேல் appeal–ல் குறைக்கப்படுவதற்கான வாய்ப்பு கிடையாது என்று சொல்கிறார்கள். ஆகவே, நான் சொல்வது 5,000 சதவீதம் உயர்ந்து இருக்கிறது. ஆகவே, appeal–ல் 5 சதவீதம் குறைப்பதினால் எந்தப் பயனும் அவர்களுக்குக் கிடைக்கப் போவதில்லை.

இரண்டாவது, அதையும்மீறி இங்கே ஆணையாளருக்கு அனுப்பச் சொன்னீர்களே, அதுமாதிரி அனுப்பிப் பார்த்தோம். 7 மாத காலம் கடந்து, இறுதியாக அவர் முடிவெடுத்து குறைப்பதற்கான வாய்ப்பு இல்லையென்று சொல்லி, மேலும், 18,000 ரூபாய் இந்த 7 மாத காலத்திற்கு வட்டியோடு சேர்த்துக் கட்ட வேண்டும் என்று தீர்ப்பு வருகிறதேயொழிய, குறைக்கிற நடவடிக்கை இல்லை. அந்த முயற்சியும் செய்து பார்க்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இது appeal–ல் தீருகின்ற பிரச்சினை இல்லை. அரசு தன்னுடைய நிலைபாடுகளை மாற்றி, இதுகுறித்து மறு மதிப்பீடு செய்து அறிவிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய திருப்பூர், மேட்டுப்பாளையம் பகுதிகளில் அந்த வழிகாட்டி மதிப்பு அதிகமாக இருக்கிறது, அதற்கு appeal செய்தும் எந்தவித பயனும் இல்லையென்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். நிச்சயமாக அதற்கு எந்த அளவிற்கு மறுபரிசீலனை செய்யலாம் என்பதைத் துறை அதிகாரிகளோடு கலந்தாலோசித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு நல்ல முடிவு தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்திலும், கரூர் சட்டமன்றத் தொகுதியிலும் பத்திரப் பதிவுத் துறையில் அரசினுடைய வழிகாட்டு மதிப்பு என்பது, ஆண்டாங்கோவில் பகுதியில் 30 ரூபாய் என்று இருந்தது 1,003/– ரூபாயாக மாற்றப்பட்டது. அதுபோன்று, காடப்பாறையில் 50 ரூபாய் இருந்தது, 232 ரூபாயாக உயர்த்தப்பட்டது. அதுபோல், இனாம்கரூர் பகுதியில் 175 ரூபாய் இருந்தது 300 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இங்கு பல மாதங்களாக பத்திரப் பதிவுகள் நடைபெறாமல் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாக்கப்பட்டு, மீண்டும் அரசு ஒரு புதிய திருத்திய வழிகாட்டி மதிப்பை அங்கே அறிவித்தார்கள். அந்த திருத்திய வழிகாட்டி மதிப்பு நடைபெற்ற சில இடைப்பட்ட மாதங்களிலே, அவசரத் தேவைகளின் காரணமாக ஏதேனும் ஒருசில பத்திரப் பதிவுகள் நடைபெற்ற காரணத்தினால், அரசினுடைய திருத்திய வழிகாட்டி மதிப்பு என்பது ஆண்டாங்கோவில் பகுதியில் 30 ரூபாய் என்பது 1,003 ரூபாயிலிருந்து 200 ரூபாயாகக் குறைக்கப்பட்டது. அதுபோல், இனாம்கரூரில் 175 ரூபாய் இருந்தது. உயர்த்தப்பட்ட 300 ரூபாய் புதிய வழிகாட்டி மதிப்பிலிருந்து 204 ரூபாய் திருத்திய மதிப்பீடாக அங்கே குறைக்கப்பட்டது. அதேபோல, காடப்பாறையிலே 50 ரூபாயாக இருந்தது 232 ரூபாயாக உயர்த்தப்பட்ட திருத்திய வழிகாட்டி மதிப்பு, 160 ரூபாயாகக் குறைக்கப்பட்டது. ஆனால், குறைக்கப்பட்ட இடங்களிலே, ஒருசில பத்திரப் பதிவுகள் என்பது இடைப்பட்டக் காலங்களிலே நடைபெற்ற காரணத்தினால், அரசினுடைய திருத்திய வழிகாட்டி மதிப்பு என்பது அங்கே அமல்படுத்தப்படவில்லை. பத்திரப் பதிவு நடைபெற்ற அந்த உயர்ந்தக் கட்டணமே நடைமுறைப்படுத்தப்படும் என்று அங்கே





தெரிவித்துள்ளார்கள். ஆகையால் திருத்திய வழிகாட்டி மதிப்பு என்பதை நடைமுறைப்படுத்துவதிலே சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதைக் களைவதற்கு அரசு முன்வருமா? அனைத்து இடங்களிலும் ஒரே சமச்சீர் நிலையைக் கொண்டு வருவதற்கு, பத்திரப் பதிவுத் துறை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சி எடுக்குமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துப் பகுதிகளிலும் சமச்சீராக வழிகாட்டி மதிப்பீட்டை ஒப்பீடு செய்ய முடியாது. கரூர் பகுதியைப் பொறுத்தமட்டில், அங்கு வழிகாட்டி மதிப்புகள் அதிகமாக இருக்கின்றன என்பதை அனைத்து கட்சிகளைச் சார்ந்த நிர்வாகிகளும் இந்த அரசுக்குத் தெரியப்படுத்தியவுடன், மீண்டும் அவர்களை எல்லாம் அழைத்து வைத்து மறுபரிசீலனை செய்து, இன்றைக்கு கரூர் பகுதிகளில் நிலங்கள் பதிவு செய்யப்படுகின்றன. எனவே, அங்கு இப்பொழுது எந்தவிதமான பிரச்சினைக்கும் இடமில்லை. அவர்கள், இந்தத் துறைக்குக் கடிதங்கள்மூலமாகவும், நேரடியாகவும் நன்றி தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களால் இந்தத் துறையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தவுடன், அது தீர்க்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேட்டீர்கள் இல்லையா? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய வழிகாட்டி மதிப்பீடு அறிவிக்கப்பட்டபொழுது அங்கே நன்றி தெரிவிக்கின்ற தீர்மானங்களின் நகல்களை உங்களுக்கு அனுப்பியுள்ளார்கள். ஆனால், திருத்திய வழிகாட்டி மதிப்பு என்பது இடைப்பட்ட காலங்களிலே ஒரு சில பகுதிகளிலே பத்திரப் பதிவு நடைபெற்ற காரணத்தினால், அந்தப் புதிய திருத்திய வழிகாட்டி மதிப்பு என்பதை அங்கு அமல்படுத்த முடியவில்லை. இறுதியாக எந்த மதிப்பிற்குப் பதிவு செய்யப்பட்டதோ, அதே நடைமுறைதான் இப்பொழுது நடைமுறைப்படுத்தப்படுகிறது. புதிய திருத்திய வழிகாட்டி மதிப்பு இன்று அமலில் இல்லை என்பதை மாண்புமிகு

[திரு. வே. செந்தில் பாலாஜி] [2008 ஏப்ரல் 29

அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கோரிக்கைகள் வந்தவுடன் அவர்களையும் அழைத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில் அங்கு ஆராயப்பட்டு, புதிய திருத்திய மதிப்பீடுதான் இன்றைக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது, பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவர்களே வந்து நன்றி சொன்னார்கள். இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகள் மீண்டும் அந்தத் துறையின் சார்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, பொது நிறுவனங்கள் குழுத் தலைவர்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 93 முதல் 96 வரையிலான நான்கு அறிக்கைகளை குழுவின் சார்பிலே பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2008 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 10– வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)**

———

**(அ) கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008–2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 ஏப்ரல் 29

***மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.401,22,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.52,90,91,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 9, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 221, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9343, திரு. ஆர்.எம். பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13588, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



2008 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13815, திரு. மா. ராஜசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 14474, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16734, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1692, திரு. பெ. மோகன்.

**திரு. பெ. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2143, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10723, திரு. கு. பாண்டுரங்கன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 15620, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16940, திரு. ஆர். வைத்திலிங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 17047, திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5357, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6261, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7642, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9515, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

[2008 ஏப்ரல் 29

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11066, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11412, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12050, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2008 ஏப்ரல் 29] [திரு. கே.வீ. ராமநாதன்]

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13547, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13913, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

முற்பகல் 10–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14728, திரு. த.அ. மேகநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 16313, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. கே.எல். இளவழகன்] [2008 ஏப்ரல் 29

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10392, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15701, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15925, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக்



2008 ஏப்ரல் 29] [திரு. ப. டில்லி பாபு]

கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16826, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1363, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கம்பம் தொகுதி, நாராயணத்தேவன்பட்டியில் சலவைத் தொழிலாளர்களுக்கு ஆற்றுப்படுகையில் ஓய்வு அறை கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1816, திரு. போ. சின்னப்பன்.

**திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளாத்திகுளம் தொகுதி, சிவநாளபுரம் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. போ. சின்னப்பன்] [2008 ஏப்ரல் 29

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2981, திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திட்டக்குடி பகுதியில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த விவசாயிகளுக்கு கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3600, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் முஸ்லிம் சிறுபான்மை இன மக்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்காகவும் வழிகாட்டியாக இருக்கும் சச்சார் கமிட்டி பரிந்துரைகளை அமல்படுத்திட தமிழக அரசு சிறப்புத் திட்டம் உருவாக்கிச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4080, திரு. சி. ஞானசேகரன்.



2008 ஏப்ரல் 29]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் நகரில் BC & MBC துறைமூலம் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு (இளங்கலை, முதுகலை) விடுதிகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4770, திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4910, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை இரத்து செய்ததை வாபஸ் பெற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5112, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் உயர் கல்விக்குச் செல்ல அரசு இலவச பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக்

[திரு. ம. குணசேகரன்] [2008 ஏப்ரல் 29

கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5624, திருமதி பெ. கமலாம்பாள், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6696, திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் பயிலுகின்ற பள்ளிகளிலும் மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கும் கூடுதல் வசதி செய்து கொடுத்து, கல்வி கட்டணத்தை இரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6746, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட நெமிலி ஒன்றியத்தில் சுயநிதி உதவிக் குழுக்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைமூலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6803, திரு. இரா. குமரகுரு.



2008 ஏப்ரல் 29]

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநாவலூர் தொகுதிக்குட்பட்ட வேலூர் கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்ட மற்றும் ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் பயின்று வருகின்றனர். எனவே, பிற்படுத்தப்பட்டோருக்கான நல மாணவர் விடுதி ஒன்று அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7826, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டை நகரில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் நல விடுதிகளில் அனுமதிக்கும் மாணவர்கள் எண்ணிக்கையினை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8835, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் உள்ள அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளிகள், அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. இ. மகேந்திரன்] [2008 ஏப்ரல் 29

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9174, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை சமுதாய மாணவர்கள் மேற்படிப்பு படிக்க கடன் உதவி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9273, திரு. ஆர்.கே. பாரதி மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9668, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர்கள் விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9962, திரு. வே. செந்தில் பாலாஜி.



2008 ஏப்ரல் 29]

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் தொகுதியில் உள்ள பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு தங்கும் விடுதிகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10067, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி தொகுதியில் உள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கான அரசு தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் கணினிப் பயிற்சி மையங்கள் அமைத்து, இலவசமாக பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10298, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி தொகுதியில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் விடுதிகளுக்குக் கூடுதலாக அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

[திரு. இல. வேலுசாமி] [2008 ஏப்ரல் 29

ரூ.401,22,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10485, திரு. இரா. இராம்பிரபு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10757, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்கு கல்வித் தொகை முறையாகத் தொடர்ந்து வழங்கப்படுவதைக் கண்காணிக்கக் குழு ஒன்று நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10786, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதியில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகையை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10848, திரு. வை. காவேரி.



2008 ஏப்ரல் 29]

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதியில் கொங்கணாபுரத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மாணவர்கள் விடுதிக்குக் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10897, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதியில் உள்ள அரசினர் மாணவர் விடுதியைப் புதுப்பித்து, நவீனமயமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11315, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அரசு கலைக் கல்லூரிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு இலவசக் கல்வி வழங்குவது போன்று சுயநிதிக் கல்லூரிகளிலும் இலவச கல்வி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[2008 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11773, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓமலூர் தொகுதியில் உள்ள கஞ்சம்ரெட்டி மக்களுக்கு சாதிச் சான்று வழங்குவது குறித்து அரசு சரியான தீர்வு காண வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11817, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மத்திய அரசு இதர பிற்படுத்தப்பட்டோருக்குண்டான 27% ஒதுக்கீட்டை அமல்படுத்த உள்ள தடையை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12464, திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமயம் தொகுதியில் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் மாணவ, மாணவியர்களுக்கு இலவச சைக்கிள்கள் வழங்கியதில் விடுபட்ட பள்ளிகளிலுள்ள மாணவ, மாணவியர்களுக்கு சைக்கிள்களை உடனடியாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2008 ஏப்ரல் 29] [திரு. ராம. சுப்புராம்]

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12516, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதியில் உள்ள பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12525, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12732, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவில்லிப்புத்தூர் தொகுதியிலுள்ள கிருஷ்ணன் கோயிலில் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12764, திரு. மா. சந்திரகாசி.

[2008 ஏப்ரல் 29

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையின மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகையை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12931, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மக்களுக்கு வழங்கப்படும் மானியத்தை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13082, திரு. கோ. அரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13155, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள மாவட்டங்கள்தோறும் இஸ்லாமிய மாணவிகளுக்கு தலா ஒரு தனி விடுதிக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



2008 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13382, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாநகரில் உள்ள பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர் விடுதிகளைப் பராமரித்து அவர்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13715, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13870, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் நகராட்சிப் பகுதியில் புதிய மாணவ, மாணவியர் விடுதிகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14215, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து கிராமங்களிலும் படிக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் மாணவர்களுக்கு மேலூரில் தொழிற் பயிற்சி, கணினிப் பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. ஆர். சாமி] [2008 ஏப்ரல் 29

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15158, திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 15211, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதி, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்கு வழங்கும் இலவச தொகுப்பு வீடுகளின் அளவை அதிகரித்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16604, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் உள்ள சேத்தியாதோப்பு பிற்படுத்தப்பட்டோர் நல விடுதியில் கூடுதலாக மாணவிகள் தங்கிப் படிப்பதற்கு கூடுதல் இட ஒதுக்கீடு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16776, திரு. சு. குணசேகரன்.



2008 ஏப்ரல் 29]

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் அனைத்து அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும் மாணவ, மாணவியருக்கான அரசு விடுதிகளை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 17061, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதியில் உள்ள சலவைத் தொழிலாளர்களுக்கு இலவச துணி தேய்ப்புக் கருவியும், இலவச வீட்டுமனையும் அரசு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,90,91,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 10 – வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 10 – வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை). மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.209,34,00,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2008 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 10, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 222, திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9094, திரு. ஆர். எம். பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9114, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13578, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13812, திரு. மா. ராஜசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 14475, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:.

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."



2008 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16730, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1690, திரு. பெ. மோகன்.

**திரு. பெ. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1964, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10724, திரு. கு. பாண்டுரங்கன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12776, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. மா. சந்திரகாசி] [2008 ஏப்ரல் 29

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13299, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16442, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16948, திரு. ஆர். வைத்திலிங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 17049, திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6423, திரு. கி. ஆறுமுகம்.



2008 ஏப்ரல் 29]

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9585, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9799, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11056, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

[2008 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11425, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12004, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12147, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13527, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."



2008 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14448, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14738, திரு. த.அ. மேகநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 16304, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 17137, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8268, திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. கு. செல்வம்] [2008 ஏப்ரல் 29

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10391, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15707, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

முற்பகல் 10—55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15822, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12509, திரு. கே. உலகநாதன்.



2008 ஏப்ரல் 29]

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13871, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16845, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3610, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வணிக வரித் துறை அலுவலகங்களில் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்பிட, தற்காலிக ஊழியர்களை உடனடியாக பணி நிரந்தரம் செய்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

[2008 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4076, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வணிக வரி பாக்கி தொடர்பான அனைத்து வழக்குகளை முடிக்கும் வண்ணம், பாக்கியை வசூல் செய்ய ஏதுவாகவும் 2007 ஆம் ஆண்டு வரை உள்ள பாக்கிகளுக்கு சமாதானத் திட்டம் அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4545, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதியில் வணிக வரி அலுவலகங்களை மேம்படுத்தி அதன்மூலம் வரி வசூலிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4912, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பருக்கு வசூலிக்கும் 1 சதவீத சந்தைக் கட்டணத்தை இரத்து செய்து மதிப்புக் கூட்டு வரி வசூலிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."



2008 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5102, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவு, வறுகடலை, உடனடி சாம்பிராணி ஆகியவற்றிற்கு வரி விலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5614, திருமதி பெ. கமலாம்பாள், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8845, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் உள்ள நகைக் கடைகள் மற்றும் மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்து நகைக் கடைகளிலும் வசூல் செய்யப்படும் வரித் தொகை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9947, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் வணிக வரி வசூலை அதிகரிக்க, வரி ஏய்ப்பைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10064, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

[2008 ஏப்ரல் 29

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10243, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஏழை, எளிய மக்கள் பயன்படுத்தும் உணவுப் பொருட்களின்மீது விதிக்கப்பட்டுள்ள வரியை இரத்துச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10761, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து வணிக வரி அலுவலகங்களிலும், பொதுமக்கள் எளிதாக அணுகி உரிமங்களைப் பெற, விவரப் பட்டியல்களை, தெளிவான அறிவிப்புப் பலகைகளை நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10900, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் சிமெண்ட் விலை உயர்வை குறைக்க அதன் மீதான வரியைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2008 ஏப்ரல் 29] [திரு. பெ. கண்ணன்]

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11279, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டத்தில் உள்ள வணிக வரித் துறை அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11816, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதிப்புக் கூட்டு வரி விதிப்பு அமல்படுத்தியதால் மாநில அரசுக்கு இலாபமா, நஷ்டமா என்பது குறித்து ஆய்வு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12524, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12731, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் மாவட்டம், சத்திரப்பட்டி பகுதியில் உற்பத்தி செய்யப்படும் பேண்டேஜ் துணி ரகங்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. தி. இராமசாமி] [2008 ஏப்ரல் 29

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12929, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறு வணிகர்களுக்கான வணிக வரிகளைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12959, திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13001, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொது மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருள்களுக்கு வரி நீக்கம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13090, திரு. கோ. அரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13701, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13726, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் உள்ள வணிக வரி அலுவலகம் தற்பொழுது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்கு அரசு, சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம்



2008 ஏப்ரல் 29] [திரு. செ. பொன்னுதுரை]

குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14194, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறுதொழில்களைப் பெருக்குவதன் அவசியத்தைக் கருத்திற்கொண்டு சிறுதொழில்கள் மீதான வரியைக் குறைக்க, வணிக வரி அலுவலகங்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14849, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வணிக வரித் துறையில் தமிழகம் முழுவதும் காலியாக உள்ள பணியிடங்களை உடன் நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14979, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. எஸ். இராசசேகரன்] [2008 ஏப்ரல் 29

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15012, திரு. வை. காவேரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 15290, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதி, கட்டுமானப் பொருட்கள்மீது விதிக்கப்படும் வரிகளை அறவே இரத்து செய்து கட்டுமானப் பொருட்களின் விலையைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16501, திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 16710, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கட்டுமானப் பொருட்களின் விலையேற்றத்தைக் குறைத்திட தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16812, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் வரி ஏய்ப்பினைத் தடுத்து வரி வசூலிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,34,60,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."



2008 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவரவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இம்மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவரவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@175 முதல் 213 வரையிலான பக்கங்களில் இணைப்பு I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளது

@@214 முதல் 235 வரையிலான பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு உள்ளன. இவற்றின்மீது 10 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள், பேச ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் அவர்கள் உரைகளை நிகழ்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம். ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள். இரண்டு மானியங்களிலும் பேசுங்கள்.

***திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்திருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு மாநிலத்தினுடைய வருவாயிலே மிகப் பெரிய, முக்கியப் பங்கு வகிப்பது வணிக வரி. கிட்டத்தட்ட 65 சதவீத வருமானத்தை வணிக வரி மாநிலத்திற்குத் தருகின்றது. அப்படிப்பட்ட வணிக வரியிலே உங்களுடைய 1996–2001 ஐந்தாண்டு காலத்திலே மொத்த வணிக வரி 8,663 கோடி ரூபாய். அதற்குப் பிறகு வந்த அம்மாவினுடைய ஆட்சியிலே, 2001-லிருந்து 2006 முடிகிற வரையிலே, இதிலே நீங்கள் மூன்று ஆண்டு காலத்திலே பார்த்தீர்களென்றால், கடுமையான வறட்சி, சுனாமி, கடைசி ஆண்டு மிகப் பெரிய வெள்ளம். தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களும் கிட்டத்தட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்தன. இந்த ஐந்தாண்டு காலத்திலே வரி வருவாய் இரண்டு மடங்காக, 16,663 கோடி ரூபாய், வரி வருவாயை இரண்டு மடங்காக நாங்கள் உயர்த்திக் காட்டியிருக்கிறோம்.

ஆனால், இப்போது நீங்கள் ஆட்சிப் பொறுப்பேற்று மூன்றாவது நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கின்றீர்கள். இப்போது, இந்த இரண்டாண்டுக் காலத்திலே, உங்களுடைய நிர்வாகத்திலே வணிக வரி எந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்பது உங்களுடைய நிதிநிலை அறிக்கையைப் பார்த்தாலே தெரியும்.

முற்பகல் 11–00

2006 ஆம் ஆண்டு கடுமையான வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலைமையிலும், விவசாயிகள் பாதிக்கப்பட்ட நிலையிலும், உற்பத்தி பாதிக்கப்பட்டிருந்த நிலையிலும், 19.47% வருவாயை ஈட்டிக் கொடுத்திருந்தோம். ஆனால், அதற்குப் பிறகு, நீங்கள் ஆட்சிக்கு வந்த





வணிக வரியிலே 15% குறைந்திருக்கிறது. இந்த ஆண்டு, 2006–2007-லே, வருவாய்தான் உயர்ந்திருப்பதாகக் அதைவிட மோசமாக 3 சதவிகிதம் எங்களுடைய ஆட்சியிலே ஆண்டுக்காண்டு காட்டியிருக்கின்றீர்கள். ஆனால், உங்களுடைய 19% வருவாயை அதிகப்படுத்திக் காட்டினோம். அது குறைந்திருக்கிறது. ஆட்சியில், இந்த ஆண்டு 3 சதவிகிதத்திற்கு நிதி நிருவாகம் சீர்கெட்டுப் அந்த அளவிற்கு உங்களுடைய ஆட்சியிலே எடுத்துக்காட்டு என்பதைச் போயிருக்கிறது என்பதற்கு இதுவே ஓர் (மேசையைத் தட்டும் ஒலி) சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆனால், இதற்காக நீங்கள் ஒரு காரணத்தைச் சொல்வீர்கள்; 'மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்தியதால் வரி வருவாய் குறைந்திருக்கிறது' என்று சொல்வீர்கள். நாங்கள் அதை ஏற்றுக்கொள்கிறோம்; இல்லையென்று சொல்லவில்லை. மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துகின்றபோது, வரி வருவாய் குறையும். ஆனால், இந்த அளவிற்கு வருவாய் குறையும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. அதை நீங்களே சொல்லியிருக்கின்றீர்கள். (குறுக்கீடு) உங்களுடைய நிதிநிலை அறிக்கையிலே 82-வது பக்கத்திலே நீங்களே சொல்லியிருக்கின்றீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. சி.வி. சண்முகம், நீங்கள் பேசுங்கள்.

**திரு. சி.வி. சண்முகம்:** நான் ஏதோ உங்களைக் குற்றஞ்சாட்டிச் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. உங்களுடைய நிதி அமைச்சர் கொடுத்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையிலே, 'மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்தியதால், வரி இழப்பு ஏற்பட்டிருக்கின்றது. இது நாங்கள் எதிர்பார்த்ததைவிட, கூடுதலாகவே வரி இழப்பு ஏற்பட்டிருக்கிறது' என்று சொல்லியிருக்கின்றார். அதுமட்டுமல்ல; முக்கியமான இன்னொரு காரணத்தையும் சொல்லியிருக்கின்றார். மொத்த உற்பத்தி—G.D.P.—அதாவது, மொத்த உற்பத்தியிலே வருகின்ற வரி வருவாயிலும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதையும், உற்பத்தியும் குறைந்திருக்கிறது என்பதையும் நீங்கள் ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள்.

இதைத்தான் நாங்கள் அன்றைக்கு உங்களுக்குச் சுட்டிக்காட்டினோம். 'அவசரப்பட்டு, வீணாக அந்த மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துவதை நீங்கள் நிறுத்துங்கள்' என்று நாங்கள் கேட்டோம்; மத்திய அரசாங்கத்திடம் நாங்களும் அதைத்தான் வலியுறுத்தினோம். 'மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துவதால் யாருக்கு இலாபம்

என்றால், மத்திய அரசுக்குத்தான் இலாபம்; அந்தந்த மாநிலத்திற்கு வரி இழப்பு ஏற்படும்' என்பதை அன்றைக்கு நாங்கள் தெளிவாகச் சொன்னோம். சேவை வரி என்ற பெயரிலே மத்திய அரசு, நம்முடைய மாநிலத்திலே இருக்கின்ற வரியை இப்போது சுரண்டிக் கொண்டிருக்கிறது; மாநிலத்திற்கு வரவேண்டிய வரி வருவாயை நாம் இழந்துகொண்டிருக்கிறோம் என்று அன்றைக்கு நாங்கள் சுட்டிக்காட்டினோம். அதனால் மாநிலத்திற்கு ஏற்படும் அந்த முழுமையான இழப்பீட்டை மத்திய அரசு அளிக்க வேண்டும். 100 சதவிகித வரி இழப்பையும் மத்திய அரசாங்கம் நமக்கு வழங்க வேண்டுமென்று சொன்னோம். அவர்கள் 75%, 50% என்று மூன்று ஆண்டுகளுக்குச் சொன்னார்கள். 'இல்லை, 100% இழப்பை நீங்கள் ஏற்றுக்கொள்வதாக இருந்தால், நாங்கள் இதை ஏற்றுக்கொள்கிறோம்' என்று சொன்னோமே தவிர, மதிப்புக் கூட்டு வரியை ஏற்றுக்கொள்கிறோம் என்று எந்தக் காலத்திலும் அம்மா அவர்கள் சொல்லவில்லை. அதுவும் கடைசியாகச் சொன்னார்கள்; 'எந்தக் காலத்திலேயும் வணிகர்களிடம், குறிப்பாக இந்த வரி விதிப்பை அமல்படுத்தினால், விலைவாசி உயருவதற்கு இது வழிவகுத்துவிடும்' என்று அன்றைக்கே நாங்கள் சொன்னோம். ஆனால், நீங்கள் கேட்கவில்லை. மத்திய அரசாங்கத்திலே நீங்கள் ஆட்சியிலே இருக்கின்ற ஒரே காரணத்திற்காக, மத்திய அரசாங்கம் சொல்கின்ற ஒரே காரணத்திற்காக, நீங்கள் மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்தினீர்கள். இப்போது நாட்டிலே விலைவாசி தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கிறது. விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்குத் தவறிவிட்டீர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) அதைக் கட்டுப்படுத்த முடியாத ஒரு நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கின்றது. அதற்கு முக்கிய காரணம், இப்போது உங்களுடைய கொள்கை. மத்திய அரசாங்கத்தை உங்களால் தட்டிக் கேட்க முடியவில்லை. நமக்கிருந்த ஒரே உரிமை, நம்முடைய மாநிலத்திற்கு இருந்த மிகப் பெரிய உரிமை, வரியை வசூலிக்கின்ற உரிமை. அதையும் இப்போது நீங்கள் மத்திய அரசாங்கத்திடம் விட்டுக் கொடுத்திருக்கின்றீர்கள். அன்றைக்கு உள்ளாட்சித் துறை மானியத்தின்போதுகூட நீங்கள் சொன்னீர்கள்; 'இப்போது நம்முடைய உரிமையை, உள்ளாட்சித் துறையிலே இருக்கின்ற அதிகாரங்களை மத்திய அரசாங்கம் எடுக்கப் பார்க்கிறது' என்று நீங்கள் சொன்னீர்கள். அதையேதான் நாங்கள் அன்றைக்கும் சொன்னோம்; இன்றைக்கும் சொல்கிறோம். மத்திய அரசாங்கத்திடம் நீங்கள் உங்களுடைய உரிமைகளை விட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்; வாயள்விலே பேசிக் கொண்டிருக்கிறீர்கள்; 'மாநிலத்திலே சுயாட்சி;





மத்தியிலே கூட்டாட்சி' என்று சொல்லிக் கொண்டு, இங்கே நீங்கள் மத்தியிலே கூட்டாட்சி செய்து ஆட்சி செய்து கொண்டிருக்கிறீர்கள்; மத்தியிலே கூட்டாட்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். ஆனால், உரிமைகளை நீங்கள் விட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தால்தான், இப்போது நம்முடைய வரி வருவாயில் இந்த அளவிற்கு வரி இழப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வரி வருவாய் குறைந்திருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். அதிலே கருத்து வேறுபாடு என்ன என்பதை மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் பதிலில் சொல்வார்கள். ஆனால், உரிமைகளை தமிழ்நாடு அரசாங்கம் விட்டுக் கொடுத்துவிட்டது. அதனால்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. உதாரணத்திற்குச் சொல்கிறேன். மொத்த வருவாய் என்று பார்த்தால், 2005–2006, அதாவது உங்களுடைய ஆட்சிக் காலத்தில் 16,615 கோடி ரூபாய்தான் வருவாய் வந்திருக்கிறது. இந்த மதிப்புக் கூட்டு வரி வந்ததற்குப் பிறகு, மத்திய அரசாங்கத்தினுடைய 75 சதவீத பணத்தையும் பெற்று, மொத்த வருவாய் எவ்வளவு வந்திருக்கிறது என்று பார்த்தால், 19 ஆயிரத்து 952 கோடி ரூபாய். ஆக 3 ஆயிரம் கோடி ரூபாய் அதிகமாக வந்திருக்கிறதே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசாங்கம் எந்த உரிமையையும் விட்டுக் கொடுத்துவிடவில்லை என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

முற்பகல் 11–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு விளக்கத்தைக் கொடுக்க விரும்புகின்றேன். ஆண்டுக்காண்டு, கடந்த ஆண்டைவிட 19 சதவீதம் கூடுதலாக வரவேண்டும். நீங்கள் அந்த சதவீதத்தைப் போட்டு, கணக்கிட்டுச் சொல்ல வேண்டும். அதைப் போட்டுப் பார்த்தீர்களென்றால், இந்த ஆண்டு நமக்கு கிட்டத்தட்ட 24,000 கோடி

[திரு. சி.வி. சண்முகம்] [2008 ஏப்ரல் 29

ரூபாய் 2006—லிருந்து, இந்த ஆண்டு நீங்கள் தாக்கல் செய்துள்ள நிதிநிலை அறிக்கையிலே, நமக்கு 23,000 கோடி ரூபாயிலிருந்து 23,500 கோடி ரூபாய் வந்திருக்க வேண்டும். கிட்டத்தட்ட 3,500 கோடி ரூபாய் நமக்கு இழப்பீடு ஏற்பட்டிருக்கின்றது. அதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீங்களே சொல்லியிருக்கிறீர்கள், 19—லிருந்து 15; 15—லிருந்து 3 சதவீதம் குறைந்திருக்கிறது. நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். சதவீதம் குறைந்திருக்கிறது. ஆண்டுக்காண்டு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சதவீதம் எதனால் குறைந்ததென்றால், Sales Tax என்பது விதித்த அந்தக் காலத்திலே, 15, 19 சதவீதம் என்று இருந்தது. இப்போது மதிப்புக் கூட்டு வரி என்ற காரணத்தால், அதுகூட பார்த்தால், 2005—2006—லே 13,658 கோடி ரூபாய்தான் வந்திருக்கிறது. மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்தியதற்குப் பிறகு பார்த்தால் 16,472 கோடி ரூபாய் வந்திருக்கிறது. ஆக, எந்தக் காரணத்தைக் கொண்டும், வரி குறைந்துவிடவில்லை. அந்த விகிதாச்சாரம் போடும்போது மதிப்புக் கூட்டு வரியினுடைய விகிதாச்சாரம் அந்தக் கணக்கிலே இங்கே குறிப்பிடவில்லையே தவிர, வருமானம் குறைந்துவிடவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும், மீண்டும் தவறான தகவலைச் சொல்கின்றார். 2005—2006—லே, நாங்கள் இருந்தபோது, மதிப்புக் கூட்டு வரியிலே 16,000 கோடி ரூபாய் வரி வசூலாக கிடையாது. தமிழ்நாட்டினுடைய T.N.G.S.T.—Sales tax மூலமாக வசூலிக்கப்பட்டதுதான் அந்த 16,000 கோடி ரூபாய். மீண்டும் சொல்கிறேன். தவறான செய்தியை அவையிலே பதிய வைக்க வேண்டாம் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். நீங்கள் ஆட்சிக்கு வந்து, 2007, ஜனவரியிலேதான் மதிப்புக் கூட்டு வரி அமல்படுத்தப்பட்டது என்பதை உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஆகவே, 16,000 கோடி ரூபாய், மதிப்புக் கூட்டு வரி இருந்தபோது வசூலிக்கப்படவில்லை என்பதை உங்களுக்கு மீண்டும் நினைவுக்குக் கொண்டுவர விரும்புகின்றேன். ஆகவே . . .



2008 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நன்றாக விவரம் தெரிந்தவர். பக்கம் 5—லே, தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் அமல்படுத்தியதற்குப் பிறகு, 2007—2008—ல், 16,472 கோடி ரூபாய் வருமானம் வந்திருக்கிறது என்று அரசாங்கக் குறிப்பிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் படித்துப் பார்த்துவிட்டுப் பேசினால் நல்லது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, tabular column போடப்பட்டிருக்கிறது, பாருங்கள். பக்கம் 4—ல் 2005—2006—வரி வருவாய்—கோடியில்—16,615—வளர்ச்சி விகிதம் 19.47 சதவீதம். இது எங்களுடைய ஆட்சியிலே, கடைசி ஆண்டிலே, அதாவது 2005—2006—லே 16,615 கோடி ரூபாய். வளர்ச்சி சதவீதம் 19.47. அந்த ஆண்டே மதிப்புக் கூட்டு வரி தமிழகத்திலே அமல்படுத்தப்படவில்லை. நீங்கள் ஆட்சிக்கு வந்து, 2007 ஜனவரி 1—லிருந்துதான் நீங்கள் மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்தியிருக்கிறீர்கள் என்பதை மீண்டும் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தவறான தகவலைச் சொல்ல வேண்டாம் என்று உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பது தவறான தகவல் அல்ல. சரியான தகவலை அவர்கள் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு முன்னாள் அமைச்சர், திரு. சி.வி. சண்முகம் அவர்கள், அவர்களுடைய பேச்சை முடித்தபிறகு, நான் தகுந்த புள்ளிவிவரங்களோடு எல்லாவற்றுக்கும் பதிலளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம்.

[2008 ஏப்ரல் 29

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சாதாரணக் கணக்கைச் சொல்கிறேன். மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்தியது ஜனவரி 1, 2007—ல். ஜனவரி 1, 2007 அன்றுமுதல்தான் மதிப்புக் கூட்டு வரிக்கு கணக்கு எடுக்கப்படுகிறது. நாங்கள் ஆட்சியில் இருந்தது 2006—ல், எங்கள் ஆட்சி முடிந்துவிட்டது. அதுவரைக்கும்தான் எங்களுடைய வரி வசூல் என்று நீங்களே கொடுத்திருக்கிறீர்கள். மீண்டும், மீண்டும் நீங்கள் அதை வலியுறுத்துகிறீர்கள். நீங்கள் கொடுக்கின்ற விளக்கத்தை நான் ஏற்றுக்கொண்டேன். ஆகவே, அன்றைக்கே நாங்கள் சொன்னோம். மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துகின்றபோது வளர்ந்த மாநிலங்கள், தொழிலிலே வளர்ச்சி அடைந்த மாநிலங்களுக்கு, உற்பத்தி மாநிலங்களுக்குப் பாதிப்பு ஏற்படும். சோம்பேறியாக இருக்கின்ற மாநிலங்கள்—நீங்கள்கூட சொன்னீர்கள், முதலமைச்சர்கூட சொல்வார்; நிதியமைச்சர்கூட சொல்வார்; நிதிநிலை அறிக்கையிலே மத்திய அரசாங்கம், வளர்ந்த மாநிலங்களுக்கு நிதிப் பங்கீட்டிலே துரோகம் செய்கின்றது என்று பலமுறை சொல்லியிருக்கின்றீர்கள். அதையேதான் நாங்களும் சொன்னோம். மதிப்புக் கூட்டு வரி என்ற பெயரிலே, வளர்ச்சி அடைந்திருக்கின்ற நம்முடைய மாநிலத்திற்கு, உற்பத்தியிலே நல்ல வளர்ச்சி அடைந்திருக்கின்ற நம்முடைய மாநிலத்திற்கு இதனால் இழப்பு ஏற்படுமே தவிர, நமக்குக் கிடைக்க வேண்டிய வரி வருவாய் எல்லாம் வேறு மாநிலங்களுக்குச் சென்றுகொண்டிருக்கின்றது.

அதைத் தடுக்க வேண்டும். இல்லையென்றால் அதற்கு இழப்பீடு செய்ய வேண்டும் என்பதுதான் நம்முடைய கோரிக்கை. அதற்காக அந்த service tax, சேவை வரியை மாநிலத்திற்கு. . .

*முற்பகல் 11—10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அடிப்படை உண்மையை மாற்றி திரு. சண்முகம் அவர்கள் இங்கே பேசுவது அவ்வளவு நியாயமாக எனக்குத் தெரியவில்லை. மத்திய அரசு, மத்திய அரசினுடைய வருவாய் என்ற முறையிலே வருகிற வருவாயை, மாநிலங்களுக்குப் பங்கிட்டு வழங்குவதற்கு சில முறைகளை வகுக்கிறது. அந்தப் பங்கிட்டு வழங்குகிற முறையிலே வளர்ந்த மாநிலங்களுக்குக் குறைத்து, வளராத மாநிலங்களுக்கு விகிதாச்சாரத்திலே அதிகம் தருவதற்கு ஒரு ஏற்பாடு செய்து, இன்னும் சொல்லப்போனால், நிதிக் குழு மூலமாக அந்த ஏற்பாடு செய்யப்பட்டு அப்படிப் பங்கிடுவதிலேதான் வளர்ந்த



2008 ஏப்ரல் 29] [பேராசிரியர் க. அன்பழகன்]

மாநிலங்கள், மத்திய அரசினுடைய பங்கீட்டு முறையினாலே பாதிக்கப்படுகிறது என்று வாதம் செய்யப்படுகிறதே தவிர, இந்த மதிப்புக் கூட்டு வரி என்பதனாலே அப்படிப்பட்ட விளைவு ஏற்படுவதாகக் கூற இதுவரையில் போதுமான புள்ளிவிவரங்கள் எதுவும் கிடையாது. மதிப்புக் கூட்டு வரியை, தொழில் துறையிலே உள்ளவர்களும், வணிகத் துறையிலே உள்ளவர்களும் வரவேற்கிறார்கள். ஏன் வரவேற்கிறார்கள் என்றால், அகில இந்திய அளவிலே வணிகர்களுக்கிடையிலே, தொழிலதிபர்களுக்கிடையிலே வணிகம் செய்வதற்கு, இந்த மதிப்புக் கூட்டு வரி இந்தியா முழுவதும் ஒரே விகிதாச்சாரமாக வரக்கூடிய நிலைமை இருப்பது காரணமாக இது மிகப் பெரிய அளவுக்கு வரவேற்கப்படுகிறது. ஒரு வேளை வரி குறைந்தால்கூட, சமுதாயத்தினுடைய வருமானம் இதனால் அதிகமாகுமானால், வரி குறைந்தால்கூட தமிழக அரசு ஏற்றுக்கொள்ளும்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சூழ்நிலையிலே இந்த அரசு ஆட்சிப்பொறுப்பேற்று பல்வேறு சலுகைகளை வரிச் சலுகைகளை அளித்திருப்பதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். ஆனால் அந்த வரிச் சலுகைகள் மக்களுக்குச் சென்று அடைந்திருக்கின்றதா? விலைவாசி குறைந்திருக்கிறதா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கேட்டால் நாங்கள் எண்ணெய்க்கு வரிச் சலுகை அளித்திருக்கிறோம், பருப்புக்கு வரிச் சலுகை அளித்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) இருங்கள் முடித்துவிடுகிறேன், இன்னும் இரண்டு நிமிடங்கள்தான் இருக்கின்றன. பிறகு பேரவைத் தலைவர் அவர்கள் மணியடித்துவிடுவார். சொல்ல வந்ததை சொல்லி முடித்துவிடுகிறேன். நான் இல்லை என்று சொல்லவில்லை, நீங்கள் வரிச் சலுகைகளை அளித்தீர்கள். நாங்கள் வரி போட்டிருந்தோம், இல்லையென்று சொல்லவில்லை. ஏனென்றால் அவையெல்லாம் இருக்கின்றன. உண்மையை மறைக்க முடியாது. நீங்கள் வரிச் சலுகையை அளித்தீர்கள். ஆனால் நீங்கள் அளித்த அந்த வரிச் சலுகை மக்களுக்குச் சென்று அடைந்திருக்கிறதா? விலைவாசி குறைந்திருக்கிறதா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வரிச் சலுகை மக்களுக்கும் சென்றடையவில்லை; அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருவாயும் வரவில்லை; மக்களுக்கு அந்த நன்மையும் சென்றடையவில்லை; நடுவிலே யாருக்கு அந்த நன்மை சென்றடைந்திருக்கிறது; அப்படி வர வேண்டிய வருமானம் யாருக்குச் சென்று இருக்கிறது என்பதை நீங்கள் தெளிவுபடுத்த வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு மத்தியிலே உங்களுடைய கூட்டணி ஆட்சியின் தலைவராக இருக்கின்ற திருமதி சோனியா காந்தி அவர்கள் இன்றைக்குச் சொல்லியிருக்கின்றார்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் மாநில அரசாங்கத்திற்கு இருக்கின்றது, அந்தப் பதுக்கல்காரர்களையும், கடத்தல்காரர்களையும் தடுக்க வேண்டிய கடமை மாநில அரசாங்கத்திற்குத்தான் இருக்கிறது என்று மாறி மாறி, மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டுகிறது, மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டுகிறது. இன்றைக்கு நிதி அமைச்சரிடம் விலைவாசி ஏன் உயர்ந்திருக்கிறது என்று கேட்டால், பண வீக்கம் பெருத்துவிட்டது இந்தியாவிலே அதனால் விலைவாசி உயர்ந்துவிட்டது என்கிறார், பணவீக்கம் ஏன் உயர்ந்துவிட்டது என்று கேட்டால் விலைவாசி உயர்ந்துவிட்டது என்கிறார், இது எப்படி இருக்கிறது என்றால் கவுண்டமணி செந்திலிடம் கேட்பதுபோன்று 'அந்த வாழைப்பழம் எங்கே என்றால், இந்த வாழைப் பழம்தான் அந்த வாழைப்பழம், அந்த வாழைப் பழம்தான் இந்த வாழைப்பழம்' என்பதைப்போல பண வீக்கம் ஏன் உயர்ந்துவிட்டது என்றால் உணவுப் பொருட்களுடைய விலைவாசி உயர்ந்துவிட்டது, கட்டுமானப் பொருட்களுடைய விலைவாசி உயர்ந்துவிட்டது என்கின்றார். பண வீக்கம் உயர்வு குறித்து இப்படி மாற்றி மாற்றி சொல்லி பிரதமரும், நிதி அமைச்சரும் நாட்டுமக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். இன்றைக்கு அடித்தட்டு மக்களைப் பற்றிய சிந்தனையே இல்லை, ஏழைகளைப் பற்றிய சிந்தனையே இல்லை. இந்த விலைவாசி உயர்வுக்கு முக்கிய காரணம் என்ன? யூக பேர வணிகம் விலைவாசி உயர்வுக்கு முக்கியக் காரணம் Online trading, Speculative trading அதைக் கட்டுப்படுத்த வேண்டும். அதைத் தடை செய்ய வேண்டுமென்று அனைத்து கட்சிகளும் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கின்றன. ஆனால், இரண்டு பேரைத் தவிர, இன்றைக்கு மத்தியிலே இருக்கின்ற பிரதம மந்திரியும், நிதி அமைச்சரும் தவிர. அதைக் கட்டுப்படுத்துவதற்கு என்ன தடை? உடனடியாகத் தடை செய்ய வேண்டியதுதானே? அதற்கு நாங்கள் ஒரு நபர் குழு போட்டிருக்கிறோம், அந்த ஒரு நபர் குழு எங்களுக்கு அறிக்கை தாக்கல் செய்த பிறகு, நாங்கள் அதன்மீது முடிவெடுக்கின்றோம் என்று சொல்கிறார்கள். எப்போது? ஏழைகள் எல்லாம் செத்த பிறகு இவர்கள் முடிவெடுப்பார்களாம். யார் இவர்களைத் தடுத்துக்கொண்டிருக்கிறார்கள்? இந்த ஆட்சி யாருக்காக? மத்தியிலே நீங்கள் ஆதரவு கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். நான்கு ஆண்டுகாலமாக மத்தியிலே நீங்கள் ஆட்சியிலே ஆதரவு





அளித்துக்கொண்டு, அந்த ஆட்சியில் பங்கும் வகித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

முற்பகல் 11-15

இரண்டாண்டு காலமாக, மாநிலத்திலேயும் நீங்கள் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால், இன்றைக்கு விலைவாசி கடுமையாக உயர்ந்திருக்கிறது. உணவுப் பொருட்களின் விலையும், கட்டுமானப் பொருட்களின் விலையும் உயர்ந்திருக்கிறது. ஏதோ, சாதாரண அடித்தட்டு மக்கள் மட்டும் இன்றைக்குப் பாதிக்கப்படவில்லை. உயர்ந்த நிலையில் இருக்கின்ற, I.T. துறையில் இருக்கின்ற மக்களும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுவதற்கு அதிகமாகவே நேரம் கொடுக்கப்பட்டுள்ளது.

**திரு. சி.வி. சண்முகம்:** அனைத்து தரப்பு மக்களும் விலைவாசி ஏற்றத்தினாலே இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே, மத்திய அரசும், மாநில அரசும் அன்னிய முதலீட்டாளர்களுக்காக, உள்நாட்டிலேயிருக்கின்ற முதலீட்டாளர்களுக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றன. உங்கள் அரசு, சொல்வதைச் செய்யும், செய்வதைத்தான் சொல்லும் என்று சொன்னீர்கள். நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். நாமத்தைப் பூசிக்கொள்ளுங்கள் என்று, நாமத்திற்கு வரிவிலக்கு அளித்து, மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கிறது என்று சொல்லி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். அப்துல் பாசித். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சண்முகம் அவர்கள் பேசுகிறபோது, மத்திய அரசின்மீது அவருக்குள்ள கோபத்தைக் காட்டுவதற்காக, மத்திய நிதியமைச்சர் அவர்களும், அதேபோல, மத்தியப் பொறுப்பிலே உள்ளவர்களும், விலைவாசி ஏற்றத்தைக் குறைக்க வேண்டிய பொறுப்பு மாநில அரசுக்குத்தான் என்று சொன்னதாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். நடவடிக்கை எடுக்கிற காரியங்களில் மாநில அரசுதான் நேரடியாக நடவடிக்கை எடுக்க முடியும். கொள்கையைத் தீர்மானிக்கிற இடத்தில், மத்திய அரசு அந்தக் கொள்கையைத் தீர்மானிக்கிறது. விலைவாசி ஏற்றம் குறைய வேண்டுமென்ற ஒரு குரல் வருகிற அதே நேரத்தில், ஏதோ தமிழ்நாட்டில் மட்டும் விலைவாசி ஏறி, அல்லது

ஆந்திராவிலே மட்டும் விலைவாசி ஏறி நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், அது மாநில அரசினுடைய பொறுப்பு. இந்தியா முழுவதும் விலைவாசி ஏறினால், அப்பொழுது நடவடிக்கை எடுக்க வேண்டியது இந்திய அரசினுடைய பொறுப்பு. உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளிலே விலைவாசி ஏற்றம் உள்ளது. எந்த நாட்டிலே விலைவாசி ஏற்றம் இல்லை என்று கேட்டால், எல்லா நாடுகளிலும் விலைவாசி ஏற்றம் இருக்கிறது. அளவுகளிலே வித்தியாசங்கள் இருக்கலாமே தவிர, விலைவாசி ஏற்றம் தாய்லாந்து உட்பட, எத்தனையோ நாடுகளிலே இருக்கிறது. ஆகவே, இதற்கு உலகப் பொருளாதாரக் கொள்கையிலே சில மாற்றங்கள் வருகிறபோது இதிலும் மாற்றம் வரலாம். அதேபோல, பண வீக்கம் இருக்கிறதென்று சொன்னால், அது பணப் புழக்கத்தில் தெரியும். கையிலே காசு இல்லையென்று சொன்னவரெல்லாம்கூட, கையிலே காசு வைத்திருக்கிறார்கள். கடன் கேட்டு வாழ்ந்தவரெல்லாம்கூட, அந்தக் கடனைத் திருப்பிக் கட்டக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். பண வீக்கம் என்பதைவிட, பணப் புழக்கம் இன்றைக்கு அதிகமாகியிருக்கிறது. பணப் புழக்கம் அதிகமாகிறபோது, விலைவாசி தானாகவே ஏறும். ஆகவே, இயற்கையாக ஏற்படுகின்ற இந்த நிலையை சமாளிப்பதற்கு அரசு பல நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுக்கும். இந்த அரசோ அல்லது மத்திய அரசோ பொறுப்பற்றிருப்பதாகக் கருதுவது தவறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். அப்துல் பாசித். (குறுக்கீடு) மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முன்னாள் அமைச்சர் அவர்கள் இங்கே பல குற்றச்சாட்டுக்களைக் கூறியிருக்கிறார்கள். 2001 ஆம் ஆண்டிலே அவர்தான் விற்பனை வரித் துறை அமைச்சராக இருந்திருக்கிறார். மீண்டும், 2005–2006 ஆம் ஆண்டிலேயும் அவர் விற்பனை வரித் துறை அமைச்சராக இருந்திருக்கிறார். அப்போது அவர்களால் புதிதாகப் போடப்பட்ட வரிகள் என்ன என்பது அவருக்குத் தெரியும். ஒவ்வொரு ஆண்டும் நீங்கள் புதிதாக வரியைப் போட்டிருக்கிறீர்கள். அதற்கான பட்டியலே இருக்கிறது. அதைப் படிப்பதாக இருந்தால் 15, 20 நிமிடங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். 2001, 2002, 2003 ஆகிய ஆண்டுகளிலே, நீங்கள் எதற்கு வரி போடவில்லை? நான் முன்பே இந்த அவையில் சொல்லியிருக்கிறேன். அரிசிக்கும், கோதுமைக்கும்





2 சதவிகிதம் வரியை நீங்கள் போட்டீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஒரு பெண். ஆனால், 3,000 ரூபாய்க்கான பட்டுச் சேலைக்கு நீங்கள் வரி போட்டீர்கள். அப்படி, நீங்கள் போட்டிருக்கிற வரி விகித உயர்வைப் பார்த்தால், 100 பொருட்களுக்கும் மேலாக வரி போட்டீர்கள்.

அதுமட்டுமல்ல, சாதாரணமாக மறு விற்பனை வரி என்ற ஒரு வரியைப் போட்டீர்கள். அதிலே, கூடுதலாக உபரி வரி போட்டீர்கள். பொருட்களுக்கு நுழைவு வரி போட்டீர்கள். 2002, 2003, 2004, 2005, 2006 ஆகிய ஆண்டுகளில், 528 கோடி ரூபாய், 675 கோடி ரூபாய், 1,000 கோடி ரூபாய், 1,244 கோடி ரூபாய் என்று, புதிய வரிகளை நீங்கள் போட்டீர்கள்.

இங்கே நீங்கள் புள்ளிவிவரங்களைச் சொன்னீர்கள். அதிலே, நாங்கள் கொடுத்திருக்கிற மானியக் கோரிக்கைப் புத்தகத்திலே கொடுத்திருக்கிற விவரங்களிலே, மத்தியிலேயிருந்து பெறப்பட்ட மானியத்தை அதிலே சேர்க்கவில்லை.

அவற்றைச் சேர்த்து, நான் இப்பொழுது விவரம் சொல்கிறேன். 2006–2007–ல் வசூலிக்கப்பட்ட வருவாய் 19,217 கோடி ரூபாய். 2005–2006–ல் அதிகம் வசூலித்தத் தொகை 16,615 கோடி ரூபாய் என்று நீங்கள் விவரம் சொன்னீர்களே, அதற்கு மேலாகக் கூடுதல் வருவாய் 2,602 கோடி. அந்த வளர்ச்சி விகிதம்தான் புத்தகத்திலே சொல்லப்பட்டிருக்கிறது, 15.7 சதவீதம். மத்திய அரசு 2007 சனவரி, பிப்ரவரிக்குக் கொடுத்திருக்கிற மானியம், பெற்றிருக்கிற மானியத்தை அதிலே சேர்த்துக்கொள்ள வேண்டும். அது 644 கோடி ரூபாய். ஆக, மொத்த வரி வருவாய் 19,861 கோடி ரூபாய். அப்படி வளர்ச்சி விகிதம் பார்த்தால், 19.53 சதவீதம் என்பதை தாங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

முற்பகல் 11–20

அதேபோல, இந்த ஆண்டு, 2007–2008–ல் 3.83 சதவீதத்தைக் குறிப்பிட்டீர்கள். அந்த ஆண்டிலே வசூலிக்கப்பட்ட வரி வருவாய் 19,953 கோடி ரூபாய். அதிலே, 2007–2008 இழப்பீட்டுத் தொகை, மதிப்புக் கூட்டு வரி இழப்பீட்டுத் தொகை பெறப்பட்டது 1,396 கோடி ரூபாய். அதேபோல, C.S.T. 4 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக குறைக்கப்பட்டது. அதற்குப் பெறப்பட்ட தொகை 648 கோடி ரூபாய். ஆகமொத்தம், 21,997 கோடி ரூபாய். இப்படிப் பார்த்தால், [illegible] வளர்ச்சி. ஆனால், இது மட்டுமா என்றால் இவ்[illegible] அதிலே இன்னும்

D 21/3/08 V 21/3/08 1008-51.1
228384.
சென்னை-600 008

[திரு. சி.நா.மீ. உபயதுல்லா] [2008 ஏப்ரல் 29

1,308 கோடி ரூபாய் 2007—2008—க்கு நமக்கு மத்திய அரசு தர வேண்டியிருக்கிறது. அதையும் சேர்த்து வளர்ச்சி விகிதம் பார்த்தால், 17.34 சதவீதம் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். அப்துல் பாசித். (குறுக்கீடு) என்ன? நேரம் கிடைக்காது. திரு. அப்துல் பாசித், பேசுங்கள். (குறுக்கீடு) கடைசியில் பேசலாம், உட்காருங்கள்.

***திரு. எச். அப்துல் பாசித்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மானியக் கோரிக்கையின்மீது நடைபெறும் விவாதத்தில் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008—2009 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலே இனமான பேராசிரியர் பெருந்தகை அவர்கள் பக்கம் 61, பத்தி எண் 34—ல் பிற்படுத்தப்பட்ட இஸ்லாமியர்களுக்கான இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவதில் எழுந்துள்ள சில சிக்கல்களை விரைவில் களைய இந்த அரசு ஆவன செய்யும் என அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. இது தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது. இந்த அரசு திறந்தப் புத்தகமாகவும், காலத்தின் கண்ணாடியாகவும் இருக்கிறது என்பதற்கு இது ஒன்றே சான்று.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

15—9—2007 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இட ஒதுக்கீடு ஆணையால், இஸ்லாமிய சமுதாயம் பயன்பெறாமல் இருப்பதற்குக் காரணம் Revised Roaster Order என்ற திருத்தப்பட்ட இனச் சுழற்சி முறையில் ஏற்பட்ட தவறுதான் என்பதனை நினைவுகூர விரும்புகிறேன். தனி இட ஒதுக்கீடு இல்லாத நேரத்தில் வரிசை எண் 4—ல் இருந்தும், 8—ல் இருந்தும், 10—ல் இருந்தும் பயன்பெற்றுக் கொண்டிருந்த இஸ்லாமிய சமுதாயம் இட ஒதுக்கீட்டு உரிமையை தாங்கள் அளித்த பிறகு, திருத்தி அமைக்கப்பட்ட இனச் சுழற்சி வரிசைப் பட்டியலில் 28—வது இடத்திற்கு மாற்றி அமையப்பெற்றதுதான் காரணம் என நினைவுகூர விரும்புகிறேன். அனைத்து அரசுப் பணிகளில், கல்விப் பணியிடங்களில், வரிசைப் பட்டியல் எண் 8—ல்



2008 ஏப்ரல் 29] [திரு. எச். அப்துல் பாசித்]

இணைக்கப்பட்டாலொழிய இட ஒதுக்கீட்டின் பலனை இஸ்லாமிய சமுதாயம் முழுமையாக அடைய வாய்ப்பு இல்லையெனத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இட ஒதுக்கீடு ஆணை பிறப்பிக்கப்படுவதற்கு முன்பு பணியமர்த்தப்பட்டவர்களை இட ஒதுக்கீட்டு சதவீதத்தில் கணக்கில் சேர்க்கக்கூடாது எனப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சிறுபான்மையினர் நல மானியக் கோரிக்கை எண் 9—ல், கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் எண் 10—ல், உருது மொழியை முதல் அல்லது இரண்டாவது மொழியாகப் பயிலும் மாணவர்கள் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறுவோருக்குப் பரிசுகள் அறிவித்திருப்பதை மனமகிழ்ந்துப் பாராட்டுகிறேன். நமது முதலமைச்சர் அவர்களுடைய அன்பும், பாசமும் அரவணைப்பும், மதவழி சிறுபான்மையினருக்குப் மட்டுமல்லாமல், மொழிவழி சிறுபான்மையினருக்கும் இருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்த அறிவிப்பு அமைந்திருக்கிறது.

முற்பகல் 11—25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எம்மொழியாயினும், போற்றுதலுக்குரியது தாய்மொழியே என்பதனைக் கணித்து, தமிழ் மொழியைக் கட்டாயப் பாடமாக்கியதை வரவேற்பதோடு, மொழிவழி சிறுபான்மை மக்களுடைய உணர்வுகளை மதித்து, அவர்களின் தாய்மொழியையும் காப்பாற்றும் பொறுப்பும், பக்குவமும் மற்றவர்கள் யாரிடத்திலும் நாம் எதிர்பார்க்க இயலாது என்று ஆணித்தரமாக நம்புகின்ற காரணத்தினால், தாங்கள் மொழிவழி சிறுபான்மையினரையும், அரசுப் பள்ளிக்கூடங்கள், அரசு நிதியுதவிபெறும் பள்ளிக்கூடங்கள் மற்றும் தனியார் பள்ளிக்கூடங்களில் தமிழைக் கட்டாயப் பாடமாக்கியதைப் போல, மொழிவழி சிறுபான்மையினர்களுடைய உருது மற்றும் தெலுங்கு மொழியையும் கட்டாயமாக்க சட்டப்பூர்வமான உரிமை வழங்கிட ஆவன செய்ய வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள், மொழிப் பிரச்சினை பற்றி எடுத்துரைக்கும்போது, அனைத்து சிறப்புகளையும் பெற்ற, என்னுடைய தாய் மொழியான தமிழ்மொழிதான், இந்தத் தேசத்தினுடைய மொழியாக அறிவிக்கப்பட வேண்டுமென்று அரசியல் நிர்ணய சபையிலே, எடுத்துரைத்ததை நினைவுகூர விரும்புவதோடு, மற்ற மொழிவழி சிறுபான்மையினர்களைப் பற்றி அவர்கள் எடுத்துரைக்கும்போது, 'நான் எந்த மொழியையும் வெறுப்பவன் அல்ல.

[திரு. எச். அப்துல் பாசித்] [2008 ஏப்ரல் 29

எல்லா மொழிகளையும் நேசிக்கின்றேன். இந்தி மொழியையும்கூட உளமார விரும்புகிறேன், சிறுபான்மை மொழிகள்மீது இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படும்போதுதான் இந்தியை எதிர்க்கிறேன், உருது மொழிக்கு நியாயம் கேட்கிறேன். இஸ்லாமிய இலக்கியங்கள் உருதுமொழியில் நிறைய இருக்கின்றன. அதனை இந்தியில் மொழிபெயர்ப்பது என்பது இயலாத ஒன்று. ஏனெனில், உருதுமொழியில் எடுத்தாளப்படும் பார்சிய, அரபி போன்ற வார்த்தைகளை இந்தியில் உச்சரிக்க இயலாது என்றும், உருது மொழியைப் புறக்கணித்துவிட்டு, இந்தியை ஏற்றுக்கொள்வதால், இஸ்லாமிய மக்கள் தங்கள் மார்க்க பண்பாட்டிலும், மதத்திலும் நூற்றாண்டு கால வளர்ச்சியை இழந்துவிட்டு பின்னுக்குத் தள்ளப்படுவார்கள்' என்று எடுத்துரைக்கிறார்கள். 'உருதுமொழியின் உரிமைக்காக, அதன் வளர்ச்சிக்காகப் பாடுபடுவது, இந்தியர் என்று பெருமைப்படும் ஒவ்வொரு இந்திய பிரஜையின் கடமையாகும்' என்று அவர் பத்திரிகைக்குக் கொடுத்த பேட்டியிலே அறிவித்திருக்கிறார்கள் என்பதை நினைவுகூர்வதோடு, அவர்களுடைய கருத்து, காயிதே மில்லத்தின் கருத்துரைகள் என்ற புத்தகம் ஜூன் மாதம் 14 ஆம் தேதி நடைபெறவிருக்கின்ற முஸ்லீம் லீக்கினுடைய மணிவிழா மாநாட்டில் நம்முடைய அருமைத் தலைவர் முதல்வர் அவர்களால் வெளியிடப்பட இருக்கும் புத்தகத்திலே இடம்பெற்றிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். . .

**திருமதி பதர் சயீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எச். அப்துல் பாசித், மாண்புமிகு உறுப்பினர் Point of Order கேட்கிறார்.

**திருமதி பதர் சயீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உருது பற்றிப் பேசுகிறார்கள். I just want to tell in this House ஒரு உருது Academy ஆரம்பித்தார்கள் அம்மா காலத்தில். The Urdu Academy has never seen the light of the day for two years. ஒரு அலுவலகம்கூட இல்லை. 10 இலட்சம் ரூபாய் allocate செய்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனை எந்தவகையிலே பயன்படுத்தியிருக்கிறார்கள்? ஆனால், உருதுபற்றி அவர் பேசுகிறார். Just I want to correct it. There is no recognition, nothing given for Urdu Academy, leave alone the minorities in the State.



2008 ஏப்ரல் 29]

**HON. DEPUTY SPEAKER:** Lastly, the Minister will reply suitably.

**திரு. எச். அப்துல் பாசித்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி இடைதேர்தலின்போது திடீரென்று அந்த ஆட்சி அறிவித்த அந்த உருது அகடெமி, அந்தத் தேர்தலில் அவர்கள் வெற்றிபெற்ற பிறகு அதனை முடக்கிவிட்டார்கள். மீண்டும், நம்முடைய ஆட்சி வந்தபிறகுதான், அதற்கு உயிர் கொடுக்கப்பட்டு இதுவரை இரண்டு கவியரங்கங்கள் நடத்தியிருக்கிறார்கள். அது செயல்பாட்டில் இருக்கிறது. (குறுக்கீடு) "அச்சா" என்று அண்ணன் அவர்கள் சொல்கிறார்களே, "யஹி சஹி ஹை" என்று சொல்லலாம்.

புதிதாக மற்றும் புதுப்பிக்கப்படும் வழிபாட்டுத் தலங்களுக்கு, தற்போது, மாவட்ட நிர்வாகத்திடமிருந்துதான், தடையில்லாச் சான்று பெறப்படுகிறது. இதனால் காலதாமதம் மற்றும் நடைமுறை சிக்கல்களும் இருக்கின்ற காரணத்தினால், தடையில்லாச் சான்றை அந்தந்த மாநகர, நகர, ஒன்றிய ஊராட்சி நிருவாகத்திடமிருந்து, பெற்றுக்கொள்ள ஆவன செய்ய வேண்டுமென்றும், இந்த முறைதான் கடந்த காலங்களில் பின்பற்றப்பட்டிருந்தது என்பதையும் நினைவுகூற விரும்புகிறன்.

அருமைக்குரிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்களுடைய நலனைக் கருத்திற்கொண்டு, நம்முடைய பாசமிகு அண்ணன் தளபதியார் அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக தொகுப்பு வீடுகளுக்கு, 55,000 ரூபாய் என ஒதுக்கீடு தொகை உயர்த்தப்பட்டது. ஆனால், அதேநேரத்தில் கச்சா வீடு என்ற ஓலை வீடுகள், ஓலைக் கூரையை எடுத்துவிட்டு, ஓடுகள் போடுவதற்கான திட்டத்திற்கு இன்றுவரை 12,500 ரூபாய் மட்டுமே இருப்பதைக் கவனத்தில்கொண்டு, அதனுடைய திட்ட மதிப்பீட்டையும் உயர்த்திட வேண்டுமென்றும், அதேபோல Group houses-தொகுப்பு வீடுகள் மராமத்துப் பணிக்காக வெறும் 10,000 ரூபாய்தான் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அளிக்க முடியும், அரசாங்கமும் அவ்வளவுதான் தருகிறது. ஆனால், அந்த மராமத்துப் பணியைச் செய்ய யாரும் ஏலம் எடுக்கத் தயாராக இருப்பதில்லை என்றும், காலத்தின் அருமை கருதி இன்றைய சூழ்நிலையைப் பொறுத்து, குறைந்தபட்சம் 15,000 ரூபாயாக அது உயர்த்தப்பட வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எச். அப்துல் பாசித்] [2008 ஏப்ரல் 29

*முற்பகல் 11—30*

விடுதலைப் போருக்கு வித்திட்ட வேலூர் மாநகரத்தில் இருக்கும் கோட்டையிலே மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக 3 மத வழிபாட்டுத் தலங்கள் உள்ளன. இதில் இரண்டு வழிபாட்டுத் தலங்கள் பயன்பாட்டில் உள்ளன. மசூதியைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவர ஆவன செய்ய வேண்டுமென்று வேலூர் நகரத்தினுடைய, 64 மசூதிகளினுடைய நிர்வாகிகள்கூடி, அந்தக் கூட்டத்திலே அருமைக்குரிய அண்ணன் ஞானசேகரன் அவர்களும், பாசமிகு பேராசிரியர் காதர்மொய்தீன் சாகிப் அவர்களும், அதேபோல், ஜலகண்டேஸ்வரர் கோயிலினுடைய தர்மஸ்தாபனத்தினுடைய துணைத் தலைவர் ஐயா பெரியவர் ஏ.எஸ்.ஏ. பரமசிவம் அவர்களும், கிறிஸ்துவ சமுதாயத்தினுடைய பெருந்தலைவர் ஜாண் ஜேக்கப் அவர்களும் கலந்துகொண்டு, ஒரு முடிவை எடுத்து, அந்த வழிபாட்டுத் தலத்தைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர தொல்பொருள் ஆராய்ச்சித் துறையிடம் முறையிட்டு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதேபோல, நம் முதல்வர் அவர்களையும் சந்திக்க நேரம் கேட்டு, அண்ணன் ஞானசேகரன் அவர்களிடத்திலே கடிதத்தையும் கொடுத்துள்ளார்கள். அந்த இடத்திலே இவ்வுரிமையைக் கோரும் போர்வையிலே, (மணியடிக்கப்பெற்றது) உணர்வுகளைத் தூண்டிவிட ஒருசிலர் ஈடுபட்டுள்ளார்கள். எனவே, முதல்வர் அவர்கள்— (மணியடிக்கப்பெற்றது) ** தோழமையிலே இருக்கிறவர்களை விடமாட்டேன் என்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** துணைத் தலைவர் அவர்களே . . .

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** துணைத் தலைவர் அவர்களே . . .

**திரு. எச். அப்துல் பாசித்:** தொழிலதிபர் பெரியவர் ஏ.எஸ்.ஏ. பரமசிவம் அவர்களும், (குறுக்கீடுகள்) அதேபோல இந்தியத் தொல்பொருள் (குறுக்கீடுகள்) என்ன? (குறுக்கீடுகள்) போன்றவர்கள் சட்டபூர்வமான பல நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன சொன்னார்?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** ஒரே நிமிடம். தப்பான வார்த்தையைச் சொல்லி இருக்கிறார்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2008 ஏப்ரல் 29]

**திரு. எச். அப்துல் பாசித்:** இவ்வுரிமையைக் கோரும் போர்வையிலே உணர்வுகளைத் தூண்டிவிட ஒருசிலர் ஈடுபட்டுள்ளார்கள். (குறுக்கீடுகள்) எனவே, முதல்வர் அவர்கள் இப்பிரச்சினையில் தலையிட்டு மத நல்லிணக்கத்தின் சின்னமான வேலூர் மாவட்டத்தினுடைய சிறப்பையும், சமுதாயத்தினுடைய உரிமையையும் பெற்றுத் தர (குறுக்கீடுகள்) உதவிட வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை சார். அந்தக் கேள்வி (குறுக்கீடுகள்) அப்படிச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை சார், துணைக் கேள்வி என்றுதான் சொன்னார்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** ஒரே நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை சார். நான் ரெக்கார்டை வாங்கிப் பார்க்கிறேன். வாங்கிப் பார்த்து விட்டு, we can remove it.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** அப்படிச் சொல்லுங்கள். Right, Ok.

**திரு. எச். அப்துல் பாசித்:** அதேபோல என்னுடைய தொகுதியினுடைய . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடு) உரையை முடித்து விடுங்கள்.

**திரு. எச். அப்துல் பாசித்:** உரையை முடித்து விடுகிறேன், சார். 5 நிமிடங்களில் முடித்து விடுகிறேன். என்னுடைய தொகுதி சம்பந்தமான ஒருசில பிரச்சினைகளை எடுத்துரைக்க முற்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்கு இரண்டு அமைச்சர்கள் இருக்கிறார்கள், உங்கள் மாவட்டத்திலே.

**திரு. எச். அப்துல் பாசித்:** ஆம்பூர் நகரம் தனித் தாலுகாவாக அறிவிக்கப்பட வேண்டும் என்ற 30 ஆண்டு காலக் கோரிக்கையை உங்கள் முன்வைத்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே முதியோர், ஆதரவற்றோருக்கு உதவிட ரூ.830 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருப்பதும், கண்ணொளி இழந்தோரே, பிறரின் கல்விக் கண் திறக்க பார்வையற்ற பட்டதாரிகள் 200 பேரை ஆசிரியர்களாகப் பணி நியமனம் செய்ய திட்டமிட்டிருப்பதைப் பாராட்ட வார்த்தைகள் இல்லை. காது கேளாதோருக்கு, எஞ்சியுள்ள 21 மாவட்டங்களிலும் பயிற்சி மையங்கள் அமைத்தது இந்த நூற்றாண்டினுடைய தலைசிறந்த திட்டமாகும்.

[2008 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி. (குறுக்கீடு) பாராட்டி முடித்து விடுங்கள்.

**திரு. எச். அப்துல் பாசித்:** இந்த அரிய செயல்களைப் புரிந்த மனித நேயமிக்கத் தமிழக முதல்வர் அவர்களைப் பாராட்டாவிடில், மனிதகுல மனசாட்சியே மரணித்து விட்டதாக அர்த்தம் எனக் கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, வணக்கம். வத்சலாம்.

*முற்பகல் 11—35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் அனைவருக்கும் சாந்தியும், சமாதானமும் உண்டாவதாக என்று சொல்லி, நான் பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கும், எங்களுடைய தலைவருக்கும், எங்களுடைய சட்டமன்றக் கொறடா அவர்களுக்கும், எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்களுக்கும், எனக்கு இந்த வாய்ப்பை அளித்த சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்த எங்களுடைய தலைவி அன்னை சோனியா அவர்களுக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தச் சபையிலே இப்போது பாதிப்பேருக்கு மேல் இல்லை. இந்தச் சமயத்திலே நான் பேச வாய்ப்பளித்த எல்லோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (சிரிப்பு)

முதலாவதாக, தமிழகத்தைச் சேர்ந்த முஸ்லீம்கள் தமிழ்நாட்டிலே தங்களுக்கென ஒரு பிரதிநிதிகூட இல்லையே என்று ஏங்கிய காலங்கள் உண்டு. அப்படி ஏங்கிய நெஞ்சங்களை நிமிரச் செய்து, இன்றைக்கு ஒன்றல்ல, இரண்டு இஸ்லாமியச் சிங்கங்களை இங்கே அமைச்சரவையிலே அமர்த்தி, மகிழ்ந்த மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு முதற்கண் நன்றி. சிறுபான்மையினரின் நீண்ட நெடுங்காலக் கனவான இடஒதுக்கீடு பற்றி நான் இம்மாமன்றத்திலே சென்ற ஆண்டு ஏப்ரல் 5 ஆம் தேதியன்று பேசும்போது, இடஒதுக்கீட்டிலே உள் ஒதுக்கீடு செய்ய முடியும் என்பதை எடுத்துக் கூறியபோது, சிறுபான்மையினரெல்லாம் மகிழும்வண்ணம், அந்த இடஒதுக்கீட்டில், உள்ஒதுக்கீடாக செப்டம்பர் 13 ஆம் தேதியன்று இஸ்லாமியர் நெஞ்சங்களெல்லாம், சிறுபான்மை கிறித்துவர்களெல்லாம்



2008 ஏப்ரல் 29] [திரு. கு. ஹசன் அலி]

மனம் மகிழும்வண்ணம் உள் ஒதுக்கீட்டை பெற்றுத் தந்த கலைஞர் அவர்களுக்கு தமிழக முஸ்லீம் முன்னேற்றக் கழகம் நன்றி சொல்ல ஏற்பாடு செய்த கூட்டத்திலே, நன்றிக்கு, நன்றி என்று சொன்ன அந்தக் கலைமகனுக்கு பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் வந்து நன்றி, நன்றி என்று சொன்னார்களே, அந்தத் தலைமகனுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, நான் என்னுடைய பேச்சை ஆரம்பிக்கின்றேன்.

கலைஞர் அவர்களுடைய பாசத் தம்பி அவரும் இங்கே இல்லை. இன்பத்துடனும், பாசத்துடனும் பழகும் பக்குவம் பெற்ற மாண்புமிகு அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள், சிறுபான்மை ஆணையத் தலைவர் அருட்தந்தை வின்செண்ட் சின்னத்துரை அவர்களையும் மற்றும் சிறுபான்மைப் பிரதிநிதிகளையும் நவம்பர் 13 அன்று சந்தித்து, பாசத்துடனும், பரிவுடனும், மிகக் கவனத்துடனும், துறையின் ஆழ்ந்த அறிவுடனும், கலைஞரின் பிரதிநிதியாக இருந்து, சுழற்சி முறையிலான பட்டதாரி ஆசிரியர்கள் நியமன இரத்து; மதமாற்றத்தை எதிர்த்து வேலைநிறுத்தம் செய்த நாள் அங்கீகரிப்பு; T.S.R.—ல் குறிப்பிடப்பட்ட குறிப்பு நீக்கம்; சிறுபான்மைப் பள்ளிகளில் உடனடியாக deployment நிறுத்தம்; தமிழ் உருதுமொழி ஆசிரியர்கள் நியமனம், தற்காலிக அங்கீகாரம் பெற்ற பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம் என இப்படி பல கோரிக்கைகளைப் பரிசீலனை செய்ததற்கு, சிறுபான்மையினர் சார்பாக அவருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் செல்லக் குழந்தைகளுக்கு பாசத்தின் மிகுதியால், அன்பின் மிகுதியால், சமயங்களில் அவர்கள் கேட்பதையெல்லாம் வாங்கிக் கொடுத்துவிடுவோம். ஐஸ் கிரீம், பழ ரசம், பழங்கள் என வாங்கிக் கொடுத்துவிடுவோம். ஆனால், அடுத்த நாள் அவர்களுக்குச் சளி பிடித்தாலோ, ஏதாவது ஊறு விளைந்தாலோ, காய்ச்சல் வந்தாலோ நம்முடைய மனம் எவ்வளவு வருத்தப்படும்? அதை இப்படிச் சொல்ல வேண்டுமென்றால், தமிழக அரசு அன்போடும், பாசத்தோடும் கொடுத்த சிறுபான்மையினருக்கான 7 விழுக்காடு இடஒதுக்கீட்டில் ஏற்பட்ட சில குளறுபடிகளால் இன்று குழப்பம் அடைந்து அந்தச் சிறுபான்மையினர் கல்வி வேலைவாய்ப்பு நிறுவனங்களில் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றார்கள். இன்றைக்குக் கிறித்துவர் 100—க்கு 75 பேர் ஆசிரியர் பணிக்குத் தேர்வு செய்யப்படுகின்றார்கள். முன்பு வேலைவாய்ப்பில் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் மொத்தமாக வழங்கிய 30 விழுக்காடு வேலைவாய்ப்பு, மூப்பு அடிப்படையில் மாவட்ட அளவில் 10 பேருக்கு மேல் வேலைவாய்ப்பு எளிதாகக் கிடைத்தது. ஆனால், இன்று

[திரு. கு. ஹசன் அலி] [2008 ஏப்ரல் 29

100—க்கு 4 பேர்களுக்குக்கூட கிடைக்க முடியாத அவல நிலைக்கு ஆளாகியிருக்கின்றார்கள். இதுபற்றி கிறித்துவர்கள் முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, இங்கே எடுத்துச் சொல்லச் சொல்லியிருக்கின்றார்கள். இதில்கூட அருந்ததியின மக்களுக்கு தனி இட ஒதுக்கீடு அளிப்பது தொடர்பாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை-

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீட்டிலே சிறு குழப்பம் இருப்பதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கின்றார்கள். அதுகுறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆய்வு செய்து, தகுந்த முடிவை அறிவிக்க இருக்கின்றார்கள். ஆகவே நமக்குள்ளே, சிறுபான்மையினரில் அவருக்குக் கிடைத்ததா, இவருக்குக் கிடைத்ததா என்றில்லாமல், இருவருக்கும் கிடைக்க வேண்டிய சம உரிமையை சமமாகப் பெறுவதற்கான அந்தக் காரியங்களை நம்முடைய முதல்வர் அவர்கள் செய்து கொடுப்பார்கள்.

**HON. DEPUTY SPEAKER:** Bhai, fifty, fifty.

*முற்பகல் 11—40*

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் சொன்னேன். இது, ஏற்கெனவே கலைஞர் அவர்களுடைய கருணையான பார்வைக்குச் சென்றுவிட்டது. கலைஞர் அவர்கள், லுங்கி உடுத்தாத முஸ்லீம், சிலுவை அணியாத கிறிஸ்தவர். ஆகவே, நான் சொல்வது . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது உண்மை. கிறிஸ்தவர்களுக்கு கிடைத்த அளவிற்கு, இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீட்டிலே இடம் கிடைக்கவில்லை என்ற ஒரு கருத்து உண்மைதான். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்த உடனே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், P. & A.R., அந்த இலாகாவைக் கூப்பிட்டு, என்னைப் பேசச்



2008 ஏப்ரல் 29] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

சொல்லி இஸ்லாமியர்களுடைய பிரதிநிதியாக இருக்கக்கூடிய திரு. ஹைதர்அலி அவர்களும் அந்தக் கூட்டத்திலே கலந்துகொண்டு, கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும், Service Commission-லே இட ஒதுக்கீடு செய்துகொடுப்பதிலே, சரிசமமாக செய்து கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கான அரசாணை, இன்னும் ஓரிரு நாட்களிலே பிறப்பிக்கப்படும்.

**திரு. கு. ஹசன் அலி:** நன்றி என்று சொல்வதைத் தவிர, வேறு வார்த்தைகள் இல்லை. தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் TNPSC அரசாணை (எம்எஸ்) எண் 241, 29 அக்டோபர் 2007—ல் அரசுப் பணிகளுக்குப் பணியாளர்கள் roster முறையில் நியமனம் செய்ய வேண்டுமென ஆணை பிறப்பித்துள்ளனர். இதனால் சிறுபான்மையினருக்கு செய்த பாதிப்பு என்னவென்று இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன். குறிப்பாக, TNPSC நவம்பர் 15—ல் வெளியிட்டுள்ள விளம்பரம் ஒன்றினை மேற்கோள் காட்ட இங்கே விழைகின்றேன். விளம்பரம் எண் 135—ல் 3,368 தட்டச்சர்களுக்கும், 508 சுருக்கெழுத்தாளர்களுக்கும் விண்ணப்பம் கோரியிருந்தார்கள். இதில் 3.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கு, மற்ற ஒதுக்கீடுகள்போக, 118 இடங்கள் ஒதுக்கியிருக்க வேண்டும். ஆனால், வெறும் 54 தட்டச்சர்களை சிறுபான்மையின முஸ்லீம்களுக்கு என அறிவிப்புச் செய்திருக்கிறார்கள். இது 1.6 விழுக்காடுக்கும் குறைந்ததாகும்.

அதேபோல, சுருக்கெழுத்தாளர்கள், பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கு, வெறும் 5 இடங்கள். அதாவது, ஒரு விழுக்காட்டிற்கு கீழ் TNPSC விளம்பரம் செய்திருக்கிறது. நான் அறிந்தவரையில் குளறுபடிகளுக்கு காரணம், மொத்தப் பணியிடங்களை பல்வேறு துறைகளாகப் பிரித்து, பல்வேறு மாவட்டங்களில் உள்ள அலுவலகங்களுக்குப் பிரித்து, roster முறையை அமல்படுத்துவதால் இந்த பாரபட்சம் ஏற்பட்டுள்ளது.

உதாரணமாக, நான் குறிப்பிட்ட 3,368 தட்டச்சர்கள் பணிகளை 9 துறைகளுக்காகப் பிரித்து, பின்னர் மாவட்ட ரீதியாக 166 அலுவலகங்களுக்குப் பிரிப்பது என்ற roster முறையில், 28 ஆவது நிலையை முதலிடமாகக் கொண்டிருக்கும் முஸ்லீம்களுக்கு வாய்ப்பே கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. இங்கே 29 இடம் இருந்தால் ஒரு முஸ்லீமுக்கும், 15 இடங்கள் இருந்தால் ஒரு கிறிஸ்தவருக்கும் இடம் உள்ளது. 13 இடங்கள் இருந்தால், சிறுபான்மையினருக்கு ஒரு இடம்கூட கிடையாது. இதிலே, பழங்குடியினர் 50 ஆவது இடத்திலே

இருக்கிறார்கள். சுழற்சி முறையிலே அவர்கள் வருவது என்றால் ஒரு யுகம்கூட ஆகலாம், அவர்களுக்கு இடம் கிடைப்பதற்கு. உதாரணமாக, நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இம்மாதம் 9 ஆம் தேதி அண்ணா பல்கலைக்கழகம், ஆய்வு ஆசிரியர் பணி நியமனத்திற்காக வெளியிடப்பட்ட விளம்பரத்தில், 25 துறைகளுக்கு 140 ஆசிரியர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரியுள்ளனர். இதில் வேடிக்கை, பிற்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு 3 இடங்கள், அதாவது 2 இடங்கள் குறைவாக. பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கும், பழங்குடியினருக்கும் இடமேயில்லை எனவும் அதிலே குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியல் சாசன சட்டம் 15 மற்றும் 16 பிரிவுகள், தெளிவாக 3.5 விழுக்காடு, இந்த கிறிஸ்தவர்களுக்கும், பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கும் என்று இருக்க TNPSC பொது விதி 22, பிரிவு 'சி' அட்டவணை யூனிட் வாரியாக roster முறையை பின்பற்றியுள்ளோம் எனக் கூறியிருக்கிறார்கள். சிறுபான்மையினரின் உரிமைகளை இது பறிக்கவில்லையா, ஆனால், சட்ட பிரிவு 22 'சி'—ஐ பார்த்தால், அப்படி எந்தக் குறிப்பும் இல்லை என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உடனடியாக அந்த ரோஸ்டர் முறையை திருத்தி, ஒரே வகையான கல்வி தகுதியுடைய பதவிகளுக்குத் தேர்வு செய்யும்போது அனைத்து அரசுத் துறைகளும் ஒரே யூனிட்டாகக் கருதி . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். நன்றாகப் பேசுகிறீர்கள். Interruption இல்லாமல் பேசுகிறீர்கள். நன்றாகப் பேசுங்கள்.

**திரு. கு. ஹசன் அலி:** சீருடைப் பணியாளர் துறை, ஆசிரியர் நியமன வாரியம் முதலான பணி நியமன அமைப்புகளைப் போல தமிழக தேர்வாணையமும் முதலில் நடைமுறையில் உள்ள, இட ஒதுக்கீடு அடிப்படையில் தேர்வு செய்துவிட்டு, பிறகு, துறைகளுக்கு மாவட்ட ரீதியாக அலுவலகங்களுக்கு அனுப்புவதுதான் சரியான முறையாக இருக்கும். முந்தைய ஆட்சியிலே அரசுப் பணிகளுக்கு ஆட்கள் எடுக்கப்படவே இல்லை. கதவுகளை மூடினார்கள். கலைஞர் அவர்கள் கருணையோடு திறந்த அந்த வாசலை, சிறுபான்மை மக்கள் தங்களுக்குக் கிடைத்த பரிசாகவே கருதினார்கள். இப்போது அவர்கள் வேண்டுவது எல்லாம், ரோஸ்டர் முறையில் சமக் கல்வித் தகுதி பணிகளை ஒரே யூனிட்டாகக் கருதி பணியாளர்களை நியமிக்க தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கல்வி வாய்ப்பிலும், இந்த ரோஸ்டர் முறையினால் சிறுபான்மையினர், பொறியியல், மருத்துவம் 7 விழுக்காடு இருந்தும், வாய்ப்பில்லாமல் போகும் நிலை. வரும் புதிய





கல்வியாண்டு தொடங்கும் தருணம் வந்துவிட்டதால், கருணை உள்ளம் கொண்ட கலைஞர் . . .

முற்பகல் 11—45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவ்வளவுதான் கலைஞரோடு நிறுத்திட வேண்டியதுதான்.

**திரு. கு. ஹசன் அலி:** கருணையுள்ளம் கொண்ட கலைஞர் இந்த உரிமைகளைப் போர்க்கால அடிப்படையிலே செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசியல் சாசனம் 30 (1) ஆம் பிரிவின்படி, பள்ளிகள் நிறுவிட, நிர்வகிக்க சிறுபான்மையினருக்கு உரிமை உள்ளது. ஆனால் 1992 முதல் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கும்போது நிரந்தரமாக நிதியுதவி கோர மாட்டோம் என்ற நிபந்தனையின் அடிப்படையில் மட்டுமே தொடங்குவதற்கும், தரம் உயர்த்திடவும் சிறுபான்மைப் பள்ளிகளுக்கு அனுமதி கிடைக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) எவ்வளவு நேரம் சார் பேசுவதற்கு அனுமதி அளித்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 10 நிமிடங்கள்தான் சார். 10 நிமிடங்கள்தான். 10 நிமிடங்கள் பேசி முடித்துவிட்டீர்கள்.

**திரு. கு. ஹசன் அலி:** இல்லை. 15 நிமிடங்கள் என்று சொன்னார்களே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை.

**திரு. கு. ஹசன் அலி:** அதேபோல் தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளிப் பராமரிப்பு மானியம், grant 6 per cent கொடுக்கப்பட்டது, நான்காகி, இரண்டாகி அதுவும் அனைவருக்கும் வழங்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இளவழகன்.

***திரு. கே.எஸ். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர். சிறுபான்மை மற்றும் வணிக வரி..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சார் 10 நிமிடங்கள்தான்.

***திரு. கே.எஸ். இளவழகன்:** நல்லது. மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த எங்கள் குடும்பத் தலைவர்

[திரு. கே.எல். இளவழகன்] [2008 ஏப்ரல் 29

மருத்துவர் அய்யா அவர்களுக்கும், பசுமைத் தென்றல் மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும், எங்கள் தலைவர் தியாகச் செம்மல் கோ.க. மணி அவர்களுக்கும், தங்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிக்க சக்திகளின் எஃகு கோட்டையாக, இன்னும் சொல்லப் போனால் பிற்படுத்தப்பட்ட மக்கள் எட்டிக்கூட பார்க்க முடியாத இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் (I.I.T.) இந்திய மேலாண்மை நிறுவனம் (I.I.M.) தேசிய தொழில்நுட்ப நிறுவனம் (N.I.T.) போன்ற கல்வி நிறுவனங்களிலும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சமூக நீதி அடிப்படையில் இடஒதுக்கீடு கிடைக்க களம் கண்ட எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள் தமிழகத்தில் மட்டுமல்லாது, இந்திய நாடு முழுவதும் உள்ள சமூக நீதி ஆர்வலர்களையும் சந்தித்து ஆதரவு திரட்டி டெல்லியிலே போராட்டம் நடத்தியதன் காரணமாகவும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசிலும் வலியுறுத்தி சட்டம் கொண்டு வந்த நிலையில் ஆதிக்க சக்திகள் நீதித் துறைமூலமாகத் தடை வாங்கியபோதும் சளைக்காமல் உச்ச நீதிமன்றத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வழக்கறிஞர்களை நியமித்து வாதாடி இன்றைக்கு அதிலும் பெரும் வெற்றியைப் பெற்றிருக்கிறார். அந்த வகையில் சமூக நீதிப் போராளி மருத்துவர் அய்யா அவர்களுக்கும், இதே உரிமைக்காக சட்டப் பேரவையிலே தீர்மானம் நிறைவேற்றி நடுவணரசை வலியுறுத்திய தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும், நாடாளுமன்றத்தில் இதற்காகச் சட்டம் கொண்டு வந்து எல்லா வகையிலும் உறுதுணையாக இருந்த அன்னை சோனியா அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 30 விழுக்காடும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 20 விழுக்காடும் இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டு வருகிறது. இந்த இட ஒதுக்கீட்டினால் எந்த அளவுக்குப் பயன் கிடைத்துள்ளது என்பதை அறியும் வகையில், தமிழக அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களின் பணியிடங்கள் அனைத்திலும், ஒவ்வொன்றிலும் படிநிலை வாரியாக பிற்படுத்தப்பட்டோருக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கும் எவ்வளவு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது என்பதை அரசு வெளியிட வேண்டும்.

அனைத்து பணியிடங்களிலும் பொது பட்டியல்மூலம் வேலைக்குச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பேர்? இட ஒதுக்கீட்டின்மூலமாகச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பேர்? ஆள் கிடைக்காததால் நிரப்பப்படாத



2008 ஏப்ரல் 29] [திரு. கே.எல். இளவழகன்]

இடங்கள் எத்தனை? இதுபோன்ற தகவல்களையும் தெரிவிக்க வேண்டும். இவை குறித்த இட ஒதுக்கீடு வெள்ளை அறிக்கையைத் தமிழக அரசு உடனடியாக வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்து துறைகளிலும் உள்ள பின்னடைவுக் காலியிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும். நிரப்புவதாக அறிவித்தும் இன்னும் நிரப்பப்படாமல் உள்ளது. எப்போது நிரப்பப்படும் என்பதைத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்திய அரசியல் அமைப்பின் 9–வது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள சட்டங்களை மறு ஆய்வு செய்ய வேண்டும் என உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. இந்தப் பட்டியலில் தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுச் சட்டம் இடம்பெற்றுள்ளது. இந்த மறுஆய்வின்மூலம் தமிழகத்தில் 50 விழுக்காட்டிற்கு மேல் இட ஒதுக்கீடு கூடாது எனத் தீர்ப்பு வருமானால் தமிழகத்தில் மிகப் பெரிய கொந்தளிப்பான சூழ்நிலை உருவாகும். ஆகவே, தமிழகத்தில் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டினைப் பாதுகாப்பதற்காக இப்போதிருந்தே முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வலியுறுத்துகின்றேன்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சிறுபான்மை நலத் துறையின் நோக்கங்களும், குறிக்கோள்களும் நிறைவேற வேண்டுமானால் இன்றைக்கு உள்ள இந்த இட ஒதுக்கீட்டு முறையை மாற்றி அந்தந்த மாநில அரசுகளே நிலைமைகளுக்கேற்றவாறு சாதி அடிப்படையில் விகிதாச்சார இட ஒதுக்கீட்டு முறையை ஏற்படுத்த புதிய சட்டம் கொண்டு வர நடுவண் அரசை நமது தமிழக அரசு வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதர பிற்படுத்தப்பட்ட மக்கள் O.B.C. எண்ணிக்கை குறித்து உறுதியான ஆதாரங்கள் இல்லாதது இட ஒதுக்கீட்டிற்குத் தடையாக உள்ளது. இதர பிற்படுத்தப்பட்ட மக்களுடைய எண்ணிக்கை 1931 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பைத்தான் ஆதாரமாகக்கொள்ளப்படுகிறது. 1931 ஆம் ஆண்டிற்குப் பிறகு இதுவரை சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தவேயில்லை. அண்மையில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பில்கூட இதுதொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதர பிற்படுத்தப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்காக அமைக்கப்பட்ட காகா கலேல்கர் குழு, மண்டல் குழு ஆகியவற்றின் அறிக்கையில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென பரிந்துரை

[திரு. கே.எல். இளவழகன்] [2008 ஏப்ரல் 29

செய்யப்பட்டுள்ளது. இதைத்தான் எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். எனவே, 2011 ஆம் ஆண்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பு சாதிவாரி கணக்கெடுப்பாகவும் நடத்திட நடுவணரசை தமிழக அரசு வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போதுள்ள 50 விழுக்காடு 69 விழுக்காடு என்ற நிலைமையினை மாற்றி 100 விழுக்காடு என்ற அளவில் எல்லா சமூக மக்களுக்கும் கிடைக்க வேண்டிய வழிவகைகளைக் காண வேண்டும்.

முற்பகல் 11—50

மேலும், அரசு மற்றும் பொதுத் துறையில் மிகக் குறைவான அளவில்தான் வேலைவாய்ப்புகள் உள்ளன. பெரும்பான்மையான வேலைவாய்ப்புகள் தனியார் துறையில் கிடைக்கின்றன. அதிலும் பொருளாதார தாராளமயமாக்குதலுக்குப் பின், தமிழகத்தில் அதிக அளவிலான தொழிற்சாலைகள் வருகின்றன. ஆனால், இந்தத் தொழிற்சாலைகளால் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஆதி திராவிட, சிறுபான்மையின மக்களுக்கு என்ன நன்மை என்ற கேள்வி எழுகிறது. இதைத்தான் எங்கள் மருத்துவர் ஐயா அவர்கள் தனியார் துறையில் இட ஒதுக்கீட்டை அமல்படுத்த வலியுறுத்தி 1998 ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே முதன் முறையாக சென்னையில் இருக்கின்ற Ford நிறுவனத்தின்முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தி, தொடர்ந்து வலியிறுத்தியும் வருகிறார் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும், மகாராஷ்டிரா மாநிலத்தில்கூட தனியார்த் துறையில் இட ஒதுக்கீடு முறையை செயல்படுத்த 2004 ஆம் ஆண்டு சட்டம் கொண்டு வரப்பட்டு இருக்கின்றது. எனவே, தமிழக அரசு, தமிழகத்தில் தனியார்த் துறை வேலைவாய்ப்புகளில் 69 சதவீத இட ஒதுக்கீட்டினைச் செயல்படுத்த வேண்டும். குறிப்பாக, பெரிய தொழில் நிறுவனங்களான Corporate நிறுவனங்களில் இதனை உடனடியாகக் கட்டாயமாக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தமிழக அரசின் அனைத்து துறைகளிலும் உள்ள உயர் பதவிகளிலும் இட ஒதுக்கீட்டு முறையைக் கட்டாயமாகக் கொண்டு வரவேண்டும்.



2008 ஏப்ரல் 29] [திரு. கே.எல். இளவழகன்]

பிற்படுத்தப்பட்டோர் மிகவும்
அரசு வேலைகளில் பிற்படுத்தப்பட்டோர் எனப் போலி சான்றிதழ்கள்மூலம் பெருமளவில்
பிற்படுத்தப்பட்டோர் எனப் போலி சான்றிதழ்கள்மூலம் பெருமளவில்
சேர்ந்துள்ளனர். இந்நிலை சமூக நீதிக்கு எதிரான சட்ட விரோதமானச்
செயல். எனவே, உடனடியாக போலிச் சான்றிதழ் வழங்கியோர், அதை
வாங்கி பயன் அடைந்தோர் யார், யார் எனக் கண்டறிந்து குற்றவியல்
வழக்கு பதிவு செய்து தண்டனை வழங்க, உரிய நடவடிக்கை எடுக்கவும்
கேட்டுக்கொள்கிறேன்.

நடுவண் அரசு உயர்கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு
அளிக்கப்பட்டுள்ளதை பயன்படுத்த ஏதுவாக, பிற்படுத்தப்பட்ட மிகவும்
பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும், ஆதி திராவிட
மாணவர்களுக்காகவும், உலகத் தரம் வாய்ந்த உறைவிடப் பள்ளிகள்
தமிழ்நாட்டின் அனைத்து வட்ட அளவில் மாணவர்களுக்கு ஒன்றும்,
மாணவியருக்கு ஒன்றும் அமைக்கப்பட வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்துப் பள்ளிகளிலும் பயிலும் பிற்படுத்தப்பட்ட மிகவும்
பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவிகள், நடுவண் உயர் கல்வி
நிறுவனங்களான IIT, IIM போன்றவற்றில் சேர ஏதுவாக அவர்களை
நுழைவுத் தேர்வுகளுக்குத் தயார்படுத்த பயிற்சி வகுப்புகள்
மாவட்டம்தோறும் நடத்தப்பட வேண்டும்.

தொழில் நுட்பம் மற்றும் தொழிற்பயிற்சிக் கல்வி வேலைவாய்ப்பிற்கு
அவசியமாகும். இத்தகைய பயிற்சி நிறுவனங்கள் அனைத்து
வட்டங்களிலும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட
மாணவர்களுக்காக தொடங்கப்பட வேண்டும்.

கிராமப்புற மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் 15
விழுக்காடு இட ஒதுக்கீடு என்ற முறை இதற்கு முன்பு உங்களுடைய
ஆட்சியில் இருந்து வந்தது. இந்த இட ஒதுக்கீடு முறையை மீண்டும்
நடைமுறைப்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

சிறுபான்மையினர் நலன். அதிக அளவில் மக்கள் தொகை கொண்ட
சிறுபான்மை மக்களான கிறிஸ்துவ, இஸ்லாமியர் பொருளாதாரரீதியாக
மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். அவர்களுக்கு தற்போது
இட ஒதுக்கீடு வழங்கியுள்ளீர்கள் என்பதற்காக பாட்டாளி மக்கள்
கட்சியின் சார்பாக மனதார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.
பொருளாதார மேம்பாட்டிற்காகச் சிறப்புத் திட்டங்களின்
அடிப்படையில், கூடுதல் நிதி ஒதுக்கச் செய்ய வழிவகுக்க வேண்டும்.

[திரு. கே.எல். இளவழகன்] [2008 ஏப்ரல் 29

அரசு உதவி செய்யும் பெரும்பான்மை கல்வி நிறுவனங்களில் மாணவ மாணவியர் எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர் பணியிடங்கள் அதிகம் தேவை. இருப்பினும், நீண்ட காலமாக அனுமதி வழங்கப்படவில்லை. இந்த சிறுபான்மையின கல்வி நிறுவனங்கள் இலாப நோக்கத்தோடு இல்லாமல், சேவை நோக்கத்தோடு நடத்தப்படுபவை. எனவே, அனுமதி வழங்க ஆவன செய்ய பாட்டாளி மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

வக்ஃபு வாரியத்திற்கு உட்பட்ட ஏராளமான சொத்துக்களைத் தனியார் அனுபவித்து அதற்குரிய குத்தகைக் கட்டணம் செலுத்தவில்லை என்று சொல்லப்படுகிறது. எனவே, அவர்கள்மீது உரிய அக்கறை செலுத்தி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் பொறியியல் கல்லூரிகள் உள்ளிட்ட பல்வேறு கல்வி நிறுவனங்களின் பெயரால் சிலர் போலிச் சான்றிதழ் பெற்று நடத்தி வருகின்றனர். மொழி வாரி பெற்ற சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் என்ற பெயரை வைத்துக்கொண்டு தமிழகத்தைச் சேர்ந்த மொழி வாரி மற்றும் கிறிஸ்துவ இஸ்லாமிய சிறுபான்மையின குழந்தைகளைச் சேர்க்காமல் வெளி நாட்டில் இருந்து கூடுதலாகப் பணம் கொடுப்பவர்களை மட்டும் சேர்த்துக்கொண்டு வருகின்றனர். இதுமாதிரி தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதியில் உள்ள ஜெயம் பொறியியல் கல்லூரி, மிகப் பெரிய மோசடி நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. இதேபோல, பல கல்வி நிறுவனங்கள், போலியாகச் செயல்பட்டு வருகின்றன. அவற்றைக் கண்டறிந்து அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிறிஸ்துவ இஸ்லாமிய, சிறுபான்மையினரை மாவட்ட ஆட்சியர், மாவட்ட கண்காணிப்பாளர் மற்றும் அரசின் நிலை 1, 2 போன்ற (மணியடிக்கப்பெற்றது) பணிகளில் அவர்களை நியமிக்க வாய்ப்பளிக்க வேண்டும். நடுவண் அரசு கல்வி நிறுவனங்களில், இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கும், கிரீமி லேயர் ஒழிக்கப்படவும் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் தொகுதிப்பற்றிய பிரச்சினையைச் சொல்லிவிடுகிறேன்.

என்னுடைய ஆற்காடு தொகுதி, மிக மிகப் பின்தங்கிய தொகுதி என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, என் தொகுதிப் பிரச்சினையை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தீர்க்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



2008 ஏப்ரல் 29] [திரு. கே.எல். இளவழகன்]

ஆற்காடு சட்டமன்ற தொகுதி மிக மிகப் பின்தங்கிய கிராமங்கள் அடங்கிய தொகுதியாகும். எனவே, இக்கிராமப்புற மாணவர்களுக்கு அரசின் சார்பாக அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி இந்த ஆண்டே தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திமிரி மற்றும் மாம்பாக்கம் பகுதிகளில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கலவைப் பகுதியில் உடனடியாக தீயணைப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மழையூர், வரகூர்புதூர், ஆற்காடு நகராட்சி தெற்கு நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–55

எச்சனூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கேட்டுக்கொள்கிறேன். பெரியகுக்குண்டி முதல் பாப்பேரி வரை வேம்பி முதல் அத்தியானம் வரை புதிய சாலை வசதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வண்டிக்கல் அருகில், காவிரி ஓடை அருகே புதிய தடுப்பணை கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆற்காடு அரசு பொது மருத்துவமனைக்கு பிரசவப் பகுதிக்காக 16 படுக்கைகள் கொண்ட கட்டடம் கட்டித்தர கேட்டுக்கொள்கிறேன். திமிரி பகுதியிலே புதிய பேருந்து நிலையம் அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஓர் அறிவிப்பு. ** என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் பாசித் பேசிய அந்தச் சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜான் ஜோசப். (குறுக்கீடு) Personal-ஆக சொல்வதுபோல் உள்ளது. எனவே, நீக்கப்படுகிறது. திரு. இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** அரசு பிறப்பித்த ஆணை 107—ஐ அனைத்து வக்ஃபு சொத்துக்களைப் பாதுகாப்பதற்காகத் திருத்த வேண்டும். முஸ்லீம் சமுதாயத்திற்கு சம்பந்தப்பட்ட அனைத்து சொத்துக்களையும் கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்க வேண்டுமென்று கேட்டு, (குறுக்கீடு) ஒரே ஒரு கருத்தை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2008 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜோசப்.

***திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பற்றியும், இந்த மானியக் கோரிக்கை பற்றியும் சொல்வதற்கு நிறைகள் நிரம்ப உள்ளன. ஆனால், அவற்றையெல்லாம் கூறி முடிப்பதற்குள் மணி அடிக்கப்பட்டு விடும். எனவே, மணிக்குப் பயந்து சில அவசரத் தேவைகளை மட்டும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

முதலில் வணிக வரி தொடர்பானவை, Brand register செய்யப்படாத மிட்டாய், பிஸ்கட்டுகள், ஊறுகாய் பட்டுச்சரிகை ஆகியவற்றிற்கு வரி விலக்கு அளிக்க வேண்டும். காம்பவுண்டிங் வரி விதித்தால் அரசுக்கு கூடுதல் வருவாய் வரும் எனச் செங்கல் உற்பத்தியாளர்கள் கூறுகின்றனர். அதை அரசு பரிசீலிக்க வேண்டும்.

வறிய நிலையில் உள்ள வெறும் 3 அல்லது 4 பேர்கள் மட்டுமே வேலை செய்யும் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் சலவைத் தண்ணீருக்கு விற்பனை வரி விலக்கு அளிக்க வேண்டும். சீரகம், சோம்பு, கடுகு, வெந்தயம், மிளகு ஆகிய எளிய உணவு சார்ந்த பொருட்களுக்கு ஏற்கெனவே இருந்த தங்கள் ஆட்சியில் வரி விலக்கு அளிக்கப்பட்டு இருந்தது. 2001-ல் அ.தி.மு.க. ஆட்சி இவற்றின்மீது மீண்டும் வரி விதித்தது. அதை இரத்துச் செய்ய வேண்டும். உள் நாட்டில் கொள்முதல் செய்யும் பயறு, பருப்பு, பட்டாணி ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்படும் பருப்பு, கடலை மாவு, பட்டாணி மாவு வகைகளுக்குக் கொள்முதல் வரி விலக்கு அளிக்க வேண்டும்.

இத்துறையில் உள்ள 3700-க்கும் மேற்பட்ட காலியிடங்களை நிரப்பவும், இயல்பான சிறிய தவறுகளுக்குக்கூட கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதை கைவிடவும், நிலுவையில் உள்ள ஒழுங்கு நடவடிக்கைகளை விரைவில் கனிவாக முடிக்கவும் வலியுறுத்துகிறேன். இணை ஆணையாளர் முதல் இளநிலை உதவியாளர் வரை அனைத்து நிலையிலும் பதவி உயர்வு பட்டியல் வெளியிட்டு பதவி உயர்வு வழங்க வேண்டும்.

தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சம்பந்தப்பட்ட விஷயங்கள். தமிழகத்தில் சுய நிதி கல்லூரிகளில் பயிலும் B.C. மற்றும் M.B.C. மாணவர்களுக்கு 2007-2008 ஆம் ஆண்டுக்கான கல்வி உதவித் தொகை இதுவரையில் வழங்கப்படவில்லை. இதனால் தமிழகத்தில் குறிப்பாக



2008 ஏப்ரல் 29] [திரு. ஞா. ஜாண் ஜோசப்]

குமரி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பாதிப்பு அடைந்துள்ளனர். இம்மாவட்டத்தில் ஒரு அரசுக் கல்லூரிகூட இல்லாததால் இவர்கள் சுய நிதிக் கல்லூரிகளில் சேர நேர்ந்தது. எனவே, மேற்சொன்ன உதவித் தொகையை உடனடியாக வழங்க வேண்டும். கோணம் பாலிடெக்னிக் கல்லூரியை ஒட்டி ஒரு அரசு பொறியியல் கல்லூரிக்கான இடம் தேர்வு செய்யப்பட்டது. அறிவிப்பு இந்த ஆண்டு வெளிவரும் என எதிர்ப்பார்த்தோம். ஆனால் வேறு வகையாக வெளி வந்திருக்கிறது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் 7-ஐயும் தந்து விடுங்கள் என்று கேட்டார். நாங்கள் 7-ஐயும் தந்து விட்டோம். நீங்கள் 7-ம் சேர்ந்து இந்த ஏழை மாவட்டத்திற்கு இந்த ஆண்டிலே ஒரு பொறியியல் கல்லூரி பெற்றுத் தாருங்கள் என்று மாவட்ட மக்கள் எங்களை வற்புறுத்துகின்றனர். மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயம் தந்து விடுவார் என்ற நம்பிக்கையோடு இருக்கிறோம்.

தமிழ்நாட்டில் முஸ்லீம் மற்றும் கிறித்தவர்களுக்கு தலா 3.5 சதவிகிதம் இட ஒதுக்கீடு சமீபத்தில் அறிவிக்கப்பட்டது மட்டுமல்லாமல் B.C.M.- Backward Class Muslim, B.C.C.-Backward Class Christian-என இரண்டு புதிய பிரிவுகளும் துவக்கப்பட்டன. ஏற்கெனவே, B.C.-க்கு 30 சதவிகிதம் இட ஒதுக்கீடு இருந்தது. அதிலிருந்து B.C.M.-க்கு 3.5 சதவிகிதம், B.C.C.-க்கு 3.5 சதவிகிதம் என 7 சதவிகிதம் மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மீதி உள்ள 23 சதவீதத்தில் இவர்களுக்கு உரிமை இருக்கிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. காரணம் 11-4-2008 அன்று, சென்னை மருத்துவக் கல்லூரி இயக்குனரகம், P.G. Course-க்கான Selection நடத்தியபோது, rank list-ல் 104-வது இடத்தில் இருந்த மில்லிங்டோனியா என்ற மாணவி தேர்வாகவில்லை. ஏனெனில், அவர் ஒரு B.C.C. ஆனால், 148-வது இடத்தில் இருந்த இவரைவிட மொத்த மதிப்பெண் குறைந்த ஒரு மாணவி தேர்வானார். காரணம் அவர் ஒரு B.C. இதுபோல் B.C.C. பிரிவில் பலர் வாய்ப்புகளை இழந்துள்ளனர். அரசாணையிலும், செலக்ஷனிலும் உள்ள குழப்பத்தினை அரசு தீர்த்து வைக்க வேண்டும். இந்தக் குழப்பம் சிறுபான்மையின மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

நண்பகல் 12-00

மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு. கோபிநாத் அவர்கள் மொழிச் சிறுபான்மை மக்கள் அடைந்துள்ள கலக்கத்தைப் பற்றி சில தினங்களுக்குமுன் இப்பேரவையில் குறிப்பிடுகையில் கண் கலங்கினார்.

[திரு. ஞா. ஜாண் ஜோசப்] [2008 ஏப்ரல் 29

என்னைப் பொறுத்தமட்டில், அது அவருடைய கண்ணீர் அல்ல. இலட்சக்கணக்கான மொழிச் சிறுபான்மையினரின் கண்ணீராக நான் அதைப் பார்க்கிறேன். மொழிச் சிறுபான்மை மக்கள் வசிக்கும் மாவட்டங்களிலெல்லாம் இப்பிரச்சினை உள்ளது. குமரி மாவட்டத்தில் சுமார் 30 சதவீதம், அதாவது சுமார் 5 இலட்சம் மக்கள் மலையாளம் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். இவர்கள் யாரும் தமிழ் மொழியை எதிர்க்கவில்லை. தமிழ் படிக்கமாட்டோம் என்று அடம்பிடிக்கவில்லை. மாறாக, ஒரு மொழியைக்கூடப் படிப்பதற்குக் கிடைத்த வாய்ப்பைப் பெரும்பேறாகவே கருதுகின்றனர். ஆனால், அரசியல் சாசனம் அவர்களுக்கு அளித்துள்ள உரிமை, கட்டாயத் தமிழ்ச் சட்டத்தின்மூலம் பறிக்கப்பட்டுவிடுமோ என்பதுதான் அவர்களின் கண்ணீருக்குக் காரணம். அரசாணை கூறுகிறது. Part-I தமிழ் கட்டாயம். Part-II ஆங்கிலம் கட்டாயம். Part-III கணிதம், அறிவியல், சமூக அறிவியல், etc., Part-IV என ஒரு புதிய பிரிவு இந்த அரசாணைமூலம் துவக்கப்பட்டிருக்கிறது. Part-IV கூறுகிறது. தமிழ் அல்லது ஆங்கிலம் தாய்மொழியாக இல்லாத மாணவர்கள், தங்கள் தாய்மொழியை ஒரு Optional Subject-ஆகப் பயில முடியும். Part-IV சம்பந்தமாக மொழி சிறுபான்மை மக்கள் மூன்று முக்கியமான கேள்விகளை எழுப்புகின்றனர். கேள்வி ஒன்று. Part-IV மொழி, சிறுபான்மையினருக்கு மட்டுமே உள்ள நிலையில், இதற்கு Public Examination நடத்தப்படுமா? (மணியடிக்கப்பெற்றது) அந்த மதிப்பெண்கள் அரசு மதிப்பெண் பட்டியலில் பதியப்படுமா? Part-IV தேர்வு எழுதிய மாணவர்களுக்கும், எழுதாத மாணவர்களுக்கும் இடையே, மொத்த மதிப்பெண் எப்படி சமன் செய்யப்படும்?

கேள்வி இரண்டு. Part-IV படிக்கும் மாணவர்களுக்கு அதே மொழி மூலம் Part-III பாடங்கள் பயிற்றுவிக்கப்படுமா? மேலும், A.B.L. அட்டைகள் Part-IV மொழியிலும் அச்சிட்டு வழங்கப்படுமா? கேள்வி மூன்று. Part-IV மொழிவழிப் பயிலும் மாணவர்களுக்கான ஆசிரியர்கள் எண்ணிக்கை எப்படி நிர்ணயம் செய்யப்படும்? தமிழகத்தில் உள்ள மொழிச் சிறுபான்மையினரின் கண்ணீரைத் துடைக்க அரசு சாதகமான பதிலைத் தரும் என நான் எதிர்பார்க்கிறேன்.

குமரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இடைநிலை ஆசிரியர்கள் பணிக்குப் பதிவு செய்து காத்திருப்போர் எண்ணிக்கையில் 90 சதவீதம் B.C. மற்றும் M.B.C., பிரிவைச் சார்ந்தவர்கள். பலர் வேலைவாய்ப்புக்கான உச்சவயதைக் கடக்கும் நிலையில் உள்ளனர். மாவட்ட seniority முறைதான் இந்நிலைக்குக் காரணம். குமரி மாவட்ட



2008 ஏப்ரல் 29] [திரு. ஞா. ஜாண் ஜோசப்]

மக்கள் அதிகம் படித்ததுதான் அவர்கள் செய்த குற்றம்போலும். (மணியடிக்கப்பெற்றது) இம்மகாசபையில் வீற்றிருக்கும் கனம் உறுப்பினர்களுக்கு ஒன்றை மட்டும் பணிவோடு கவனப்படுத்துகிறேன். (மணியடிக்கப்பெற்றது) சார், சார், ஒரே second முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** குமரி மாவட்டத்தில் உள்ள இடைநிலை ஆசிரியர்கள் வைத்திருக்கும் சான்றிதழ்கள் குமரி மாவட்ட அரசு வழங்கியதல்ல. குமரி மாவட்ட அரசு வழங்கியதல்ல. மாறாக தமிழக அரசு வழங்கியவைதான். எனவே, அபாய வயதில் இருப்பவர்களுக்காகிலும் முதற்கட்டமாக நீதி வழங்குங்கள் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள். Sir only 7 minutes.

**திரு. க. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, வணிக வரிகள் துறை மானியக் கோரிக்கைகள் மீது பேச வாய்ப்பளித்ததற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளைச் சொல்ல வாய்ப்பளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய சமூகத்தில் பல்லாயிரம் ஆண்டுகளாக மனிதர்கள் ஜாதிவாரியாக பிரிக்கப்பட்டு சமூக வாழ்க்கை, கல்வி ஆகியவற்றில் பாகுபாடுகள் உருவாக்கப்பட்டதால், ஒடுக்கப்பட்ட மக்களாக, ஆதிதிராவிட மக்கள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்டார்கள். இந்த சமூகத்தின் அடித்தளத்தில் அழுத்தப்பட்ட மக்களை முன்னுக்குக் கொண்டு வருவதற்கு ஒரு வாய்ப்பாக உருவாக்கப்பட்ட கொள்கைதான் இட ஒதுக்கீடு. அது இந்தியாவிலேயே தமிழகத்தில் சிறப்பாக அமல்படுத்தப்பட்டு இம்மக்களுக்குச் சிறப்பான முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில்தான் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான 27 சதவிகித இட ஒதுக்கீடு கேட்டு, பல போராட்டங்களுக்குப் பின்னர் அநீதிகளிலிருந்து விடுவித்து பிற்படுத்தப்பட்ட மக்களை இந்த ஆண்டு 27 சதவிகித உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் ஒப்புதலோடு இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இதை இந்திய

[திரு. சு. குணசேகரன்] [2008 ஏப்ரல் 29

கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். இக்கொள்கைக்காக போராடிய கட்சிகளுக்கும், தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் உள்ள கிரீமி லேயர் என்ற நிபந்தனையைத் தகர்ப்பதற்கு, நாம் ஒன்றுபட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், தனியார் தொழிற்சாலைகள் உட்பட அனைத்து மத்திய அரசின் வேலைவாய்ப்புகளிலும் இட ஒதுக்கீட்டை அமல்படுத்திட வேண்டும். சச்சார் அறிக்கையின் அனைத்து அம்சங்களையும் நிறைவேற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*பிற்பகல் 12-05*

தமிழகத்தைப் பொறுத்தவரை பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பல்வேறு நிலைகளில் சிறப்பானத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதில் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு, நிலங்களைக் கையகப்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்திட்டத்தில் நிலங்களை வாங்குவதற்கு அரசின் மதிப்பீட்டு விலையிலிருந்து சிறிது கூடுதலாக வழங்கப்படுவதாலும், நில மதிப்பு சம்பந்தமாக நிலம் அளித்தவர்கள் வழக்கு மன்றங்களுக்குச் சென்றால், வழக்குகள் காலதாமதம் மற்றும் பணம் கிடைக்காததாலும் நிலங்களை இந்தத் துறையால் விலைக்கு வாங்க முடியாமல், ஒதுக்கப்படுகிற பணம் செலவழிக்கப்படுவதில்லை. எனவே, இத்திட்டம் வெற்றிபெற நிலத்தின் வெளி மார்க்கெட் விலையை மதிப்பீட்டு நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுவதன்மூலம்தான் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட மக்களுக்கு அடிப்படை தேவையான வீட்டுமனைப் பட்டாவை முழுமையாக வழங்க முடியும்.

தமிழகத்தில் கடந்த ஆண்டு எல்லா அரசு கல்லூரிகளிலும் மாணவ மாணவியர்களின் நலன் கருதி இரண்டு வேலை முறைகளில் கல்லூரிகள் நடக்கின்றன. இதனால் மாணவ, மாணவியரின் கல்லூரிப் படிப்பு இரட்டிப்பாகியுள்ளது. இந்நிலையில் கல்லூரி விடுதிகள் பழைய எண்ணிக்கையிலேயே நீடிக்கிறது. உடன் விடுதி மாணவ மாணவியரின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க வேண்டும். மேலும், அனைத்து கல்லூரி, பள்ளிகளிலும் போதுமான அளவில் விடுதிகளை உருவாக்கும் கொள்கைகளை உருவாக்க வேண்டும். விடுதி மாணவ மாணவியர்களுக்குத் தரமான, சத்தான உணவு வழங்கிட விலைவாசி புள்ளி உயர்வுக்கு ஏற்ப கட்டண முறைகளைத் தொடர்ந்து மாற்றி



2008 ஏப்ரல் 29] [திரு. சு. குணசேகரன்]

அமைத்திட வேண்டும். கல்லூரி, பள்ளி வளாகங்களிலேயே விடுதிகள் கட்டிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சிறு தொழில் செய்வதற்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கும் திட்டத்தில் பயனுள்ள வகையில் மாறுதல் கொண்டுவர வேண்டும். இக்கடன் திட்டத்தில் மானியம் வழங்கப்பட வேண்டும். 50 சதவிகித மானியத்தில் அந்தக் கடன் வழங்கப்பட வேண்டும். மேலும், இக்கடன் திட்டத்தின்மூலம் ரூ.50,000/- கடன் பெறும் ஒரு நபர் ஜாமீனாக இரண்டு அரசு ஊழியர்கள் மற்றும் 1 இலட்சம் ரூபாய் சொத்து ஜாமீன் என்ற நிபந்தனை விதிக்கப்படுகிறது. இதனால் நடுத்தர, பிற்படுத்தப்பட்ட, ஏழையெளிய மக்களுக்குக் கடன் வாய்ப்பே இல்லாத சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே, ஜாமீன் நிபந்தனையைத் தளர்த்த வேண்டும். கடன் வாங்குபவர்கள் தங்களுக்குள்ளாகவே ஜாமீன் அளிக்கிற நடைமுறையில் கடன் வழங்க வேண்டும்.

அதைப்போல, மருந்துக் கட்டப் பயன்படும் gauze bandage துணி சிறு தொழிலாக விருதுநகர் மாவட்டம், சத்திரப்பட்டி ஏரியாவில் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியா முழுவதும், உலக அளவில்கூட இங்கிருந்து வியாபாரம் நடைபெறுகிறது. இந்தத் தொழிலை நம்பி சுமார் 25,000 குடும்பங்கள் பிழைக்கின்றன. துணி வகைகளுக்கு VAT-லிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ள நிலையில் gauze bandage துணிகளுக்கு மட்டும் VAT வரி விதிக்கப்பட்டுள்ளதால் இத்தொழில் பாதிக்கப்படுகிற சூழ்நிலையில் உள்ளது. எனவே, சிறு தொழிலாக உற்பத்தி செய்யப்படும் gauze bandage இரகத் துணிகளுக்கு VAT-லிருந்து விலக்கு அளிக்க வேண்டுகிறேன்.

அதைப்போல, செங்கல் தொழில் என்பது விவசாயம் இல்லாத காலத்தில் ஆயிரக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கக்கூடிய ஒரு தொழிலாகும். இது கட்டடத்திற்கும் ஒரு அத்தியாவசியமான பொருள் என்ற அடிப்படையில், அந்தத் தொழிலைப் பாதுகாக்க ஹரியானா மாநிலத்தில் உள்ளது போல Compounding Tax அடிப்படையில் செங்கல் தொழிலுக்கு வரி விதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, மக்களின் அத்தியாவசிய சமையலறை உணவுப் பொருளான சீரகம், சோம்பு, கடுகு, வெந்தயம் மற்றும் மிளகு போன்றவற்றிற்கு முழு வரி விலக்கு அளிக்க வேண்டும். பயறு, பருப்பு,

மாவு வகைகளை வணிகம் செய்பவர்களுக்கு ஓட்டல்களுக்கு அளிப்பதைப் போல கொள்முதல் வரி விலக்கு அளிக்க வேண்டும்.

*பிற்பகல் 12—10*

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த இந்தியாவில் on-line வர்த்தகம் மற்றும் யூகப் பேர வணிகத்தைத் தடை செய்ய வேண்டும். பதுக்கலை ஒழிப்பதற்குத் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ரிலையன்ஸ் போன்ற வர்த்தக நிலையங்கள் சில்லரை வணிகம் என்ற போர்வையில் காய்கறிகளைக் கொள்முதல் செய்து ஓரிசாவில் எத்தனால் எடுக்கப் பயன்படுத்துகிறார்கள் என்ற தகவல் சொல்லப்படுகிறது. (மணியடிக்கப்பெற்றது) அத்தகைய நடவடிக்கைகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருத்துறைப்பூண்டி தொகுதி, தலைக்காடு உயர்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைத்துத் தர கேட்டுக்கொள்கிறேன். சிவகங்கை மாவட்டம், பின்தங்கிய மாவட்டம் என்ற அடிப்படையில், சிவகங்கை மாவட்டத்திற்குக் கூடுதலாக விடுதிகள் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன். சிவகங்கை தொகுதியில் மாங்குடி, திருமாஞ்சோலை, சித்தலூர், அழகமாநகரி, புளியடித்தம்மம் போன்ற பகுதிகளில் புதிய விடுதிகளும், தாமரக்கி, இதயமேலூர் விடுதிகளுக்குப் புதிய கட்டடங்களும் அமைத்துத் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. வரதராஜன் அவர்கள். (குறுக்கீடு) 7 minutes உரையாற்றி முடித்துவிட்டார்.

**திரு. ரா. வரதராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கும் இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த மக்கள் தலைவர் வைகோ அவர்களுக்கும் நன்றி கூறி, பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நலன் கருதி பேசுகிறேன்.

'பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நலன்களைப் பாதுகாப்பதற்காகவே தனியாக ஒரு துறை 1969 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. மறைந்த என்.வி.என். நடராஜன் அவர்களின் பொறுப்பில் அந்தத் துறை இருந்தது. 1990 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் பின்தங்கிய வகுப்பில் 1,300 பிரிவுகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டது. அந்தக்



கணக்கு உயர்ந்து 2006 ஆம் ஆண்டில் 2,297 பிரிவுகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டது. 1990 ஆம் ஆண்டு மண்டல் கமிஷன் அளித்த பரிந்துரை ஏற்கப்பட்டு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு மத்திய அரசுப் பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் வழங்கப்பட்டது. அதற்கு முன்னரே தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்படும் முறை தொடர்ந்து நடைமுறையில் இருந்து வந்தது. இட ஒதுக்கீட்டின் மொத்த அளவு 50 சதவிகிதத்திற்கு மேல் போகக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் கூறியிருந்தாலும், இதனை 69 சதவிகிதமாக உயர்த்தி வழங்குவதற்குத் தனியாக ஒரு சட்டம் தமிழகச் சட்டமன்றத்தில் இயற்றப்பட்டது. பின்னர் அது இந்திய அரசமைப்புச் சட்டத்தில் 9 ஆவது அட்டவணையில் இடம் பெறுவதற்கும் வழிவகை செய்து நாடாளுமன்றத்தில் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதனைத் தொடர்ந்துதான் மத்திய அரசு உயர்க் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு வழங்குவதற்கு வகை செய்து சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டம் செல்லும் என்று அண்மையில் உச்ச நீதிமன்றமே தீர்ப்பு அளித்து இருக்கிறது. இவ்வாறு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்படுவதற்கான முயற்சியைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்கள்.

தமிழகத்தில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்த பிரமலைக் கள்ளர்களின் முன்னேற்றத்திற்காக தமிழக அரசால் கள்ளர் சீரமைப்பு வாரியம் உருவாக்கப்பட்டது. அதேபோன்று, பிற்படுத்தப்பட்ட பிரிவினரில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் கண்டறியப்பட்டு அவர்களுடைய முன்னேற்றத்திற்காக தனியாக ஒரு துறை தொடங்கப்பட்டது. வன்னியர் சமுதாயத்திற்குச் சொந்தமான அறக்கட்டளையின் பலன்கள் உரிய முறையில் உரியவர்களுக்குச் சென்று அடைவதற்கு வழிவகை காணும் பொருட்டு, தனி அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அரசாணை (நிலை) எண் 37, நாள் 14—3—2001 எனப்படும் அந்த ஆணையின்மூலமாக இந்திய ஆட்சிப் பணியாளராக இருந்த டி. சந்திரசேகரன் தனி அலுவலராக நியமிக்கப்பட்டார். அதற்கு முன்னால் 11—5—2000 அன்று தமிழக சட்டப் பேரவையில் ஆதி திராவிடர்கள், பட்டியல் இன வகுப்பினர்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட குற்றப் பரம்பரையைச் சார்ந்தவர்கள் தொடர்பான ஒரு வெள்ளை அறிக்கையும் இந்தப் பேரவையில் வைக்கப்பட்டது. (மணியடிக்கப்பெற்றது) கள்ளர் சீரமைப்பு வாரியம் அமைக்கப்பட்டது

போன்று கம்பளத்தார் சீரமைப்பு வாரியம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. பிரமலைக் கள்ளர்களைப் போன்றே குற்றப் பரம்பரைப் பட்டியலில் தொட்டிய நாயக்கர் பிரிவைச் சேர்ந்தவர்களும் வைக்கப்பட்டிருந்தார்கள். இப்போது Denotified Tribe என்பது மாற்றப்பட்டு Denotified Community என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இந்தப் பிரிவினரும் மிகவும் பின்தங்கியோர் பட்டியலுக்கு இணையாகத்தான் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12–15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ரா. வரதராஜன்:** எனவே, தொட்டிய நாயக்கர் என்ற பிரிவு அடங்கியுள்ள உட்பிரிவுகளையெல்லாம் சேர்த்து ஒரு சீரமைப்பு வாரியம் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாகவே வற்புறுத்தப்பட்டு வருகிறது. இதேபோன்று தொட்டிய நாயக்கர் பிரிவு அடங்கியுள்ள உட்பிரிவுகளில் ஒன்றாக 'கொள்ளவார்' என்னும் பிரிவு இருந்து வருகிறது. இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் 'எறகொள்ளவார்' என்று நாமக்கல்,.சேலம், ஈரோடு, கோவை போன்ற மாவட்டங்களில் அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள், தொட்டிய நாயக்கர் பிரிவிற்கு உட்பட்டவர்கள் ஆவார்கள். எனவே, இவர்களையும் மிகவும் பின்தங்கிய வகுப்பில் சேர்க்க வேண்டுமென்று எடுத்துரைக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ரா. வரதராஜன்:** அதனை தமிழக அரசின் பிற்படுத்தப்பட்டோர் ஆணையமும் ஏற்றுக்கொண்டது. அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. ஆயினும், நீண்ட காலமாகவே அந்தப் பரிந்துரை ஏற்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படாமலேயே இருந்து வருகிறது. எனவே, உடனடியாக அந்தப் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. ஜெயராமன். (குறுக்கீடு) இல்லை. எறகொள்ளநாயக்கரைச் சேர்த்தாயிற்று.





**திரு. எஸ்.பி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாயாகவும் தந்தையாகவும் இருந்து தமிழ்நாட்டு மக்களுக்கும், தமிழ் இனத்திற்காகவும் அல்லும் பகலும் ஓயாது உழைத்துக்கொண்டிருக்கும் மாண்புமிகு தலைவர் அவர்களை வணங்குகிறேன். உள்ளாட்சியை நல்லாட்சியாகச் செய்துகொண்டிருக்கும், தமிழக மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்றிருக்கும் தளபதி அவர்களை வணங்குகிறேன். சிறப்பு நிதிநிலை அறிக்கையைத் தந்த பேராசிரியர் அவர்களையும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும், மாவட்டத்தின் மக்களுக்காக உழைத்துக்கொண்டிருக்கும் உணவுத் துறை அமைச்சர் அவர்களையும் தொகுதி மக்களையும் வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு முதல்வர் முயற்சியின் காரணமாக மைய அரசின் உயர் கல்வி நிலையங்களில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 விழுக்காடு ஒதுக்கீடு வழங்கி மத்திய அரசு சட்டம் பிறப்பித்துள்ளது. மத்திய அரசு உயர் கல்வி நிலையங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீடு சட்டத்தினைத் தொடர்ந்து பாதுகாப்பதிலும் தனியார் துறை வேலைவாய்ப்புகளிலும் இட ஒதுக்கீடு பெறுவதற்கான அனைத்து முயற்சிகள் மேற்கொள்வதிலும் கலைஞர் அவர்களது அரசு உறுதியாக உள்ளது. 2006ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் உறுதியளித்தவாறு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள 30 விழுக்காடு ஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு 3.5 விழுக்காடு ஒதுக்கீடும் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கு 3.5 விழுக்காடு ஒதுக்கீடும் அளித்து சட்டப் பாதுகாப்பு வழங்கியதும் கலைஞர் அவர்களின் அரசுதான்.

படிப்பில் சிறந்து விளங்கும் மாணவ மாணவியர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசுப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ மாணவிகளைத் தேர்ந்தெடுத்து அவர்கள் விருப்பப்படி தமிழகத்தில் உள்ள தலைசிறந்த பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் சேர்ந்து பயில்வதற்கு நிதியுதவி அளிக்கும் திட்டம் 2007–2008 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

2007–2008ஆம் ஆண்டில் சீருடை தரத்தினை உயர்த்தியதன்மூலம் 9ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவியருக்குப்

பாவாடை, தாவணிகளுக்குப் பதிலாக 2 சுடிதார் வழங்கியதன்மூலமாக சீருடை வழங்கும் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையான ரூ.1.55 கோடிக்கும் கூடுதலாக ரூ.1.28 கோடி செலவிடப்பட்டு, மொத்தம் ரூ.2.83 கோடிக்கு சீருடைகள் வழங்கப்பட்டன. 2008—2009ஆம் ஆண்டு சீருடை வழங்கும் திட்டத்திற்கு ரூபாய் 284.32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்புவரை பயிலும் மாணவ, மாணவியருக்கு வரும் கல்வியாண்டிலிருந்து சிறப்புக் கட்டணம் இரத்து செய்யப்பட்டது மட்டுமல்லாமல், கல்வி உதவித் தொகை பெறுவதற்கான வருமான வரம்பு ரூ.50,000—இலிருந்து ரூ.1,00,000/— ஆக உயர்த்தியதன்மூலம் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார் நமது முதல்வர் கலைஞர் அவர்கள்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்கும்வகையில் மாநில அளவில் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2008—2009ஆம் ஆண்டு முதல் பரிசுகள் வழங்கும் திட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டு பரிசுத் தொகையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் பரிசு வழங்கப்பட்டு வந்தது. 12ஆம் வகுப்பைப் பொறுத்தவரையில் முதல் மதிப்பெண் பெறும் மாணவ, மாணவியருக்கு பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்திருந்தால் ரூ.3000/—ம் மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினருக்கு ரூ.5000/—ம் என அறிவித்திருப்பது மிகவும் மகிழ்ச்சி தருவதாகும்.

பிற்பகல் 12—20

2008—2009ஆம் ஆண்டு 10ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும், 1—வது, 2—வது மற்றும் 3—வது இடத்தைப்பெறும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மாணவர் ஒவ்வொருவருக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதல் பரிசு 4 பேருக்குத் தலா ரூ.3,000/— இரண்டாவது பரிசு 4 பேருக்குத் தலா ரூ.2,000— மூன்றாவது பரிசு 4 பேருக்குத் தலா ரூ.1,000/— வீதம் வழங்கிக் கல்வி பயில ஊக்கம் அளிக்கப்படுகிறது.





கிராமப்புறப் பெண்கள் கல்வி பெற ஊக்குவிப்பதற்காகவும், பெண் குழந்தைகள் ஆரம்பக் கல்வியை இடையில் கைவிடுவதைத் தவிர்ப்பதற்காகவும், மூன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவிகளுக்கு ரூ.500/— வீதமும், ஆறாம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கு ரூ.1,000/— வீதமும் ஊக்கத் தொகை வழங்கி, பெண்கள் கல்வியில் சம வாய்ப்பு பெற ஊக்கமளிக்கப்படுகிறது.

2008—2009 ஆம் கல்வியாண்டின் தொடக்கத்திலேயே, 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு இலவச சைக்கிள் வழங்குவதென அறிவிக்கப்பட்டது. இதை மாற்றி 9ஆம் வகுப்பிலேயே வழங்கினால், ஒவ்வொரு மாணவ, மாணவியர்களும் 4 ஆண்டுகள் பள்ளிக்குச் செல்லப் பயன்படுத்த வசதியாக இருக்கும் என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாணவ, மாணவியர்களுக்கான உணவுக் கட்டணம் ரூ.300/—லிருந்து ரூ.400/— ஆகவும், கல்லூரி மாணவ, மாணவியருக்கு மாதம் ரூ.400/—லிருந்து ரூ.500/— ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளதை மாற்றி, கூடுதலாக உயர்த்தப்பட்டு, பள்ளி மாணவ, மாணவியருக்கு ரூ.450/— ஆகவும், கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு ரூ.550/— ஆகவும் வழங்கப்பட்டுள்ளது என்பது வரவேற்கத்தக்கதும், மகிழ்ச்சிக்குரியதுமாகும்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர் சுயதொழில் செய்து மேம்பாடு அடைய இலவச சலவைப் பெட்டி, தையல் இயந்திரம் போன்றவற்றில் பல்வேறு வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு, சுயதொழில் தொடங்க குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படுகிறது. இப்பயிற்சிக்கானக் கட்டணம் முழுவதையும் அரசே ஏற்கிறது. 288 பெண்களுக்கு விமானப் பயிற்சி அளிப்பது உள்ளிட்ட 47 வகையான பயிற்சித் திட்டங்களில் சேர்க்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கடன் தொகைக்கான வட்டி 6 சதவிகிதத்திலிருந்து, 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது; இது வரவேற்கக்கூடியதாகும். 2001—2002ஆம் ஆண்டு முதல், 2005—2006 ஆம் ஆண்டு வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வீட்டுமனைப் பட்டா திட்டம், கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் மீண்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவ்வாறு வீட்டுமனைப் பட்டா பெறுபவர்கள் குடியேறும் வகையில், குடிநீர் வசதி, மின் வசதி, கழிவுநீர்க் கால்வாய் வசதி போன்ற

11-98—11a

[திரு. எஸ்.பி. ஜெயராமன்] [2008 ஏப்ரல் 29

அடிப்படை வசதிகள் அனைத்தும் அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகிறது.

18 வயது முதல் 60 வயது நிரம்பிய, நல வாரியத்தில் பதிவு செய்த ஒவ்வொரு உறுப்பினருக்கும் விபத்து ஈட்டுறுதித் திட்டம், கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை, முதியோர் உதவித் தொகை ஆகிய திட்டங்கள்மூலம் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம் அவர்கள் விலைவாசி உயர்வைப் பற்றிப் பேசினார்கள். விலைவாசி உயர்வு என்பது தமிழ்நாட்டில் மட்டுமல்ல; சிலபேர் தங்களது அவதாரப் புருஷராக வர்ணிக்கும் திரு. நரேந்திர மோடி ஆட்சி செய்கின்ற குஜராத் மாநிலத்திலேயும் இதே நிலைதான் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

எனது தொகுதி முன்னேற்றத்திற்காகப் பின்வரும் கோரிக்கைகளைத் தங்களின்முன் வைக்க விரும்புகிறேன். வந்தவாசி தொகுதி, மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதி. அங்கு அரசு பொறியியல் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று கோருகிறேன். வந்தவாசி நகரம் எப்பொழுதும் போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதியாக உள்ளது. கடை வீதி சாலை குறுகிய சாலை; செய்யாறு சர்க்கரை ஆலைக்குக் கரும்பு ஏற்றிக்கொண்டு அந்த வழியாக லாரிகள் செல்ல வேண்டும். திருவண்ணாமலை பௌர்ணமி நாளன்று செல்லும் வேன், பஸ்கள், மேல்மருவத்தூர் வரும் வேன், பஸ்கள் என தினமும் வாகனங்கள் வந்து செல்கின்றன. எனவே, வந்தவாசி நகருக்குப் புறவழிச் சாலை ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யக் கோருகிறேன்.

என் தொகுதியில், ஐந்தாயிரம் மக்கட் தொகைக்கு மேல் உள்ள நல்லூர் கிராமத்தில் அடிக்கடி கோஷ்டி மோதல் நிகழ்வதால், ஒரு புதிய காவல் நிலையம் அமைத்துத்தரக் கோருகிறேன்.

என் தொகுதியில் உள்ள கீழ்க்கொடுங்காலூரில் ஒரு ஊராட்சி ஒன்றிய மருத்துவமனை உள்ளது; சுற்று வட்டாரத்தில் 50 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்கு மருத்துவ வசதி கிடைக்க அரசு பொது மருத்துவமனை ஒன்று அமைத்துத் தரக் கோருகிறேன். (மணியடிக்கப்பெற்றது)



2008 ஏப்ரல் 29] [திரு. எஸ்.பி. ஜெயராமன்]

என் தொகுதி வழியாகத் திருத்தணி முதல் திண்டிவனம்—(வழி) அரக்கோணம், காஞ்சிபுரம், வந்தவாசி—வரை உள்ள சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற ஆவன செய்யக் கோருகிறேன். இச்சாலையில்தான் 'சிப்காட்' தொழிற்சாலை உள்ளது.

வந்தவாசியில் உள்ள நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சுற்றுலா மாளிகை 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. தற்போது அதன் ஒரு பகுதி இடிந்து விழுந்துள்ளது. எனவே, புதிய சுற்றுலா மாளிகை அமைத்துத்தர ஆவன செய்யக் கோருகிறேன்.

என் தொகுதியில் ஆக்கூர் அரசு மேல்நிலைப் பள்ளி உள்ளது. அங்கு ஒரு மாணவர் விடுதி கட்டித்தரக் கோருகிறேன்.

வந்தவாசி தொகுதியில், மேல்மாகூட்டு ரோட்டில் ஆளில்லா துணை மின் நிலையம் 33/11 KV அமைக்கத் தனியார் நிலம் வாங்கிப் பதிவு செய்து ஒரு வருட காலம் ஆகிறது. எனவே, இவ்வாண்டு அங்கே மின் நிலையம் தொடங்க ஆவன செய்யக் கோருகிறேன்.

என் தொகுதியைச் சார்ந்த ஆலத்தூர் கிராமத்தில் துணை ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கக் கோருகிறேன். அனக்காவூர் ஒன்றியத்தில் கூழமந்தல் கிராமத்தில் வாடகை வீட்டில் துணை விவசாயக் கிடங்கு உள்ளது. அதற்குச் சரியான பாதுகாப்பு இல்லை. எனவே, புதியதாகக் கட்டடம் கட்டித்தரக் கோருகிறேன். வந்தவாசி தொகுதியில் பொதுப் பணித் துறைமூலம் வெள்ளையர் காலத்தில், 1886ஆம் ஆண்டு கட்டப்பட்ட பயணியர் சுற்றுலா மாளிகை இடிந்துவிட்டது. எனவே, புதிதாக அந்தப் பயணியர் மாளிகையைக் கட்டித்தரக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதி, அனக்காவூர் ஒன்றியத்தில் உள்ள இளநீர்குன்றம் கிராமத்தைச் சுற்றிலும் மலைப் பகுதிகள் அதிகமாக உள்ளன. இளநீர்குன்றம் கிராமம், வடது ஆளப்பிறந்தான், நெடுங்கல், அத்தி, நர்மாபள்ளம், அனப்புத்தூர் ஆகிய கிராமங்களில், விவசாயிகள் தங்களின் உபத் தொழிலாக ஆடு, மாடுகள் மேய்த்து வருகின்றனர். ஆடு மாடுகளுக்கு நோய் ஏற்பட்டால் கால்நடை மருத்துவமனை அமைந்துள்ள செய்யாறுக்குச் செல்ல 30 கிலோ மீட்டர் போக வேண்டும். அந்தக் கிராமங்களில் சுமார் 20 ஆயிரம் கால்நடைகள் உள்ளன. எனவே, அரசு, இளநீர்குன்றம் கிராமத்திற்கு ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டுமென்று கோருகிறேன்.

[2008 ஏப்ரல் 29

பிற்பகல் 12—25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. எஸ்.பி. ஜெயராமன்:** இன்னும் ஒன்றே ஒன்றுதான். முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. எஸ்.பி. ஜெயராமன்:** மருதாடு, வழூர், உத்திரமேரூர் செல்லும் நெடுஞ்சாலையில், வழூர் தரைப்பாலத்தை மேம்பாலமாக உயர்த்தித் தர வேண்டும். மழைக்காலத்தில், போக்குவரத்து பாதிக்கப்படுவதால், இந்தத் தரைப்பாலத்தை மேம்பாலமாக மாற்றித் தந்தால், அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் பயன்படும் வகையில் இருக்கும். எனவே, பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தரைப்பாலத்தை மேம்பாலமாக மாற்றித் தரக் கோருகிறேன்.

வந்தவாசி தொகுதியில், அரசினர் மருத்துவமனையில் 76 படுக்கைகள் உள்ளன. தினமும் நோயாளிகள், பெண்கள் 300 பேர், ஆண்கள், குழந்தைகள் என 1,000 பேர் வருகின்றனர். ஒரு மாதத்தில், பிரசவத்திற்காக 100 முதல் 150 பேர் வருகின்றனர். விஷம் அருந்தியவர்கள், மாதம் 35 பேர் வருகின்றனர். மாதம் 200 பேர், மருத்துவச் சான்றுகள் பெற வருகின்றனர். மாதம் 10 பேர், விஷஜந்துகளால் பாதிக்கப்படுகின்றனர். மாதம் 50 பேர் சாலை விபத்துகளில் காயம் அடைந்து வருகின்றனர். இந்த மருத்துவமனையை நம்பி 300 கிராமங்கள் இருக்கின்றன. பெரணமல்லூர் தொகுதி, வந்தவாசி தொகுதி இரண்டுக்கும் ஒரே மருத்துவமனையாக இருப்பதால், இந்த மருத்துவமனைக்கு அதிக நோயாளிகள் வருகின்றார்கள். இந்திய மருத்துவக் கழகத்தின் பரிந்துரைப்படி சுமார் 50 புற நோயாளிகளுக்கு ஒரு மருத்துவர் என்ற அடிப்படையில் இம்மருத்துவமனைக்கு 16 மருத்துவர்கள் தேவைப்படுகிறார்கள். தற்போது அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர் எண்ணிக்கை 4 மட்டுமே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயராமன், உட்காருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதிக்கு, சிறப்புப் பொருளாதார மண்டலம் தந்து, தாழ்ந்து கிடக்கின்ற அந்த மக்களையெல்லாம் வாழவைத்த தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்லி, எங்களையும் மனிதனாக மாற்றி,



2008 ஏப்ரல் 29] [திரு. எச். வசந்தகுமார்]

கல்விக் கண் தந்த பெருந்தலைவர் காமராஜரின் தொண்டனாக இருந்து, அன்னை சோனியா காந்தியின் சீரிய தொண்டனாக இருக்கின்ற எனக்கும் வாய்ப்பு வழங்கி, இந்தச் சட்டமன்றத்தில் பேசுவதற்கு ஒரு நல்ல நிலையை ஏற்படுத்தித் தந்த காங்கிரஸ் கட்சிக்கும் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியத் திருநாட்டில் வரி விதிப்பினைச் செம்மைப்படுத்தி, வியாபாரிகள் மத்தியிலே பிரச்சினையில்லாமல், வியாபாரிகள் நிம்மதியாக வியாபாரம் செய்வதற்கு Value Added Tax என்று சொல்லுகின்ற அந்த வரி விதிப்பினை விதித்து, தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவிலே இருக்கின்ற வியாபாரிகள் அத்தனைபேரும் பெருமைப்படுகின்ற அளவிற்கு இதைச் செம்மைப்படுத்திய தமிழக அரசுக்கும், மத்திய அரசுக்கும் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே முக்கியமாக இரப்பர் பயிரிடுகின்ற அந்த விவசாயிகளுக்கு கேரளாவிலே 4 சதவீதமும், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 5 சதவீதமுமாக, அதாவது 4 சதவீதம் வரியும், ஒரு சதவீதம் உற்பத்தி வரியும் அங்கே விதிக்கப்படுகிறது. எனவே, ஒரு சதவீதம் வரி அதிகமாக இருப்பதால், வியாபாரிகள் கன்னியாகுமரி மாவட்டத்தை விட்டுவிட்டு கேரள மாநிலத்திற்குச் சென்று இரப்பர்களை வாங்குகின்றார்கள். அதைத் தமிழக முதல்வர் அவர்கள் சரி செய்து, வரியை 4 சதவீதமாக நீங்கள் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சீரகம், கடுகு, சோம்பு, வெந்தயம், மிளகு போன்றவற்றிற்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மரச் சாமான்களுக்கு - wooden furniture - களுக்கு 12.5 சதவீத வரி என்பதை 4 சதவீத வரியாகக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதோடு மட்டுமல்ல, வரி விதிப்பினால் இன்று தங்கத்திற்கு ஒரு சதவீதம்தான் வரி. ஆனால், தமிழக அரசுக்கு, தங்கம் விற்பனையின்மூலம் வருகிற வரி என்பது மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது. வரியைக் குறைத்துக் கொடுக்கிறீர்கள். அந்த வரியையும் நீங்கள் செம்மையாக வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதோடு மட்டுமல்ல, எங்கள் பகுதியில், நாங்குநேரி தொகுதியைப் பொறுத்தவரையிலே, மிகவும் பின்தங்கிய மக்கள் வாழ்ந்து

[திரு. எச். வசந்தகுமார்] [2008 ஏப்ரல் 29

கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய மருத்துவ வசதிக்கு, அங்கே நமது முன்னாள் அமைச்சர் அவர்கள் வள்ளியூரிலே ஒரு ஆஸ்பத்திரியைக் கட்டித் தந்தார்கள். ஆனால், அதற்கு டாக்டர்களும் சரியாக இல்லை. உபகரணங்களும் இல்லை. அதற்கு மேலாக, அங்கே எங்களைப் பொறுத்தவரையிலே, நாங்கள் தென் முனையிலே இருப்பதால், எங்களுக்குப் பலவகையான பிரச்சினைகள் இருக்கின்றன. நாடார் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் தென் புறத்திலே மட்டுமல்ல, தமிழகத்திலே அனைத்து இடங்களிலும் இருக்கின்றார்கள். ஒரு காலத்தில் பனையேறும் தொழிலை, தொழிலாகக் கொண்டவர்கள், சமுதாயத்திலேயிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள், நாடார் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பனையேறுகின்ற நேரத்தில் பதநீரை இறக்குகின்றார்கள். ஆனால், காவல் துறையினர், அவர்கள் கள் இறக்குவதாகக் கூறி, அடிக்கடி வழக்குகளைப் பதிவு செய்கின்றார்கள்.

அதோடு மட்டுமல்ல, அங்கே மணல்காட்டில் வாழ்கின்ற நாடார் சமுதாயத்தினரை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் சேர்த்தால்தான் அவர்கள் வாழ்வு உயரும். நீங்கள் கேட்கலாம் நாடார்கள் எல்லாம் வசதியாகத்தானே இருக்கிறீர்கள், என்னையும் சேர்த்துச் சொல்லுவீர்கள், அப்படியல்ல. 10 சதவீதம் பேர்தான் வாழ்க்கையில் உயர்ந்திருக்கின்றார்கள். இன்னும் 90 சதவிகிதம் பேர் வாழ்க்கையின் ஓரத்திலே குடிசையிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

*பிற்பகல் 12—30*

அதோடுமட்டுமல்ல, இங்கே குமரி மாவட்டத்திலே படிக்கின்ற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 23 ஆண்டுகளாக கல்வி உதவித் தொகை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இந்த ஆண்டு அந்தக் கல்வி உதவித் தொகை இல்லையென்று சொல்லுகின்றார்கள். இதனால் ஏறத்தாழ 3,000 மாணவர்களும் அந்தக் குடும்பங்களும் பாதிக்கப்படுகின்றார்கள். அதற்குமேலாக இப்பொழுது நமது வியாபாரப் பெருமக்களும், படிக்கின்ற மாணவர்களும் அங்கேயிருந்து ஒரு interview—க்கு வருவதற்காகவோ அல்லது தன் சொந்த வேலைக்கு வருவதற்காகவோ ஓட்டலிலே தங்குகின்றார்கள். அதற்கு ஐந்து நட்சத்திர ஓட்டலிலே இருக்கின்ற வரி விதிப்புபோல அவர்களுக்கும் delux வரி அதாவது luxury வரி போடுகிறார்கள்.



2008 ஏப்ரல் 29] [திரு. எச். வசந்தகுமார்]

எனவே, சாதாரண room—க்கும் சாதாரண A.C. room—க்கும் அந்த வரி விதிப்பிலிருந்து நீங்கள் விலக்கு அளிக்க வேண்டும்.

அதோடுமட்டுமல்ல, இன்று சமுதாயத்திலே மக்களெல்லாம் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், குறிப்பாக எங்களைப் பொறுத்தவரையிலே எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, அது அரசு அதிகாரிகள் கேட்கின்றதைத் தருகின்றார்கள். எங்கள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் ஏராளமான மனுக்களைக் கொடுத்திருக்கின்றேன். எனக்கு, எங்கள் மக்களுக்குப் போக்குவரத்து வசதியை ஏற்பாடு செய்து தாருங்கள், கிராமங்களிலே இருக்கின்ற குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்குப் போவதற்கு நீங்கள் வசதி செய்து தாருங்கள் என்று கேட்கின்றோம். அதை உடனடியாக நீங்கள் செய்து தர வேண்டும். காரணம் என்னவென்று சொன்னால் படிப்புதான் அடிப்படை. கல்வி இருந்தால்தான் வாழ்க்கையிலே முன்னேற முடியும். அதற்கு கிராமத்திலே இருக்கின்ற குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்குச் செல்வதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். நமது நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் வந்தார்கள், நீங்கள் எனக்குப் பாலம் கட்டிக் கொடுங்கள் என்று சொன்னேன். நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் வந்தார்கள், எனக்குப் பாலம் கட்டிக் கொடுங்கள் என்று சொன்னேன். இரண்டு ஆண்டுகளில் இதுவரையிலும் அரசாங்கத்தால் எங்கள் தொகுதியில் ஒரு பாலம் கூட கட்டிக்கொடுக்கவில்லை என்பதை நான் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

அதேபோல, எங்கள் நாங்குநேரி தொகுதியில் Bus Shelter, நமது நேரு பெருமான் சொன்னார்கள், எங்கள் நேரு அமைச்சர் சொன்னார்கள், உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் நிதி வாங்கி அதை நான் செய்துத் தருவேன் என்று சொன்னார்கள். இதுவரையிலும் அங்கு வேலை நடக்கவில்லை, ஆரம்பிக்கவில்லை. எனவே, அதையும் நீங்கள் செய்துதர வேண்டும்.

இதற்கு மேலாக இந்தச் சமுதாயத்திலே வாழ்ந்துகொண்டிருக்கிற மக்களுக்கெல்லாம் கலைஞர் அவர்கள் நல்ல உதவியினை செய்து கொண்டிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள், மிகவும் தாழ்த்தப்பட்ட மக்கள், சமுதாயத்திலே பின்தங்கி இருக்கின்ற மக்கள் எல்லாம் அங்கே குடிசையிலே போய் வாழ்கிறார்கள். அரசு கட்டிக் கொடுத்த கட்டடங்கள் இடிந்துவிழுகின்றன. அரசாங்கம் 12,000 ரூபாய் கொடுக்கிறது. அந்த 12,000 ரூபாயை வைத்துக் கொண்டு இவர்கள்

[திரு. எச். வசந்தகுமார்] [2008 ஏப்ரல் 29

கட்டடத்தைக் கட்டி அல்லது சரிசெய்து அதன் பிறகு பணத்தை வாங்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். அப்படியென்று சொன்னால் ஏழைகள் அந்த வீட்டைச் சரிசெய்ய முடியவில்லை. எனவே, நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், அதை அரசாங்கமே சரி செய்து கொடுக்க ஏற்பாடு செய்து, அந்த வீட்டை சரிசெய்து கொடுக்க வேண்டும்.

எங்களைப் பொறுத்தவரையிலே, எங்கள் நாங்குநேரி தொகுதியிலே scheduled caste மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நான் அடிக்கடி ஏன் இதை எடுத்துச் சொல்கிறேன் என்று சொன்னால், அரசு கட்டிய கட்டடத்திலே வாழ்கிறார்கள்; அங்கே போகின்ற பாதையைத் தடுக்கின்றார்கள்; அங்கே மின்சாரம் செல்லவில்லை; அங்கே இருக்கின்ற பஞ்சாயத்துத் தலைவர்கள் சாதி அடிப்படையை மனதில் வைத்துக்கொண்டு அந்தத் தாழ்ந்த மக்களுக்கு அந்த scheduled caste மக்களுக்கு குடிக்கக்கூட தண்ணீர் கொடுக்கமாட்டேன் என்று சொல்லுகிறார்கள். நாங்குநேரியிலே டவுன் பஞ்சாயத்திலே சலவைத் தொழிலாளர்கள் வாழ்கிறார்கள். சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்த சலவைத் தொழிலாளிக்கு குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. அதிகாரிகளிடம் சொல்லியாகிவிட்டது. நமது அமைச்சர் அவர்கள் வந்த நேரத்திலேகூட எடுத்துச்சொன்னேன். இதுவரையிலும் செய்யவில்லை. கேட்டால் எங்களிடம் பணம் இல்லை என்று சொல்லுகின்றார்கள். சலவைத் தொழிலாளர்கள் தாழ்ந்த நிலையிலே இருக்கின்றார்கள். நம்மையெல்லாம் இந்தச் சமுதாயத்திலே வெள்ளையாக இருப்பதற்காக சலவைத் தொழிலாளி வேலை செய்கிறான். ஆனால், அவனுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. அங்கே குளிப்பதற்குத் தண்ணீர் இல்லை. இதை நான் பலமுறை சொல்லியாகிவிட்டது. அங்கேயிருக்கின்ற நாங்குநேரி டவுன் பஞ்சாயத்து, இதற்கான பணிகளைச் செய்யவேயில்லை. எனவே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், அதற்கு ஒரு தீர்வு காண வேண்டும்.

*பிற்பகல் 12–35*

அதைப்போல, வள்ளியூர் பேரூராட்சி. அங்கே ஏறக்குறைய 2 கோடி ரூபாய்க்கு மேலே நிதியிருக்கிறது. ஆனால், அங்கே வருகின்ற E.O.-கள், அங்கேயிருக்கின்ற அதிகாரிகள் கூட்டணி அமைத்துக்கொண்டு, நிர்வாகத்தைத் தடுக்கிறார்கள். அதன் காரணத்தினால், வள்ளியூரிலே இருக்கிற 2½ கோடி ரூபாய் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. எனவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், இதைக் கவனத்தில்கொண்டு, அந்தப்



2008 ஏப்ரல் 29] [திரு. எச். வசந்தகுமார்]

பணத்தை மக்களுக்காகச் செலவிட வேண்டும். மக்களிடமிருந்து வரிவசூல்மூலம் பெறப்பட்ட பணம் அங்கே இருக்கிறது. ஆனால், அரசியல் பிரச்சினை, சமுதாயப் பிரச்சினை. அங்கேயிருக்கிறவர்கள், நீ பெரியவனா, நான் பெரியவனா என்று சொல்லி, அந்தப் பணத்தை முடக்கி வைத்திருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், அதற்குத் தனிக் கவனம் செலுத்த வேண்டும். அப்படிச் செய்தால்தான், வள்ளியூர் மக்கள், சுற்றுவட்டாரத்திலேயிருக்கின்ற மக்கள் பயனடைவார்கள்.

அதைப்போல, நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. நேரு அவர்களிடம், களக்காடு–திருநெல்வேலி, திருநெல்வேலி–களக்காடு, களக்காடு–ஸ்ரீவைகுண்டம், களக்காடு–தூத்துக்குடி ஆகிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க வேண்டும் என்று ஏற்கெனவே நான் சொல்லியிருக்கின்றேன். நீங்கள் அரசாங்கத்தின்மூலம் சொகுசுப் பேருந்துகளைத் தருவோம் என்று சொன்னீர்கள். ஆனால், இதுவரையில் எங்களுக்குத் தரவில்லை. நீங்கள் எங்களுக்கு சொகுசுப் பேருந்துகளைத் தர வேண்டும். அப்படியென்றால், நானும் ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். வசந்தகுமார், இங்கே கவனியுங்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடியப் போகிறது. நீங்கள் இப்படியே பேசிக்கொண்டேயிருந்தால் என்ன அர்த்தம்? ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** இவன் திருமதி சோனியா காந்தி அவர்களின் தொண்டன், காமராஜ் அவர்களின் தொண்டன், இவன் சாதிப்பான் என்று சொன்னால், நீங்கள் பேருந்தை விட வேண்டும். நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் பாலம் கட்டித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடம், வள்ளியூரிலே, விஜயநாராயண குளத்தையும், நாங்குநேரி குளத்தையும் மினி அணைகளாகக் கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். காரணம், 70,000 பேருக்கு வேலைவாய்ப்பினைத் தருகின்ற சிறப்புப் பொருளாதார மண்டலத்தைத் தந்திருக்கின்றீர்கள். ஆனால், குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டும். குடிப்பதற்குத் தண்ணீர் இருந்தால்தான் அங்கே வேலை செய்ய முடியும். கடப்பதற்குப் பாலம் இருந்தால்தான் மக்கள் வர முடியும். எங்கள் தொகுதி, மிகவும் பின்தங்கிய தொகுதி. எனவே, தயவுசெய்து எங்கள் தொகுதிக்குத் தமிழக அரசு நிச்சயமாகச் செய்ய வேண்டும். சுதந்திரமடைந்து 60 ஆண்டுகளாகிவிட்டன. ஆனால், மக்கள் செல்வதற்குப் பேருந்துகள்

இல்லை. கடப்பதற்குப் பாலம் இல்லை. அப்படியிருந்தால், மக்கள் நம்மைத் தூற்றுவார்கள். கூட்டணி ஆட்சியிலேயிருக்கின்ற நமக்கு, நல்ல பெயர் பெறுவதற்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வசந்தகுமார், சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** எனவே, பேருந்துகளை இயக்கி, பாலங்களைக் கட்டிக் கொடுத்து, குளங்களைச் சீரமைத்துத் தந்தால், மிகவும் நன்றியுடையவனாக இருப்பேன். எனக்குப் பேச வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி. இருந்தாலும், நமது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லிவிட்டீர்கள் அல்லவா, உட்காருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. துரைராஜ். (குறுக்கீடு) திரு. எச். வசந்தகுமார், என்ன? சொல்லுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** சாதாரண மக்கள் தயாரித்து விற்கின்ற ஊறுகாய்க்கு வரிவிலக்கு அளிக்க வேண்டும். காப்பி அரைத்து விற்கின்ற சின்ன வியாபாரிகளுக்கும் branded என்ற வகையில், 12½ சதவிகிதம் வரி விதிக்கப்பட்டுள்ளது. அதை 4 சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்ல, நாடார் சமுதாயத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவிற்கு மாற்ற வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. துரைராஜ்.

***திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டின் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்த எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கல்வி மற்றும் பொருளாதார மேம்பாடுகளில் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபின மக்கள் மிகவும் வறிய நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களின் பொருளாதார, கல்வி, வேலைவாய்ப்பு நிலையினை மேம்படுத்துவதற்கு அரசு பல்வேறுவிதமான துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று



கேட்டுக்கொள்கிறேன். இப்பிரிவு மக்களுக்கு முக்கியமானது கல்வி மேம்பாடாகும். கல்வியைப் பொறுத்தவரையில், விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களின் உணவிற்காக வழங்கப்படும் அரசின் மாதாந்திர உதவித் தொகை குறைவாக உள்ளது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதாவது, கல்லூரி விடுதி மாணவர்களின் மாதாந்திர உணவுத் தொகை ரூ.550/– ஆகவும், பள்ளி விடுதி மாணவர்களின் மாதாந்திர உணவுத் தொகை ரூ.450/– ஆகவும் வழங்கப்படுமென மானியக் கோரிக்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தற்பொழுதுள்ள விலைவாசியில், இந்தத் தொகையில் மாணவர்களுக்குத் தரமான உணவு வழங்க இயலுமா என்பதை தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

பிற்பகல் 12–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்மூலம் 973 விடுதிக் கட்டடங்கள் இயங்கி வந்தன. அதிலே, சுமார் 720 கட்டடங்கள் ஐந்தாண்டு காலத்திலே அரசாங்கத்தினுடைய சொந்தக் கட்டடங்களாகப் புதிதாகக் கட்டப்பட்டன என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். பல்வேறு இடங்களிலே இன்னும் வாடகைக் கட்டடங்களிலே விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. தற்போதுள்ள வாடகைக் கட்டடங்களுக்கு விரைவிலே அரசாங்கத்தின்மூலம் நல்ல கட்டட வசதிகளை உருவாக்கித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும், இப்பிரிவு மாணவ மாணவிகள் தங்கிப் படிக்கும் விடுதிகளில் அடிப்படை வசதிகள்கூட முறையாக இல்லை என்பதை இந்த நேரத்திலே அரசின் கவனத்திற்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வாரம் சென்னை மாநகர், வடபழனிப் பகுதியில் மாணவர்கள் சாலை மறியல், Police தடியடி என்று பத்திரிகையிலே ஒரு செய்தி வந்தது. காரணம், அந்த விடுதியிலே சரியான குடிநீர் வசதி, அடிப்படை வசதி இல்லையென்று மாணவர்கள் போராட்டம் நடத்துகின்ற அளவிற்கு ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. தமிழகத்தினுடைய தலைநகரில் உள்ள ஒரு விடுதியில் அடிப்படை வசதி இப்படியென்று சொன்னால்,

[திரு. சி. துரைராஜ்] [2008 ஏப்ரல் 29

கிராமப்புறங்களிலுள்ள விடுதிகளின் நிலை எந்த அளவிற்கு மோசமாக இருக்கும் என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மாணவ மாணவிகளுடைய விடுதிகளுக்குக் கட்டடம் கட்டும்போது எதிர்காலத் தேவைகளையும் கணக்கில் கொண்டு திட்டம் தீட்டுமாறு கேட்டுக்கொள்கின்றேன். உதாரணமாக, இந்த ஆண்டு 50 மாணவர்கள் தங்கிப் படிப்பதற்குப் புதிதாகக் கட்டடம் கட்டுவதாக இருந்தால், எதிர்காலத்திலே 10 ஆண்டுகாலம், 15 ஆண்டுகாலத்திற்குப் பின்பு அந்தக் கட்டடத்திலே 100 மாணவர்கள் தங்குகின்ற வகையிலே எதிர்காலத் தேவையைக் கருத்திலே கொண்டு கட்டடம் கட்டப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே மாணவ மாணவிகளிடையே பள்ளிக்குச் செல்லும் ஆர்வத்தைத் தூண்டுகின்ற வகையிலே இலவசமாக சைக்கிள் வழங்குகின்ற ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தில் 2005–2006 ஆம் ஆண்டு மட்டும், சுமார் 4,84,000 சைக்கிள்கள் அறிவிக்கப்பட்ட 100 நாட்களில் வழங்கப்பட்ட பெருமை உண்டு. அதே நேரத்தில் உங்களுடைய ஆட்சி வந்த பின்பும் அந்தத் திட்டத்தை நீங்கள் தொடர்ந்து செயல்படுத்துகிறீர்கள், வரவேற்கிறோம். ஆனால், நிறத்தை மாற்றி, தரத்தைக் குறைத்து விட்டீர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த சைக்கிளினுடைய உழைப்பும் குறைவாக இருக்கிறது, தரமும் குறைவாக இருக்கிறது, எடையும் குறைவாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் என்ன சிஸ்டத்திலே அவர்கள் tender quote பண்ணினார்களோ அதே சிஸ்டத்தைத்தான் இன்றுவரைக்கும் நாங்கள் follow பண்ணுகிறோம். எடை குறைவாக இருக்கிறதென்று கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே சொன்னபடியால், இந்த ஆண்டு நாங்கள் அதைச் சரிபார்க்கச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறோம். அவர்களுடைய ஆட்சியிலே என்ன நடைமுறைகள் இருந்ததோ, அதையேதான் இன்றுவரைக்கும் நாங்கள் கடைப்பிடித்து வருகிறோம்.



2008 ஏப்ரல் 29]

**திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைக்கிள் வழங்குகின்ற முறை ஒரேமாதிரிதான் இருக்கிறது. அந்த சைக்கிளினுடைய தரமும் குறைந்திருக்கிறது, எடையும் குறைந்திருக்கிறது, உழைப்பும் குறைவாக இருக்கிறது. நிறத்தை மாற்றியிருக்கிறீர்கள், தரத்தைக் குறைத்திருக்கிறீர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையில் நமது மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கீழே மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் என்று ஒருவர் பணியில் இருக்கிறார். ஆனால், அவருக்குக் கீழே இணையாக, துணையாக, உதவியாக எந்தவொரு அலுவலரும் இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்தத் துறையின்மூலம் செயல்படுத்தப்பட வேண்டிய பணிகள் காலதாமதம் ஏற்பட்டு உரிய பலன், உரிய நபர்களுக்கு, உரிய நேரத்தில் சென்றடையவில்லை என்பது என்னுடைய கருத்து என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 69 சதவிகித இடஒதுக்கீடு செய்து, இம்மாமன்றத்தில் சட்டம் இயற்றி, மத்திய அரசின் 9ஆவது அட்டவணையில் சேர்க்க வேண்டுமெனக் கூறியவர் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய அரசில் தொடர்ந்து அங்கம் வகிக்கும் தி.மு.க. அரசு, அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தி, அந்த இடஒதுக்கீட்டிற்கு தகுந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். ஏனென்றால், நீங்கள் 9 ஆண்டு காலம் மத்திய அரசிலே தொடர்ந்து இருக்கிறீர்கள். அந்த இடஒதுக்கீடு பிரச்சினைக்கு, சட்டத்தைத் திருத்துவதற்கு ஏன் நீங்கள் வலியுறுத்தவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய மூன்று மாவட்டங்களில், கள்ளர் சீரமைப்புத் துறை என்ற ஒரு துறை இருக்கிறது. அந்தத் துறை 1920 ஆம் ஆண்டு

[திரு. சி. துரைராஜ்] [2008 ஏப்ரல் 29

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மதுரை மாவட்டம், சேடப்பட்டி தொகுதியிலுள்ள பெருங்காமநல்லூர் என்ற கிராமத்தில் வசித்த பிரமலைக் கள்ளர் இன மக்கள் கைரேகைச் சட்டம் என்ற கடுமையான சட்டத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்தினார்கள். அதனால், கடும் சினங்கொண்ட ஆங்கிலேய காவல் துறை, பிரமலைக் கள்ளர் இனத்தைச் சேர்ந்த ஒரு பெண் உள்பட 17 பேரைச் சுட்டுக்கொன்றனர். இதுகுறித்து நடந்த நீதி விசாரணைக் குழுவின் தீர்ப்பின் அடிப்படையில், இப்பிரமலைக் கள்ளர் இன மக்களின் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார முன்னேற்றத்திற்காக தொடங்கப்பட்டதுதான் கள்ளர் சீரமைப்புத் துறையாகும். இந்தத் துறைமூலம் சுமார் 260 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. அதாவது, மேல்நிலைப் பள்ளிகள் 19, உயர்நிலைப் பள்ளிகள் 23, நடுநிலைப் பள்ளிகள் 31, தொடக்கப் பள்ளிகள் 187 என்று ஆக மொத்தம் 260 பள்ளிகள். இந்தக் கள்ளர் சீரமைப்புத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் மேல்நிலைப் பள்ளிகளுக்குப் போதுமான ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவில்லை. சில உயர்நிலைப் பள்ளிகளில் ஓராண்டிற்கு மேலாகவே தலைமை ஆசிரியர்கள் பணி நியமனம் செய்யப்படவில்லையென்பது மிக வருந்தத்தக்கச் செயலாகும்.

அதேபோல, நடுநிலை, தொடக்கப் பள்ளிகளில், ஆசிரியர்கள் நியமனம் போதுமானதாக இல்லை. மேலும் இத்துறையின்கீழ் 53 மாணவ மாணவியர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த விடுதிகளில் அடிப்படை வசதிகள் மிகக் குறைவாக உள்ளன. சில விடுதிகள் சொந்தக் கட்டடங்கள் இல்லாமல், அடிப்படை வசதிகளும் குறைவாக, தனியாருடைய இடத்தில் வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளர் சீரமைப்புத் துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு இலவச சீருடை என்பது, கல்வி ஆண்டு முடிந்துவிட்ட இந்நிலையில்கூட இன்னும் வழங்கப்படவில்லை. கல்வியாண்டு முடிகிற இந்தக் காலக்கட்டத்தில்கூட, அந்தப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கப்படவில்லையென்பது மிக வருந்தத்தக்கது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் வழங்கப்படும் கிராமப்புற மாணவர்களுக்கான கல்வி ஊக்கத் தொகை, கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு காலம் கடந்தும் அரசு நிர்ணயித்த தொகையைவிட குறைவாக வழங்கப்படுகிறது என்பது மிக வருந்தத்தக்க ஒரு செய்தியாகும்.



2008 ஏப்ரல் 29] [திரு. சி. துரைராஜ்]

பிரமலைக் கள்ளர் இனம், சீர்மரபினர் Denotified Community என்ற பிரிவின்கீழ் உள்ளது. ஆனால், இந்த இனத்தினர் குற்றப் பரம்பரையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள். அதாவது Denotified Tribes என்று அழைக்கப்பட்டு வந்தனர். Denotified Tribes என்ற பிரிவில் இருந்தால் மத்திய அரசின் சலுகையைப் பெற முடியும். ஆனால் Denotified Community என்றால், மத்திய அரசின் சலுகைகள் மறுக்கப்படுகின்றன. எனவே, சமுதாயத்தில் பொருளாதார ரீதியாகவும், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு ரீதியாகவும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள பிரமலைக் கள்ளர் இனத்தினரை Denotified Tribes என்ற பிரிவின்கீழ் கொண்டுவந்து இந்தச் சமுதாய மக்கள் இழந்து கொண்டிருக்கும் சலுகைகளை மீண்டும் பெற்றிட உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கேட்டுக்கொள்வது, என்னுடைய பகுதியிலே எழுமலை என்ற ஊரிலே, பெண்கள் விடுதி ஒன்றினை புதியதாகத் தொடங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைராஜ், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளர் சீரமைப்புத் துறையின்கீழ் செயல்பட்டு வரும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும்போது, பிரமலைக் கள்ளர் இனத்தினைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், கள்ளர் உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் நியமனங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலமாக தேர்வு செய்யப்பட்டு பணி நியமனம் செய்யப்படுகிறார்கள். இதில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் ...

பிற்பகல் 12-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். உரையை முடியுங்கள். (குறுக்கீடு) போதும், போதும். நிறைய நேரம் கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடு) ஒதுக்கப்பட்டது 10 நிமிடங்கள், பேசியது 12 நிமிடங்கள்.

**திரு. சி. துரைராஜ்:** 13 நிமிடங்கள் என்று சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள், பேசுங்கள்.

**திரு. சி. துரைராஜ்:** தேர்வு பெற்று, நியமிக்கப்படுவதால் அவர்களில் பலர், அலகு விட்டு அலகு மாறுதல்மூலம் பள்ளிக் கல்வித் துறைக்குச் சென்று விடுகிறார்கள். இதனால் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலே கள்ளர் சீரமைப்புத் துறையின்மூலமாகவே தேர்வு செய்து பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் பிறந்து வாழ்ந்து, பிழைப்பிற்காக இன்று தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலே பிரமலைக் கள்ளர் இனத்தைச் சார்ந்த மக்கள் வாழ்கிறார்கள். இவர்களுடைய குழந்தைகளுக்கு பிற்படுத்தப்பட்டோர் என ஜாதிச் சான்றிதழ் வழங்குவதை, பிரமலைக் கள்ளர் (சீர்மரபினர்) என வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள், ஒரு வார்த்தையைச் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) சரி, உட்காருங்கள். மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய நாள் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய பிறந்த நாள். 'எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு' (மேசையைத் தட்டும் ஒலி) என்ற அந்த உணர்ச்சி முழக்கத்தைச் சொல்லி, இசைமுரசு நாகூர் அனீபா அவர்களுடைய ஒரு பாடல் வரிகள் சொல்லும்,

'நீ கொடுத்ததற்கே நன்றி சொல்ல முடியவில்லை இன்னும்,
நீ கொடுத்ததற்கே நன்றி சொல்ல முடியவில்லை இன்னும்,

இனி அடுத்தடுத்துக் கேட்பதற்கு அஞ்சுதே என் உள்ளம் என்று சொல்லும்.'

இந்த வார்த்தைகள் இன்றைக்கு வணிக வரி மானியக் கோரிக்கையிலே இன்றைய தமிழக வணிகர்கள் நம்முடைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களைப் பார்த்துச் சொல்லக்கூடிய வரிகள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பது உண்மையான வரிகளாகும். நம்முடைய மகாகவி





பாரதி, தாயுமானவரிடத்திலே மிகுந்த ஈடுபாடு கொண்டவர். தாயுமானவருடைய தமிழ் உணர்வும், சைவப் பற்றும் பாரதியை வெகுவாகக் கவர்ந்திருந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்ணுக்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டி, நம்முடைய நெஞ்சத்திலே இன்றைக்கும் வாழ்கிறார்கள் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய ஒப்பற்றத் தலைவர் கலைஞர் அவர்கள் இன்றைக்குத் தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்தைப் பெற்றுத் தந்து (மேசையைத் தட்டும் ஒலி) என்றைக்கும் நாம் செம்மாந்து வாழ்வதற்கு வழிவகை செய்திருக்கிறார்கள். பாரதி, தாயுமானவரைப் பற்றிச் சொல்கிற அந்த வரிகள் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுக்கும் அப்படியே பொருந்தும் என்று நான் கருதுகிறேன்; அதை இங்கே உணர்த்துகிறேன்.

'என்றும் இருக்க உளங்கொண்டாய்
இன்பத் தமிழுக் கிலக்கியமாய்
இன்றும் இருத்தல் செய்கின்றாய்
இறவாய் தமிழோ டிருப்பாய் நீ
ஒன்று பொருளஃ தின்பமென
உணர்ந்தாய் தாயு மானவனே'

என்பான் பாரதி. தலைவர் கலைஞர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) 'நின்ற பரத்து மட்டுமோ நில்லா இகத்தும் நிற்கும் உன்புகழே' என்று தலைவரைப் பணிந்து வணங்குகிறேன்.

மாணிக்கவாசகப் பெருமான் தன் தலைவனாம் இறைவனை நெக்குருக உருகிப் பாடுவார்.

'கையால் தொழுதுன் கழற்கே
வடிகள் கழுமத் தழுவிக்கொண்டு
எய்யா தென்றன் தலைமேல்
வைத்தென் பெருமான் பெருமானென்று
ஐயா என்றன் வாயால்
அரற்றி அழல்சேர் மெழுகொப்ப
ஐயாற் றரசே ஆசைப்
பட்டேன் கண்டாய் அம்மானே'

[திரு. சி.நா.மீ. உபயதுல்லா] [2008 ஏப்ரல் 29

என்பான். அதே வார்த்தைகளால் என்னுடைய தலைவனை இங்கு நான் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன், வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–55*

தமிழ்த் தென்றல் என்று திரு.வி.க. அவர்கள் அழைக்கப்பட்டார்கள். அவர்களுக்குப் பின்னாலே நம்முடைய இனமானப் பேராசிரியர் அவர்கள்தான் தமிழ்த் தென்றல் என்று அழைக்கப்படுகிறார்கள். அந்தப் பேராசிரியரை வணங்குகின்றேன். நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுக்கு இவர் நிழல். அதனாலேயே இவர் விமர்சிக்கப்படுவது ஏராளம். ஆனால், அவற்றையெல்லாம் தூசி எனத் தட்டிவிட்டு, எங்கள் எல்லோருக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் நிழலாக இருக்கின்ற நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களையும், எங்கள் மாவட்டச் செயலாளர் அண்ணன் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களையும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன். பாவேந்தன் சொல்வான்,

"கிளம்பிற்று காண் தமிழ்ச் சிங்கக் கூட்டம்
`கிழித்தெறியத் தேடுதுபார் பகைக் கூட்டத்தை"

என்பார். அப்படிப்பட்ட ஒரு படையை நெல்லைச் சீமையிலே நடத்திக் காட்டிய (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய போற்றுதலுக்குரிய தளபதி அவர்கள், இங்கே ஏப்ரல் 16 ஆம் தேதி, 1 மணி 44 நிமிடங்கள் பேசினார்கள். கொட்டும் குற்றால அருவியின் சீதளமாய் அவர்களுடைய பேச்சு, தொடக்கம் முதல் நிறைவு வரையிலே ஒரே சீராக, சிறப்பாக இருந்தது. அவர்கள் இங்கே பேசத் தொடங்கியபோது, பல முகங்களிலே வினாக்குறிகள் இருந்தன. அவர்கள் பேசி நிறைவு செய்தபோது, அவை வியப்புக்குறிகளாக ஆகிவிட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) எந்தப் பொறுப்பையும் ஏற்று நடத்தும் எல்லாத் திறனும் உண்டு என்பதை இங்கே அவர்கள் தன்னுடைய பேச்சிலே உணர்த்தியிருக்கின்றார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் "தம்பி, வாழ்க என்ற சொல் இருக்கின்றதே, அதிலே இசை ஒலி இருக்கின்றது. அதோடு இதயக் குழைவும் இருக்கின்றது" என்று சொல்வார்கள். அந்த வகையிலே நம்முடைய தளபதி அவர்களை வாழ்க என வாழ்த்தி, மானியக் கோரிக்கைக்கு வருகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மதிப்புக் கூட்டு வரி அமலாக்கம் 1–1–2007 முதல் மிகச் சிறப்பாக, தமிழகத்திலுள்ள வணிகர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய



2008 ஏப்ரல் 29] [திரு. சி.நா.மீ. உபயதுல்லா]

வகையிலே, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டது. நண்பர்களே, 2006–2007–ல் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அவர்கள் வணிகர்களுக்கு அளித்த சலுகைகளைப் பற்றியெல்லாம் நிச்சயமாக நமக்கு நன்றாகத் தெரியும். பட்டியலிட்டால் அவை பெருகும். அதேபோல மதிப்புக் கூட்டு வரி அமலாக்கப்பட்ட பிறகும்கூட, அதேநிலையில், 2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அன்றைக்கு 30 பொருட்களுக்கு வரிவிலக்கு, 31 பொருட்களுக்கு 12–1/2 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக வரி குறைப்பு என்கின்ற வகையிலே இங்கே V.A.T. அமலாக்கம் என்பது மிகச் சீரிய முறையிலே நடைமுறைப்படுத்தப்பட்டது என்பது நமக்குத் தெரியும். நான் முன்பு பேசும்போது அதற்கான புள்ளிவிவரங்களைத் தந்திருக்கின்றேன். V.A.T. 2006–2007–லேயும் சரி, அப்போது வளர்ச்சி 19.3 சதவீதம் என்கின்ற அளவிலே இருந்திருக்கின்றது. இப்போது 2007–2008–லே 17.5 என்கின்ற அளவிலே வளர்ச்சியைக் காட்டியிருக்கின்றோம் என்பதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றேன். இவ்வளவு வரிச் சலுகைகளுக்குப் பின்னாலேயும் வருவாயை ஈட்ட முடிந்திருக்கின்றது. இதற்கு இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள எளிமையான நடைமுறைதான் காரணம் என்பதை நான் இங்கே உங்கள் முன்பு சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். V.A.T. அமலாக்கத்திற்குப் பிறகு, அதற்கு வேண்டிய கணினி வாங்குவதற்காக கடந்த ஆண்டு 19 கோடி ரூபாய் மொத்தமாக இந்தத் துறைக்கு வழங்கப்பட்டது. அதிலே சோதனைச் சாவடிகளுக்குக் கணினி வாங்குதல், அதேபோல, அலுவலகங்களுக்குக் கணினி, இன்னும் பிற மேம்பாட்டுப் பணிகளுக்கு என்று அவை ஒதுக்கப்பட்டிருப்பதோடு, மத்திய அரசு, உலக வங்கியின் உதவியோடு e-Bharat என்ற திட்டத்திற்காக 40 கோடி ரூபாயை நமக்கு வழங்கிடவிருக்கின்றது. அதற்காகவும், அந்த 19 கோடி ரூபாயிலே, 10 கோடி ரூபாய் ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. ஏனென்றால், மாநில அரசின் பங்காக அதிலே 10 கோடி ரூபாய் இருக்க வேண்டும் என்பது விதி. அந்த வகையிலே, 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இங்கே பேசுகின்றபோது, நம்முடைய திரு. ஜாண் ஜேக்கப் அவர்கள், மிட்டாய்களுக்கு வரி விலக்கு வேண்டுமென்று கேட்டார்கள். ஏற்கெனவே, 5 இலட்சம் ரூபாய் வரை, உற்பத்தி செய்கின்றவர்களுக்கு வரி விலக்கு இருக்கிறது. செங்கல் தொழிலுச் த compounding முறை வேண்டுமென்று கேட்டார்கள். அதைத் துறை தீவிரமாக பரிசீலித்தது, அப்படிப் பரிசீலிக்கின்றபோது, அது நிச்சயமாக கூடுதலான வருவாயைத் தரும் என்கின்ற எண்ணத்திற்கு வருகின்றபோது, ஒன்றிரண்டு மனுக்கள் அது தரக்கூடாது என்பதாக வந்தது. இன்னும்

[திரு. சி.நா.மீ. உபயதுல்லா] [2008 ஏப்ரல் 29

சற்று ஆய்வு செய்வோம், அதற்குப் பின்னாலே அதை எப்போது வேண்டுமானாலும் நடைமுறைப்படுத்தலாம் என்கிற அளவிலே, அதைத் துறை சற்று ஒதுக்கி வைத்திருக்கிறது.

*பிற்பகல் 1—00*

சலவைத் தண்ணீருக்கு வரிவிலக்கு வேண்டுமென்று கேட்டார்கள். இப்போதுதான் முதன்முதலாக இங்கே கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது பரிசீலிக்கப்படும். அதேபோல, மாவு கொள்முதல், அந்த வேண்டுகோளை அவரும், திரு. எச். வசந்த குமார் அவர்களும் இங்கே வைத்தார்கள். அவையும் பரிசீலனையிலே இருக்கின்றன என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். திரு. சு. குணசேகரன் அவர்கள், bandage துணிகளுக்கு வரிவிலக்கு வேண்டுமென்று கேட்டார்கள். இதுவரையிலே ஒரு கோடி ரூபாய் வரையிலே, அதற்கு வரிவிலக்கு அளித்துக்கொண்டிருக்கிறோம். அதற்கு மேல் உள்ளது இனிமேல் பரிசீலிக்கப்படும்.

ஒழுங்கு நடவடிக்கைகள் பற்றிய குறிப்பை, திரு. சு. குணசேகரன் அவர்கள் சொன்னார்கள். வணிக வரித் துறையிலே உள்ள ஒழுங்கு நடவடிக்கைகள் அத்தனையும் பட்டியலிடப்பட்டிருக்கின்றன. அவை ஆய்வுக்காக விரைவில் எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றன என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன்.

திரு. எச். வசந்தகுமார் அவர்கள், cess—ஐப் பற்றிச் சொன்னார்கள் என்று நான் கருதுகிறேன். உற்பத்தி வரி என்று சொன்னார். இரப்பருக்கு 4 சதவீதமும், cess—க்கு 1 சதவீதமும் வரி போடுவதாகக் கூறியிருக்கிறார். வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களோடு ஒரு குழு ஏற்கெனவே இதுகுறித்துப் பேசியிருக்கிறது அவர்களும் அதைப் பரிசீலிப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். பின்னாலே, அதற்குத் தீர்வு காணப்படும்.

Wooden Furniture பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது வெளிநாடுகளிலிருந்து மிக அதிகமான விலையில் உள்ள wooden furniture தான் வந்துகொண்டிருக்கின்றன, குறிப்பாக, மலேசியாவிலிருந்து. அதனாலே அதை இப்போது தொடுவதற்கு இல்லை என்பதைச் சொல்லி, காப்பி, ஊறுகாய், நெய், இந்த மூன்றும் branded, unbranded என்பதிலே, அதற்கு 4 சதவீதமாக ஆக்கவேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. இப்படிப்பட்ட கோரிக்கைகள் என்பது மிகக் குறைவு என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். தலைவர்



2008 ஏப்ரல் 29] [திரு. சி.நா.மீ. உபயதுல்லா]

கலைஞர் அவர்கள், தேர்தல் நேரத்திலே விரல்களைக் காட்டுவார்களே, சின்னத்திற்காக, அப்படி அதுபோல இப்போது ஒரு கை விரல் அளவிற்குத்தான் நீங்கள் வைத்திருக்கின்ற கோரிக்கைகள் இருக்கின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளிலே இவை மிகுதியாக இருந்தன. எனவே, காப்பி, ஊறுகாய், நெய் போன்றவை 2009 ஆம் ஆண்டு அறிவிக்கக்கூடிய வகையிலே அது பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கும் விடுதிகள் பற்றி, திரு. எச். வசந்தகுமார் அவர்கள் சொன்னார்கள். மிகக் குறைவான வரி அதற்கு விதித்துக்கொண்டிருக்கிறோம். 200 ரூபாய் வரையிலே வரியில்லை. 200 ரூபாயிலிருந்து 500 ரூபாய் வரை 5 சதவீதம். 500 ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாய் வரை 10 சதவீதம். ஆயிரத்திற்கு மேல்தான் 15 சதவீதம். எனவே, இது மிகக் குறைந்த வரி விகிதம் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்கிறேன்.

இப்போது, வணிகர் நல வாரியம், அது தொடர்ந்து தனது பங்கினை புதிய உறுப்பினர்களோடு ஆற்றிக்கொண்டிருக்கிறது. அதேபோல, VAT Monitoring Committee, அந்தக் கமிட்டி அமலாக்கத்திற்காக உறுப்பினர்கள், அலுவல் சாரா உறுப்பினர்கள் மூன்று பேரும், பிற அலுவல் சார்ந்த உறுப்பினர்களும் இருக்கிறார்கள். அது தன்னுடைய பங்கினைச் சிறப்பாக ஆற்றி, அதிலே தேர்ந்தெடுக்கப்படுவதைத்தான், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய தலைமையிலே இருக்கக்கூடிய State Empowered Committee-க்குக் கொண்டு செல்கிறோம். அதிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், நிதித் துறைச் செயலாளர், மற்ற துறைச் செயலாளர்கள், வணிக வரித் துறையின் சார்பாக நானும், என்னுடைய துறையைச் சார்ந்த அதிகாரிகளும் இருக்கிறோம். ஆழ்ந்த பரிசீலனைக்குப் பிறகுதான் இத்தகைய வரி விலக்கு, வரி குறைப்பு போன்றவை எடுத்துக்கொள்ளப்படுகின்றன என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1—05*

நிறைவாக, நான் அறிவிப்புகளுக்கு வர விரும்புகிறேன். (குறுக்கீடு) படித்துவிடலாம். மூன்று மட்டும்தான். மூன்றுமட்டும் படித்துவிட்டு பாக்கியை விட்டுவிடுகிறேன்.

[திரு. சி.நா.மீ. உபயதுல்லா] [2008 ஏப்ரல் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 2001–2002 ஆம் ஆண்டு வரையிலுள்ள காலத்திற்கான வரி நிலுவைகளைத் தீர்க்கும் வகையில், ஒரே முறை தீர்வுத் திட்டம் வரும் நிதியாண்டில் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அத்திட்டத்தின் விவரங்கள் வணிக வரி மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. அதன்படி விவரங்கள் கீழ்க்கண்டவாறு அறிவிக்கப்படுகிறது.

21 ஆம் நூற்றாண்டில் அடியெடுத்து வைத்து மதிப்புக் கூட்டு வரி என்னும் புதிய வரித் திட்டம் துவக்கி ஓராண்டு ஆகிவிட்ட நிலையில், 1951–1952 முதல் 2001–2002 வரையிலான 50 ஆண்டுகளுக்கான பழைய வரி மற்றும் தண்டத் தொகை நிலுவையாக சுமார் 2,810 கோடி ரூபாய் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

1951–1952 முதல் 1990–1991 வரையிலுள்ள காலத்திற்கான நிலுவைகள் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம் ஆகியவற்றின்கீழ் மொத்தம் சுமார் 98.71 கோடி ரூபாய் நிலுவையில் உள்ளது. பல்லாண்டுகளாக நடவடிக்கைகள் மேற்கொண்டும் நொடித்துப்போன வணிகர்களிடமிருந்து நிலுவையினை வசூல் செய்வதற்கு வாய்ப்பில்லாத நிலையில், 1951–1952 முதல் 1990–1991 வரையிலான கால அளவில் உள்ள நிலுவைத் தொகையான சுமார் 98.71 கோடி ரூபாய் உள்ளது. அத்தகைய நலிந்த வணிகர்களின் நலனைக் கருத்தில்கொண்டு இத்துறையில் இதுவரை எடுத்திராத முடிவாக நமது ஒப்பற்றத் தலைவர் கலைஞர் தலைமையில் நடக்கும் சமுதாயத்தின் அனைத்து பிரிவினரின் நலனில் அக்கறை காட்டும் அரசு இந்த நிலுவைத் தொகையான 98.71 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்ய முடிவெடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இத்தள்ளுபடித் திட்டத்திற்குக் கீழ்க்கண்ட இனங்கள் பொருந்தாதவையாகும். வரி விதிப்பு அல்லது வரி வசூல் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள இனங்கள், வரி வசூலிப்பிற்காக அசையாச் சொத்துக்கள் கையகப்படுத்தப்பட்ட இனங்கள், 31–3–2002–க்குப் பின்னர் வணிகம் நிறுத்தப்பட்ட இனங்கள், இத்தள்ளுபடித் திட்டம் குறித்து தக்க அரசாணை வெளியிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பர்களே இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த 98.71 கோடி ரூபாய், கிட்டத்தட்ட 40 ஆண்டு



2008 ஏப்ரல் 29] [திரு. சி.நா.மீ. உபயதுல்லா]

காலமாக நிலுவையிலே உள்ள தொகைகள். அதற்கு உரியவர்கள் பல பேர் இறந்து போயிருக்கலாம். அவர்களுடைய குடும்பத்தினருக்கு நோட்டீஸ்கள் துறையின் சார்பாக அனுப்பப்பட்டுக் கொண்டேயிருக்கும். இத்தள்ளுபடியை வணிகர்கள் கேட்டார்களா என்றால் இல்லை. அதுதான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களிடத்திலே உள்ள மாண்பு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாணிக்கவாசகர் சொல்வார். 'வேண்டத்தக்கது அறிவோய் நீ, வேண்ட முழுவதும் தருவோய் நீ.'; 'எனக்கு என்ன வேண்டுமென்று உனக்குத்தான் அப்பா தெரியும். அவை எல்லாவற்றையும் நீ தருவாய் அப்பா' என்று சொல்வார்.

அதைப்போல, இசை முரசு நாகூர் ஹனீபா அவர்களுடைய பாடல் வரிகள் அதையே மொழிபெயர்ப்பாக சொல்லும். 'என்னுடைய தேவைகள் என்னவென்று படைத்த உனக்குத் தெரியும். நான் என் அவசரத்தில் அழுது புலம்பி உன் அருளில் என்ன குறையும்' என்று சொல்வார்.

தாயுமானவர் சொல்கிறபோது 'ஆதித் துணையே, அருமருந்தே நீ என்னைக் கூவி அழைத்து இன்பம் கொடுத்தால் குறைவாமோ' என்று கேட்பார். ஆம். அப்படி இறைவனிடத்திலே முறையிடுகிறோம். என்னுடைய குறைகளை நீ கேட்கமாட்டாயா! 'ஆதித் துணையே, அருமருந்தே நீ என்னைக் கூவி அழைத்து இன்பம் கொடுத்தால் குறைவாமோ' என்று தாயுமானவர் கேட்கிறார். இங்கே நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் கூவி அழைத்துத்தான் இப்படித் தந்திருக்கிறார்கள். 98.71 கோடி ரூபாய் தள்ளுபடியைத் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

1991–1992 முதல் 2001–2002 வரையிலுள்ள காலத்திற்கான நிலுவைகள் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம் ஆகியவற்றின்கீழ் மொத்தம் ரூபாய் 2,711.36 கோடி ரூபாய் நிலுவையில் உள்ளது.

1–4–2002–க்கு முந்தைய நிலுவைகளை வசூலிக்க பலவித நடவடிக்கைகளை வணிக வரித் துறை மேற்கொண்டும், வசூலிக்க இயலாமல் உள்ளது. வணிகர்கள்மேல் உள்ள உத்தேச வரி விதிப்பின் அடிப்படையில் விதிக்கப்பட்ட அதிக வரியையும், தண்டத் தொகையும் மற்றும் அதற்குரிய 24 சதவிகித வட்டியையும் வணிகர்கள் செலுத்த

[திரு. சி.நா.மீ. உபயதுல்லா] [2008 ஏப்ரல் 29

இயலாத நிலையில் உள்ளது. நிதி நிலை அறிக்கையில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள ஒரே முறை தீர்வுத் திட்டத்திற்குச் செயல் வடிவம் கொடுக்கும் வகையில் 1—4—2002—க்கு முன்னர் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட வரி கேட்பு செய்யப்பட்ட (Demand Raised) இனங்களுக்குப் பொருந்தும்.

பிற்பகல் 1—10

முழுவதும் உத்தேச வரி விதிப்பு முறையில், வரி விதிக்கப்பட்ட இனங்களில் (Best of Judgement Cases) நிலுவையில் உள்ள வரித் தொகையில் மூன்றில் ஒரு பங்கு, 33.33 சதவிகித வரியும், அதன்மீது 6 சதவிகித குறைந்த வட்டியும் செலுத்தினால் போதுமானது. மாதாந்திர படிவங்களில் அறிவித்த வரித் தொகைக்குமேல் விதிக்கப்பட்ட நிலுவை வரித் தொகையிலும், 33.33 சதவிகித வரியும் அதன்மீது 6 சதவிகித குறைந்த வட்டித் தொகையும் செலுத்தினால் போதும். மாதாந்திர படிவங்களின்படி வணிகரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு (Admitted Tax as per Return) நிலுவையில் உள்ள வரித் தொகை முழுவதையும் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தும் தொகைக்கு 6 சதவிகித குறைந்த வட்டித் தொகை மட்டுமே செலுத்தினால் போதும்.

மேற்கண்டவாறு வரி செலுத்தும் மூன்று இனங்களிலும் எஞ்சிய வரி மற்றும் வட்டித் தொகை தள்ளுபடி செய்யப்படும். இவ்வினங்களில் தண்டத் தொகை (penalty) முழுவதும் தள்ளுபடி செய்யப்படும். இந்த ஒரே முறை தீர்வுத் திட்டம், கீழ்க்கண்ட இனங்களுக்கும் பொருந்தும்:

i. சட்டத்தில் குறிப்பிடப்படும் நாளில் வரி விதிப்பு அல்லது வரி வசூல் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இல்லாத இனங்கள். ii. நிறுத்தப்பட்ட அல்லது நடைபெறுகிற அனைத்து வணிக நிறுவனங்கள், iii. வரி வசூலிப்பிற்காக அசையாச் சொத்துக்கள் கையகப்படுத்தப்பட்ட இனங்கள். iv. வரி தள்ளிவைப்பு விதிகள் மீறப்பட்ட இனங்கள். (Deferral Rules Violation Cases)

மேற்படி ஒரே முறை தீர்வுத் திட்டம் குறித்துத் தேவையான சட்டம் இயற்றப்படும்.

மகளிர் சமையல் அறையில் பயன்படுத்தும் மிளகாய் வற்றல், புளி, தனியா, மஞ்சள், பெருங்காயம் போன்ற பொருட்களுக்கு விற்பனைத் தொகையின் அடிப்படையில் மதிப்புக் கூட்டு வரி சட்டத்தின்கீழ் வரி விலக்களிக்கப்பட்டது. அவ்வாறு வரி விலக்களிக்கப்பட்ட



2008 ஏப்ரல் 29] [திரு. சி.நா.மீ. உபயதுல்லா]

பொருட்களுடன் மகளிர் சமையலுக்குப் பயன்படுத்தும் கடுகு, சோம்பு மற்றும் வெந்தயம் ஆகியவற்றையும் சேர்த்து வரி விலக்களிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேற்கண்ட பொருட்களுக்கு தற்பொழுது 4 சதவிகிதம் வரிவிதிக்கப்படுகிறது. இவை இங்கே அறிவிப்புகளில் கூறப்பட்டுள்ளன. மேலும் அறிவிப்புகள் அடங்கிய புத்தகம் உறுப்பினர்களுக்குத் தரப்பட்டுள்ளது. அவ்வறிப்புகளை@ நான் அவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றக் குறிப்பேட்டில் பதிவுசெய்துகொள்ள வேண்டுகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, பாரதியின் வரிகளோடு நான் நிறைவு செய்ய விரும்புகிறேன். பாரதி சொல்வான்,

*பஞ்சமும் நோயும் நின் மெய்யடி யார்க்கோ?*
*பாரினில் மேன்மைகள் வேறினி யார்க்கோ?*
*தஞ்சமடைந்தபின் கைவிடலாமோ?*
*தாயுந்தன் குழந்தையைத் தள்ளிடப் போமோ?*

என்பான், ஆம். பஞ்சமும் நோயும் நின் மெய்யடி யார்க்கோ என்பான். பஞ்சத்திற்காகத்தான் இன்றைக்கு 1 கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு, (மேசையைத் தட்டும் ஒலி) நோய்க்காகத்தான் வருமுன் காப்போம் திட்டங்கள், இவையிரண்டையும் சொல்கிறபோது வரிசையாகச் சொன்னால் எத்தனை இருக்கும் என்பது உங்களுக்குத் தெரியும்.

பாரினில் மேன்மைகள் வேறினி யார்க்கோ? என்பான். ஆம், எல்லா அரசியல் கட்சிகளும் நாம் எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் என்கிற எண்ணத்தோடுதான் நம்முடைய செயல்பாடுகளை அமைத்துக்கொள்கிறோம். ஆனால், அதிலே முந்தி கால் பதிப்பவராகத் தடம் பதிப்பவராக மணலி கந்தசாமி அவர்கள் அன்றைக்குச் சொன்னாரே, இரத்தம் சிந்தி பெற முடியாததை இரண்டு சொட்டு மைத் துளிகளிலே கலைஞர் அவர்கள் செய்தார் என்று, அப்படி. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1—15

இன்னும் அடுத்த வரியாகப் பார்த்தால் 'தஞ்சம் அடைந்தவரை கைவிடலாமோ' என்பான். இங்கே என்னுடைய அருமை நண்பர்கள் கோபித்துக்கொள்ளமாட்டார்கள் என்ற கருத்திலேதான் சொல்கிறேன். தஞ்சம் அடைந்தவரை உச்சி மோந்து உயர்த்தி வைத்து அழகுப் பார்ப்பதுதான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய பண்பு.

---

@ 236 முதல் 240 வரையிலான பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

கடைசி வரியாக 'தாயும் தன் குழந்தையை தள்ளிடப்போமோ' என்பான், 'தாயும் தன் குழந்தையைத் தள்ளிடப்போமோ' என்பான். கருணையும், நிதியும் ஒன்றாகச் சேர்ந்ததுதான் தலைவர் கலைஞர் அவர்களின் பெயர். குமரகுருபரர் முருகனைப் பற்றி முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் என்ற ஒரு நூல் எழுதியிருப்பார். அதிலே வருகிற வரிகளை மிக அருமையாகச் சொல்லியிருப்பார். தலைவர் கலைஞர் அவர்களுடைய பெயரைச் சொல்வதற்காக மன்னிக்க வேண்டும். அந்த வரிகள் மிக அற்புதமான வரிகளாக தலைவர் கலைஞர் அவர்களை குறிப்பிடுகிற, பெயரிலேயே குறிப்பிடுகிற வரிகளாக அமையும். அதேபோல, அதற்கடுத்த வரியாக வருகிற வரிகள் 'சங்கத் தமிழ் புலவா, சங்கத் தமிழ் தலைமைப் புலவா தாலேலோ' என்று முடியும். அந்த வகையிலே தலைவர் கலைஞர் அவர்களைப் பாராட்டி வாழ்த்தி அமைகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக ச்ாதியின் பெயரால் சாஸ்திரத்தின் பெயரால் ஒதுக்கிவைக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்ட மக்களுக்காக ஆதிக்கச் சக்திகளால் அடக்கிவைக்கப்பட்ட மக்களுக்காக 70 ஆண்டு காலமாக தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டு அந்த மக்களின் உரிமைக்காகவும், மேன்மைக்காகவும், சமூக நீதிக்காகவும் இன்றைக்கும் போராடிக்கொண்டிருக்கிற தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்கள் தந்துவிட்டுச் சென்ற வளமார் திராவிடத்தின் வரலாற்றுப் பெட்டகம், திராவிடப் பெருந்தலைவர், தாயினும் மேலாய் என்மீது அன்பு காட்டி வரும் தலைவர், மூதறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞர் அவர்களின் தோன்றாத் துணையாக விளங்கும் மரியாதைக்குரிய இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களை வணங்குகிறேன். உழைப்பின் சிகரமாய், ஊர் போற்றும் உன்னதமாய், ஏடும் நாடும் போற்றும் உள்ளாட்சியில் நல்லாட்சியாய் என் உயிர்த் துடிப்பாய், உறவாய், அன்பால் என்னை அரவணைக்கும் என் தளபதியை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்றைக்கும் என்மேல் மாறாத அன்பு கொண்டுள்ள மரியாதைக்குரிய அருமை அண்ணன் ஆற்காட்டார் அவர்களை வணங்குகிறேன். எங்கள் இயக்கத்தின் முதன்மைச் செயலாளர் மரியாதைக்குரிய அருமை அண்ணன் துரைமுருகன் அவர்களை வணங்குகிறேன்.





மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டு காலமாக ஆங்கில ஏகாதிபத்தியத்தில் அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்தது. ஆனால், ஆதிக்கச் சக்திகளால் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டிருக்கிற பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இன்னும் முழுமையான சுதந்திரம் கிடைக்கவில்லை. இதுதான் இன்றைய உண்மையான நிலை. இட ஒதுக்கீட்டின்மூலமாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை, குறிப்பாக, கல்வியில், வேலைவாய்ப்பில், இட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தருவதற்காக, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் எல்லாம் போராடியதன் விளைவாகத்தான் இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழகம்தான் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குரிய இட ஒதுக்கீட்டைப் பெறுவதில் முன்னணியில் உள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கும் எங்கள் ஊரிலே, கிராமத்திலே சொல்வார்கள், நாங்கள் எதையாவது ஒன்றைச் சொன்னால், சுதந்திரம் வாங்கியதனுடைய அருமை உங்களுக்குத் தெரியுமா என்று சொல்வார்கள். சும்மா கிடைத்ததா சுதந்திரம் என்று சொல்வார்கள். அதுபோல, வரலாறுகள், இட ஒதுக்கீட்டினுடைய வரலாறுகள் இனி வருகிற சமுதாயத்திற்கு நாம் எப்படியெல்லாம் சிரமப்பட்டு இதைப் பெற்றோம் என்பதை நாம் தெரிவிக்க வேண்டிய காலகட்டத்தில் இருந்துகொண்டிருக்கிறோம். 1921–லே இருந்த பிரச்சினை, இன்றைக்கு நமக்கு இல்லை. தொடர்ந்து நம்முடைய சமுதாயம் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறிய காரணத்தால், பட்ட கஷ்டங்களையெல்லாம் இன்றைக்கு மறந்திருக்கிறார்கள். அதை நினைவூட்டி, இந்தச் சமுதாயம் முன்னேறுவதற்கு யார், யார் பாடுபட்டார்கள் என்பதையெல்லாம் இப்போது உள்ள இளைய தலைமுறைக்குச் சொல்ல வேண்டிய காலம் இப்போது வந்துள்ளது. அதற்குரிய காரண காரியங்களை இன்றைக்கு நான் எடுத்து வைக்கிறேன்.

பிற்பகல் 1–20

தமிழகத்திலே மக்கள் தொகையில் 68 விழுக்காடு பிற்படுத்தப்பட்டோர் உள்ளார்கள். பல நூற்றாண்டுகளாக உரிய வாய்ப்புகள் அவர்களுக்கு மறுக்கப்பட்டதால், கல்வி, சமூக நிலையில் பின்னாலே தள்ளப்பட்டார்கள். அதற்கு மாற்றுவழியாக முதல் முதலிலே நீதிக் கட்சி அரசாட்சிக்கு வந்தவுடன், 1921–லேதான் முதல் முதலிலே வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை வந்தது. 1921–லே

வந்த அந்த அரசாணை, இந்திய அரசமைப்புச் சட்டம் செயல்பாட்டுக்கு வந்ததன் விளைவாக, 1951—லே உச்ச நீதிமன்றத்தால் அன்றைக்கே அது தள்ளுபடி செய்யப்பட்டது. அன்றையதினம், தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடந்த கிளர்ச்சியின் காரணமாக, அன்றைக்கிருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், அன்றைக்கு பாரதப் பிரதமர் மரியாதைக்குரிய பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களிடம் இந்த இட ஒதுக்கீட்டினுடைய அவசியத்தைச் சொன்னதன் விளைவாகத்தான், முதல்முதலிலே 1951—லே அரசியல் சட்டத்தை முதன்முதலிலே திருத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, மிகப் பெரிய போராட்டத்தை 1951—லேயே ஆரம்பித்திருக்கிறார்கள். திராவிட இயக்கத்திலேயிருந்த தலைவர்கள், அன்றைக்கு மத்திய அரசை வலியுறுத்தி ஒவ்வொன்றாகப் பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் என் தலைவர் கலைஞர் அவர்கள் பிறப்பாலும் சரி, வளர்ப்பாலும் சரி, படிப்பாலும் சரி, தான் ஏற்றுக்கொண்ட தலைவர்களாலும், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தை முன்னேற்ற வேண்டுமென்று நினைக்கிற ஒரு மிகப் பெரிய தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான், அவர் காலத்திலேதான் இந்தத் துறைகள் ஒவ்வொன்றாக வந்திருக்கின்றன.

எனக்கு முன்னாலேயே பேசிய ம.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கூட கொஞ்சம் குறைவாகச் சொல்லிக்கொண்டே வந்தார்கள். 1969—லே தலைவர் கலைஞர் அவர்கள் சட்டநாதன் குழுவை உண்டாக்கியிருக்கிறார்கள். அதே 1969, மே திங்கள் 2 ஆம் நாள் பின்தங்கிய வகுப்பினருக்காக ஒரு துறையை தலைவர் கலைஞர் அவர்கள்தான் உண்டாக்கியிருக்கிறார்கள். அதேபோல, பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக ஓர் அமைச்சரை நியமித்ததும் தலைவர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் இயக்ககம் 1989—லே தலைவர் கலைஞர் அவர்களால்தான் கொண்டு வரப்பட்டது. அதேபோல, பிற்படுத்தப்பட்டோருக்கான 50 விழுக்காடு இட ஒதுக்கீட்டில், 20 விழுக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்காக 1989—ல் தலைவர் கலைஞர் அவர்களால்தான் கொடுக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

தலைமைச் செயலகத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்காக ஒரு நலத் துறையை 1989—ல் தலைவர் கலைஞர் அவர்கள்தான் கொண்டுவந்து கொடுத்தார்கள். அதோடு மட்டுமல்ல, மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தையும்





1990—லே தலைவர் கலைஞர் அவர்கள்தான் கொண்டுவந்து கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, சிறுபான்மையினர் நலனுக்காக, பொருளாதார உதவி செய்வதற்காக பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தையும் 1999—லே தலைவர் கலைஞர் அவர்கள்தான் கொடுத்திருக்கிறார்கள். 2007—லே சிறுபான்மை யினருக்காகத் தனியாக ஓர் இயக்குநரகத்தையும் தலைவர் கலைஞர் அவர்கள்தான் கொடுத்திருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, பிற்படுத்தப்பட்ட மக்களில் கிறிஸ்தவர்களுக்கு 3.5 விழுக்காடும், பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கு 3.5 விழுக்காடும் 2007—ல் நமக்கு வழங்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்கள் ஓர் ஆணையை வெளியிடச் சொல்லியிருக்கிறார்கள். அருமை அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்கூட பல நேரங்களிலே வற்புறுத்தியிருக்கிறார்கள். சிறுபான்மையோர் ஆணையத்தைச் சட்டபூர்வமான ஆணையமாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாகச் சொல்லப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு மகளிர் நல ஆணையத்தைச் சட்டபூர்வமான ஆணையமாக மாற்றிட முதலமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டத் தொடரில் அறிவித்திருக்கிறார்கள். அதேபோல, சிறுபான்மையோர் நல ஆணையத்தையும் சட்டபூர்வமான ஆணையமாக மாற்றிட வேண்டுமென்ற சிறுபான்மையோரின் கோரிக்கையை முதலமைச்சர் அவர்கள் ஏற்று, தமிழகத்திலுள்ள சிறுபான்மையோர் நல ஆணையம் சட்டபூர்வமான ஆணையமாக மாற்றப்படும் என்ற அறிவிப்பினை முதலமைச்சர் அவர்கள் சார்பாக இந்த அவையிலே அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறுபான்மை மக்களுக்கு தங்களுடைய நீண்ட நெடிய சமூக நீதிக்கான போராட்ட வரலாற்றில் எப்போதெல்லாம் தமிழகத்திலே நன்மைகள் நடந்தனவோ, எப்போதெல்லாம் அவர்களுக்கு நீதி கிடைத்ததோ, அவையெல்லாம் தலைவர் கலைஞர் அவர்கள் மூலமாகவே கிடைத்தன என்பதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2008 ஏப்ரல் 29

பிற்பகல் 1—25

இன்று நம்முடைய அருமைக்குரிய மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அண்ணன் உபயதுல்லா அவர்கள் பேசுகிறபோது, மணலி கந்தசாமி அவர்கள் சொன்ன வார்த்தைகளைச் சொன்னார்கள். 'இரத்தம் சிந்திப் போராடிப் பெறவேண்டியவற்றை இரண்டு துளிகள் மையிலே பெற்றுத்தந்தவர் டாக்டர் கலைஞர்' என்று சொன்னார்கள். இன்று காலையிலே, அதைவிட ஒருபடி அதிகமாக ஒரு சம்பவம் நடந்தது. இன்று காலையிலே கேள்வி நேரம் முடிந்த பிறகுதான் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்தேன். நேற்று மாலையில், தமிழக சிறுபான்மை ஆணையத்தினுடைய தலைவர் அருட்தந்தை வின்சென்ட் சின்னதுரை அவர்கள் என்னைத் தொடர்புகொண்டு, 'இந்தியாவிலேயே மணிப்பூரிலும், தமிழகத்தில் மட்டும்தான் சிறுபான்மை ஆணையகத்திற்கான Statutory அந்தஸ்து அங்கீகாரம் கிடைக்கவில்லை. அதை நீங்கள் முதலமைச்சர் அவர்களிடம் சொல்ல வேண்டும்' என்று சொன்னார்கள். இன்று காலையிலே நான் வந்து அவர்களிடம் சொன்னேன். உடனடியாகத் தன் செயலாளர்களை அழைத்தார். அந்தச் செயலாளர் அவர்கள், 'இப்போதுதான் கொடுத்திருக்கிறார், பார்த்துச் செய்யலாம்' என்று சொன்னார்கள். ஆனால், டாக்டர் கலைஞர் அவர்கள், நான் அந்த அறையைவிட்டு வெளியிலே வருவதற்கு முன்னாலே, இரண்டு மைத் துளிக்கூட இல்லாமல் தன் கண் அசைவினால் ஒரு நீண்ட நெடிய பயணத்திற்கும், போராட்டத்திற்கும் தேவைப்படுகின்ற ஒரு காரியத்தை தன் கண் அசைவினால் இன்று சிறுபான்மை ஆணையத்திற்கு சட்டபூர்வமான அங்கீகாரம் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நெஞ்சத்தில் நன்றி உள்ளவர்கள் பாக்கியவான்கள் என்று வேதம் சொல்கிறது. இன்று தமிழகத்திலே இருக்கக்கூடிய ஏறக்குறைய 22 விழுக்காடு சிறுபான்மையினர், இஸ்லாமியர்கள், கிருஸ்தவர்கள், ஜைன மக்கள், இங்கே வாழ்கின்ற சீக்கிய இன மக்கள், பார்சிக்கள் என்று தமிழகத்திலே அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்ற அத்தனை சிறுபான்மை மக்களுக்கும் இன்று அவர்களுடைய ஆணையத்திற்குச் சட்டபூர்வமான அந்தஸ்து என்பது நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற சமூக நீதிப் போராட்டத்திலே மிகப்பெரிய ஒரு மைல்கல். அந்த மைல்கல்லையும் அவர்கள்தான் கடந்து தந்திருக்கிறார்கள். நான் அடிக்கடி சொல்வேன், அடுத்தத் தலைமுறைக்குச் செய்வதற்கு ஏதாவது விட்டுவைப்பீர்களா என்று கேட்பேன். எதையுமே விட்டுவைக்காமல், கோரிக்கைகளையே வைப்பதற்கு வழியில்லாமல் அதையும் நிறைவேற்றித் தந்திருக்கின்ற தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர்



2008 ஏப்ரல் 29] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

அவர்களுக்கு சிறுபான்மை மக்கள் சார்பாக நன்றி சொல்லி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் கடைசியில் பேசலாமே? (குறுக்கீடுகள்) சரி. திருமதி பதர் சையீத், Statutory Board—க்கு நன்றி என்று சொல்லுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு)

**திருமதி பதர் சயீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சார், நீங்கள் எனக்குச் சொல்லாதீர்கள். Please I don't need your agenda. இது 2008—2009—ல் Minority Welfare Department Policy Note என்று இருக்கிறது. இது 2007—2008—ன் Xerox Copy —ஆகத்தான் இருக்கிறது. இதில் ஒன்றும் வேறு புதியது இல்லை. இதில் நிறைவேற்றக்கூடியது இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது எல்லா அ.தி.மு.க.— காரர்களும் சொல்லுகின்ற.. (குறுக்கீடு) இது Xerox Copy என்று சொன்னார்கள். இந்த அம்மையார் சொல்வது எல்லா அ.தி.மு.க.—காரர்களும் சொல்லுகின்ற அதே repeated கருத்துதான். வேறு ஒன்றும் புதிது அல்ல. உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) அம்மா கடைசியில் பேசிக்கொள்ளலாம். இப்போது பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மத்திய அரசிலிருந்து 27 விழுக்காடு இடங்களை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொடர்ந்து போராடிப் பெற்று கொடுத்திருக்கிறார்கள். 27 சதவீதம் என்று நாம் வெளியிலே பேசுகிற நேரத்தில், இதைப் பெறுவதற்கு நாம் எவ்வளவு சிரமங்களை தாங்கியிருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே நாம் தெரிந்துவைத்துக்கொள்வது அல்லது புரிந்துகொள்வது அல்லது எதிர்கால சமுதாயத்திற்கு நாம் எதையெல்லாம் செய்து இருக்கிறோம் என்பதையெல்லாம் சொல்கிற நிகழ்ச்சியாகவும் இதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டல் குழு பரிந்துரைகளைச் செயல்படுத்த வலியுறுத்தி 1989—ல் சட்டமன்றப் பேரவையில் தலைவர் கலைஞர் அவர்கள் தீர்மானத்தை

நிறைவேற்றி, அன்றைக்குப் பாரதப் பிரதமராக இருந்த மரியாதைக்குரிய திரு. வி.பி. சிங் அவர்கள் மத்திய அரசிலே இருந்த காரணத்தால், அன்றைக்கு மத்திய அரசினுடைய வேலைவாய்ப்பில் நமக்கு 27 சதவீத இட ஒதுக்கீட்டைப் பெற்றுத்தந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். அதேபோல், இப்போது கல்வி நிலையங்களிலும் 27 சதவீத இட ஒதுக்கீட்டினைப் பெறுவதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு போராடியிருக்கிறார் என்பதைக் கோப்புகளைப் பார்க்கிற நேரத்தில் நாங்களே வியந்துபோயிருக்கிறோம். நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு 15–3–1997–லே ஒரு நினைவூட்டுக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். 15–3–1997–லே எழுதிவிட்டு அதோடு சும்மா இருக்கவில்லை. அடுத்து, 1–8–1997–லேயும் ஒரு நினைவூட்டுக் கடிதம் எழுதுகிறார். அதேபோல 22–9–1997–லேயும் நினைவூட்டுக் கடிதம் எழுதுகிறார். 25–1–1998–லும் தலைவர் கலைஞர் அவர்கள் பாரதப் பிரதமருக்கு நினைவூட்டுக் கடிதம் எழுதிக் கொண்டேயிருக்கிறார்.

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** அதேபோல, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் இட ஒதுக்கீட்டினை பெறுவதற்காக மத்திய அரசு அவசரச் சட்டம் கொண்டுவர வலியுறுத்தி, மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களுக்கு 25–2–2008–லும் கடிதம் எழுதுகிறார்கள். ஆக, தொடர்ந்து கடிதம் எழுதி, இங்கே சட்டமன்றத்திலே அதற்குரிய தீர்மானங்கள் நிறைவேற்றி, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த 27 விழுக்காட்டினை நம்முடைய அரசின் சார்பாக, இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இங்கு இருக்கிற அரசியல் கட்சிகளின் உதவியோடு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே நாம் இதைப் பெற்றிருக்கிறோம். இந்த 27 விழுக்காடு பெற்றதிலே திராவிட இயக்கங்கள் முதலிலேயிருந்து தொடர்ந்து பணியாற்றி இருக்கின்றன. தலைவர் கலைஞர் அவர்கள் தொடர்ந்து பணியாற்றி இருக்கிறார்கள். தலைவர் கலைஞரோடு சேர்ந்து இதற்காகப் பாடுபட்ட ஏனைய கட்சிகளைச் சார்ந்த தலைவர்களுக்கும் நான் இந்த நேரத்திலே நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக இந்த அரசைப் பொறுத்த அளவிற்கு, இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் கல்வித் தொகையை உயர்த்தித் தர வேண்டும்



என்று சொன்னார்கள். இங்கே நம்முடைய கல்வி உதவித் தொகை பெற வருமான வரம்பு எப்படி இருக்கிறது என்று சொன்னால், 1967–லே கல்வி உதவித் தொகை பெற 1,500 ரூபாய் வருமானம் இருந்தால்தான் அவர்கள் பெறமுடியும் என்பதை இன்றைக்கு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் 1 இலட்சம் ரூபாய் வரைக்கும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தவர்கள் வருமான வரம்பு இருந்தால் சலுகைகளைப் பெறலாம் என்று அறிவித்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான். 40 ஆண்டுகளில் 7 முறை வருமான உச்சவரம்பை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். அந்த ஏழு முறைகளில், ஆறு முறை முதல்வர் கலைஞர் அவர்கள்தான் இந்தப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு வருமான வரம்பை உயர்த்திக் கொடுத்து, சலுகைகளைப் பெற வழி செய்தவர்.

அதேபோல, 1,181 விடுதிகள் இன்றைக்கு தமிழக அரசின் B.C. Department–ல் இருக்கின்றன. அதிலே பார்ப்போம் என்று சொன்னால், 1996–லிருந்து 2001 வரை முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே 137 விடுதிகள் தொடங்கப்பட்டன. 1996–2001 வரை 137 விடுதிகள். அதேபோல 2006–லேயிருந்து 2007 வரைக்கும்—இப்பொழுது 100, இந்த ஆண்டு 25–ஆக 125 நாம் ஆரம்பித்திருக்கிறோம். ஆனால், இந்த 2001–லிருந்து 2006 வரையுள்ள கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மொத்தம் 109 விடுதிகள்தான் திறந்திருக்கிறார்கள். அவர்கள் திறந்தது மொத்தம் 109 விடுதிகள்தான். எந்தவகையிலும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைவிட அதிகமான சலுகைகளை இந்தத் துறையின்மூலம் முன்னாள் ஆட்சியாளர்கள் அளிக்கவில்லை.

அதேபோல, மாதாந்திர உணவுக் கட்டணத்தைப் பொறுத்தவரை 2007–2008–லே விடுதிகளில் தங்கும் மாணவர்களுக்காக 100 ரூபாய் அதிகம் அறிவித்து, மாணவர்களுடைய உணவுக் கட்டணத்தை அதிகப்படுத்தினார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அதுகுறித்துச் சொன்னார்கள். 100 ரூபாய் அதிகப்படுத்தினார்கள், இந்த ஆண்டு மேலும் 50 ரூபாயைக் கூட்டி, பள்ளி மாணவர்களுக்கு மாதம் 450 ரூபாய், போன வருடம் 100 ரூபாய் அதிகப்படுத்தினார்கள். இந்த ஆண்டு இன்னொரு 50 ரூபாயை அதிகப்படுத்தி, பள்ளியிலே படிக்கிற மாணவர்களுக்கு அந்த உணவுக் கட்டணம் ரூ.450 என்றும், கல்லூரிகளிலே படிக்கிற மாணவர்களுக்கு ரூபாய் 550 என்றும் வழங்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள். 1996–2001–லே நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது முதலிலே 135 ரூபாய் என்று இருந்தது, அதை 180 ரூபாயாக, 225 ரூபாயாக

[திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்] [2008 ஏப்ரல் 29

உயர்த்தியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். மீண்டும் இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 400 ரூபாய், 450 ரூபாய், 550 ரூபாய் என்று சொல்லி தொடர்ந்து மாணவர்களுடைய உணவுக் கட்டணத்தை நம்முடைய உறுப்பினர்கள், நம்முடைய அரசியல் கட்சித் தலைவர்கள் சொல்லிய நேரத்தில் எல்லாம், ஒவ்வொரு தடவையும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அதைக் கூட்டி வழங்கியிருக்கிறார்கள். ஆனால், கடந்த ஆட்சியில் என்ன நடந்திருக்கிறது என்று சொன்னால், கல்லூரி மாணவர்கள் உணவுக் கட்டணத்தைக் கூட்டவேயில்லை. பள்ளி மாணவர்களுடைய உணவுக் கட்டணத்தையும் குறிப்பிட்ட அளவில்தான் கூட்டியிருக்கிறார்கள். ஆக, மாணவர்களுடைய பிரச்சினையிலேகூட இந்தச் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் படிக்க வேண்டும் என்ற அக்கறையில் நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்தப் பணிகளையெல்லாம் செய்திருக்கிறார்கள்.

அதேபோல, பரிசுத் திட்டம். பள்ளி மாணவர்கள் படிப்பதற்கான பரிசுத் திட்டம். இந்தச் சமுதாயத்தைச் சார்ந்த குழந்தைகள் படித்தால்தான் எதிர்காலத்திலே வளமான வாழ்க்கையைப் பெறமுடியும் என்ற எண்ணத்தோடு அந்தக் குழந்தைகள் படிப்பதற்கு, உற்சாகப்படுத்துவதற்குத் தனித்தனிப் பரிசுகளாக, இதுவரைக்கும் 484 பரிசுகள்தான் வழங்கப்பட்டன. ஆனால், நம்முடைய தலைவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இப்பொழுது பொறுப்பேற்ற பிறகு அந்தப் பரிசுகளின் எண்ணிக்கையை 1,212 பரிசுகளாக அதிகரித்து 87 இலட்சம் ரூபாய்க்கு வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–35*

மிதி வண்டி, Cycle. இந்த Cycle பிரச்சினையிலே இதுவரைக்கும் பார்த்தோம் என்று சொன்னால், 11 ஆம் வகுப்பிலேயிருந்து ஆரம்பித்து, 11 ஆம் வகுப்பு கடைசியிலேதான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். பன்னிரண்டாம் வகுப்பு முடிந்தவுடன், அந்த மிதி வண்டியை யார் ஓட்டுகிறார்கள் என்று சொன்னால், அந்தப் பெண் குழந்தைகளின், பையன்களின் சகோதரர்கள் மற்றும் தகப்பனார்தான் ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் புரிந்துகொண்டு, இந்த ஆண்டு தொடக்கத்திலேயே, பள்ளிக்கூடம் ஆரம்பிக்கும் நேரத்திலேயே, எல்லா குழந்தைகளுக்கும் மிதி வண்டி வழங்க வேண்டுமென்ற உத்தரவை நம்முடைய முதலமைச்சர் வழங்கியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அ.தி.மு.க. உறுப்பினர் சொல்லியதைப்போல அல்ல. டெண்டர் விதிமுறைகள் எல்லாம் அதேதான். மிதி



2008 ஏப்ரல் 29] [திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

வண்டிகளின் தரத்தைச் சரிபார்க்க வேண்டுமென்ற புதிய விதியையும் இந்த ஆண்டிலே சேர்த்து, அதையும் நாங்கள் சரிபார்க்கக் காத்திருக்கிறோம்.

அதேபோல, சிறுபான்மையின மக்களின் குழந்தைகள் படிப்பதற்கு இதுவரைக்கும் சரியான முறையிலே கல்விக் கடன் கிடைக்கவில்லை. நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இப்பொழுது மேல்படிப்புப் படிப்பதற்காக 5 ஆண்டுகளுக்கு மிகாத படிப்புகள் படிப்பதற்காக, ¼ சதவீத வட்டியில், இந்த ஆண்டிலே சிறுபான்மையினத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு எல்லாம் கடன் வழங்க வேண்டுமென்ற அந்த உத்தரவையும் எங்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். பொதுவாக சிறுபான்மையினத்தைச் சார்ந்தவர்கள் மேல்படிப்புக்கு வருவது கஷ்டமாக இருக்கிறது. அதைப் புரிந்துகொண்டு, அவர்களுக்குக் கடன் வழங்க வேண்டுமென்ற அந்த உணர்வை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோல, முஸ்லிம் இனத்தைச் சார்ந்தவர்களில் இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு, வேலைவாய்ப்பு இல்லாதவர்களுக்கெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சிறிய தொழில் தொடங்குவதற்கு, அவர்களுக்குத் தலா 10,000 ரூபாய் வழங்க வேண்டுமென்ற உத்தரவையும், 10,000 ரூபாய் வழங்கி புதிதாக ஒரு தொழில் தொடங்குவதற்கு வேண்டிய அந்த வேலைகளையும் செய்ய வேண்டும் என்ற உணர்வை எங்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோல, வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்திலே நம்முடைய அரசாங்கத்திலே இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் வழங்கி, அதற்கு வேண்டிய அந்தப் பணிகளை நாங்கள் செய்யவிருக்கிறோம். இதில் நம்முடைய ஆட்சிக்கும் போன ஆட்சிக்கும் நிரம்ப வித்தியாசம் இருக்கின்றது. பல கோடி ரூபாய்க் கணக்கிலே வித்தியாசம் இருக்கிறது. அவர்களுடைய காலத்திலே இந்தத் துறையிலே இந்தப் பணிகளைக்கூட சரியாகச் செய்யவில்லை.

அதேபோல, சிறுபான்மையினத்தைச் சார்ந்த, முஸ்லிம், கிறித்துவ சமுதாயத்தினைச் சார்ந்த படித்தவர்களுக்கு, வேலைவாய்ப்புகளுக்காக, சுயதொழில் தொடங்குவதற்காக 2½ கோடி ரூபாயை தலைவர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டிலே வழங்கியிருக்கிறார்கள்.

அதேபோல, பொருளாதார மேம்பாடு. B.C.–இலே TABCEDCO மூலம் இந்த ஆட்சியிலே மிக அதிக அளவிலே பணத்தை வழங்கியிருக்கிறோம். போன ஆட்சியை விட 3 மடங்கு அதிகமான

அளவிற்கு—நான் எண்களையெல்லாம் சொல்ல விரும்பவில்லை—அந்தப் பணிகளையெல்லாம் இந்தத் துறையிலே செய்திருக்கிறோம்.

Hostel வசதிகளை மேம்படுத்த வேண்டுமென்று எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் சொல்லியிருக்கிறார்கள். Hostel வசதிகளை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், சுத்தமான முறையிலும், சுகாதாரமான முறையிலும் விடுதிகளை வைத்துக்கொள்ள, நம்முடைய வீட்டுக் குழந்தைகள் சாப்பிடுகிற நேரத்திலே வீடு எப்படி இருக்க வேண்டுமோ, அதேபோன்ற உணர்வோடு, அந்தக் குழந்தைகள் தங்குகிற விடுதிகளைப் பராமரிக்க வேண்டுமென்ற அந்த உணர்வையும் அவர்களுக்கு நாங்கள் சொல்லியிருக்கிறோம். இந்தத் துறையைப் பொறுத்தளவிற்கு, இந்தச் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் படித்தால்தான் பொருளாதார வசதியைப் பெற முடியும் என்பதையெல்லாம் இந்தத் துறை இன்றைக்கு உணர்ந்திருக்கிறது. நம்முடைய முதலமைச்சரைப் பொறுத்தளவிற்கு இந்தத் துறையின்மீது பாசம் உள்ளவர். காரணம், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் வாழ வேண்டும், வளர வேண்டும் என்று நினைக்கிற பெரிய மனதுக்குச் சொந்தக்காரர் தலைவர் கலைஞர் அவர்கள். ஆகவே, இந்தத் துறையிலே ஒவ்வொரு காரியத்தையும் நாங்கள் சொல்வதற்கு முன்பாகவே, அவரே சொல்லி, 'இதைச் செய், அதைச் செய்' என்று சொல்லக்கூடிய அளவிற்கு இந்தத் துறையின்மீது அவருக்கு அக்கறை இருக்கிறது.

இந்த ஆண்டிலேயிருந்து சீர்மரபினர் நல வாரியம் என்ற வாரியத்தை அமைத்து, ஏற்கெனவே அமைப்புச் சாரா தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான அந்த வாரியத்தில் என்னென்ன சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளனவோ, அந்தச் சலுகைகளையெல்லாம் இந்த சீர்மரபினர் நல வாரியத்திலே உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கும் வழங்க வேண்டுமென்ற உத்தரவையும் நமது முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, நல்ல காரியங்களைத் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறோம்.

மரியாதைக்குரிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்கள் இஸ்லாமியக் குழந்தைகள் படிப்பதற்கு Hostel தனியாக வேண்டுமென்றும், கோஷா போடுகிற பெண் குழந்தைகள், எங்கேயும் போய் படிக்க முடியவில்லை என்று சொன்னார்கள். அதை நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு சென்ற நேரத்தில், இந்த ஆண்டு முஸ்லிம் குழந்தைகள் படிப்பதற்காக மட்டும், தனியாக, 5 இடங்களிலே பள்ளி, கல்லூரி மாணவி விடுதிகளை, முஸ்லிம் குழந்தைகளுக்காக மட்டும் திறக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)





அதேபோல, கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்காக இந்த ஆண்டு 37 புதிய பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை வழங்கியிருக்கிறார்கள். அதேபோல, கட்டடங்களுக்காக ஏறத்தாழ 1¼ கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அதேபோல, 3 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் ஆக்க வேண்டுமென்ற உத்தரவை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

அதேபோல, இந்தத் துறையிலே முன் தேதியிட்டு, பணி ஓய்வு பெற்றவர்கள்பற்றிய விவரங்களையெல்லாம் சரிபார்த்து—பல பேர் இறந்துபோய் இருக்கிறார்கள். 563 பேருக்கு ஓய்வூதியத்தை நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே பணிவன்போடு சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–40

இந்தத் துறையைப் பொறுத்தளவிற்கு இது எல்லோருடைய துறை. நாம் அத்தனைபேரும் இங்கே வெள்ளைச் சட்டை போட்டுக்கொண்டுப் படிக்கிறோம் என்று சொன்னால், இந்தத் துறை, இந்தத் துறையினுடைய பொறுப்பிலே முதலிலே இருந்தவர்கள் இந்தத் துறைக்காகப் பாடுபட்ட தலைவர்கள் எல்லாம் செய்த காரியங்கள், தியாகங்கள், போராட்டங்கள் மூலமாகத்தான் நாம் அத்தனைபேரும் சிறப்பான வாழ்க்கையைப் பெறுகிறோம் என்பதையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்கிற துறையாக இந்தத் துறை இருக்கிறது. ஆகவே, இந்தத் துறையின்மீது நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் மிகுந்த அக்கறை எடுத்திருக்கிறார்கள். இந்தத் துறையிலே இட ஒதுக்கீடு மட்டுமல்ல, எல்லா வகையிலும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் முன்னேறிய மக்களுக்கு ஈடு இணையாக வாழ்க்கையைப் பெறுகிறவரை தலைவர் கலைஞர் அவர்கள் நமக்காகப் போராடுவார்கள், போராடுவார்கள், போராடி வெற்றியைப் பெற்றுத் தருவார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்கள், வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கின்றீர்கள். இன்னும் பேசினால் நேரம் அதிகமாகிவிடும். வெட்டுத் தீர்மானங்களைப் படித்துப் பார்த்திருக்கிறேன். அதற்கு வேண்டிய நல்ல நடவடிக்கை எடுக்கிறேன். இங்கே அறிவிப்புகளையெல்லாம் கொடுத்திருக்கிறோம். அந்த அறிவிப்புகளை@ நான் அறிவித்ததாக எடுத்துக்கொண்டு அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

@ 241 முதல் 251 வரையிலான பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனைபேரும் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க.வினுடைய திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திருமதி பதர் சயீத் அவர்கள், கடந்த ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக என்ன கொள்கை விளக்கக் குறிப்பு கொடுத்தார்களோ, அதனுடைய Xerox copy-தான் இது என்று சொன்னார்கள். நான் அவர்களிடத்திலேயிருந்து இதை எதிர்பார்க்கவில்லை. வேறு அ.தி.மு.க. உறுப்பினர் யாராவது சொல்லியிருந்தால்கூட நான் அதை ஏற்றுக்கொள்வேன். அவர்கள் படித்துப் பார்த்தார்களா என்று எனக்குத் தெரியாது. (குறுக்கீடு) படித்துப் பார்த்தார்களா என்று எனக்குத் தெரியாது. இந்த ஆண்டு மொத்தம் 64 பக்கம். Total number of pages is 64, whereas last year it was only 49. Not only that. (Interruption) For Tamil Nadu Wakh Board alone, last year we had allotted only Rs.82.50 lakhs. Last year an amount of Rs. 400.04 lakhs has been Provided under Part II Schemes. Whereas this year we have allotted Rs.451.61 lakhs (Thumping of desks) How can the Hon. Member say that it is a xerox copy? I am sorry to say this. I hope that she will withdraw these words. (Thumping of desks)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.வி. சண்முகம். *(குறுக்கீடுகள்)* மற்றவர்கள் எல்லாம் உட்காருங்கள்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நாட்டில் இருக்கின்ற முக்கியமான பிரச்சினை இட ஒதுக்கீடு பிரச்சினை. தினந்தோறும் நீதிமன்றங்களிலே தீர்ப்புகள் வந்துகொண்டிருக்கின்றன. நான்கு நாட்களுக்கு முன்புகூட ஒரு தீர்ப்பு உச்ச நீதிமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். 50 சதவீதத்திற்குமேல் இட ஒதுக்கீடு போகக் கூடாது என்று சொல்லியிருக்கின்றார்கள். நாம் 69 சதவீத இட ஒதுக்கீடு சட்டம் இயற்றி ஒன்பதாவது அட்டவணையிலே சேர்த்திருக்கின்றோம். 1998–லே நாடாளுமன்றத் தேர்தலிலே வெற்றிபெற்ற பிறகு அம்மா அவர்கள் வாஜ்பேயி அரசிலே





இடம்பெற்றபோதே அந்தச் செயல் திட்டத்திலே தமிழகத்திலே இப்போது நடைமுறையிலே இருக்கின்ற இந்த 69 சதவீத இட ஒதுக்கீட்டைப் பாதுகாக்கின்றவகையிலே இந்திய அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு நாங்கள் அந்த ஆட்சியிலிருந்து விலகி வந்தோம். நீங்கள் தொடர்ந்து அந்த ஆட்சியிலும் இருந்திருக்கிறீர்கள். இப்போது இருக்கின்ற ஆட்சியிலும் இருக்கிறீர்கள். 69 சத இட ஒதுக்கீட்டைப் பாதுகாக்கின்ற வகையிலே அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைக் கேட்க விரும்புகிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, 69 சதவீத இட ஒதுக்கீடு பெற்றுத் தருவதில் அ.தி.மு.க. எந்த அளவிற்கு கொள்கை முடிவோடு உணர்ச்சிபூர்வமாக இருக்கிறதோ, அதைவிட அதிகமாக தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் *(மேசையைத் தட்டும் ஒலி)* பல முறை மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி சட்டபூர்வமாக அதை ஆக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இந்த ஆட்சி நிச்சயமாக 69 சதவீத இட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தரும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினர் ஆணையத்திற்கு சட்ட அந்தஸ்து வழங்குவதற்கு உத்தரவிட்ட நமது தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்களுக்கும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1–45*

அதேபோன்று, இஸ்லாமிய இனப் பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகளுக்காக புதிய விடுதிகள் கட்ட வேண்டும்; அவர்கள் கல்வி வளர்க்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில், கடந்த காலத்தில் வைத்த கோரிக்கையையேற்று அறிவித்த, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றியை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[செல்வி கே. பாலபாரதி] [2008 ஏப்ரல் 29

இரண்டாவதாக, நல்ல இலக்கியப் புலமையோடு நம்முடைய வணிக வரித் துறை அமைச்சர் அவர்களுடைய உரை நிகழ்த்தப்பட்டிருந்தது. அதில் அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய அறிவிப்பில், 6—வது பக்கத்தில், 'மகளிர் சமையல்', 'மகளிர் சமையல்' என்று குறிப்பிட்டு, அதிலே சோம்பு, கடுகு போன்றவற்றிற்கெல்லாம் வரி விலக்கு அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். மகளிர் சமையல் செய்தாலும், ஆண்கள் சமையல் செய்தாலும், அதே பொருட்களைத்தான் பயன்படுத்த முடியும். ஆகவே, இவ்வாறான ஒரு இலக்கியப் புலமைவாய்ந்த நமது துறையினுடைய அமைச்சர் அவர்கள், அது அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் என்று திருத்தம் கொண்டுவருவதற்கு முன்வர வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு, வனஸ்பதி, மைதா போன்ற பொருட்களுக்கும் மதிப்புக் கூட்டு வரியிலிருந்து வரி விலக்கு அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, சமையல் செய்வதிலிருந்து 'அம்பேல்' விட்டுவிட்டார் என்று தெரிகிறது. (சிரிப்பு) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக்



2008 ஏப்ரல் 29] [பேரவைத் தலைவர்]

கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.401,22,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.52,90,91,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### (ஆ) கோரிக்கை எண் 10 – வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 10 – வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.209,34,60,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

[பேரவைத் தலைவர்] [2008 ஏப்ரல் 29

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30-4-2008) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-47 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

– ஏதுமில்லை –

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

142. மானியக் கோரிக்கை எண் 9-பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

143. மானியக் கோரிக்கை எண் 9-பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை – சிறுபான்மையினர் நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

144. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய "மக்கள் சாசனம்", 2008. (தமிழ், ஆங்கிலம்)

145. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

146. மானியக் கோரிக்கை எண் 10-வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

147. வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய "மக்கள் சாசனம்", 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

148. நெடுஞ்சாலைகள் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது மாண்புமிகு நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)



2008 ஏப்ரல் 29]

149. நெடுஞ்சாலைகள் துறையினால் 2006-2007 மற்றும் 2007-2008 ஆம் ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். (தமிழ்)

150. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று மூன்றாவது அறிக்கை. (2007-2008)

151. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று நான்காவது அறிக்கை. (2007-2008)

152. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று ஐந்தாவது அறிக்கை. (2007-2008)

153. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று ஆறாவது அறிக்கை. (2007-2008)

---

## இணைப்பு—I

*(89ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

### முன்னுரை

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு சமூக நீதி வழங்குவது மற்றும் அதிகாரமளிப்பது ஆகியவற்றில் தமிழ்நாடு அரசு எப்பொழுதும் கவனம் செலுத்தி வருகிறது. சமூக ரீதியிலான பிற்படுத்தப்பட்ட நிலையிலுள்ள மக்களுக்குக் கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றம் எட்டாக்கனியாகவே இருந்து வந்துள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது. பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் நலனுக்காக இவ்வரசு தீட்டும் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்துவதற்காகப் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம் ஆகியன முறையே 1969 மற்றும் 1989 ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்டன. **மாநிலத்தில் உள்ள சிறுபான்மையினரின் வளர்ச்சியில் கவனம் செலுத்தும் பொருட்டு சிறுபான்மையினர் நல இயக்ககம் 2007 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

2. சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்குக் கல்வியே சிறந்த சாதனமாகும். எனவே, இந்தத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டில் பெரும் பங்கு கல்விக்காகச் செலவிடப்படுகிறது. மேலும், கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் வழங்கப்படும் இடஒதுக்கீடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் உயர் கல்வி பெறுவதற்கும், அரசுப் பணிகளில் வேலை வாய்ப்புப் பெறுவதற்கும் வழிவகை செய்கிறது. பல்வேறு தொழில்களில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிப்பதன்மூலம் இவ்வகுப்பினர் வேலைவாய்ப்புப் பெறவும், சுய தொழில் தொடங்கவும் ஏதுவாக அமைகிறது. கல்வி மேம்பாட்டின்மூலம் வேலைவாய்ப்பினைப்

[2008 ஏப்ரல் 29

பெறுவதால் அவர்களது பொருளாதார நிலை உயர்கிறது. மேலும், கல்வி மற்றும் பொருளாதார நிலை ஆகியவற்றில் ஏற்படும் முன்னேற்றம் சமூக நிலையிலும் அவர்கள் உயர்வடைய வழி வகுக்கிறது.

**இடஒதுக்கீடு**

3. *"சம நிலையில் உள்ளவர்களைச் சமத்துவமற்ற முறையில் நடத்துவது நியாயமற்றது. இதுபோன்றே சமநிலையில் இல்லாதவர்களைச் சமமாக நடத்துவதும் நியாயமற்றது"* என்று தலைசிறந்த தத்துவ மேதை அரிஸ்டாட்டில் வாதிட்டார். பிறப்பால் அனைவரும் சமம் என்ற போதிலும், சுற்றுப்புறத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வான பண்பாட்டு வாழ்வு நிலைகள், சமுதாயத்தின் வெவ்வேறு தட்டுகளைச் சார்ந்த குழந்தைகளின் திறன் வேறுபடக் காரணமாக அமைகின்றன. தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோரை இதர முன்னேறிய வகுப்பினருக்குச் சமமாகக் கொண்டுவருவதற்குக் கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்களில் இடஒதுக்கீடு அவசியமாகிறது. இதன் அடிப்படையிலேயே தமிழக அரசு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கான இடஒதுக்கீடு கொள்கையை வகுத்துச் செயல்படுத்தி வருவதுடன், இடஒதுக்கீடு சட்டத்தினைப் பாதுகாப்பதற்கு உறுதியான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

4. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொடர் முயற்சிகளின் விளைவாக மைய அரசின் உயர் கல்வி நிலையங்களில் இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவீத இடஒதுக்கீடு வழங்கி மத்திய அரசு சட்டம் பிறப்பித்துள்ளது. மத்திய அரசின் உயர் கல்வி நிலையங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டுச் சட்டத்தினைத் தொடர்ந்து பாதுகாப்பதிலும், தனியார் துறை வேலை வாய்ப்புகளில் இடஒதுக்கீடுப் பெறுவதற்கான அனைத்து முயற்சிகள் மேற்கொள்ளுவதிலும் இவ்வரசு உறுதியாகச் செயல்படும்.

5. 2006 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் உறுதியளித்தவாறு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள 30 விழுக்காடு இடஒதுக்கீட்டிலிருந்து, பிற்படுத்தப்பட்ட கிறித்தவர்களுக்கு 3.5 விழுக்காடு இடஒதுக்கீடும், பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கு 3.5 விழுக்காடு இடஒதுக்கீடும் வழங்கும் சட்டத்தினை இந்த அரசு இயற்றியுள்ளது.



2008 ஏப்ரல் 29]

**கல்வி**

6. ஒரு சமுதாயத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அவர்களின் கல்வியே அடிப்படையாக அமையும் என்பதால், பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினரின் கல்வி முன்னேற்றத்திற்காக இவ்வரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது. பெண்கள், அவர்களது குழந்தைகள் மற்றும் குடும்பத்தினர் வாழ்க்கையில் வலுவான தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர் என்பதால், பெண் கல்வியை ஊக்குவிப்பதில் இவ்வரசு முனைப்புடன் செயல்படுகிறது. ஊரகப் பகுதிகளிலுள்ள மாணவ, மாணவிகள் அதிக தூரம் சென்று கல்விப் பயில்வதில் உள்ள சிரமத்தைக் கருத்தில் கொண்டு கல்வி நிலையங்களுக்கு அருகிலேயே இவர்கள் தங்கிப் படிப்பதற்காக இலவச விடுதி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொருளாதார வசதி குறைவாக உள்ள மாணவ, மாணவிகள் தம் கல்வியைத் தொடர கல்வி உதவித் தொகைகள் வழங்குதல், சீருடை வழங்குதல் மற்றும் மாணவ, மாணவியர்களிடையே கல்வி பயிலும் எண்ணத்தை ஊக்குவிக்கப் பரிசுகள் வழங்குதல் போன்ற திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. மேலும், பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் கல்வி மேம்பாட்டிற்காக கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் இத்துறைமூலம் நடத்தப்பட்டு வருகின்றன. படிப்பில் சிறந்து விளங்கும் மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசுப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் 10 பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ, மாணவிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களின் விருப்பப்படி தமிழகத்திலுள்ள தலைசிறந்த தனியார் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் சேர்ந்து பயில்வதற்கு நிதியுதவி அளிக்கும் திட்டம் 2007-08 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்**

7. பிரமலைக் கள்ளர் சமுதாயத்தினரின் கல்வித் தரத்தினை மேம்படுத்தி அவர்களை ஏனைய சமுதாயத்தினருக்கு இணையாக முன்னேற்றமடையச் செய்யும் குறிக்கோளுடன் பிரமலைக் கள்ளர்கள் அதிகமாக வாழும் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் 260 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் இத்துறையால் நடத்தப்பட்டு வருகின்றன. 2007-08 ஆம் ஆண்டில் 3 ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 3 நடுநிலைப் பள்ளிகள்

11-98—14

[2008 ஏப்ரல் 29

உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. தற்போது இத்துறையின் கீழ் 19 மேல்நிலைப் பள்ளிகள், 23 உயர்நிலைப் பள்ளிகள், 31 நடுநிலைப் பள்ளிகள் மற்றும் 187 ஆரம்பப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்குப் போதிய கவனம் செலுத்தி பாடம் கற்பிக்க 1:40 என்ற ஆசிரியர் மாணவர் விகிதத்தில் கூடுதலாக 37 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

8. 2007-08 ஆம் ஆண்டில் தரம் உயர்த்தப்பட்ட 3 அரசு கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப் பள்ளிகளுக்கும், 3 அரசு கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் தலா 5 கணினிகள் மற்றும் ஓர் அச்சுப்பொறி இயந்திரம் ரூ.12.60 இலட்சம் செலவில் நடப்பாண்டில் வழங்கப்படும். இதன்மூலம் இப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் கணினி மூலமாகத் தங்களுக்குத் தேவையான பாடக் குறிப்புகளைப் பெற்றுக்கொள்ளவும், பொது அறிவை வளர்த்துக்கொள்ளவும் இயலும்.

9. 2008-09 ஆம் ஆண்டில் அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்த 7 பள்ளிகளில் 19 வகுப்பறை கட்டடங்களும், 4 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ஆய்வுக் கூடங்களும் முறையே ரூ.66.50 இலட்சம் மற்றும் ரூ.51.68 இலட்சம் செலவில் கட்டப்படும்.

நடப்பாண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் செயல்பாட்டிற்காக ரூ.3274.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவ, மாணவியருக்கான பரிசுத் திட்டம்**

10. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகள் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவதை ஊக்குவிக்கும் வகையில் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களிலுள்ள அனைத்து கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கும் பொதுவான பரிசுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி, 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் முதலிடம் மற்றும் இரண்டாமிடம் பெறுகின்ற மாணவர் அல்லது மாணவிக்குப் பரிசாக முறையே ரூ.3,000/- மற்றும் ரூ.2,000/- வழங்கப்படுகிறது. மூன்றாமிடம் பெறும் மாணவர் அல்லது மாணவியர் மூவருக்கு தலா ரூ.1,000/- பரிசாக வழங்கப்படுகிறது.



2008 ஏப்ரல் 29]

**எழுது பலகைகள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் பாடப் புத்தகங்கள் வழங்குதல்**

11. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு எழுது பலகைகளும், மூன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு நோட்டுப் புத்தகங்களும், ஒன்றாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்குப் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

2008-09 ஆம் ஆண்டில் எழுது பலகைகள், குறிப்பேடுகள் மற்றும் இலவச பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்திற்காக ரூ.45 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இலவச பாடப் புத்தகங்கள் வழங்குதல்**

12. அரசு, அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக உதவி பெறும் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/ மாணவிகளுக்கு அனைத்து பாடப் புத்தகங்களும் தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலமாக இலவசமாக வழங்கப்படுகின்றன.

**சீருடைகள் வழங்குதல்**

13. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கி 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கும் தலா 2 தொகுதி பாலிகாட்டன் சீருடைகள் வழங்கப்படுகின்றன. 2007-08 ஆம் ஆண்டில் சீருடைத் துணிகளின் தரத்தை மேம்படுத்தியதன்மூலமும், 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவியர்களுக்கு பாவாடை, தாவணிக்குப் பதிலாக 2 சுடிதார்கள் வழங்கப்பட்டதன்மூலமும் சீருடைகள் வழங்கும் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையான ரூ.1.55 கோடிக்கும் கூடுதலாக, ரூ.1.28 கோடி செலவிடப்பட்டு மொத்தம் ரூ.2.83 கோடிக்குச் சீருடைகள் வழங்கப்பட்டன.

2008-09 ஆம் ஆண்டில் சீருடை வழங்கும் திட்டத்திற்காக ரூ.284.32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கல்வி உதவித் தொகை திட்டங்கள்**

14. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர்களுக்குப் பள்ளிப் படிப்பு உதவித் தொகை, பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை மற்றும் இலவசக் கல்வி ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**பள்ளிப் படிப்பு உதவித் தொகை**

15. 2008-09 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு வரும் கல்வி ஆண்டிலிருந்து சிறப்புக் கட்டணம் இரத்து செய்யப்பட்டுள்ளதுடன், கல்வி உதவித் தொகை பெறுவதற்கான வருமான உச்சவரம்பு ரூபாய் 50,000/-லிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

16. 2007-08 ஆம் ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழிக் கல்வி பயிலும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர்கள் பொதுத் தேர்வுக்குக் கட்டணம் செலுத்துவதை இரத்து செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

17. எனவே, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பில் ஆங்கில வழிக் கல்வி பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர்க்கு எவ்வித நிபந்தனையின்றியும், பிற்படுத்தப்பட்டோர் இனத்தைச் சார்ந்த மாணவ, மாணவியரின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையுடனும் அவர்கள் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணம் முழுமையாக ஈடுசெய்யப்படுகிறது.

**ஆங்கில வழிப் படிப்பிற்கான படிப்புக் கட்டணம் (பள்ளிப் படிப்பு)**

18. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை ஆங்கில மொழி வழிக் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியரைப் பொறுத்தவரை அவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு மிகாமலும், குடும்பத்தில் வேறு பட்டதாரி எவருமில்லை என்ற நிபந்தனைக்குட்பட்டும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியரைப் பொறுத்தவரை எவ்வித





நிபந்தனையின்றியும் படிப்புக் கட்டணம் வழங்கப்படும். பள்ளிப் படிப்பு உதவித் தொகை திட்டத்தின்கீழ் 2008-09 ஆம் ஆண்டிற்கு ரூ.927.67 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை**

19. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பட்டப் படிப்பு பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் 2007-08 முதல் படிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

20. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பட்டப் படிப்புப் பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவிகளைப் பொறுத்தவரை அவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சிறப்புக் கட்டணம் மற்றும் புத்தகக் கட்டணம், தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படும். மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களைப் பொறுத்தவரை கலை மற்றும் அறிவியல் கல்லூரி பட்டப் படிப்புக்கு எவ்வித நிபந்தனையுமின்றி இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ் உதவித் தொகை வழங்கப்படும்.

21. பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்குப் பட்ட மேற்படிப்பு, தொழிற்பயிற்சி படிப்பு, பட்டயப் படிப்பு, தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சிப் படிப்பு ஆகியவற்றிற்கு அவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையின் அடிப்படையில் படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், புத்தகக் கட்டணம் ஆகியவை கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டவாறும், தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படும்.

22. 2007-08 ஆம் ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் மாலை நேர/இரண்டாவது ஷிப்ட் (second shift) வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ, மாணவியர்களுக்கும் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 29

23. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கில வழி 12 ஆம் வகுப்பு பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு எவ்வித நிபந்தனையின்றியும், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு அவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையுடனும் அவர்கள் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணம் முழுமையாக ஈடுசெய்யப்படும்.

**ஆங்கில வழி படிப்பிற்கான படிப்புக் கட்டணம் (பள்ளி மேற்படிப்பு)**

24. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் ஆங்கில வழிக் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு அவர்களின் பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் பட்டதாரி வேறு எவருமில்லை என்ற நிபந்தனைக்குட்பட்டும், மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியருக்கு நிபந்தனைகள் ஏதுமின்றியும் படிப்புக் கட்டணம் ஈடு செய்யப்படும்.

பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை திட்டத்திற்காக 2008-09 ஆம் ஆண்டிற்கு ரூ.3220.38 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இலவசக் கல்வித் திட்டம்**

25. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பட்டப் படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியரின் பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடனும், மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியரைப் பொறுத்தவரை எவ்வித நிபந்தனையின்றியும் இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ் சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் ஆகியவை அரசு நிர்ணயித்த அளவிலும், தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படும்.

26. பட்டயப் படிப்பு மற்றும் தொழிற்கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியரின் பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்



2008 ஏப்ரல் 29]

மற்றும் குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, கல்விக் கட்டணம், சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் ஆகியவை அரசு நிர்ணயித்த அளவிலும், தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படும்.

இலவசக் கல்வித் திட்டத்திற்காக 2008-09 ஆம் ஆண்டில் ரூ.6089.89 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**பரிசுத் திட்டங்கள்**

27. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2008-09 ஆம் ஆண்டு முதல், பரிசுகள் வழங்கும் திட்டம் திருத்தியமைக்கப்பட்டு பரிசுகளின் எண்ணிக்கையும், பரிசுத் தொகையும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

**மாநில அளவிலான பரிசுகள்**

28. இத்திட்டத்தின்கீழ் இதுவரை ஆண்டுதோறும் மாநில அளவில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்ட/மிகப் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் பொதுவான பரிசு வழங்கப்பட்டு வந்தது. 12 ஆம் வகுப்பைப் பொறுத்தவரையில் முதல் மதிப்பெண் பெறும் மாணவ, மாணவி பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவராக இருந்தால் அவருக்கு ரூ.3,000/-மும், மிகப் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்திருந்தால் அவருக்கு ரூ.5,000/-மும், 10 ஆம் வகுப்பைப் பொறுத்தவரையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவராக இருந்தால் ரூ.1,500/-ம், மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்தவராக இருந்தால் ரூ.3,000/-மும் வழங்கப்பட்டு வந்தது.

29. 2008-09 ஆம் ஆண்டு முதல் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெறும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட /சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்குமாக மொத்தம் 4 முதல் பரிசுகள் தலா ரூ.10,000/- வீதமும், 4 இரண்டாம் பரிசுகள் தலா ரூ.8,000/- வீதமும், 4 மூன்றாம் பரிசுகள் தலா ரூ.6,000/- வீதமும் வழங்கப்படும்.

[2008 ஏப்ரல் 29

30. அதேபோல், 10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெறும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும், மிகப் பிற்படுத்தப்பட்ட/ சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்குமாக மொத்தம் 4 முதல் பரிசுகள் தலா ரூ. 5,000/- வீதமும், 4 இரண்டாம் பரிசுகள் தலா ரூ. 4,000/- வீதமும், 4 மூன்றாம் பரிசுகள் தலா ரூ. 3,000/- வீதமும் வழங்கப்படும்.

### மாவட்ட அளவிலான பரிசுகள்

31. இதுவரை 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட/ சீர்மரபினர் வகுப்புகளுக்குப் பொதுவாக முதல் மதிப்பெண் பெற்ற மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டு வந்தன. பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவராக இருந்தால் ரூ.1,500/-ம், மிகப் பிற்படுத்தப்பட்ட / சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்தவராக இருந்தால் ரூ.3,000/-மும் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டு வந்தது. அதேபோன்று, 10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவர் மற்றும் மாணவியருக்குப் பொதுவாக 2 முதல் பரிசுகள், 2 இரண்டாம் பரிசுகள் மற்றும் 2 மூன்றாம் பரிசுகள் வழங்கப்பட்டு வந்தன. பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவர்/மாணவியாக இருப்பின் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகள் முறையே ரூ.500/-, ரூ.250/- மற்றும் ரூ.150/- ஆகவும், மிகப் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்தால் முறையே ரூ.1,000/-, ரூ.500/- மற்றும் ரூ.300/- ஆகவும் வழங்கப்பட்டு வந்தன.

32. 2008-09 ஆம் ஆண்டு முதல் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தைப் பெறும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும், மிகப் பிற்படுத்தப்பட்ட / சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்குமாக 4 முதல் பரிசுகள் தலா ரூ.3,000/- வீதமும், 4 இரண்டாம் பரிசுகள் தலா ரூ.2,000/-வீதமும், 4 மூன்றாம் பரிசுகள் தலா ரூ.1,000/-வீதமும் வழங்கப்படும்.



2008 ஏப்ரல் 29]

33. அதேபோன்று 10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெறும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்குமாக மொத்தம் 4 முதல் பரிசுகள் தலா ரூ.1,500/- வீதமும், 4 இரண்டாம் பரிசுகள் தலா ரூ1,000/- வீதமும், 4 மூன்றாம் பரிசுகள் தலா ரூ.500/- வீதமும் வழங்கப்படும்.

### பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு

34. 2007-08 ஆம் ஆண்டு வரை 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் முதல் மற்றும் இரண்டாம் மதிப்பெண்கள் பெற்று தொழிற் கல்லூரியில் சேர்ந்து பயிலும் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த 2 மாணவர்கள் மற்றும் 2 மாணவிகளுக்கு அப்படிப்பிற்கான காலத்திற்கு, ஆண்டொன்றுக்கு ரூ.3,000/- வீதம் பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு வழங்கப்பட்டு வந்தது. நடப்பு ஆண்டு முதல் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த பரிசுத் தொகை ரூ.3,000/-லிருந்து ரூ.5,000/-ஆக உயர்த்தப்பட்டு, பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த 2 மாணவர்களுக்கும், 2 மாணவிகளுக்கும் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த 2 மாணவர்களுக்கும், 2 மாணவிகளுக்கும் அப்படிப்பிற்கான காலத்திற்கு, பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு வழங்கப்படும்.

### தந்தை பெரியார் நினைவுப் பரிசு

35. 2007-08 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில்நுட்பப் பட்டயப் படிப்பில் சேர்ந்துள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட / சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவர்களுள் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ள முதல் 2 மாணவர்களுக்கும், 2 மாணவிகளுக்கும் தந்தை பெரியார் நினைவுப் பரிசாக தலா ரூ.3,000/- வீதம் வழங்கப்பட்டு வந்தது. நடப்பு ஆண்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த 2 மாணவர்களுக்கும், 2 மாணவிகளுக்கும், மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த 2 மாணவர்களுக்கும், 2 மாணவிகளுக்கும் தலா ரூ.5,000/-வீதம் தந்தை பெரியார் நினைவுப் பரிசு வழங்கப்படும். 2008-09 ஆம் ஆண்டில் பரிசுகள் வழங்குவதற்காக ரூ.108.52 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 29

### பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெறும் மாணவ, மாணவியர்களுக்கு தமிழகத்தின் சிறந்த பள்ளிகளில் சேர்ந்து மேல்நிலைக் கல்வி பயில்வதற்கான உதவித் திட்டம்

36. ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசுப் பள்ளிகளில் படித்து பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த 3 மாணவர்கள், 3 மாணவியர்கள் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 2 மாணவர்கள், 2 மாணவியர்கள் ஆகமொத்தம் 10 பேர்களைத் தேர்வு செய்து அவர்கள் விரும்புகின்ற, தமிழகத்திலுள்ள தலைசிறந்த தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் சேர்ந்து மேல்நிலைக் கல்வி பெற அரசு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் உதவிபெறும் மாணவ, மாணவியரின் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். இத்திட்டத்தின்கீழ், ஒரு மாணவருக்கு ஆண்டிற்கு ரூ.28,000/-க்கு மிகாமல் இரண்டாண்டுகளுக்கு ரூ.56,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக 2008-09 ஆம் ஆண்டில் ரூ.168 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### கிராமப்புற மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பள்ளி மாணவிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம்

37. கிராமப்புறப் பெண்களின் கல்வியை ஊக்குவிப்பதையும், பெண் குழந்தைகள் ஆரம்பக் கல்வியை இடையில் கைவிடுவதைத் தடுப்பதையும் நோக்கமாகக் கொண்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவியர்களுக்கு ரூ.500/-வீதமும், 6 ஆம் வகுப்பில் பயிலும் இவ்வின மாணவியர்களுக்கு ரூ.1,000/- வீதமும் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் 90,000 மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவியர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

இத்திட்டத்திற்காக 2008-09 ஆம் ஆண்டில் ரூ.600 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### இலவச மிதிவண்டி வழங்கும் திட்டம்

38. அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசிடமிருந்து பகுதியாக நிதியுதவி பெற்று செயல்படும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் பயிலும்



2008 ஏப்ரல் 29]

அனைத்து இனத்தைச் சார்ந்த மாணவ, மாணவிகளுக்கும் இலவசமாக மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. 2006-07 ஆம் ஆண்டு முதல் இலவச பேருந்து அனுமதி அட்டை பெறும் மாணவ, மாணவியர்களுக்கும் இத்திட்டத்தின்கீழ் இலவச மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த 3,78,582 மாணவ, மாணவிகளுக்கு ரூ.8118.63 இலட்சம் செலவில் இலவச மிதிவண்டிகள் வழங்கப்பட்டன. 2008-09 கல்வியாண்டின் தொடக்கத்திலேயே 11 ஆம் வகுப்புப் பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்காக நடப்பாண்டில் ரூ.8073.72 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### விடுதிகள்

39. பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் பொருளாதார சிரமமின்றி தங்கள் கல்வியைத் தொடர தமிழகத்தில் 50 கல்லூரி மாணவியர் விடுதிகளும், 72 கல்லூரி மாணவர் விடுதிகளும், 362 பள்ளி மாணவியர் விடுதிகளும், 697 பள்ளி மாணவர் விடுதிகளும் ஆகமொத்தம் 1,181 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள் 2006-07 ஆம் ஆண்டில் 50 விடுதிகளும், 2007-08 ஆம் ஆண்டில் 50 விடுதிகளும் ஆகமொத்தம் 100 விடுதிகள் புதிதாக இவ்வரசால் தொடங்கப்பட்டுள்ளன. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ், மாணவிகளுக்கு உணவு மற்றும் உறையுள் இலவசமாக அளிக்கப்படுகின்றன. 2007-08 ஆம் ஆண்டில் இவ்விடுதிகளில் 65,402 மாணவ, மாணவிகள் தங்கிப் பயன்பெற்றுள்ளனர்.

40. மேலும் அதிக மாணவ, மாணவியர்கள் தங்கிப் பயில உதவும் வகையில் நடப்பாண்டில் 25 புதிய விடுதிகள் திறக்கப்படும்.

41. தற்போதுள்ள விலைவாசி ஏற்றத்தைக் கருத்தில் கொண்டு 1.6.2007 முதல் பள்ளி விடுதி மாணவ, மாணவியர்களுக்கான மாத உணவுக் கட்டணம் ரூ.300/-லிருந்து ரூ.400/-ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியர்களுக்கான மாத உணவுக் கட்டணம் ரூ.400/-லிருந்து ரூ.500/- ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக 2007-08 ஆம் ஆண்டில் ரூ.6.89 கோடியை அரசு கூடுதலாகச் செலவிட்டுள்ளது. உணவுக் கட்டணத்தை மேலும் அதிகரிக்க

[2008 ஏப்ரல் 29

வேண்டுமென்று வரப்பெற்ற கோரிக்கைகளின் அடிப்படையில், விடுதி மாணவ, மாணவிகளுக்கான மாத உணவுக் கட்டணம் மேலும் ரூ.50/- உயர்த்தப்பட்டு, வரும் கல்வி ஆண்டிலிருந்து பள்ளி விடுதி மாணவ, மாணவியர்களுக்கு மாதம் ரூ.450/- ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியர்களுக்கு மாதம் ரூ.550/- ஆகவும் வழங்கப்படும்.

42. மொத்தமுள்ள 1,181 விடுதிகளில் 773 விடுதிகள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 240 விடுதிகளுக்கான சொந்தக் கட்டடம் கட்டும் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. 2007-08 ஆம் ஆண்டில், சொந்தக் கட்டடம் இல்லாத விடுதிகளுக்கு 50 மாணவர்கள் தங்கும் வசதி கொண்ட 25 விடுதிகளும், 100 மாணவர்கள் தங்கும் வசதி கொண்ட 25 விடுதிகளும் ஆகமொத்தம் 50 விடுதிகள் ரூ. 32.15 கோடி செலவில் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

நடப்பாண்டில் மேலும் 25 விடுதிகளுக்கு ரூ.12.5 கோடி மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

43. 2007-08 ஆம் ஆண்டு முதல் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகளுக்குப் பல்வகைச் செலவினங்களுக்காக ஏற்கெனவே வழங்கப்பட்ட தொகை ரூ.15/-லிருந்து ரூ.25/- ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு ரூ.15/-லிருந்து ரூ.35/- ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

44. 2007-08 ஆம் ஆண்டில் ரூ.150 இலட்சம் செலவில் 126 விடுதிகளுக்கு சூரிய ஒளிமூலம் நீரை சூடுபடுத்தும் கருவிகளும், ரூ.17.70 இலட்சம் செலவில் 118 கல்லூரி விடுதிகளுக்கு மின்மாற்றிகளும் (Inverters), ரூ.44 இலட்சம் செலவில் 400 விடுதிகளுக்குக் குடிநீர் சுத்திகரிப்புக் கருவிகளும், ரூ.7.28 இலட்சம் செலவில் அனைத்து விடுதிகளுக்கும் முதலுதவிப் பெட்டிகளும், ரூ.55.20 இலட்சம் செலவில் 690 விடுதிகளுக்கு மாவரைக்கும் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

45. மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி கள்ளர் மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகளில் தங்கிப் பயில்வோர் அதிக எண்ணிக்கையில் இருப்பதால், அவர்களுக்கான உணவு தயாரிப்பதற்கு ரூ.25 இலட்சம் செலவில் கொதிகலன்களுடன்கூடிய நீராவி சமையல் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

46. 2008-09 ஆம் ஆண்டில் பின்தங்கியுள்ள ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள 25 பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிகளில் தங்கிப் பயிலும்



2008 ஏப்ரல் 29]

மாணவிகள் கணினியின் பயன்பாடுகளை அறிந்துகொள்ளவும், பாடக் குறிப்புகளைத் தெரிந்துகொள்ளவும் ஏதுவாக ரூ.63.00 இலட்சம் செலவில் தலா 5 கணினிகள் வழங்கப்படுவதுடன், பயிற்றுநர்களும் நியமிக்கப்படுவார்கள்.

விடுதிகளின் நிர்வாகம், பராமரிப்பு மற்றும் உணவுச் செலவினங்கள் போன்றவற்றிற்காக 2008-09 ஆம் ஆண்டிற்கு ரூ.9,506.77 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம்**

47. அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 39 தனியார் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் உள்ள பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் வகுப்பு மாணவர்களுக்கு உணவு மானியம் ஒரு மாணவருக்கு மாதம் ரூ.200/- வீதம் 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது.

அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியரின் உணவு மானியத்திற்காக நடப்பாண்டில் ரூ.34.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்**

48. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவர்கள் சுயதொழில்கள்மூலம் பொருளாதார மேம்பாடு அடைய இலவச சலவைப் பெட்டிகள் வழங்குதல், இலவச தையல் இயந்திரங்கள் வழங்குதல் மற்றும் பல்வேறு வேலைவாய்ப்புக்கான பயிற்சி அளித்தல் போன்ற திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. மேலும், சுயதொழில் தொடங்குவதற்காகக் குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படுகிறது.

**தையல் இயந்திரங்கள் வழங்குதல்**

49. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரில் கிராமப்புறங்களில் ஆண்டு வருமானம் ரூ.16,000/-க்கு மிகாமலும், நகர்ப்புறங்களில் ஆண்டு வருமானம் ரூ.24,000/-க்கு மிகாமலும் ஏழ்மை நிலையிலுள்ளவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 2008-09 ஆம் ஆண்டில் ரூ.66.63 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 29

**இலவச சலவைப் பெட்டிகள் வழங்கும் திட்டம்**

*50.* சலவைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களில் கிராமப்புறத்தைப் பொறுத்தவரை ரூ.16,000/-க்கு மிகாமலும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரை ரூ.24,000/-க்கு மிகாமலும் ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு சலவைப் பெட்டிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 2008-09 ஆம் ஆண்டில் ரூ.85 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பயிற்சிகளும் வேலைவாய்ப்புத் திட்டங்களும்—**

**இந்திய குடிமைப் பணிகளுக்கான பயிற்சி**

*51.* சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் பின்தங்கியுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த மாணவ, மாணவியரும் இதர வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு இணையாகத் திறமையை வளர்த்துக்கொண்டு இந்திய குடிமைப் பணித் தேர்வுகளில் வெற்றி பெறத் தேவையான பயிற்சி சென்னையில் அண்ணா மேலாண்மை நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையத்தில் மேற்கண்ட பிரிவைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் வருமான வரம்பின்றி சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். இருப்பினும், பயிற்சி நிலையத்துடன்கூடிய விடுதியில் தங்குவதற்கு மாணவ, மாணவிகளின் பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். விடுதியில் தங்கிப் பயிற்சி பெறும் மாணவ, மாணவியரின் உணவுச் செலவுக்காக மாதமொன்றுக்கு ரூ.600/- வீதம் உணவுக் கட்டணம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக நடப்பாண்டில் ரூ.44.83 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம்**

*52.* பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த இளைஞர்கள் வேலைவாய்ப்புக்கான திறன் பெற்றிடவும், வருவாய் ஈட்டும் சுயதொழில் தொடங்கிடவும் இத்துறை மூலமாக தேவையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சிக்கான கட்டணத் தொகை முழுவதையும் அரசே ஏற்கிறது. 2007-08 ஆம் ஆண்டில் 258 பெண்களுக்கு விமான பணிப்பெண் பயிற்சி அளிப்பது உள்ளிட்ட 47 வகையான வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டங்களில் பயனாளிகள் சேர்க்கப்பட்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் மத்திய, மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள்மூலமாக பிளாஸ்டிக் பதனம் செய்யும் இயந்திரம் இயக்குதல், காலணி மற்றும் தோல் பொருள் தயாரித்தல், ஆடை தயாரித்தல், ஆடை வடிவமைத்தல், கனரக வாகனம் ஓட்டுதல், உணவக நிர்வாகம், கணினி பயிற்சிகள் போன்ற வேலைவாய்ப்பு நோக்கிலமைந்த பல்வகையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. 2007-08 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் ரூ.10 கோடி செலவில் 6,730 பிற்படுத்தப்பட்ட இனத்தவரும் 5,842 மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தவரும் பயன் பெற்றுள்ளனர்.



2008 ஏப்ரல் 29]

2008-09 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் ரூ.10 கோடி செலவில் 10,000 இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கும் வகையில் செயல்படுத்தப்படும்.

**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்**

*53.* பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தவர்களில் கிராமப்புறங்களைப் பொறுத்தவரை குடும்ப வருமானம் ஆண்டொன்றுக்கு ரூ.40,000/-க்கு மிகாமலும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரை ரூ.55,000/-க்கு மிகாமலும் உள்ளவர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்குத் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் குறைந்த வட்டியில் கடன் வழங்கி வருகிறது. இந்நிறுவனம் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த தனிநபர், குழுக்கள் மற்றும் சங்கங்களுக்குக் குறைந்த வட்டியில் சாத்தியக்கூறு உள்ள தொழில் மற்றும் வியாபாரம் சார்ந்த திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குகிறது.

*54.* இந்நிறுவனம், புதுதில்லியிலுள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மாநில முகமையாகச் செயல்படுகிறது. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அதன் துணை முகமையாகச் செயல்படும். தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், கூட்டுறவு வங்கிகள், தனியார் மற்றும் அரசுடமையாக்கப்பட்ட வங்கிகள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் இணையம் (ஆவின்) ஆகியவற்றின்மூலம் கடனுதவி வழங்கி வருகிறது.

[2008 ஏப்ரல் 29

55. இந்நிறுவனம் 1993-94 ஆம் ஆண்டு முதல் இதுவரை தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ.10,741.29 இலட்சம் காலக்கடனாகப் பெற்று பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்குக் கடனாக வழங்கியுள்ளது.

56. இக்கழகம் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களின் உறுப்பினர்களுக்கும், தனிநபர்களுக்கும் பொதுக் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் 6 விழுக்காடு வட்டியில் இதுவரையில் 46,298 பேர்கள் பயன்பெறும் வகையில் மொத்தம் ரூ.5,729.97 இலட்சம் கடன் வழங்கியுள்ளது. மகளிர்க்கான புதிய பொற்காலத் திட்டத்தின்கீழ், 4 விழுக்காடு வட்டியில் ரூ.198.33 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. மகளிர், சமுதாயத்தில் சமநிலைப் பெறுவதை உறுதி செய்யவும், சுய சார்புடன் செயல்படவும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ.10,000/- வீதம் மகளிர் சுய உதவிக் குழு ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரை 4 விழுக்காடு வட்டியில் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 1,63,267 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு 4 விழுக்காடு வட்டியில் ரூ.6,368.66 இலட்சம் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

2007-08 ஆம் ஆண்டில் 32,535 பயனாளிகளுக்கு ரூ.30.10 கோடி தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

2008-09 ஆம் ஆண்டில் 35,000 பேர்கள் பயனடையும் வகையில் ரூ.30 கோடி கடனுதவி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதிகளை அமைக்க மானியத்துடன் கூடிய கடன் அளிக்கும் திட்டம்

57. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதிகளை அமைப்பதற்கு மானியத்துடன்கூடிய கடன் வழங்கும் திட்டம் 2007-08 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பயனாளி ஒருவருக்கு ரூ.1 இலட்சம் வரை



2008 ஏப்ரல் 29]

50 சதவிகித மானியத்துடன்கூடிய கடன் வழங்கப்படும். இத்திட்டத்திற்காக 2007-08 ஆம் ஆண்டில், 5,000 விவசாயக் குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், இத்திட்டத்தின்கீழ் 500 பயனாளிகளுக்குப் புதிய மின் இணைப்புகள் தமிழக மின்சார வாரியத்தால் முன்னுரிமை அடிப்படையில் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை 2008-09 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்திட ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம்

58. 2001-02 ஆம் ஆண்டு முதல் 2005-06 ஆம் ஆண்டு வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் இவ்வரசு பொறுப்பேற்றவுடன் 2006-07 முதல் மீண்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தைத் திறம்படச் செயல்படுத்திட 15 மாவட்டங்களில் தனி வட்டாட்சியர் மற்றும் சார் அலுவலர்களுடன்கூடிய நில எடுப்புப் பணியாளர்கள் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இத்திட்டத்தின்கீழ் 2008-09 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காக ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

59. இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட இடங்களில் பயனாளிகள் வீடுகள் கட்டி குடியேறுவதை ஊக்குவிக்கும் வகையில், அப்பகுதிகளுக்குச் சாலை வசதி, தெரு விளக்குகள் அமைத்தல், குடிநீர் வசதி ஏற்படுத்துதல் மற்றும் கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## சீர்மரபினர் நல வாரியம்

60. சீர்மரபினர் சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலைகளில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றம் அடைவதைக் கண்காணிக்கவும், அவர்களின் முன்னேற்றத்திற்கான புதிய திட்டங்களை வகுக்க அரசுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கவும்,

[2008 ஏப்ரல் 29

"சீர்மரபினர் நல வாரியம்" மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் 2007 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு 20-4-2007 முதல் செயல்பட்டு வருகிறது. சீர்மரபினர் நல வாரியத்தில் உறுப்பினர்களைச் சேர்த்து அவர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவது போன்று, பல்வேறு நல உதவிகளும் வழங்கப்பட வேண்டும் என்று இவ்வரசு முடிவு செய்துள்ளது. மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் சீர்மரபினர் நல வாரியத்தில் உறுப்பினர்களைப் பதிவு செய்யும் அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த தொழிலாளர்களின் குடும்பங்களைக் கண்டறிந்து அடையாள அட்டைகள் வழங்கும் பணியினை மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் மேற்கொள்வார். சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 18 வயது முடிவடைந்த, ஆனால் 60 வயது முடிவடையாத ஒவ்வொருவரும் சீர்மரபினர் நல வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்யத் தகுதி பெற்றவராவர். அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவது போன்று, சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு, "விபத்து ஈட்டுறுதித் திட்டம், கல்வி உதவித் தொகை திட்டம், திருமண உதவித் தொகை திட்டம், மகப்பேறு உதவித் தொகை திட்டம் மற்றும் முதியோர் ஓய்வூதியத் திட்டம்" ஆகிய நலத் திட்டங்களின்கீழ் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்மூலம் உதவித் தொகை வழங்கப்படும்.

இத்திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூபாய் 2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது**

61. தமிழ்நாட்டில் சமூக நீதிக்காகப் போராடியவர்களைச் சிறப்பு செய்யும் பொருட்டு, சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது ஆண்டுதோறும் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது பெறுபவருக்கு ஒரு சவரன் தங்கப் பதக்கமும், ஒரு இலட்சம் ரூபாய் பொற்கிழியும் வழங்கப்படுகிறது. 2007 ஆம் ஆண்டுக்கான தந்தை பெரியார் விருது திரு. இரா.சு. கவிதைப்பித்தன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.



2008 ஏப்ரல் 29]

இத்திட்டத்திற்காக 2008-09 ஆம் ஆண்டில் ரூ.1.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்**

62. மண்டல் குழு வழக்கில் உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவையொட்டி, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்ப்பது மற்றும் பட்டியலில் இருந்து நீக்குவது தொடர்பாக பெறப்படும் கோரிக்கைகளைப் பரிசீலித்து அரசுக்குப் பரிந்துரை செய்வதற்கு "தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்" 1993 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலைத் திருத்தி அமைக்கும் பணியையும் இந்த ஆணையம் மேற்கொள்ளும்.

**ஈமச் சடங்குகளுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம்**

63. ஆண்டு வருமானம் ரூ.24,000/-க்கு உட்பட்ட மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவர்களின் குடும்பங்களில் இறப்பு ஏற்பட்டால், அவர்களது ஈமச் சடங்குகளை மேற்கொள்ள ரூ.500/- உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக நடப்பாண்டில் ரூ. 100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு வக்ஃபு வாரியம்**

64. தமிழ்நாட்டிலுள்ள வக்ஃபு நிறுவனங்களில் சிறப்பானதொரு நிருவாகத்தை ஏற்படுத்திடவும், அவற்றின் செயல்பாடுகளைக் கண்காணிக்கவும் தமிழ்நாடு வக்ஃபு வாரியம் 1958 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

வக்ஃபு சட்டத்தின்படி, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை வக்ஃபு வாரியம் திருத்தி அமைக்கப்படுகிறது. தற்போதைய வக்ஃபு வாரியம் 13 உறுப்பினர்களைக் கொண்டு 6-3-2007-ல் திருத்தி அமைக்கப்பட்டது.

65. தனியார் ஆக்கிரமிப்பிலுள்ள வக்ஃபு சொத்துக்களை மீட்பதற்கு, வக்ஃபு வாரியத்தின் முதன்மைச் செயல் அலுவலருக்கு எஸ்டேட் அலுவலருக்கான அதிகாரம் வழங்கும் வகையில், 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது கட்டடங்கள் (சட்ட விரோதமான ஆக்கிரமிப்பு அகற்றுதல்) சட்டம், பிரிவு 3-ல் உரிய திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 29

66. வக்ஃபு வாரிய நிருவாகச் செலவுகளுக்கு வக்ஃபு நிறுவனங்களிலிருந்து பெறப்படும் பங்குத் தொகை போதுமானதாக இல்லாமையால், அதனை ஈடுசெய்ய வக்ஃபு வாரியத்திற்கு அரசால் ஆண்டுதோறும் நிர்வாக மானியம் வழங்கப்பட்டு வருகிறது. 2007-08 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு நிருவாக மானியமாக அரசு ரூ.45 இலட்சம் அளித்துள்ளது. நடப்பாண்டிலும் இதற்காக ரூ.45 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

67. மசூதிகள் மற்றும் அடக்கத்தலங்களில் சிறு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளவும், அச்சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு சுற்றுச்சுவர் கட்டவும், முள்வேலி அமைக்கவும் அரசு ஆண்டுதோறும் ரூ.10 இலட்சம் நிதியுதவி அளித்து வருகிறது. இத்திட்டத்திற்காக 2008-09 ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

68. போதிய வருவாய் இல்லாத மசூதிகள் மற்றும் தர்காக்களின் கட்டடங்களைப் பழுதுபார்க்க 2007-08 ஆம் ஆண்டில் வக்ஃபு நிறுவனங்களுக்கு ரூ.52 இலட்சம் நிதியுதவியாக அரசு வழங்கியுள்ளது. 2008-09 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

69. இதுவரை உலமா ஓய்வூதியம் பெறும் பயனாளிகள் எண்ணிக்கை 2200 ஆக இருந்ததை, 2400 ஆக உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கூடுதலாக 200 உலமா ஓய்வூதியதாரர்கள் மாதம் ரூ.750/- ஓய்வூதியமாகப் பெறுவார்கள்.

70. தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தில் பதிவு பெற்றுள்ள வக்ஃபு நிறுவனங்களின் சொத்து, நிருவாகம் மற்றும் இதர விவரங்கள் அடங்கிய ஆவணங்கள் காலப்போக்கில் செல்லரித்து வீணாகி விடாமல் பாதுகாக்க அந்த ஆவணங்களை இலக்கப்பதிவு (Digitilization) செய்ய தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு 2008-09 ஆம் ஆண்டில் ரூ.5 இலட்சம் அரசு மானியமாக வழங்கப்படும்.

71. திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள சார் நிலை நீதிமன்றத்தை திருவள்ளூர் மாவட்ட எல்லைக்குட்பட்ட வக்ஃபு நிறுவனங்கள் மற்றும் அவற்றின் சொத்துக்கள் தொடர்பாக எழும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் திருவள்ளூர் மாவட்ட வக்ஃபு தீர்ப்பாயமாகச் செயல்பட ஆணையிடப்பட்டுள்ளது. இத்துடன் தமிழகத்தில் மொத்தம் 24 வக்ஃபு தீர்ப்பாயங்கள் செயல்பட்டு வருகின்றன.



2008 ஏப்ரல் 29]

**முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கங்கள்**

72. சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின் போது அறிவித்தபடி, சென்னையில் செயல்படுவது போன்று தமிழகத்தின் இதர 30 மாவட்டங்களிலும் முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கம் ஏற்படுத்த ஆணைகள் வெளியிடப்பட்டு, ஒவ்வொரு சங்கத்திற்கும் ரூ.1 இலட்சம் வீதம் 30 சங்கங்களுக்கும் ரூ.30 இலட்சம் வித்துத் தொகையாக (Seed Money) அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2007-08 ஆம் ஆண்டில் சென்னையில் செயல்படும் முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கத்திற்கு ரூ.2.19 இலட்சம் இணைத் தொகையாக (Matching Grant) அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மாநில ஹஜ் குழு**

73. தமிழ்நாட்டிலிருந்து புனித ஹஜ் பயணம் மேற்கொள்ளும் பயணிகளைத் தேர்வு செய்து அவர்களது புனிதப் பயணத்தினை இனிதே நிறைவேற்றத் தேவையான அனைத்துப் பணிகளையும் இந்திய ஹஜ் குழு மற்றும் மைய அரசின் வெளி விவகாரத் துறையின் நெறிமுறைகளின் அடிப்படையில் தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மேற்கொள்கிறது.

74. மத்திய ஹஜ் குழு சட்டம் 2002 பிரிவு 18(1) இன்படி அலுவல் சார் உறுப்பினர் - செயல் அலுவலருடன்கூடிய 16 உறுப்பினர்கள் அடங்கிய தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவினை 20-11-2006 அன்று தமிழக அரசு திருத்தி அமைத்தது.

75. இக்குழு புனிதப் பயணம் மேற்கொள்பவர்களைத் தெரிவு செய்த பின்னர், ஹஜ் பயணத்தின்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்துப் பயிற்சியளித்தல், மருத்துவ முகாம்கள் நடத்துதல், தனி விமானங்கள் ஏற்பாடு செய்தல், ஹஜ் பயணிகள் மெக்காவில் தங்குவதற்கான கட்டடங்களைத் தேர்ந்தெடுத்தல், பல்வேறு அரசுத் துறைகள், அலுவல்சாரா நிறுவனங்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்துதல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு, ஹஜ் பயணம் சிறப்பாக அமைய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

[2008 ஏப்ரல் 29

76. 2007-2008 ஆம் ஆண்டில் முதன்முறையாக கணினி உதவியுடன் குலுக்கல் முறையில் புனிதப் பயணம் மேற்கொள்ளும் ஹஜ் பயணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தமிழக அரசு ஒவ்வோர் ஆண்டும் மாநில ஹஜ் குழுவின் நிர்வாகச் செலவிற்காக ரூ.10 இலட்சம் வழங்கி வருகிறது. 2008-09 ஆம் ஆண்டிலும் இதற்காக ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புனிதப் பயணம் மேற்கொள்ளும் ஹஜ் பயணிகள் தங்குவதற்கு வசதியான கட்டடங்களைத் தேர்வு செய்வதற்காக கட்டடத் தேர்வுக் குழு உறுப்பினர் சவுதி அரேபியாவிற்குச் சென்று வருவதற்கான செலவினத்தையும், ஹஜ் பயணிகளுடன் சவுதி அரேபியா சென்று அங்கு பயணிகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்காக அனுப்பப்படும் ஹஜ் தொண்டர்களின் செலவிற்கான நிதியையும் தமிழக அரசு வழங்கி வருகிறது. 2007-08 ஆம் ஆண்டில் இதற்காக ரூ.8.53 இலட்சம் தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு அரசால் வழங்கப்பட்டுள்ளது. 2008-09 ஆம் ஆண்டில் இதற்காக ரூ.8.33 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2008–2009 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டங்கள்**

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்த செலவு | 2008-09-ல் செலவு |
|---|---|---|---|
| | பிற்படுத்தப்பட்டோர் நலன் | | |
| 1 | பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் 65402 மாணவ/மாணவிகளுக்கு உணவு உண்பதற்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்கள் வழங்குதல். | 49.05 | 49.05 |
| 2 | பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ/மாணவியருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையை உயர்த்துதல். | 80.87 | 80.87 |



2008 ஏப்ரல் 29]

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்த செலவு | 2008-09-ல் செலவு |
|---|---|---|---|
| 3 | பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககத்திற்குக் கூடுதலாக 5 கணினிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் அவற்றிற்கான அறைகலன்கள் வழங்குதல். | 2.50 | 2.50 |
| 4 | பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககத்தில் நேர்முக உதவியாளர், சிறப்பு அலுவலர், கணக்கு அலுவலர் ஆகியோருக்கு நேரடி தொலைபேசி வசதி செய்து தருதல். | 0.63 | 0.63 |
| 5 | ஊரகப் பகுதிகளில் கல்வியறிவில் பின்தங்கியுள்ள இடங்களில் அமைந்துள்ள 25 பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல கல்லூரி மாணவியர் விடுதிகளுக்குத் தலா 5 கணினிகள் வழங்குதல் (பயிற்றுநர்களுடன்). | 63.00 | 63.00 |
| | பிற்படுத்தப்பட்டோர் நலன் மொத்தம் | 196.05 | 196.05 |
| | சிறுபான்மையினர் நலன் | | |
| 1 | பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்ற சிறுபான்மையின மாணவர்களுக்கு மாநில, மாவட்ட அளவிலான பரிசுகள் வழங்குதல். | 6.30 | 6.30 |
| 2 | இனக்கலவரங்களில் பாதிக்கப்பட்ட மற்றும் சிறு குற்றங்களுக்காகத் தண்டனை பெற்று சிறையிலிருந்து வெளிவரும் சிறுபான்மையின மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம். | 30.00 | 30.00 |
| 3 | சிறுபான்மையினர் நல இயக்ககத்திற்குத் தொலைபேசி இணைப்புடன்கூடிய நிகரி இயந்திரம் வழங்குதல். | 0.15 | 0.15 |
| 4 | சிறுபான்மையினர் நல இயக்ககத்திற்கு டூப்ளெக்ஸ் வசதியுடன்கூடிய நகலெடுக்கும் இயந்திரம் வழங்குதல். | 1.40 | 1.40 |

[2008 ஏப்ரல் 29

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்த செலவு | 2008-09-ல் செலவு |
|---|---|---|---|
| 5 | சிறுபான்மையினர் நல இயக்ககத்திற்கு இரண்டு புதிய தொலைபேசி இணைப்புகள் வழங்குதல் | 1.14 | 1.14 |
| 6 | சிறுபான்மையினர் நல இயக்ககத்திற்கு ஒரு ஈப்பு வழங்குதல் | 6.14 | 6.14 |
| **சிறுபான்மையினர் நலன் மொத்தம்** | | **45.13** | **45.13** |
| **மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்** | | | |
| 1 | மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககத்திற்கு 6 கணினிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் 3 அச்சுப் பொறிகள் வழங்குதல் | 2.70 | 2.70 |
| 2 | மாவட்ட வருவாய் அலுவலகம் (கள்ளர் சீரமைப்பு), மதுரைக்கு 3 கணினிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் 1 அச்சுப் பொறி வழங்குதல் | 1.30 | 1.30 |
| 3 | மாவட்ட வருவாய் அலுவலர் (கள்ளர் சீரமைப்பு), மதுரைக்கு பொலிரோ ஈப்பு வழங்குதல் | 5.00 | 5.00 |
| 4 | மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககத்தின் நேர்முக உதவியாளர் மற்றும் கணக்கு அலுவலருக்குத் தனியாக ஒரு தொலைபேசி இணைப்பு வழங்குதல் | 0.30 | 0.30 |
| 5 | மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககத்திற்கு அகன்ற அலைவரிசையுடன் கூடிய இணைய தள இணைப்பு வழங்குதல் | 0.15 | 0.15 |
| 6 | நிலை உயர்த்தப்பட்ட 3 அரசு கள்ளர் சீரமைப்பு மேனிலைப் பள்ளிகள் மற்றும் 3 கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப் பள்ளிகளுக்கு 30 கணினிகள் மற்றும் 6 அச்சுப் பொறிகள் வழங்குதல் | 12.60 | 12.60 |
| 7 | 4 அரசு கள்ளர் சீரமைப்பு மேனிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக் கூடங்கள் கட்டுதல் | 51.68 | 51.68 |



2008 ஏப்ரல் 29]

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்த செலவு | 2008-09-ல் செலவு |
|---|---|---|---|
| 8 | 7 அரசு கள்ளர் சீரமைப்பு பள்ளிகளுக்கு 19 வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுதல் | 66.50 | 66.50 |
| **மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் மொத்தம்** | | **140.23** | **140.23** |
| **பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்** | | | |
| 1 | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு சீர்வளி சாதனங்கள் வாங்குதல் | 1.59 | 1.59 |
| 2 | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு கணினி மற்றும் அச்சுப் பொறிகள் வாங்குதல் | 1.03 | 1.03 |
| 3 | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு நிகரி வாங்குதல் | 0.08 | 0.08 |
| **பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் மொத்தம்** | | **2.70** | **2.70** |
| **தமிழ்நாடு ஹஜ் குழு** | | | |
| 1 | தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்காக நகலெடுக்கும் இயந்திரம் வாங்குதல் | 1.00 | 1.00 |
| **தமிழ்நாடு ஹஜ் குழு மொத்தம்** | | **1.00** | **1.00** |
| **தமிழ்நாடு வக்ஃபு வாரியம்** | | | |
| 1 | தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்குப் பராமரிப்பு பணிகளைச் செய்வதற்கான மானியம் | 60.00 | 60.00 |
| 2 | தமிழ்நாடு வக்ஃபு வாரிய அலுவலகத்தில் இலக்கப் பதிவாக்க முறை ஏற்படுத்த மானியம் | 5.00 | 5.00 |
| 3 | நீதிமன்ற ஆணையின்படி மணவிலக்குப் பெற்ற முஸ்லீம் பெண்களுக்கு வாழ்வாதாரச் செலவு வழங்க தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு மானியம் | 1.00 | 1.00 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்த செலவு | 2008-09-ல் செலவு |
|---|---|---|---|
| 4 | தமிழ்நாடு வக்ஃபு வாரிய அலுவலகத்தில் பார்வையாளர்களுக்கு இருக்கைகள் அமைக்க மானியம் | 0.50 | 0.50 |
| **மொத்தம் – தமிழ்நாடு வக்ஃபு வாரியம்** | | **66.50** | **66.50** |
| **பெரு மொத்தம்** | | **451.61** | **451.61** |

**முடிவுரை**

மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் பெரும்பான்மையாக உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளை மேம்படுத்த உறுதிபூண்டுள்ள இவ்வரசு, அதற்கான பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருவதில் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது.





## இணைப்பு

### 2008–09 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

| துறை | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தலைமைச் செயலகம் | 266.27 | – | – | 266.27 |
| வக்ஃபு, ஹஜ் குழு மற்றும் முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கம் | 339.85 | – | – | 339.85 |
| பிற்படுத்தப்பட்டோர் நலன் | 21203.83 | 2976.51 | – | 24180.34 |
| மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | 17893.16 | 2314.39 | – | 20207.55 |
| தமிழ்நாடு பிற்படுத்தப் பட்டோர் நல ஆணையம் | 46.84 | – | – | 46.84 |
| சிறுபான்மையினர் ஆணையம் | 33.39 | – | – | 33.39 |
| சிறுபான்மையினர் நலன் | 339.02 | 0.01 | – | 339.03 |
| **மொத்தம்** | **40122.36** | **5290.91** | – | **45413.27** |

[2008 ஏப்ரல் 29

## இணைப்பு–II

(89ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## சிறுபான்மையினர் நலன்

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பில் உள்ளது.)

**முன்னுரை**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் அந்நாட்டு மக்களின் ஒருமித்த சமநிலையிலான வளர்ச்சியைப் பொறுத்தே அமையும். இதனை நன்குணர்ந்துள்ள இவ்வரசு, பெரும்பான்மை மக்களுக்கு இணையாகச் சிறுபான்மையின மக்களின் சட்டரீதியான உரிமைகளைப் பாதுகாப்பதிலும், கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார நலன்களில் அவர்களுக்குரிய பங்கீடு கிடைப்பதை உறுதி செய்வதிலும் நாட்டிற்கே முன்னோடியாக விளங்குகிறது.

**சிறுபான்மையினர் நல இயக்ககம் தோற்றுவித்தல்**

2. சிறுபான்மையின மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டில் முழுக் கவனம் செலுத்தவும், இந்தியப் பிரதமரின் புதிய 15 அம்சத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தவும், நீதியரசர் இராஜேந்திர சச்சார் குழுவின் பரிந்துரைகளுக்குச் செயல்வடிவம் அளிக்கவும், சிறுபான்மையினர் நல இயக்ககம் இவ்வரசால் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டு 1-8-2007 முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வியக்ககம் சிறுபான்மையினரின் முன்னேற்றத்திற்கான பல்வேறு நலத் திட்டங்களை வகுத்து, அவை செம்மையாகச் செயல்படுத்தப்படுவதைக் கண்காணித்து வருகிறது. மேலும், சிறுபான்மையின மக்களின் முன்னேற்றத்திற்காகச் செயல்படுத்தப்படும் திட்டங்கள் முறையாக உரியவர்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவியாக அனைத்து மாவட்டங்களிலும் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களில் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.



2008 ஏப்ரல் 29]

**கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் தனி இட ஒதுக்கீடு**

3. சமுதாய முன்னேற்றத்திற்கும், ஆக்கபூர்வமான செயல்களில் மனிதன் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளவும் கல்வி ஒரு முக்கிய கருவியாகும். சிறுபான்மைச் சமூகத்தினர் கல்வி நிலையிலும் மற்றும் பொருளாதார ரீதியாகவும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, இவ்வரசு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்புப் பட்டியலில் உள்ள கிறித்துவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் தலா 3.5. விழுக்காடு- மொத்தம் ஏழு விழுக்காடு - தனி இட ஒதுக்கீடு வழங்கிச் சட்டம் இயற்றியுள்ளது. இந்த ஒதுக்கீடு 15-9-2007 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றுள்ள கிறித்துவர்கள் மற்றும் முஸ்லிம்களின் நெடுநாளைய கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

**கல்வி உதவித் தொகை**

4. பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள முஸ்லிம்களும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள கிறித்துவர்களும் இவ்வரசால் அளிக்கப்படும் பள்ளிப் படிப்பு உதவித் தொகை, பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை மற்றும் இலவசக் கல்வித் திட்டம் ஆகியவற்றின்கீழ் வழங்கப்படும் அனைத்து வகை உதவிகளையும் பெற்றுப் பயனடைந்து வருகின்றனர்.

இவை தவிர, சிறுபான்மையின மாணவ, மாணவிகளுக்காக மத்திய அரசு அறிவித்துள்ள கல்வி உதவித் தொகைத் திட்டங்களையும் இவ்வரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

**தகுதி அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டம் (Merit *cum* Means Scholarship)**

4. (i) தகுதி அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்குப் படிப்புக் கட்டணம் முழுமையாகவும், இதர கல்வி நிலையங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்குப் படிப்புக் கட்டணம் ரூ.20,000/- அல்லது அவர்கள் செலுத்திய கட்டணம் இதில் எது குறைவோ அத்தொகை ... பராமரிப்புக் கட்டணமாக விடுதி மாணவர்களாக

[2008 ஏப்ரல் 29

இருப்பின், மாதமொன்றுக்கு ரூ.1,000/- வீதமும், விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ.500/- வீதமும் 10 மாதங்களுக்கு வழங்கப்படும். இச்சலுகை பெற அவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். இத்திட்டத்தில் 30 விழுக்காடு பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2007-2008 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் தொழிற்கல்வி பயிலும் 753 சிறுபான்மையின மாணவ, மாணவியருக்குத் தகுதி அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் ரூ.2 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை (Post Matric Scholarship)**

4 (ii) 11 ஆம் வகுப்பிலிருந்து ஆராய்ச்சிப் படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு ரூ.3000/-லிருந்து ரூ.10,000/- வரை நுழைவுக் கட்டணம் மற்றும் படிப்புக் கட்டணமாகவும், 10 மாதங்களுக்கு மாதமொன்றுக்கு ரூ.140/-லிருந்து ரூ.510/- வரை பராமரிப்புக் கட்டணமாகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டில் தமிழகத்திலுள்ள 2,876 சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு ரூபாய் 95 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கான பரிசுகள் வழங்கும் திட்டம்**

5. சிறுபான்மையின மாணவ, மாணவியர் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறுவதை ஊக்குவித்தல், அறிவுத்திறனைப் பெருக்கிக் கொள்வதில் அவர்களிடையே போட்டி மனப்பான்மையை வளர்த்தல் போன்றவைமூலம் அவர்கள் தரமான உயர் கல்வி பயின்று வளமான எதிர்காலம் பெற உதவும் நோக்கத்துடன், 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்குப் பரிசளிக்கும் திட்டம் இவ்வாண்டு முதல் இவ்வரசால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**மாநில அளவிலான பரிசுகள்**

5 (i) இத்திட்டத்தின்கீழ், மாநில அளவில் 12 ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது மதிப்பெண்கள் பெறும் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த மாணவர்



2008 ஏப்ரல் 29]

ஒருவருக்கும், மாணவி ஒருவருக்குமாக 2 முதல் பரிசுகள் தலா ரூ.10,000 வீதமும், 2 இரண்டாம் பரிசுகள் தலா ரூ.8,000 வீதமும் 2 மூன்றாம் பரிசுகள் தலா ரூ.6,000 வீதமும் வழங்கப்படும்.

5(ii) அதேபோன்று, மாநில அளவில் 10 ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது மதிப்பெண்கள் பெறும் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்குமாக 2 முதல் பரிசுகள் தலா ரூ.5,000 வீதமும், 2 இரண்டாம் பரிசுகள் தலா ரூ.4,000 வீதமும், 2 மூன்றாம் பரிசுகள் தலா ரூ3,000 வீதமும் வழங்கப்படும்.

**மாவட்ட அளவிலான பரிசுகள்**

5 (iii) 12 ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும், முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது மதிப்பெண்களைப் பெறும் சிறுபான்மையின மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்குமாக மொத்தம் 2 முதல் பரிசுகள் தலா ரூ.3,000 வீதமும், 2 இரண்டாம் பரிசுகள் தலா ரூ.2,000 வீதமும், 2 மூன்றாம் பரிசுகள் தலா ரூ1,000 வீதமும் வழங்கப்படும்.

5 (iv) அதேபோன்று, 10 ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது மதிப்பெண்களைப் பெறும் சிறுபான்மையின மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்குமாக மொத்தம் 2 முதல் பரிசுகள் தலா ரூ.1,500 வீதமும், 2 இரண்டாம் பரிசுகள் தலா ரூ.1,000 வீதமும், 2 மூன்றாம் பரிசுகள் தலா ரூ.500 வீதமும் வழங்கப்படும்.

**உருதுமொழி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கான பரிசுத் திட்டம்**

6. உருது மொழியை முதல் அல்லது இரண்டாவது மொழியாகக் கொண்டு பயின்று 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும், முதல் மூன்று மாணவர்கள் மற்றும் மாணவியர்களுக்கு 10 ஆம் வகுப்பைப் பொறுத்தவரை முறையே தலா ரூ.2,000, ரூ.1,500 மற்றும் ரூ.1,000-மும், 12 ஆம் வகுப்பை பொறுத்தவரை முறையே தலா ரூ.3,000, ரூ.2,000 மற்றும் ரூ.1,000-மும் பரிசுத் தொகையாக வழங்கப்படுகிறது.

**கல்விக் கடன்**

7. உடனடி வேலைவாய்ப்புகளுக்கு உதவக்கூடிய வகையில் மத்திய/ மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகள்/ நிறுவனங்களில்

[2008 ஏப்ரல் 29

ஐந்தாண்டுகளுக்கு மிகாத படிப்புகளைப் பயில்வதற்கு ஏதுவாக பெற்றோரின் ஆண்டு வருமானம் அரசால் அறிவிக்கப்பட்ட வறுமைக்கோட்டிற்கான வருமான வரம்பின் இரு மடங்கிற்குக் குறைவான வருவாயுள்ள சிறுபான்மையினத்தைச் சார்ந்த 16 முதல் 32 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியருக்குக் கல்விக் கடன் வழங்கப்படும். பெண்கள் மற்றும் உடல் ஊனமுற்றவர்களுக்கு இக்கடனுதவி வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படும். இக்கடன் தொகை, முதல் ஆண்டு தொடங்கி ஆண்டொன்றுக்கு ரூ.50,000/-க்கு மிகாமல் அதிகபட்சமாக ஐந்தாண்டுகளுக்கு மொத்தம் ரூ.2.50 இலட்சம் கடன் வழங்கப்படும். இக்கடன் 3 விழுக்காடு சலுகை வட்டி விகிதத்தில் வழங்கப்படுகிறது. பயனாளி கல்வி முடித்து 6 மாதங்களுக்குப் பின் அல்லது வேலைக்குச் சென்றபின் இதில் எது முன்னதாக நிகழ்கிறதோ, அதிலிருந்து 60 மாதத் தவணைகளில் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்த வேண்டும். இக்கடன் மத்திய அரசு மற்றும் மாநில அரசின் பங்கேற்பு 90:10 என்ற விகிதத்தில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் வழங்கப்படுகிறது.

**பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்**

8. தமிழக அரசு சிறுபான்மையினர் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய, அவர்களின் வேலைவாய்ப்புகளுக்கு வழிவகுக்கும் திறன் வளர்ப்புப் பயிற்சிகள் அளித்தல் மற்றும் சுய தொழில் தொடங்குவதற்குத் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்மூலமாகக் கடனுதவி வழங்குதல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**திறன் வளர்ப்புப் பயிற்சிகள்**

8 (i) பெரும்பான்மையின மக்களுக்கு நிகராகச் சிறுபான்மையின மக்கள் சுய வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்ளவும், தனியார் துறைகளில் வேலைவாய்ப்புகளைப் பெற்றிடவும் ஏதுவாக, அவர்களது திறனை மேலும் மேம்படுத்தும் வகையில், தகவல் மற்றும் தொழில்நுட்பம், ஆயத்த ஆடை வடிவமைப்பு மற்றும் தயாரிப்பு, காலணிகள் வடிவமைப்பு, கணினி உதவியுடன் காலணி வடிவமைத்தல், கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி, போன்ற 14 வகையான தொழில்நுட்பச் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.2.50 கோடி செலவில் 5,000 சிறுபான்மையின மகளிர் மற்றும் இளைஞர்கள் பயனடைந்துள்ளனர்.



2008 ஏப்ரல் 29]

2008-2009 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் 5000 சிறுபான்மையின மகளிர் மற்றும் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்**

8 (ii) சிறுபான்மையினர் சுய தொழில்மூலம் தங்களது பொருளாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள உதவும் வகையில் அவர்களுக்குக் கடன் வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காகத் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1999 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் சிறுபான்மையினருக்குக் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்குகிறது. இக்கடன்கள் தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம், கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் சங்கம், தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி ஆகியவற்றின்மூலமாக வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பணி மேலும் வளர்ச்சியடையவும், சிறுபான்மையின மக்களுக்குக் கூடுதலாகக் கடனுதவி வழங்குவதற்கு வழி செய்யும் வகையிலும், 2007-2008 ஆம் ஆண்டில் இக்கழகத்திற்கு அரசு பங்கு மூலதனமாக ரூ.2 கோடி அளித்துள்ளது.

**தனி நபர் கடன்**

8(ii) (அ) சிறுபான்மையினர் பயனடையும் வகையில் அவர்கள் சொந்தமாகத் தொழில் தொடங்கிட அவர்களுக்கு 6 விழுக்காடு வட்டியில் தனி நபர் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக ஒரு இலட்சம் ரூபாய் வரை கடன் அனுமதிக்கப்படுகிறது. அதற்கு மேல் ரூபாய் 5 இலட்சம் வரையிலான தனி நபர் கடன்கள் தேசிய சிறுபான்மையினர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழக அனுமதி பெற்று வழங்கப்படுகிறது.

**ஆட்டோ கடன் வழங்கும் திட்டம்**

8(ii) (ஆ) சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துச் செயல்படும் சிறுபான்மையினத்தவருக்கு "தாய்கோ" வங்கிமூலம் 6 விழுக்காடு வட்டியில் ஆட்டோ ரிக்ஷா கடன் வழங்கப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் மதுரை, சிவகங்கை, மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் ஆட்டோ வாங்க . 209 பேருக்கு ரூ.221.78 இலட்சம் கடன் வழங்கப்பட்டது.

11-98—16

[2008 ஏப்ரல் 29

**கறவை மாடுகள் வாங்கக் கடன் வழங்கும் திட்டம்**

8 (ii) (இ) பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்துள்ள சிறுபான்மை இனத்தவருக்கு இரண்டு கறவை மாடுகள் வாங்க ஒரு பயனாளிக்கு ரூ.30,000 வரை கடன் வழங்கப்படுகிறது. இக்கடன் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம்மூலமாக வழங்கப்படுகிறது.

**சுய உதவிக் குழுக்கள்மூலம் சிறு கடன் வழங்கும் திட்டம்**

8(ii) (ஈ) தமிழகத்தில், குறிப்பாக ஊரகப் பகுதிகளில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு அவர்தம் பொருளாதார நிலையினை உயர்த்திக்கொள்வதுடன், அக்குழுக்கள் வங்கிக் கடனை முறையாகச் செலுத்துவதில் முன் உதாரணமாகத் திகழ்வதால், சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் வழங்குவதில் வங்கிகள் முன்னுரிமை அளிக்கின்றன. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், சுய உதவிக் குழு உறுப்பினர் ஒருவருக்கு ரூபாய் 10,000/- வரையிலும், சுய உதவிக் குழுவிற்கு அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரையிலும் 4 விழுக்காடு வட்டியில் சிறு வணிகம் செய்திட கூட்டுறவு வங்கிகள்மூலம் சிறு கடன் வழங்குகிறது.

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்மூலமாக 2007-2008 ஆம் ஆண்டில் 10,473 பயனாளிகளுக்கு ரூ.20.42 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் சுமார் 25,000 சிறுபான்மையினர் பயன்பெறும் வகையில் ரூ.40 கோடி அளவில் கடன் வழங்கப்படும்.

**மகிளா சம்ரிதி யோஜனா திட்டம்:**

8(ii) (உ) அரசு சாரா அமைப்புகள்மூலம் 40 சிறுபான்மையின மகளிர் பயன்பெறும் வகையில், தையல் மற்றும் எம்பிராய்டரி பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கானச் செலவுத் தொகை ரூ.1,80,000/-ஐ தேசிய சிறுபான்மையினர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகமும், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகமும் 85:15 என்ற விகிதத்தில் ஏற்றுக்கொள்கின்றன. இப்பயிற்சி பெற்ற பயனாளிகள் சுயதொழில்கள்மூலம் வருவாய் ஈட்டுவதற்குத் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் சிறு கடன் வழங்குகிறது.



2008 ஏப்ரல் 29]

**மாநில சிறுபான்மையினர் ஆணையம்**

9. மதம் மற்றும் மொழிவழி சிறுபான்மையினரின் நலனையும், உரிமையையும் பாதுகாக்கும் பொருட்டு எடுக்கப்படும் சட்டப்படியான நடவடிக்கைகள் குறித்தும், சிறுபான்மையினர் நலனுக்காகச் செயல்படுத்தப்படும் நலவாழ்வுத் திட்டங்கள் குறித்தும் மாநில அரசுக்கு ஆலோசனைகள் வழங்க 1989 ஆம் ஆண்டில் மாநில சிறுபான்மையினர் ஆணையம் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

**முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கம்**

10. தமிழ்நாட்டில் வாழும் ஆதரவற்ற முஸ்லிம் பெண்களுக்கு உதவிடும் பொருட்டு, சென்னையில் உள்ளதுபோல் தமிழகத்திலுள்ள இதர 30 மாவட்டங்களிலும், முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கங்கள் தொடங்குவதற்குச் சங்கம் ஒன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம், மொத்தம் ரூபாய் 30 இலட்சம் வித்துத் தொகையாக (Seed Money) அரசு அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், இச்சங்கங்கள் கொடையாளிகளிடமிருந்து திரட்டும் நன்கொடைக்கு இணையான தொகையை அரசு வழங்கும்.

சென்னை முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கத்திற்கு 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.2.19 இலட்சம் இணை மானியமாக (Matching Grant) அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**மறுவாழ்வுத் திட்டம்**

11. இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டு, அன்றாட வருவாயின்றிச் சிரமத்திற்குள்ளாகும் சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த குடும்பத்தினர் மீண்டும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவும், சிறு குற்றங்களுக்காகத் தண்டனை பெற்று விடுதலையாகி வரும் சிறுபான்மையினர், சமுதாயத்தில் கண்ணியமான வாழ்க்கை நடத்திடவும், மளிகைக் கடை நடத்துதல், சிற்றுண்டி விடுதி நடத்துதல், தேநீர் வியாபாரம் செய்தல் போன்ற சிறு தொழில்கள் தொடங்குவதற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.10,000 வரை நிதியுதவி வழங்கும் திட்டம் இந்த ஆண்டு முதல் புதிதாகச் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2008-2009 ஆம் ஆண்டில் 300 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 29

**பாரதப் பிரதமரின் புதிய 15 அம்சத் திட்டம்**

*12.* இன அமைதி மற்றும் இணக்கம் ஆகியவற்றுடன், பொதுத் துறை நிறுவனங்களை உள்ளடக்கிய மத்திய மற்றும் மாநில அரசு வேலைகளில் சிறுபான்மையினருக்கு நியாயமான பங்கை உறுதிசெய்யும் வகையிலும், பொருளாதார அதிகாரம் அளிக்கும் திட்டங்களில் அவர்களுக்கு நியாயமான பங்கை அளிக்கும் வகையிலும் இந்தியப் பிரதமரின் 15 அம்சத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நமது விரிவான மேம்பாட்டுக் குறிக்கோள்களுக்கு இணக்கமாக, பயன்கள் நியாயமான வகையில் சிறுபான்மையினருக்குச் சென்றவடைவதைக் கண்காணிக்க மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

*13.* சிறுபான்மையினருக்குக் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் தனி இட ஒதுக்கீடு வழங்கியதன்மூலம் அவர்களது சமூக மற்றும் கல்வி முன்னேற்றம் உறுதி செய்யப்பட்டுள்ளது. திறன் வளர்ப்புப் பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதன் வாயிலாக அவர்கள் வேலைவாய்ப்புகள் பெறவும், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார முன்னேற்றக் கழகத்தின் வாயிலாகக் குறைந்த வட்டியில் கடன் வழங்குவதன்மூலம் அவர்கள் சுயதொழில் தொடங்குவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

*14.* பாரதப் பிரதமரின் புதிய 15 அம்சத் திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தி வரும் இவ்வரசு, சிறுபான்மை இனத்தவரின் கல்விக்கான வாய்ப்புகளை அதிகரித்தல், பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் வேலைவாய்ப்புகளில் சம பங்களித்தல், சிறுபான்மையினரின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல், வகுப்பு மோதல்களை முன்னெச்சரிக்கையுடன் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல், சிறுபான்மையினத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர் தங்களுடைய தாய்மொழியில் கல்வி பயில வசதி செய்து கொடுத்தல், மொழி வழி சிறுபான்மையினருக்குத் தமிழ்நாடு பாடநூல் கழகம்மூலம் பாடநூல் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.



2008 ஏப்ரல் 29]

**முடிவுரை**

*"ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்*
*செல்லும்வாய் நோக்கிச் செயல்" (குறள் 673)*

*"இயலும் இடங்களில் எல்லாம் செயல்முடிப்பது நலம் தரும்;*
*இயலாத இடமாயின் அதற்கேற்ற வழியை அறிந்து அந்தச்*
*செயலைச் செய்து முடிக்க வேண்டும்."*

என்னும் அய்யன் திருவள்ளுவர் அறிவுறுத்திய நெறியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வரசு, சமுதாயத்தில் உள்ள சிறுபான்மைச் சமுதாயத்தினரும் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் முன்னேற்றம் அடைந்து சமுதாய நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் செயல்படுத்தி வருகிறது.

# இணைப்பு—III

(89 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 10—வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009

**முன்னுரை**

*தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு*
*வேளாண்மை செய்தற் பொருட்டு.*

- திருக்குறள்

(பொருளுரை: தகுதி உடையோர் நலனுக்கு உதவிடும் பொருட்டே ஒருவன் முயன்று திரட்டிய பொருள் பயன்பட வேண்டும்.)

தமிழக அரசு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்துவதில் முன்னிலை வகிக்கிறது. அதற்காக நிதி ஆதாரங்களைப் பெருக்க வழிமுறைகளைக் கண்டறிய வேண்டியுள்ளது. வணிக வரித் துறை, மாநிலத்தின் மொத்த வருவாயில் சுமார் 70 விழுக்காடு அளவிற்கு வருவாய் ஈட்டித் தரும் வகையில் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. நம் மாநிலத்தில் 1-1-2007 முதல் மதிப்புக் கூட்டு வரி முறை நடைமுறைப்படுத்தப்பட்டு 2007-2008 ஆம் நிதி யாண்டில் வணிக வரித் துறை ரூ.19952.59 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. மதிப்புக் கூட்டு வரி முறைக்கு மாறுவதால், முதல் சில ஆண்டுகளில் வருவாய் பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனவே, மத்திய அரசு, மதிப்புக் கூட்டு வரி நடைமுறைப்படுத்தப்படுவதால் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு செய்ய முன்வந்தது. அதன்படி ஜனவரி 2007 முதல் செப்டம்பர் 2007 வரையிலான கால அளவிற்கு இதுவரை ரூ.2040 கோடி அளவில் தற்காலிகமாக இழப்பீடு பெறப்பட்டுள்ளது.

### 2. வணிக வரித் துறையில் நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

வரி வசூலுக்கென கீழ்க்கண்ட சட்டங்கள் வணிக வரித் துறையினால் நிர்வகிக்கப்படுகின்றன:—

1. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959 (31-12-2006 வரை)





2. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1970 (31-12-2006 வரை)
3. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 (1-1-2007 முதல்)
4. மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956
5. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், 1939
6. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935
7. தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம், 1981
8. தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகன நுழைவு மீதான வரிச் சட்டம், 1990
9. தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் பொருட்கள் நுழைவு மீதான வரிச் சட்டம், 2001 (இந்தச் சட்டம் செல்லாது என சென்னை உயர் நீதிமன்றம் 23-3-2007 நாளிட்ட தீர்ப்பில் அறிவித்தது.)
10. தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம், 1983.

### 3. கடந்த ஆண்டுகளின் வரி வருவாய் ஒப்பீடு

கடந்த ஆண்டுகளில் அனைத்து விற்பனை வரிச் சட்டங்கள்மூலம் ஈட்டிய வரி வருவாய் விவரம் வருமாறு:

| ஆண்டு | வரி வருவாய் (ரூபாய் கோடியில்) | வளர்ச்சி விகிதம் (%) |
|---|---|---|
| 2002–2003 | 10200 | 14.55% |
| 2003–2004 | 11757 | 15.27% |
| 2004–2005 | 13908 | 18.29% |
| 2005–2006 | 16615 | 19.47% |
| 2006–2007 | 19217 | 15.66% |
| 2007–2008 | 19952 | 3.83% |

[2008 ஏப்ரல் 29

**4. கடந்த ஆண்டுகளின் வரி வருவாய் ஒப்பீடு—சட்டவாரியாக**

சட்டவாரியாக வருவாய் விவரம் வருமாறு :—

(ரூபாய் கோடியில்)

| சட்டம் | 2002–2003 | 2003–2004 | 2004–2005 | 2005–2006 | 2006–2007 | 2007–2008 |
|---|---|---|---|---|---|---|
| 1. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் | 8507 | 9790 | 11462 | 13658 | 13416 | 429 |
| 2. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் | .. | .. | .. | .. | 2290 | 16472 |
| 3. மத்திய விற்பனை வரிச் சட்டம் | 982 | 1186 | 1495 | 1799 | 2033 | 1744 |
| 4. கேளிக்கை வரிச் சட்டம் | 71 | 75 | 59 | 44 | 25 | 16 |
| 5. பந்தய வரிச் சட்டம் | 5 | 5 | 6 | 6 | 6 | 6 |
| 6. ஆடம்பர வரிச் சட்டம் | 82 | 63 | 78 | 92 | 128 | 160 |
| 7. நுழைவு வரிச் சட்டம் (வாகனம் மற்றும் பொருட்கள்) | 553 | 638 | 808 | 1016 | 1319 | 1125 |
| **மொத்தம்** | 10200 | 11757 | 13908 | 16615 | 19217 | 19952 |

**5. வருவாயும் செலவும்**

வணிக வரித் துறையின் வருவாயும், செலவும் வருமாறு:—

**(ரூபாய் கோடியில்)**

| தலைப்பு | 2002–2003 | 2003–2004 | 2004–2005 | 2005–2006 | 2006–2007 | 2007–2008 |
|---|---|---|---|---|---|---|
| 1. வரிவருவாய் | 10200 | 11757 | 13908 | 16615 | 19217 | 19952 |
| 2. செலவுகள் | 93.27 | 93.70 | 102.34 | 110.44 | 120.96 | 143.73 |
| 3. வரி வருவாயில் செலவின் விழுக்காடு | 0.91% | 0.80% | 0.74% | 0.66% | 0.63% | 0.72% |



2008 ஏப்ரல் 29]

**6. மதிப்புக் கூட்டு வரி**

தமிழகத்தில் *1-1-2007* முதல் மதிப்புக் கூட்டு வரிமுறை நடைமுறைப்படுத்தப்பட்டது. தமிழ்நாடு பொது விற்பனை வரி நடைமுறையில் இருந்த காலகட்டத்தில் அளிக்கப்பட்ட வரி விலக்கு மற்றும் வரிக் குறைப்பு போன்ற சலுகைகள் தொடர்ந்து மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்திலும் நீட்டிக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. மதிப்புக் கூட்டு வரி நடைமுறைப்படுத்தப்படுவதில் துவக்கத்தில் ஏற்படும் சிக்கல்கள் ஏதேனும் இருப்பின் அதனை ஆராய்ந்து நீக்குவதற்கான வழிமுறைகளை அரசுக்குத் தெரிவிக்க அலுவல் சார்ந்த உறுப்பினர்கள், அலுவல் சாரா உறுப்பினர்கள் மற்றும் வணிகப் பிரதிநிதிகள் கொண்ட 'மதிப்பு கூட்டு வரி கண்காணிப்புக் குழு' ஒன்று தமிழக அரசால் நியமிக்கப்பட்டது. மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் தொடர்பாக வணிகர்கள் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் பயிற்றுவிப்பதற்கு அனைத்து வணிக வரி மாவட்டங்களிலும் விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இக்கூட்டங்களில் மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். அக்கூட்டங்களில் வணிகர்களின் சந்தேகங்கள் நிவர்த்திக்கப்பட்டன. பதிவுச் சான்று பெறுதல், உள்ளீட்டு வரி வரவு எடுத்துக்கொள்ளுதல், இருப்புச் சரக்கிற்கு உள்ளீட்டு வரி வரவு எடுத்துக்கொள்ளுதல், மூலதனப் பொருட்களுக்கான உள்ளீட்டு வரவு எடுத்துக்கொள்ளுதல், மாதாந்திரப் படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுரைகள், ஏற்றுமதியாளர்களுக்கு செலுத்திய வரியைத் திருப்பியளித்தல் போன்ற முக்கிய நிகழ்வுகள் தொடர்பான கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு வரி விதிப்பு அலுவலர்கள் மூலமாக வணிகர்களுக்கு வழங்கப்பட்டன. சென்னை மற்றும் பிற இடங்களில் அனைத்து உதவி ஆணையர் அலுவலகங்களிலும் அழைப்பு மையங்கள் மற்றும் உதவி மேசைகள் அமைக்கப்பட்டு வணிகர்களின் சந்தேகங்களுக்கு விளக்கங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. மேலும், தினசரி பத்திரிகைகள் மற்றும் இதர ஊடகங்கள் மூலமும் அவ்வப்போது பதிவுச் சான்று விண்ணப்பித்தல், உள்ளீட்டு வரி வரவு எடுத்துக்கொள்ளுதல் மற்றும் மாதாந்திரப் படிவங்கள் தாக்கல் செய்வது குறித்து விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. வணிக வரித் துறையில் மதிப்புக் கூட்டு வரிக்காக www.tnvat.gov.in என்ற புதிய வலைதளம் டிசம்பர் *2006* முதல் செயல்பட்டு வருகின்றது. இந்த வலைதளத்தில் வணிகர்களுக்குத் தேவையான தகவல்கள் அனைத்தும்

அவ்வப்போது அளிக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் மாதாந்திரப் படிவங்களை மின்னணுமூலம் தாக்கல் செய்யவும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## 7. 2008–2009 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட வரிச் சலுகைகள்

இந்த அரசு தொடர்ந்து மூன்றாம் முறையாக வரியில்லா நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. மேலும், மதிப்புக் கூட்டு வரி விதிப்பிலிருந்து பல சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. 26-2-2008 அன்று வணிகர்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான நிதிநிலை அறிக்கைக்கு முன்பான கலந்தாய்வுக் கூட்டத்தை இந்த அரசு நடத்தியது. அக்கூட்டத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையிலும், நுகர்வோர், வணிகர்கள், உற்பத்தியாளர்கள் ஆகியோரின் நலனைக் கருத்தில் கொண்டும் வரிச் சலுகைகள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டன. அதன்படி கீழ்க்கண்ட பொருட்களுக்கு மதிப்புக் கூட்டு வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டன :

* எடை நிபந்தனை ஏதுமின்றி மங்கல நாணாகப் பயன்படுத்தப்படும் தங்கத்தினால் செய்யப்பட்ட தாலி, கருகமணி மற்றும் சிலுவை
* பன் மற்றும் ரஸ்க்
* துணி உள்ளொட்டிய (Cloth-lined) காகித உறை
* சித்த மருந்துகள்
* சோயா எண்ணெய்
* மஞ்சள் பொடி, மிளகாய் பொடி மற்றும் தனியா பொடி
* தேங்காய் துருவல், தேங்காய் பால் மற்றும் தேங்காய் பால் பொடி
* அடைக்கப்பட்ட (packaged) இளநீர்
* வெல்லத்தின் வெளி மாநில விற்பனை
* காட்டாமணக்கு விதை மற்றும் காட்டாமணக்கு எண்ணெய்
* ரப்பர் பூச்சுள்ள நெசவுத் துணி



மேலும், கீழ்க்கண்ட பொருட்களுக்கு வரி விகிதம் 12.5 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது:

* பாக்கின் வறுக்காத சீவல்
* மொசைக் சில்லுகள்
* காகித அட்டையினால் தயாரிக்கப்பட்ட கோப்பு அட்டைகள் (Files and folders)
* பிளாஸ்டிக் படச்சட்டங்கள்
* மின் உற்பத்தி எந்திரங்கள் (Generators)
* ஏற்கெனவே பொது விற்பனை வரி அல்லது மதிப்புக் கூட்டு வரி செலுத்தி வாங்கி தமிழ்நாட்டில் மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் மீதான மறு விற்பனை (உள்ளீட்டு வரி வரவு இல்லாமல்)
* கட்டுமான பணிக்குப் பயன்படுத்தப்படும் பொருட்களுக்கான வாடகைமீது விதிக்கப்படும் வரி

இது தவிர, நட்சத்திர தகுதி பெறாத உணவகங்கள் விற்பனை செய்யும் வணிகச் சின்னமிட்ட பானங்கள் மற்றும் ஐஸ்கிரீம்கள் ஆகியவற்றின் மீதான வரி 12.5 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதே சமயம் அவர்களின் கொள்முதலுக்குச் செலுத்தும் வரிக்கு உள்ளீட்டு வரி வரவு இல்லை என்ற நிபந்தனையுடன் இச்சலுகை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், சமையல் எண்ணெய், பட்டாணி மற்றும் பட்டாணிப் பருப்பு உள்ளிட்ட பருப்பு மற்றும் பயறு வகைகள், மஞ்சள், மிளகாய், தனியா ஆகிய பொருட்களை உணவகங்கள் கொள்முதல் செய்யும்போது, தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் பிரிவு 12-ன்கீழ் செலுத்த வேண்டிய கொள்முதல் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

மேற்கண்ட அனைத்து வரிச் சலுகைகளும் 1-4-2008 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், 1-4-2008 முதல் கேபிள் டி.வி. மீதான கேளிக்கை வரி முறிலே இரத்து செய்யப்பட்டுள்ளது. இது தவிர 31-3-2008 வரையிலான கேபிள் டி.வி. மீதான கேளிக்கை வரி நிலுவைத் தொகை முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படும்.

### 8. மதிப்புக் கூட்டு வரி அமலாக்கத்தினால் ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடு செய்தல்

மதிப்புக் கூட்டு வரி நடைமுறைப்படுத்தப்படுவதால் ஏற்படும் வருவாய் இழப்பினை 2005-2006, 2006-2007 மற்றும் 2007-2008 நிதியாண்டுகளில் முறையே 100 விழுக்காடு, 75 விழுக்காடு மற்றும் 50 விழுக்காடு என்ற வகையில் மத்திய அரசு ஈடு செய்யும் என்று ஜனவரி 2005-ல் அனைத்து மாநிலங்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. நமது மாநிலத்தில் மதிப்புக் கூட்டு வரி 1-1-2007 முதல், அதாவது இரண்டாம் நிதியாண்டான 2006-2007-ல் நடைமுறைப்படுத்தப் பட்டதால் நமது மாநிலத்திற்கு ஜனவரி 2007 முதல் மார்ச் 2007 வரையில் 75 விழுக்காடு அளவிற்கும் மூன்றாம் ஆண்டான 2007-2008 ஆம் ஆண்டிற்கு 50 விழுக்காடு அளவிற்கும் ஈட்டுத்தொகை கிடைக்கும். ஆனால், 2007, 2008 மற்றும் 2009 ஆகிய காலமுறை ஆண்டுகளுக்கு முறையே 100 விழுக்காடு, 75 விழுக்காடு மற்றும் 50 விழுக்காடு என்ற வகையில் ஈட்டுத் தொகை வழங்க வேண்டி மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மத்திய நிதியமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கோரிக்கை அனுப்பினார். இக்கோரிக்கையின் அடிப்படையில் மத்திய அரசு, காலமுறை ஆண்டு 2007 மற்றும் 2008-க்கு முறையே 75 விழுக்காடு மற்றும் 50 விழுக்காடு அளவிற்கு ஈட்டுத் தொகை வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளது. ஜனவரி 2007 முதல் மார்ச் 2007 வரையிலான கால அளவிற்கு மதிப்புக் கூட்டு வரி இழப்பீட்டுத் தொகை ரூ.1386.20 கோடி அளவிற்கு கோரிக்கை வைக்கப்பட்டு, மத்திய அரசு தற்காலிகமாக ரூ.850 கோடி வழங்கியுள்ளது. ஏப்ரல் 2007 முதல் டிசம்பர் 2007 வரையிலான கால அளவிற்கு இழப்பீட்டுத் தொகை ரூ.2983.43 கோடி என கோரிக்கை அனுப்பப்பட்டு, ஏப்ரல் 2007 முதல் செப்டம்பர் 2007 முடிய உள்ள கால அளவிற்கு மத்திய அரசு ரூ.1190 கோடி தற்காலிகமாக வழங்கியுள்ளது. மத்திய அரசிடமிருந்து மேலும் இழப்பீட்டுத் தொகை பெறப்பட வேண்டியுள்ளது.

### 9. மத்திய விற்பனை வரி நீக்கம்

உற்பத்தித் துறையில் தமிழகம் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. இந்திய அரசு படிப்படியாக மத்திய விற்பனை வரியை நீக்குவது என்று முடிவெடுத்தது. அதன்படி 1-4-2007 முதல் மத்திய விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 3 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. மத்திய விற்பனை வரிக் குறைப்பினால் ஏற்படும் வரி இழப்பினை



ஈடு செய்ய மத்திய அரசு இழப்பீட்டுத் தொகை வழங்கும் என்றும், மாநில அரசுகள் புகையிலைப் பொருட்கள்மீது மதிப்புக் கூட்டு வரி விதிக்கத் தக்க நடவடிக்கை எடுக்கலாம் என்றும் அறிவித்தது. அதன்படி புகையிலைப் பொருட்கள்மீது மதிப்புக் கூட்டு வரி விதிக்க மாநில அரசால் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டு வரி விதிக்கப்பட்டு வருகிறது. மேலும், ஏப்ரல் 2007 முதல் டிசம்பர் 2007 வரையிலான காலத்திற்கு ரூ.743.03 கோடி அளவிற்கு இழப்பீட்டுத் தொகை கோரப்பட்டதில் மத்திய அரசு தற்காலிகமாக ரூ.647.54 கோடி வழங்கியுள்ளது.

### 10. துறையின் அமைப்பும் செயல்பாடுகளும்

வணிக வரித் துறையின் நிர்வாகம், ஆணையர் அவர்களால் திறம்பட நடத்தப்படுகிறது. ஆணையருக்கு உதவியாக தலைமையகத்தில் 5 இணை ஆணையர்களும், 3 துணை ஆணையர்களும், 1 இணை இயக்குநரும் (புள்ளியியல் மற்றும் ஆய்வுத் துறை), 4 உதவி ஆணையர்களும் மற்றும் 6 நிர்வாக அலுவலர்களும் உள்ளனர். ஆற்றுகின்ற பணியின் அடிப்படையில் வணிக வரித் துறை பல்வேறு பிரிவுகளாகச் செயல்பட்டு வருகிறது.

#### 10.1 வரி விதிப்புப் பிரிவு

வணிக வரி அலுவலர், துணை வணிக வரி அலுவலர் மற்றும் உதவி வணிக வரி அலுவலர் ஆகியோர் வரி விதிப்பு அலுவலர்களாக உள்ளனர். மாநிலத்தில் மொத்தம் 323 வரி விதிப்பு வட்டங்கள் உள்ளன. அவற்றில் 236 வட்டங்களுக்கு வணிக வரி அலுவலர் தலைமை அலுவலராகவும், 81 வட்டங்களுக்கு துணை வணிக வரி அலுவலர் தலைமை அலுவலராகவும் உள்ளனர். இவை தவிர சென்னையில் நான்கும், கோவையில் இரண்டும் ஆக ஆறு விரைவு வழி வரி விதிப்பு வட்டங்கள், உதவி ஆணையர்களைத் தலைமை அலுவலராகக் கொண்டு இயங்குகின்றன. வரி விதிப்பு அலுவலர்களின் பணி, மாவட்ட/மண்டல அளவில் உதவி ஆணையராலும், கோட்ட அளவில் துணை ஆணையராலும் கண்காணிக்கப்படுகின்றது.

#### 10.2 தணிக்கைப் பிரிவு

ஒவ்வொரு வணிக வரி மாவட்டத்திலும், ஒரு உள்ளீட்டுத் தணிக்கைக் குழு உள்ளது. வணிக வரி அலுவலர் ஒருவர் மற்றும் துணை வணிக வரி அலுவலர் ஒருவர் கொண்ட இக்குழு உதவி

ஆணையரின்கீழ் செயல்படுகிறது. இக்குழு ஒவ்வொரு காலாண்டிற்கும், வரி விதிப்பு ஆணைகள், வருவாய் வரவுகள், திருப்பியளித்த இனங்கள் ஆகியவற்றில் உள்ள குறைகளை, வரி விதிப்பு வட்ட வாரியாக அறிக்கை தயாரிக்கின்றது. இந்தக் குழுவிற்கான தணிக்கை நிகழ்ச்சி நிரல் துணை ஆணையரால் வகுக்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. அவற்றின் மீதான குறை நிவர்த்திப் பணிகளை சம்பந்தப்பட்ட வரி விதிப்புப் பிரிவு உதவி ஆணையர் மற்றும் துணை ஆணையர் கண்காணிக்கின்றனர்.

இது தவிர, மாநிலக் கணக்காயர், ஆண்டுக்கு ஒருமுறை வரி விதிப்புகள் மற்றும் திருப்பி அளித்த இனங்கள்மீது சோதனை தணிக்கை மேற்கொள்கிறார். தணிக்கைக் குறிப்புகள்மீது குறை நிவர்த்தி செய்ய வேண்டிய முக்கியப் பணி வரி விதிப்பு அலுவலர்களிடம் உள்ளது. மாநிலக் கணக்காயர் தணிக்கைக் குறிப்பின் மீதான குறை நிவர்த்தி என்னும் முக்கியப் பணியினை மாநில அளவில் ஆணையர் அலுவலகத்தில் உள்ள இணை ஆணையர் (தணிக்கை) கண்காணிக்கிறார்.

## 10.3 மேல்முறையீட்டுப் பிரிவு

முதல் மேல்முறையீடு, மேல்முறையீட்டு உதவி ஆணையரிடம் தாக்கல் செய்யப்படுகிறது. இத்துறையில் இருபது மேல்முறையீட்டு உதவி ஆணையர்களும், இரண்டு மேல்முறையீட்டுத் துணை ஆணையர்களும் உள்ளனர். ஒவ்வொரு மேல்முறையீட்டு அலுவலர் முன்பும் துறை சார்பாக வாதிடுவதற்கு, வணிக வரி அலுவலர் நிலையில் ஒரு துறைப் பிரதிநிதி நியமிக்கப்பட்டுள்ளார். விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் இரண்டாவது மேல்முறையீடு செய்யப்படுகிறது. சென்னையில் முதன்மைத் தீர்ப்பாயமும், சென்னை, கோவை மற்றும் மதுரையில் கூடுதல் தீர்ப்பாயங்களும் உள்ளன.

## 10.4 செயலாக்கப் பிரிவு

ஏழு செயலாக்கப் பிரிவுகள் ஏழு துணை ஆணையர்களின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. இதுதவிர, இடை மாநில ஆய்வுக் குழு ஒன்று துணை ஆணையர் தலைமையில் செயல்படுகிறது.

துறையின் செயலாக்கப் பிரிவுகளில், 10 உதவி ஆணையர்களும், 14 வணிக வரி அலுவலர்களும் உள்ளனர். உதவி ஆணையர் மற்றும் வணிக வரி அலுவலர்களின்கீழ் துணை வணிக வரி அலுவலர் மற்றும் உதவி வணிக வரி அலுவலர் அடங்கிய குழு அலுவலர்கள் உள்ளனர். இவை தவிர சுற்றும் படை, இரயிலகம் மற்றும் சரக்குப் பிரிவுகளிலும் அலுவலர்கள் பணிபுரிகின்றனர்.



வரி ஏய்ப்பினைக் கண்டுபிடிக்கும் பொருட்டு செயலாக்கப் பிரிவு அலுவலர்கள் கடைத் தணிக்கைப் பணியில் ஈடுபடுகின்றனர். சுற்றும் படை, இரயிலக மற்றும் சரக்குப் பிரிவுகளில் பணிபுரியும் அலுவலர்கள் வாகனத் தணிக்கையின்மூலம் பெறப்படும் கொள்முதல் பட்டியல்கள் மற்றும் இதர நடத்துச் சீட்டுகள் ஆகியவற்றை உரிய வணிகர்கள் வைத்துள்ள கணக்குப் புத்தகங்களுடன் சரிபார்ப்பதன் மூலம் வரி ஏய்ப்பினைத் தடுக்கின்றனர். இடைமாநில ஆய்வுக் குழு அலுவலர்கள், பிற மாநிலங்களில் இருந்து பெறப்பட்ட பரிவர்த்தனை விவரங்களை இம்மாநில வணிகர்களிடம் சரிபார்ப்பதன்மூலம் வரி ஏய்ப்பினைக் கண்டுபிடித்து வருகின்றனர்.

## 10.5 தணிக்கைச் சாவடிகள்

மாநில எல்லையில், 26 தணிக்கைச் சாவடிகளும், மாநிலத்திற்குள் 3 உள் தணிக்கைச் சாவடிகளும் உள்ளன. மாநில எல்லைத் தணிக்கைச் சாவடிகளில், 10 பெரிய தணிக்கைச் சாவடிகளும் (Major checkposts) 16 சிறிய தணிக்கைச் சாவடிகளும் (Minor checkposts) அடங்கும். 3 உள் தணிக்கைச் சாவடிகளும் பெரிய தணிக்கைச் சாவடிகள் ஆகும். 5 பெரிய எல்லைத் தணிக்கைச் சாவடிகளில் வணிக வரி அலுவலர்கள் தலைமை அலுவலர்களாக உள்ளனர். உதவி வணிக வரி அலுவலர்கள் சோதனைச் சாவடி அலுவலர்களாகவும், உடன் பணிபுரிய உயர் பிரிவு ஆய்வாளர்கள், பதிவுரு எழுத்தர்கள், அலுவலக உதவியாளர்கள், பளுதூக்கிகள் ஆகியோர் உள்ளனர்.

## 11. தள்ளி வைக்கப்பட்ட வரியை முன்கூட்டியே செலுத்தும் முறை

வரித் தள்ளிவைப்புப் பலனை அனுபவிக்கும் தொழிற்சாலைகளின் நலனைக் கருதி, அரசு 28-2-2007 அன்று, தள்ளிவைக்கப்பட்ட வரியினை முன்கூட்டியே செலுத்தும் திட்டத்தினை அறிவித்துள்ளது. அதன்படி முதிர்வடையாத வரித் தள்ளி வைப்புத் தொகையின் தற்போதைய நிகர மதிப்பில் (Net Present Value - N.P.V.) ஆண்டொன்றுக்கு 5 சதவீதத் தள்ளுபடி போக மீதியினைச் செலுத்த வகை செய்யும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தள்ளுபடி விகிதமான 5 விழுக்காடு 2007-2008 ஆம் ஆண்டுக்கு 7.5 விழுக்காடாக மாற்றியமைக்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

## 12. வணிக வரிப் பணியாளர் பயிற்சி மையம்

வணிக வரிப் பணியாளர் பயிற்சி நிலையம் 1982 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. வணிக வரித் துறையில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளருக்கு வணிக வரி சம்பந்தமான சட்டங்கள் மற்றும் விதிகள் குறித்து பயிற்றுவிக்கப்படுவது இப்பயிற்சி நிலையத்தின் நோக்கம் ஆகும். மேலும், வணிக வரித் துறை கணினிமயமாக்கப் பட்டதனைத் தொடர்ந்து அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு கணினியை உரிய முறையில் பயன்படுத்தப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. சிறப்பு விரிவுரையாளர்களைக் கொண்டு பல்வேறு தலைப்புகளில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சி மையம் துணை ஆணையரை இயக்குநராகக் கொண்டு இயங்குகிறது. பயிற்சி மையத்தில் மேற்கண்ட பயிற்சிகள் அனைத்தும், உதவி ஆணையர் பணி நிலையில் உள்ள இரு முதுநிலை விரிவுரையாளர்களாலும், ஒரு வணிக வரி அலுவலர் மற்றும் ஒரு உதவி இயக்குநர் (புள்ளியியல் துறை) ஆகியோராலும் அளிக்கப்பட்டு வருகின்றன.

இப்பயிற்சி மையத்தில் துறை அலுவலர்களுக்குக் கீழ்க்கண்ட பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன :

* வரி விதிப்புக் கோட்பாட்டின் அடிப்படைப் பயிற்சி
* வரி விதிப்புக் கோட்பாட்டின் பணியிடைப்பயிற்சி
* கணினிப் பயிற்சி
* அமைச்சுப் பணியாளர்களுக்கான மதிப்புக் கூட்டு வரிப் பயிற்சி

வணிக வரிப் பணியாளர் பயிற்சி நிலையத்தில் வணிக வரிகள் குறித்து அவ்வப்பொழுது மாறுபடுகின்ற மற்றும் நடைமுறையில் உள்ள பலவிதமான வரிகள் சம்பந்தமாகவும், புதிதாக 1-1-2007 முதல் இம்மாநிலத்தில் அமல்படுத்தப்பட்ட மதிப்புக் கூட்டு வரி சம்பந்தமாகவும் சென்னை கோட்ட அலுவலர்களுக்கும் மற்றும் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

பிற கோட்டங்களில் அந்தந்தத் துணை ஆணையர்களின் மேற்பார்வையில் பயிற்சி வழங்கும் அலுவலர்களைக் கொண்டு மதிப்புக் கூட்டு வரிப் பயிற்சி அனைத்து அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி மையம் அமைச்சுப்



பணியாளர்களுக்கு துறை சம்பந்தமான கணினிப் பயிற்சி, உள் இணையதளம், இணையதளம் மற்றும் மின் அஞ்சல் தொடர்பான பயிற்சியும் வழங்கி வருகிறது.

2008-2009 ஆம் ஆண்டில் அலுவலர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்குக் கீழ்க்கண்ட பயிற்சிகள் அளிக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது:

* துறை சம்பந்தப்பட்ட கணினிப் பயிற்சி
* அடிப்படை கணினிப் பயிற்சி
* மதிப்புக் கூட்டு வரி புத்தாக்கப் பயிற்சி
* பணியிடைப் பயிற்சி

## 13. புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு, புள்ளியியல் இணை இயக்குநர் தலைமையில் துறைத் தலைமையிடத்தில் இயங்கி வருகிறது. ஒவ்வொரு கோட்டத்திலும் ஒரு இளநிலை ஆராய்ச்சி அலுவலரும் ஒவ்வொரு வணிக வரி மாவட்டத்திலும் ஒரு புள்ளியியல் ஆய்வாளரும் பணிபுரிந்து வருகின்றனர். 'வணிக வரித் துறை - ஒரு கண்ணோட்டம்' மற்றும் 'வணிக வரித் துறை - முக்கிய குறியீடுகள் (மடிப்புத் தாள்)' ஆகிய இரு வருடாந்திர வெளியீடுகள் புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவினால் வெளியிடப்பட்டு வருகின்றன. இது தவிர மதிப்புக் கூட்டு வரி அமல்படுத்தப்பட்டபின் அதன் விளைவினை அறிய சுமார் 260 பொருட்களின் விலை கண்காணிக்கப்பட்டு வருகிறது.

## 14. வணிக வரித் துறையை கணினிமயமாக்குதல்

வணிக வரித் துறையில் கணினி செயல்பாடு முதன் முறையாக 1973 ஆம் ஆண்டு கிண்டியில் உள்ள அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தின் துணையோடு தொடங்கப்பட்டது. வணிக வரி மாதாந்திரப் படிவங்களின் விவரங்கள் கணினியில் ஏற்றப்பட்டு மாநில அளவிலான வணிகர்கள் தொடர்புடைய அனைத்து விவரங்களின் தொகுப்பினைத் தயாரிப்பதற்காகவே இது தொடங்கப்பட்டது.

பின்னர் வருவாய் சார்ந்த துறைகளில் கணினிகளைப் புகுத்தி அவற்றின் செயல்பாட்டினை மேம்படுத்த பதினொன்றாம் நிதிக் குழுவினரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால், வணிக வரித் துறையில் கணினிமயமாக்கலில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டது.

இப்பணிக்காக பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழு என்ற நிறுவனம் ஆலோசகராக நியமிக்கப்பட்டது. ரூ.10.51 கோடி செலவில் 464 இடங்களுக்கிடையே கணிப்பொறி இணைப்புகள் ஏற்படுத்தப்பட்டதுடன், செயலாக்க மென்பொருட்களும் மற்றும் தொடர்புடைய வன்பொருட்களும் கொள்முதல் செய்யப்பட்டன.

வணிகர்களுக்குத் தேவையான விவரங்களை அளிக்கும்பொருட்டு www.tn.salestax.com. என்ற முகவரியுடன் வலைதளம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. வணிகர்கள் பயன்படுத்தும் பதிவு விண்ணப்பப் படிவங்கள் மற்றும் பிற மாதாந்திரக் கணக்குப் படிவங்கள் போன்றவற்றை இவ்வலைதளத்திலிருந்து பெறவும், மேலும், அனைத்து பொருட்கள் மீதான வரி விவரங்கள் பெறவும் வசதி செய்யப்பட்டது.

### 14.1 துறைக்கான உள் இணைய தளம் (Intranet)

துறைக்கென தனியே உள்இணைய தளம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வுள் இணையத்தளத்தில் அரசு மற்றும் ஆணையர் வழங்கிய கடிதங்கள், ஆணைகள், சுற்றறிக்கைகள், அறிவிக்கைகள் முதலியனவும் துறை அலுவலர்களுக்கு உதவும் விதமாய் அனைத்து பொருட்களுக்கான வரி விகிதங்கள், முக்கியமான தீர்ப்புகள் ஆகியவையும் உள்ளன. இதன் மூலமாக மின் அஞ்சல் செய்யவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

### 14.2 வணிக வரித் துறையில் மின் ஆளுகை வணிகர்கள் பதிவு

மதிப்புக் கூட்டு வரி மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் பதிவுச் சான்றிதழ் பெறுவதற்கான மென்பொருள் இத்துறையினால் உருவாக்கப்பட்டு அனைத்து வரி விதிப்பு வட்டங்களிலும் செயல்பட்டு வருகிறது. வரி செலுத்துவோர் எண் எழுத்து நடைமுறையிலன்றி கணிப்பொறி வாயிலாக மட்டுமே கொடுக்கப்படுகிறது. மதிப்புக் கூட்டு வரி மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டங்களின்கீழ் பதிவுச் சான்றிதழ் கணினி மூலமாக மட்டுமே வணிகர்களுக்கு வழங்கப்படுகிறது. கணினி வாயிலாக பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தினை அளிப்பதற்காகத் தனி வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

### மாதாந்திரப் படிவங்கள் சரிபார்த்தல்

மதிப்புக் கூட்டு வரி மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டங்களின்கீழ் மாதாந்திரப் படிவங்களை கணினியில் பதிவு செய்யும்பொருட்டு ஒரு மென்பொருள் இத்துறையினால்



தயாரிக்கப்பட்டு அனைத்து வரி விதிப்பு வட்டங்களிலும் செயல்படுகிறது. உதவி ஆணையர் முதல் ஆணையர் வரையிலான உயர்மட்ட அலுவலர்கள் மாதாந்திரப் படிவங்கள் பதிவு செய்த நிலையினைப் பார்த்து கண்காணிப்பதற்கு ஏதுவாக வரி விதிப்பு வட்டங்களில் பெறப்படும் மாதாந்திரப் படிவங்கள் உடனுக்குடன் கணினியில் பதியப்பட்டு மத்திய சர்வர் கணினிக்கு மாற்றம் செய்யப்படுகிறது. அதே போல், கொள்முதல் மற்றும் விற்பனை பற்றிய விவரங்கள் கணினியில் பதியப்பெற்று குறுக்குத் தணிக்கை மூலம் உள்ளீட்டு வரி வரவு தொடர்பான உரிமை கோரிக்கைகள் வரி விதிப்பு அலுவலர்கள் மற்றும் உயர்மட்ட அலுவலர்களால் சரிபார்க்கப்பட்டு வருகின்றன. மேலும் பிப்ரவரி 2008 முதல், காசோலைப் பதிவேடு முறை தவிர்க்கப்பட்டு வரி வசூல் முறைகளான செலுத்துச் சீட்டுப் படிவங்கள், படிவ எண்கள் கொடுப்பது போன்ற செயல்பாடுகள் கணினி வாயிலாக நடைபெற்று வருகின்றன. மேலும், சுய வரி விதிப்பு ஆணை தயாரிக்கும் மென்பொருள்கூட அமையப் பெற்றுள்ளது.

### மின்னணு இணைப்புகள்

LAN (Local Area Network) என்னும் வளாக இணைப்பு அனைத்து வரி விதிப்பு வட்டங்களிலும் செய்யப்பட்டுள்ளது. வணிக வரித் துறையில் அனைத்து வரி விதிப்பு வட்டங்கள் மற்றும் உயர்நிலை அலுவலகங்களுக்கும் இண்டர்நெட் பிராட்பேண்ட் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

### படிவங்கள் மின்–அனுப்புகை

ஜனவரி 2008 முதல் மாநிலத்திலுள்ள முதல் 6000 வணிகர்கள் கணினியின் மின்–அனுப்புகை வாயிலாக மதிப்புக் கூட்டு வரி மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் கொடுக்கப்படும் மாதாந்திரப் படிவங்களின் விவரங்களைப் பதிவு செய்ய www.tnvat.gov.in என்ற வலைதளம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது வெற்றிகரமாகச் செயல்படுவதன் காரணமாக, இவ்வசதி மாநிலத்திலுள்ள மேலும் 20,000 வணிகர்களுக்கு ஏப்ரல் 2008 முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

### மின்–பணம் செலுத்துதல்

மேற்கண்ட வலைதளத்தின் வாயிலாக மின்னணுமூலம் பணம் செலுத்தவும், விற்பனைப் படிவங்கள் பெறுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வசதிகள் விரைவில் செயல்படுத்தப்படும்.

[2008 ஏப்ரல் 29

### பிற மின்–சேவைகள்

வணிகப் பெருமக்களுக்காக கீழ்க்கண்ட வசதிகள்/சேவைகள் மேற்கண்ட வலை தளத்தில் செய்து தரப்பட்டுள்ளன :

* சட்டங்கள், விதிகள், படிவங்கள், சுற்றறிக்கைகள், தெளிவுரைகள், அரசு ஆணைகள் மற்றும் அறிவிக்கைகள் பிறப்பிக்கப்பட்ட உடனேயே அறியும் வசதி.
* வணிகரின் பண பரிமாற்ற விவரம் மற்றும் பிற விவரங்களை அறியும் வசதி.
* பொருட்களின் அட்டவணை மற்றும் வரிவிகிதம் தெரிந்து கொள்ளும் வசதி.
* வரி செலுத்துவோர் அடையாள எண் அல்லது பெயர்மூலம் வணிகர்களின் முழு விவரங்களைத் தெரிந்துகொள்ளும் வசதி.
* வரி விதிப்பு வட்டத்தில் வரித் திருப்புகை அளித்த விவரத்தினை பார்வையிடும் வசதி.
* வரி விதிப்பு வட்டத்தில் விற்பனைப் படிவங்களின் தற்போதைய நிலையினை அறியும் வசதி.
* படிவம் - W (ஏற்றுமதி - வரித் திருப்புகை) வணிகர்களால் கணினி வாயிலாகப் பதியப்படுவதற்கும் அதையே வரி விதிப்பு வட்டத்தின் செயல்முறைக்குப் பயன்படுத்துவதற்குமான வசதி.

### 14.3. மின்–ஆளுமை தொடக்கத்திற்கான உள்கட்டமைப்புத் தொகை

வணிக வரித் துறையின் அனைத்து அலுவலகங்கள் மற்றும் சோதனைச் சாவடிகளை நவீனப்படுத்துவதற்கும், வலைப்பின்னல் வாயிலாக அளிக்கப்படும் மின்-சேவைகளான படிவங்கள் மின்-பதிவு, மின்-வரி செலுத்துதல், மின்-வரி விதிப்பு, விற்பனைப் படிவங்களை கணினி மூலமாகப் பெறுதல் மற்றும் TNSWAN (Tamil Nadu State Wide Area Network) இணைப்பு போன்ற பணிகளுக்காக "புதிய சேவை"யின்கீழ் 2007-08 ஆம் ஆண்டில் ரூ. 19.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்தொகையின்மூலம் மின் ஆளுகையை திறம்பட செயல்படுத்திடத் தேவையான கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள் அனைத்து அலுவலகங்களுக்கும் வழங்கப்படுகின்றன. மேலும், மின்–ஆளுகை குறித்து துறையின் அனைத்து பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு எல்காட் மூலமாகத் தேவையான பயிற்சி வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 29]

### 14.4 ஆக்கத்திறன் மிக்க திட்டம் (Mission Mode Project) (MMP)

மத்திய அரசின் மின்-பாரதம் திட்டத்தின்கீழ் ஆக்கத்திறன் மிக்க திட்டத்திற்கான முதன்மைத் துறையாக வணிக வரித் துறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துமுகமாக திருவாளர்கள் "விப்ரோ"வின் உதவியுடன் மூன்றாண்டுகளுக்கான ஒரு விரிவான திட்ட அறிக்கை ரூ. 40.92 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ. 40.92 கோடியில் 25 விழுக்காட்டுத் தொகை தமிழக அரசும் மீதமுள்ள 75 விழுக்காட்டுத் தொகை மத்திய அரசின் வருவாய்த் துறையின் வாயிலாக உலக வங்கியும் அளிக்கும். விரிவான திட்ட அறிக்கைமீது மத்திய அரசு அலுவலர்கள் மற்றும் உலக வங்கி குழுவுடனான தொடக்க நிலை பேச்சுவார்த்தை முடிவுற்று, 2008-09 ஆம் நிதியாண்டில் தொகை வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 14.5 வரி விவரப் பரிமாற்ற முறை (TINXSYS)

(TINXSYS) (Tax Information Exchange system) என்பது மாநில நிதி அமைச்சர்களைக் கொண்ட அதிகாரமளிக்கப்பட்ட குழுவினால் வடிவமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்ட, ஒருமுகப்படுத்தப்பட்ட தீர்வாகும். இதனால் அனைத்து மாநில வணிக வரித் துறைகளும் தங்களுக்குள் தகவல் பரிமாற்றம் செய்துகொள்ள இயலும். இத்திட்டம் மாநிலங்களுக்கிடையேயான பரிமாற்றங்களான இடை மாநில விற்பனை மற்றும் இருப்பு மாற்றம் (stock transfer) போன்றவற்றைத் திறம்பட கண்காணிக்க தீர்வாக அமைந்துள்ளது. இந்த வலைதளம் மாநிலங்கள் அளிக்கும் நிதியினைக் கொண்டு மேம்படுத்தி நிர்வகிக்கப்படுகிறது. வணிகப் பெருமக்களும், வணிக வரித் துறை அலுவலர்களும் இத்திட்டத்தினைப் பயன்படுத்தி வணிகர்கள் குறித்த விவரங்கள் மற்றும் அவர்களுக்கு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட்ட படிவங்களை சரிபார்க்கலாம். வணிக வரி அலுவலர்கள் நிலை வரை உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் இத்திட்டத்தின் பயன்பாடு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு ஒவ்வொரு அலுவலருக்கும் அவர்களுக்கான பயன்படுத்துவோர் பெயர் மற்றும் திறவுச்சொல் (password) ஆகியவை வழங்கப்பட்டுவிட்டன. இத்தருணத்தில் நமது மாநிலத்தில் பிற மாநிலங்களைக் காட்டிலும் அதிக அளவில் இவ்வலைதளத்தில் பதிவுகள் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வு

அரசுக்குக் கூடுதல் செலவு மற்றும் வெளி நிறுவன உதவிகள் எதுவுமின்றி வணிக வரித் துறையின் மூலமே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(TINXSYS) (Tax Information Exchange system) வலைதளங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:-

http://www.statevat.gov.in

http://www.tinxys.com.

http://www.vinxsys.com.

மேலும், வணிகர் குறித்த விவரங்களை வரி செலுத்துவோர் அடையாள எண்ணைப் (Tax payer's Identification Number) பயன்படுத்தி "தகவல் பரிமாற்றக் குரல் பதிவு செய்யும் கருவி" மூலமாக அறிந்துகொள்ளலாம். இதற்கான கட்டணமற்ற தொலைபேசி எண் 1800 2200 17.

### 15. வரித் தள்ளுபடி ஆய்வுக் குழு

அரசாணை எண் 428, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 25-8-2006-ன்படி கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட வரித் தள்ளுபடி ஆய்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது :

1. அரசுச் செயலர், வணிக வரி மற்றும் பதிவுத் துறை
2. அரசுச் செயலர், நிதித் துறை
3. வணிக வரி ஆணையர்

நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் துறைத் தெளிவுரைகளால் வணிகர்கள் கொள்முதல் செய்வோரிடமிருந்து வரி வசூல் செய்யாத நிகழ்வுகளில் பல்லாண்டுகளாக நிலுவையில் உள்ள வரிகளைக் கைவிடுதல் குறித்த முன்மொழிவுகளை ஆய்வு செய்து முடிவெடுப்பதற்காக இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு 15-11-2006 மற்றும் 13-8-2007 ஆகிய நாட்களில் கூடி வரித் தள்ளுபடி முன்மொழிவுகளைப் பரிசீலனை செய்தது. அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 13 இனங்களில் ரூ.1.53 கோடி அளவிற்கு வரித் தொகையைத் தள்ளுபடி செய்து அரசு ஆணையிட்டுள்ளது.





### 16. வணிகர் நல வாரியம்

சட்டப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, தமிழ் நாட்டிலுள்ள அனைத்து வணிகப் பெருமக்களுக்கும் பயன் தரும் வகையில், "தமிழ்நாடு வணிகர் நல வாரியம்" 1989 ஆம் ஆண்டில் அமைக்கப்பெற்று இயங்கி வருகிறது.

வணிகர்களுக்குப் பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்குவதற்கு உருவாக்கப்பட்ட தமிழ்நாடு வணிகர் நல வாரியம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், கீழ்க்காணும் உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகிறது:—

1. மாண்புமிகு தமிழக முதல்வர் - தலைவர்
2. வணிக வரித் துறை அமைச்சர் - துணைத் தலைவர்
3. அலுவல் சார்ந்த உறுப்பினர்கள்:—
   - (i) அரசுச் செயலாளர், வணிக வரித் துறை
   - (ii) வணிக வரி ஆணையர்
   - (iii) அரசுச் சிறப்புச் செயலாளர், நிதித் துறை
   - (iv) அரசுச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை
   - (v) வாரியத்தின் முதன்மை செயல் அலுவலர்-உறுப்பினர் செயலர்
4. அலுவல் சாரா உறுப்பினர்கள்—20 வணிகர்கள்

இவ்வாரியம் துவங்கப்பட்டபோது, வணிகர்களுக்குப் பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்குவதற்காகவும், வாரியத்தின் நிர்வாகச் செலவினங்களுக்காகவும் ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்தொகை பாரத ரிசர்வ் வங்கியில் (Reserve Bank of India) நிரந்தர வைப்பு நிதியாக வைக்கப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டித்தொகை, உறுப்பினர்களாகச் சேர்க்கப்படும் பதிவு பெற்ற வணிகர்களிடம் இருந்து ரூ.250/- வீதம் பெறப்படும் ஆயுட்கால சந்தா தொகை மற்றும் இச்சந்தா தொகைக்கு இணையாக வருடந்தோறும் அரசிடமிருந்து பெறப்படும் மானியத் தொகை (matching grant amount) ஆகியவற்றைக் கொண்டு இவ்வாரிய உறுப்பினர்களுக்குக் கீழ்க்காணும் நலத் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன :

[2008 ஏப்ரல் 29

### 16.1. குடும்ப நலத் திட்டம்

வாரியத்தின் உறுப்பினர்களுக்கு மரணம் ஏற்படின் அவர்களின் குடும்பத்திற்கு, குடும்பத்தின் வறுமைநிலையைக் கருதி, உதவித் தொகை ரூ.50,000/- வழங்கப்படுகிறது.

### 16.2. மருத்துவ உதவி

வாரியத்தின் உறுப்பினர்களுக்கு இருதய மாற்று அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மற்றும் புற்றுநோய் அறுவை சிகிச்சைகளுக்கு மருத்துவச் சான்றிதழின் அடிப்படையில் ரூ.50,000/- வழங்கப்படுகிறது.

அறுவை சிகிச்சைகளுக்கு மட்டுமல்லாமல் இருதயம், சிறுநீரகம் மற்றும் புற்றுநோய்களுக்கு சிகிச்சைகளான "டயாலிசிஸ்", "கீமோதெரபி", "ரேடியேஷன்தெரபி", "ஆஞ்சியோபிளாஸ்டி" ஆகியவற்றிற்கும் ரூ.15,000/- வழங்கப்படுகிறது. மேலும், பெண் உறுப்பினர்களுக்கு கர்ப்பப்பை அறுவை சிகிச்சைக்கு ரூ.20,000/- வழங்கப்படுகிறது.

### 16.3. கல்வி உதவி

வாரிய உறுப்பினர்களின் பிள்ளைகளில் மகன் அல்லது மகள் யாரேனும் ஒருவருக்கு கல்லூரிக் கல்விக்கு ஒரே முறையாக ரூ. 5000/- முதுகலைப் பட்டம் மற்றும் தொழிற் கல்வி பயில்வோருக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ. 10,000/- வழங்கப்படுகிறது.

### 16.4. விளையாட்டு வீரர்களுக்கு உதவி

உலக, தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறும் உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு உதவித் தொகையாக முறையே ரூ.25,000/-, ரூ.10,000/-, ரூ.5,000/- மற்றும் ரூ.3,000/- வழங்கப்படுகிறது.

### 16.5. தீ விபத்துக்காக உதவி

தீ மற்றும் இயற்கைச் சீற்றங்களால் வணிக இடங்கள் சேதமடைந்தால் உறுப்பினர்களுக்கு ரூ.5,000/- உதவித் தொகை வழங்கப்படுகிறது.

### 16.6. உடல் ஊனமுற்றோருக்கு உதவி

விபத்தில் ஒரு கால், ஒரு கை, ஒரு கண் ஊனமுற்ற உறுப்பினர்களுக்கு ரூ.10,000/- இரண்டு கால்கள், இரண்டு கைகள், இரண்டு கண்கள் ஊனமுற்ற உறுப்பினர்களுக்கு ரூ.20,000/- உதவித்



2008 ஏப்ரல் 29]

தொகையாக மருத்துவச் சான்றிதழின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.

### 16.7. மூன்று சக்கர சைக்கிள்கள் மற்றும் பெட்டிக் கடைகள்

இத்திட்டத்தின்கீழ் நலிவுற்ற வணிகர்களுக்குக் கூட்டுறவுத் துறை தொழிலகங்கள் தயாரிக்கும் ரூ.10,000/- மதிப்பிலான பெட்டிக் கடைகள் அளிக்கப்படுகின்றன.

### 16.8. அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு ஊக்கத் தொகை

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் மூன்று இடங்களில் வரும் வாரிய உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு ஊக்கத் தொகையாக முறையே ரூ.5,000/-, ரூ.3,000/- மற்றும் ரூ.2,000/- வழங்கப்பட்டு வருகிறது.

### 16.9. நலத் திட்டங்களின் விவரங்கள்

இவ்வாரியத்தில் வணிக உறுப்பினர்களுக்கு 31-3-2008 வரை கீழ்க்கண்டவாறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன:

| வ. எண் | நலத் திட்டம் | உதவி பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட உதவித் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | குடும்ப நல உதவி | 291 | 72.95 |
| 2 | மருத்துவ உதவி | 37 | 8.26 |
| 3 | கல்வி உதவி | 83 | 2.18 |
| 4 | தீ விபத்து உதவி | 29 | 1.45 |
| 5 | விளையாட்டு உதவி | 2 | 0.15 |
| 6 | உயர் மதிப்பெண் உதவி | 6 | 0.20 |
| 7 | உடல் ஊனமுற்றோர் உதவி | 2 | 0.15 |
| 8 | திருமண உதவி | 2 | 0.10 |
| | மொத்தம் | 452 | 85.44 |

இவ்வாரியத்தில் தற்போது 45,210 உறுப்பினர்கள் உள்ளனர். தற்போது உறுப்பினர்கள் சேர்க்கை சான்றிதழ்கள் மற்றும் அடையாள அட்டைகள் வழங்கும் பணி நடைபெற்று வருகின்றது.

**16.10. வலைதளம்**

உறுப்பினர்கள் இவ்வாரியம் அளிக்கும் சேவைகளை எளிதில் பயன்படுத்தும் பொருட்டு www.tntwb.gov.in எனும் முகவரியில் வலை தளம் ஒன்று செயல்படுகிறது.

**17. குறை களைதல்**

**17.1. குறை தீர்க்கும் பிரிவு**

வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் குறைதீர்க்கும் பிரிவு ஒன்று 1999 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. வணிகர்களின் குறைகள் மற்றும் புகார்களைப் பெறுகின்ற பிரிவாக அது இயங்கி வருகின்றது. இணை ஆணையர் (நிர்வாகம்) அப்பிரிவின் தலைவராகவும், இணை ஆணையர் (மக்கள் தொடர்பு) மற்றும் இணை ஆணையர் (சுய சீராய்வு மனு) ஆகியோர் அதன் உறுப்பினர்களாகவும் செயல்படுகின்றனர்.

**17.2. தகவல் பரிமாற்றக் குரல் பதிவு முறை**

துறையின் நிர்வாகத்தை மேம்படுத்தும் வகையில், பொதுமக்களின் ஆலோசனைகள், குறைகள் மற்றும் வணிகர்களின் வரி ஏய்ப்பு விவரங்கள் குறித்த தகவல்களை உடனுக்குடன் பெறும் பொருட்டு, "தகவல் பரிமாற்றக் குரல் பதிவு செய்யும் கருவி" வணிக வரி ஆணையர் அவர்களின் அலுவலகத்தில் செயல்படுகிறது. இவ்வசதிக்கென தனியாக 044-28520535 என்ற எண் கொண்ட நேரடித் தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**18. துறையின் சிறந்த நிர்வாகத்திற்கென எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகள்**

**18.1. வரி ஏய்ப்பு குறித்து தகவல் அளிப்பவர்களுக்குப் பரிசு**

ரூ. 1 இலட்சம் நிதித் தொகுப்பு உருவாக்கப்பட்டு வரி ஏய்ப்பவர் பற்றிய பயனுள்ள தகவல்களைத் துறைக்கு அளிக்கும் துறைசாரா நபர்களுக்கு வணிக வரி ஆணையரால் பரிசுத் தொகை வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் பெறப்படும்



பயனுள்ள தகவல்கள் செயலாக்கப் பிரிவினரால் பரிசீலிக்கப்பட்டு, முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு மேற்கொண்டு வரி விதிக்கப்படுகிறது. தகவல் அளித்தவர் பற்றிய விவரங்கள் இரகசியமாக வைக்கப்படுகின்றன.

**18.2. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005**

1-1-2007 முதல் 31-12-2007 வரையிலான கால அளவில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன்கீழ் 293 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அனைத்து விண்ணப்பங்களின் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டன.

**19. பகுதி II திட்டம் 2008–2009**

2008-2009 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டத்தில் கீழ்க்காணும் புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது:

(i) ரூ. 40 லட்சம் செலவில் மதுரை வணிக வரி கட்டடத்தில் ஆலோசனைக் கூடம் (Conference Hall) மற்றும் பயிற்சி மையம் கட்டுதல்.

(ii) தலைமைச் செயலகத்திலுள்ள வணிக வரி மற்றும் பதிவுத் துறையில் ரூ.33.6 இலட்சம் செலவில் கணினிகளை ஒன்றிணைத்தல், கணினியைப் பயன்படுத்தும் வகையில் மேசை, நாற்காலிகள் அமைத்தல் போன்ற மேம்பாட்டுப் பணிகள்.

[2008 ஏப்ரல் 29

## இணைப்பு IV

*(155ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 10—வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

## அறிவிப்புகள், 2008–2009

2008-09 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 2001-02 ஆம் ஆண்டு வரையுள்ள காலத்திற்கான வரி நிலுவைகளைத் தீர்க்கும் வகையில் ஒரே முறை தீர்வுத் திட்டம் வரும் நிதியாண்டில் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அத்திட்டத்தின் விவரங்கள் வணிக வரி மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. அதன்படி அதன் விவரங்கள் கீழ்க்கண்டவாறு அறிவிக்கப்படுகிறது:

(I) 21 ஆம் நூற்றாண்டில் அடியெடுத்து வைத்து மதிப்புக் கூட்டு வரி என்னும் புதிய வரித் திட்டம் துவங்கி ஓராண்டு ஆகிவிட்ட நிலையில் 1951-52 முதல் 2001-02 வரையிலான 50 ஆண்டுகளுக்கான பழைய வரி மற்றும் தண்டத் தொகை நிலுவையான சுமார் 2,810 கோடி ரூபாய் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

1951-52 முதல் 1990-91 வரையுள்ள காலத்திற்கான நிலுவைகள் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம் ஆகியவற்றின்கீழ் மொத்தம் சுமார் ரூ.98.71 கோடி நிலுவையில் உள்ளது. பல்லாண்டுகளாக நடவடிக்கைகள் மேற்கொண்டும் நொடித்துப் போன வணிகர்களிடமிருந்து நிலுவையை வசூல் செய்வதற்கு வாய்ப்பு இல்லாத நிலையில், 1951-52 முதல் 1990-91 வரையிலான கால அளவில் உள்ள நிலுவைத் தொகையாக சுமார் ரூ.98.71 கோடி உள்ளது. அத்தகைய நலிந்த வணிகர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இந்தத் துறையில் இதுவரை எடுத்திராத முடிவாக நமது ஒப்பற்றத் தலைவர் கலைஞர் தலைமையில் நடக்கும். சமுதாயத்தின் அனைத்து பிரிவினரின் நலனில் அக்கறை காட்டும் அரசு இந்த நிலுவைத் தொகையான ரூ.98.71 கோடியை தள்ளுபடி செய்ய முடிவெடுத்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இத்தள்ளுபடி திட்டத்திற்கு கீழ்க்கண்ட இனங்கள் பொருந்தாதவை ஆகும்:



2008 ஏப்ரல் 29]

(i) வரி விதிப்பு அல்லது வரி வசூல் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள இனங்கள்.

(ii) வரி வசூலிப்பிற்காக அசையாச் சொத்துக்கள் கையகப்படுத்தப்பட்ட இனங்கள்.

(iii) 31-3-2002-க்கு பின்னர் வணிகம் நிறுத்தப்பட்ட இனங்கள்.

இத்தள்ளுபடி திட்டம் குறித்து தக்க அரசாணை வெளியிடப்படும்.

(II) 1991-1992 முதல் 2001-2002 வரையுள்ள காலத்திற்கான நிலுவைகள் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம் ஆகியவற்றின்கீழ் மொத்தம் ரூபாய் 2,711.36 கோடி நிலுவை உள்ளது. 1-4-2002-க்கு முந்தைய நிலுவைகளை வசூலிக்க பலவித நடவடிக்கைகளை வணிக வரித் துறை மேற்கொண்டும், வசூலிக்க இயலாமல் உள்ளது. வணிகர்கள் மேல் உத்தேச வரிவிதிப்பின் அடிப்படையில் விதிக்கப்பட்ட அதிக வரியையும், தண்டத் தொகையையும் மற்றும் அதற்குரிய 24 சதவிகித வட்டியையும் வணிகர்கள் செலுத்த இயலாத நிலை உள்ளது. நிதிநிலை அறிக்கையில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள ஒரே முறை தீர்வுத் திட்டத்திற்குச் செயல் வடிவம் கொடுக்கும் வகையில் 1-4-2002-க்கு முன்னர் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டங்களின்கீழ் விதிக்கப்பட்ட வரி கேட்பு செய்யப்பட்ட (Demand raised) இனங்களுக்குப் பொருந்தும் :

(i) முழுவதும் உத்தேச வரி விதிப்பு முறையில் (Best of Judgment cases) நிலுவையில் வரிவிதிக்கப்பட்ட இனங்களில் மூன்றில் ஒரு பங்கு, அதாவது 33.33 சதவிகித வரியும், அதன்மீது 6 சதவிகித குறைந்த வட்டியும் உள்ள வரித் தொகையில் செலுத்தினால் போதுமானது.

(ii) மாதாந்திரப் படிவங்களில் அறிவித்த வரித் தொகைக்கு மேல் விதிக்கப்பட்ட நிலுவை வரித் தொகையிலும் 33.33 சதவிகித வரியும், அதன்மீது 6 சதவிகித குறைந்த வட்டித் தொகையும் செலுத்தினால் போதும்.

(iii) மாதாந்திரப் படிவங்களின்படி, வணிகரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு (admitted tax as per return) நிலுவையில் உள்ள வரித் தொகை முழுவதையும் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தும் தொகைக்கு 6 சதவிகித குறைந்த வட்டித் தொகை மட்டுமே செலுத்தினால் போதும்.

மேற்கண்டவாறு வரி செலுத்தும் மூன்று இனங்களிலும், எஞ்சிய வரி மற்றும் வட்டித் தொகை தள்ளுபடி செய்யப்படும். இவ்வினங்களில் தண்டத் தொகை (penalty) முழுவதும் தள்ளுபடி. செய்யப்படும். இந்த ஒரே முறை தீர்வுத் திட்டம் கீழ்க்கண்ட இனங்களுக்கும் பொருந்தும்:

(i) சட்டத்தில் குறிப்பிடப்படும் நாளில் அல்லது வரி வசூல் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இல்லாத இனங்கள்.

(ii) நிறுத்தப்பட்ட அல்லது நடைபெறுகின்ற அனைத்து வணிக நிறுவனங்கள்.

(iii) வரி வசூலிப்பிற்காக அசையாச் சொத்துக்கள் கையகப்படுத்தப்பட்ட இனங்கள்.

(iv) வரி தள்ளிவைப்பு விதிகள் மீறப்பட்ட இனங்கள் (deferral rules violation cases).

மேற்படி ஒரே முறை தீர்வுத் திட்டம் குறித்து தேவையான சட்டம் இயற்றப்படும்.

**(III)** மகளிர் சமையலறையில் பயன்படுத்தும், மிளகாய் வத்தல், புளி, தனியா, மஞ்சள், பெருங்காயம் போன்ற பொருட்களுக்கு விற்பனைத் தொகையின் அடிப்படையில், மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு வரி விலக்களிக்கப்பட்ட பொருட்களுடன் மகளிர் சமையலுக்குப் பயன்படுத்தும் கடுகு, சோம்பு மற்றும் வெந்தயம் ஆகியவற்றையும் சேர்த்து வரி விலக்களிக்கப்படும். மேற்கண்ட பொருட்களுக்கு தற்பொழுது 4 சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது. இது குறித்து அறிவிக்கை வெளியிடப்படும்.

**(IV)** மதிப்புக் கூட்டு வரி விதிப்பை மேலும் எளிமைப்படுத்தவும் முறைப்படுத்தவும், தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் 2006 மற்றும் அதன் விதிகளில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என 2008-2009 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிவிப்புக்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில், பல்வேறு வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகளுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டும், வரி விதிப்பு நிர்வாகத்தில் காணப்படும் நடைமுறை சங்கடங்களைக்





களைந்திடும் நோக்கத்துடனும் முதற்கட்டமாக சில அத்தியாவசிய சட்ட மற்றும் விதித் திருத்தங்கள் கொண்டு வரப்படும்.

**(V)** 2005-2006 ஆம் ஆண்டு வரையிலான வரி விதிப்புகளை முடிந்ததாகக் கருதும் வரி விதிப்புகளாக (deemed assessment) முடிவு செய்ய தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் சட்டப் பிரிவு (Section 12-C) கொண்டுவரப்பட்டது. 1-1-2007 முதல் மதிப்புக் கூட்டு வரி நடைமுறைப்படுத்தப்பட்டு அச்சட்டத்தில் அனைத்து வரி விதிப்புகளும் வணிகர்களால் தாக்கல் செய்யப்படும் படிவங்களை ஏற்றுக்கொண்டு ஆண்டின் முடிவில் சுய வரி விதிப்பாகக் கருதப்பட்டு வரி விதிப்பாணை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. அதனால் 1-1-2007 முதல் 31-3-2007 முடிய உள்ள மதிப்புக் கூட்டு வரி விதிப்புகள் அனைத்தும் சுய வரி விதிப்பு முறையின்கீழ் வரி விதிப்புச் செய்யப்பட உள்ளது. அதே போன்று, 1-4-2006 முதல் 31-12-2006 முடிய உள்ள காலத்திற்கும் எளிமையான வகையில் வரி விதிப்புகளை முடிந்ததாகக் கருதும் வரி விதிப்புகளாக (deemed assessment) முடித்திட வகை செய்ய தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில் உரிய சட்டத் திருத்தம் கொண்டு வரப்படும்.

**(VI)** உள் மாநிலத்தில் பொருட்களைக் கொள்முதல் செய்து உள்மாநிலத்திலேயே விற்பனை செய்யும் வணிகர்களின் ஆண்டு விற்பனைத் தொகை ரூ.50 இலட்சத்திற்குள் இருந்தால் அவர்கள் 0.5% இணக்க வரி செலுத்துவதற்கான விருப்பத்தை (option) மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும் என்று சட்டத்தில் உள்ளது. ஆனால், ஆண்டு விற்பனைத் தொகை ரூ.10 இலட்சத்தைத் தாண்டும் வணிகர்களுக்கும் புதிதாக வணிகம் துவங்கும் வணிகர்களுக்கும் அவர்கள் விருப்பம் (option) தெரிவிக்க காலவரம்பு நிர்ணயிக்கப்படவில்லை. ஆகவே, உள் மாநிலத்தில் பொருட்களைக் கொள்முதல் செய்து உள் மாநிலத்திலேயே விற்பனை செய்யும் வணிகர்களின் முந்தைய ஆண்டு விற்பனைத் தொகை ரூபாய் 50 இலட்சத்திற்குள், இருந்தால் அவர்கள் இணக்க வரி விதிப்பின்கீழ் வரி செலுத்துவதற்கான விருப்பத்தை (option) ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 30 ஆம் தேதிக்குள் தெரிவிக்க வேண்டும் எனவும், புதிய வணிகராயின் வணிகம் துவங்கிய 30 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும் எனவும், 2008-2009 ஆம் ஆண்டிற்கு மே 31 ஆம் தேதிக்குள் தெரிவிக்க வேண்டும் எனவும் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படும்.

**(VII)** இணக்க வரி விதிப்பு முறையின்கீழ் விற்பனைத் தொகை ரூ.50 இலட்சம் மற்றும் அதற்கு மேற்பட்டால், விற்பனைத் தொகை ரூ.50 இலட்சத்திலிருந்து மதிப்புக் கூட்டு வரி சட்ட வரி விகிதங்களின்படி வரி செலுத்த வேண்டும். விற்பனைத் தொகை வரம்பான ரூ.50 இலட்சம் எட்டுவதற்கு முந்தைய 90 நாட்களுக்குள் வாங்கி கைவசமுள்ள இருப்புச் சரக்கின் (closing stock) மீது செலுத்திய வரிக்கான உள்ளீட்டு வரி வரவு (input tax credit) மட்டும் எடுத்துக்கொள்ள அனுமதித்து சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படும்.

**(VIII)** தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில், பிரிவு 28A-ன்கீழ் பொருட்களின் வரிவிகிதம் குறித்த தெளிவுரைகளை பதிவு பெற்ற வணிகர்கள் கோரினால், அவ்வாறான தெளிவுரைகளை வழங்க வணிக வரி ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்திலும் பதிவு பெற்ற வணிகர்களுக்கு வரிவிகிதம் பற்றிய சட்ட பூர்வமான விளக்கம் (statutory clarification) வழங்குவதற்கு சிறந்த முறையில் பரிசீலிக்கப்பட்டு உரிய சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படும்.

**(IX)** மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில் வரி செலுத்தும் வணிகர்கள் மட்டுமே மாதாந்திரப் படிவங்கள் தாக்கல் செய்ய விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், வரி விதிப்பு வரம்பிற்குக் கீழ் விற்பனைத் தொகை உள்ள வணிகர்கள் மற்றும் வரி விலக்களிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்யும் வணிகர்களுக்கும் படிவங்கள் ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் அனைத்து பதிவு பெற்ற வணிகர்களும் படிவங்கள் தாக்கல் செய்ய வேண்டும் என்ற நிலை இருந்தது. வரி செலுத்தும் வணிகர்களின் உள்ளீட்டு வரவு கேட்பினை சரிபார்க்கும் பொருட்டு வரி விதிப்பிற்கு உட்படாத வணிகர்கள் வருடாந்திரப் படிவம் (annual return) ஒவ்வொரு ஆண்டும் மே, 20 ஆம் தேதிக்குள் தாக்கல் செய்ய உரிய விதித் திருத்தம் மேற்கொள்ளப்படும்.

**(X)** வரி விலக்களிக்கப்பட்ட (exempted) பொருட்களையும் வரி விதிப்பிற்கு உட்பட்ட (taxable) பொருட்களையும் தயாரிக்கும் இயந்திரங்கள் போன்ற மூலதனப் பொருட்களுக்கு (capital goods) உள்ளீட்டு வரி வரவினை (input tax credit) விகிதாசார அடிப்படையில் பிரித்து உள்ளீட்டு வரி வரவு அளித்திட புதிய கணக்கீட்டு முறை கொண்டு வர விதித் திருத்தம் மேற்கொள்ளப்படும்.



## இணைப்பு–V

(167ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

## புதிய அறிவிப்புகள், 2008–2009

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலுடன் 2008-2009 ஆம் ஆண்டுக்கான புதிய அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.*

**சீர்மரபினர் நல வாரியம்**

1. சீர்மரபினர் சமூக, கல்வி, பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்புகளில் முன்னேற்றம் அடைவதைக் கண்காணிக்கவும் அவர்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுக்க அரசுக்கு ஆலோசனைகளை வழங்கவும், சீர்மரபினர் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 18 வயது முதல் 60 வயதுக்குட்பட்ட அமைப்பு சாரா தொழிலில் ஈடுபட்டுள்ள சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த தொழிலாளர்கள் இவ்வாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டு, அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவது போன்று, சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும், "விபத்து ஈட்டுறுதித் திட்டம், கல்வி உதவித் தொகைத் திட்டம், திருமண உதவித் தொகைத் திட்டம், மகப்பேறு உதவித் தொகைத் திட்டம் மற்றும் முதியோர் ஓய்வு ஊதியத் திட்டம்" ஆகிய நலத் திட்டங்களின்கீழ் உதவித் தொகை வழங்கப்படும்.

**கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு கணினி வசதி ஏற்படுத்திக் கொடுத்தல்**

2. 2007-2008 ஆம் ஆண்டில் நிலை உயர்த்தப்பட்ட 3 அரசு கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப் பள்ளிகளுக்கும், 3 அரசு கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் தலா 5 கணினிகள் மற்றும் ஓர் அச்சுப்பொறி இயந்திரம் ரூ.12.60 இலட்சம் செலவில் நடப்பாண்டில் வழங்கப்படும்.

11-98—18

[2008 ஏப்ரல் 29

**கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு வகுப்பு அறைகள் மற்றும் ஆய்வுக் கூடங்கள் கட்டுதல்**

3. 2008-2009 ஆம் ஆண்டில் அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்த 7 பள்ளிகளில் 19 வகுப்பறைக் கட்டடங்களும், 4 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ஆய்வுக் கூடங்களும் முறையே ரூ.66.50 இலட்சம் மற்றும் ரூ. 51.68 இலட்சம் செலவில் கட்டப்படும்.

**கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் தரம் உயர்த்துதல்**

4. மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் கள்ளர் சீரமைப்புத் துறையின் கீழுள்ள பள்ளிகளில், 3 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும்.

**கல்வி உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பினை உயர்த்துவது**

5. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின வகுப்பைச் சார்ந்த மாணவ/மாணவியர்கள் பொருளாதார சிரமமின்றி கல்வி கற்பதற்கு ஏதுவாக பள்ளி படிப்பு உதவித் தொகை, பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை மற்றும் இலவசக் கல்வி ஆகிய திட்டங்கள் இத்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்குறிப்பிட்ட கல்வி உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோரின் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.25,000/- ஆக இருந்ததை 2000 ஆம் ஆண்டில் தி.மு.க. அரசுதான் ரூ. 50,000/-ஆக உயர்த்தியது. மக்களின் வருமானம் அதிகரித்துள்ளதைக் கருத்திற் கொண்டும், அதிக மாணவர்கள் பயனடையும் பொருட்டும் 2008-2009 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் வருமான உச்சவரம்பு வரும் கல்வி ஆண்டு முதல் ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ளது.

**பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட / சீர்மரபினர் இன மாணவ, மாணவிகளுக்குப் பரிசு வழங்கும் திட்டம்**

6. 2008-2009 ஆம் ஆண்டு முதல், பரிசுகள் வழங்கும் திட்டம் திருத்தி அமைக்கப்பட்டு பரிசுகளின் எண்ணிக்கையும், பரிசுத் தொகையும் அதிகரிக்கப்பட்டுள்ளன.



2008 ஏப்ரல் 29]

**மாநில அளவிலான பரிசுகள்**

6 (i) 2008-2009 ஆம் ஆண்டு முதல் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தைப் பெறும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்குமாக மொத்தம் 4 முதல் பரிசுகள் தலா ரூ.10,000/- வீதமும், 4 இரண்டாம் பரிசுகள் தலா ரூ.8,000/- வீதமும், 4 மூன்றாம் பரிசுகள் தலா ரூ.6,000/- வீதமும் வழங்கப்படும்.

6 (ii) அதேபோல், 10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தைப் பெறும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும், மிகப் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்குமாக மொத்தம் 4 முதல் பரிசுகள் தலா ரூ.5,000/- வீதமும், 4 இரண்டாம் பரிசுகள் தலா ரூ.4,000/- வீதமும், 4 மூன்றாம் பரிசுகள் தலா ரூ.3,000/- வீதமும் வழங்கப்படும்.

**மாவட்ட அளவிலான பரிசுகள்**

6 (iii) 2008-2009 ஆம் ஆண்டு முதல் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தைப் பெறும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும் மற்றும் மாணவி ஒருவருக்கும், மிகப் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்குமாக 4 முதல் பரிசுகள் தலா ரூ.3,000/- வீதமும், 4 இரண்டாம் பரிசுகள் தலா ரூ.2,000/- வீதமும், 4 மூன்றாம் பரிசுகள் தலா ரூ.1,000/- வீதமும் வழங்கப்படும்.

6 (iv) அதேபோன்று 10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தைப் பெறும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்குமாக மொத்தம் 4 முதல் பரிசுகள் தலா ரூ.1,500/- வீதமும், 4 இரண்டாம் பரிசுகள் தலா ரூ.1,000/- வீதமும், 4 மூன்றாம் பரிசுகள் தலா ரூ.500/- வீதமும் வழங்கப்படும்.

[2008 ஏப்ரல் 29

## பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு

7. நடப்பு ஆண்டு முதல் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த பரிசுத் தொகை ரூ.3,000/-லிருந்து ரூ.5,000/-ஆக உயர்த்தப்பட்டு, பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த 2 மாணவர்களுக்கும், 2 மாணவிகளுக்கும் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த 2 மாணவர்களுக்கும், 2 மாணவிகளுக்கும் அப்படிப்பிற்கான காலத்திற்கு, பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## தந்தை பெரியார் நினைவுப் பரிசு

8. நடப்பு ஆண்டிலிருந்து இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த பரிசுத் தொகை ரூ.3,000/-லிருந்து ரூ.5,000/-ஆக உயர்த்தப்பட்டு, பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த 2 மாணவர்களுக்கும், 2 மாணவிகளுக்கும், மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த 2 மாணவர்களுக்கும் 2 மாணவிகளுக்கும் தலா ரூ.5,000/- வீதம் தந்தை பெரியார் நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## சிறுபான்மையின மாணவ, மாணவிகளுக்குப் பரிசு வழங்கும் திட்டம்

9. 2007-2008 ஆம் ஆண்டுவரை பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள சிறுபான்மையின மாணவ, மாணவிகள் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகளுடன் போட்டியிட்டு பரிசு பெறவேண்டிய நிலை இருந்தது. நடப்பாண்டு முதல் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்குத் தனியாக பரிசுகள் வழங்கும் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது.

## சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்குக் கல்விக் கடன்

10. மத்திய/மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளில் உடனடி வேலைவாய்ப்பிற்குரிய 5 ஆண்டுகளுக்கு மிகாத படிப்பு பயிலும் சிறுபான்மையினத்தைச் சேர்ந்த 16 முதல் 32 வயதிற்கு உட்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக 3 சதவீத வட்டி வீதத்தில் கல்விக் கடன் வழங்கப்படும்.



2008 ஏப்ரல் 29]

## 11 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு இலவச மிதி வண்டி வழங்கும் திட்டம்

11. அரசு, அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக உதவிபெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்புப் பயிலும் மாணவ மாணவிகளுக்கு இலவச மிதி வண்டிகள் வழங்கும் திட்டம் நடப்பாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்காக நடப்பாண்டில் ரூ.80.74 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரும் கல்வியாண்டின் தொடக்கத்திலேயே மிதி வண்டிகள் வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

## புதிய விடுதிகள் திறப்பு

12. தற்போது 65,402 பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் பொருளாதார சிரமமின்றி தங்கிப் பயில, மாநிலத்தில் 1,181 விடுதிகள் இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றன. பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின வகுப்பைச் சார்ந்த கூடுதலான மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் வரும் ஆண்டில் மேலும் 25 புதிய விடுதிகள் தொடங்கப்படும்.

## இஸ்லாமிய இன பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகளுக்கான புதிய விடுதிகள் கட்டுதல்

13. கிராமப் பகுதிகளிலிருந்து வரும் இஸ்லாமிய இனத்தைச் சார்ந்த மாணவிகள் நகரங்களில் தங்கிக் கல்வி தொடர அவர்களுக்குத் தனியாக விடுதிகள் வேண்டுமென்று வரப்பெற்ற கோரிக்கைகளை ஏற்று 5 புதிய விடுதிகள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## விடுதி மாணவர்களுக்கான உணவுக் கட்டணத்தை உயர்த்துவது

14. பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின வகுப்பைச் சார்ந்த மாணவ/மாணவியர்கள் தங்கிப் பயில உணவு மற்றும் உறையுள் இத்துறையால் நடத்தப்படும் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் இலவசமாக அளிக்கப்பட்டு வருகிறது. 1998 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்படாமல் இருந்த கல்லூரி மாணவர்களுக்கான மாதாந்திர உணவுக் கட்டணத்தையும், 2001 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்படாமல் இருந்த பள்ளி மாணவர்களுக்கான மாதாந்திர உணவுக் கட்டணத்தையும் கடந்த ஆண்டு இந்த அரசு

உயர்த்தி வழங்கியது. இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு மாதாந்திர உணவுக் கட்டணத்தை மேலும் ரூ.50 அதிகரித்து, கல்லூரி விடுதி மாணவர்களுக்கு மாதம் ரூ.550/- வீதமும், பள்ளி விடுதி மாணவர்களுக்கு மாதம் ரூ. 450/- வீதமும் வரும் கல்வி ஆண்டு முதல் வழங்கப்படும்.

**விடுதிகளுக்கான கட்டடம் கட்டுவது**

15. இத்துறையின்கீழ் செயல்பட்டு வரும் மொத்த விடுதிகள் 1181-இல் 773 விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 240 விடுதிகளுக்கான சொந்தக் கட்டடம் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் உள்ளன. மீதமுள்ள 168 விடுதிகள் தற்போது வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், நடப்பாண்டில் ரூபாய் 12.5 கோடி செலவில் 25 விடுதிகளுக்கு அனைத்து வசதிகளுடன்கூடிய சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

**சிறு குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்திக்கொள்ள மானியத்துடன்கூடிய கடன் வழங்கும் திட்டம்**

16. பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின வகுப்பைச் சார்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்துடன்கூடிய கடன் வழங்கும் திட்டம் 2007-08 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் நடப்பாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்காக ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினருக்கான திறன் வளர்ப்புப் பயிற்சித் திட்டம்**

17. சமூக மற்றும் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த இளைஞர்கள் வேலைவாய்ப்பிற்கான திறன் பெற்றிடவும், வருவாய் ஈட்டும் சுய தொழில் தொடங்கிடவும் இத்துறை மூலமாக பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. 2008-09 ஆம் ஆண்டில் 10,000 இளைஞர்கள் பயன்பெறும் வகையில் ரூ.10.00 கோடி செலவில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



**சிறுபான்மையினருக்கான திறன் வளர்ப்புப் பயிற்சி**

18. பெரும்பான்மையின மக்களுக்கு நிகராக சிறுபான்மையின மக்கள் சுய வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்ளவும், வேலை வாய்ப்புகளைப் பெற்றிட ஏதுவாக தங்களது திறனை மேம்படுத்திக்கொள்ளவும், தொழில்நுட்ப சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. 2008-09 ஆம் ஆண்டில் 5,000 சிறுபான்மையின மகளிர் மற்றும் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 2.50 கோடி செலவில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்தில் சேர்வதற்கான வருமான வரம்பினை உயர்த்துதல்**

19. வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்தில் தற்போதுள்ள வருமான வரம்பு ரூ. 50,000-லிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தப்படும்.

**சிறுபான்மையினருக்கான தொழில் கடன்**

20. சிறுபான்மையினர் சுய தொழில்மூலம் தங்களது பொருளாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் குறைந்த வட்டியில் கடன் வழங்குகிறது. 2008-09 ஆம் ஆண்டில் 25,000 சிறுபான்மையினர் பயன்பெறும் வகையில் ரூ. 40 கோடி அளவில் கடன் வழங்கப்படும்.

**சிறுபான்மையினருக்கான சிறு வணிகக் கடன் உச்சவரம்பு அதிகரித்தல்**

21. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்மூலம் இதுவரை நபர் ஒருவருக்கு ரூ. 10,000/-க்கு மிகாமல் வழங்கப்பட்டு வந்த சிறுவணிகக் கடன் நடப்பாண்டில் இருந்து ரூ.25,000/- வரை வழங்கப்படும்.

**மறுவாழ்வுத் திட்டம்**

22. இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டு, அன்றாட வருவாயின்றிச் சிரமத்திற்குள்ளாகும் சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த குடும்பத்தினர் மீண்டும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவும், சிறு குற்றங்களுக்காகத் தண்டனை பெற்று விடுதலையாகி வரும் சிறுபான்மையினர், சமுதாயத்தில் கண்ணியமான வாழ்க்கை நடத்திடவும், மளிகைக் கடை நடத்துதல், சிற்றுண்டி விடுதி நடத்துதல், தேநீர் வியாபாரம் செய்தல் போன்ற சிறு தொழில்கள்

[2008 ஏப்ரல் 29

தொடங்குவதற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.10,000 வரை நிதியுதவி வழங்கும் திட்டம் இந்த ஆண்டு முதல் புதிதாகச் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் 2008-2009 ஆம் ஆண்டில் 300 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சிறுபான்மையினருக்கு மைய அரசு கல்வி உதவித் தொகை**

23. பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள சிறுபான்மையினத்தவரான முஸ்லீம்களும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள கிறித்தவர்களும் அந்தந்த வகுப்புகளுக்கு இத்துறையால் வழங்கப்படும் பள்ளிப் படிப்பு உதவித் தொகை, பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை மற்றும் இலவச கல்வித் திட்டம் ஆகிவற்றின்கீழ் வழங்கப்படும் அனைத்து கல்வி உதவித் தொகைகளையும் பெற்று பயனடைந்து வருகின்றனர். இவைத் தவிர சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கு மத்திய அரசு அறிவித்துள்ள கல்வி உதவித் தொகைத் திட்டங்களையும் முனைப்புடன் இவ்வரசு செயல்படுத்தி வருகிறது.

மத்திய அரசு அறிவித்துள்ள தகுதி அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு 2007-08 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்துள்ள 1,212 சிறுபான்மையின மாணவ மாணவிகளுக்கு மத்திய அரசு நிதியுதவியுடன் ரூ. 2 கோடி அளவில் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது. அதே போன்று, பள்ளி மேற்படிப்பு உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் 2007-08 ஆம் ஆண்டில் மத்திய அரசு நிதியுதவியுடன் 2,876 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.95 இலட்சம் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது.

நடப்பாண்டில் இத்திட்டங்களின்கீழ் மேலும் கூடுதலான சிறுபான்மையின மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதியுதவி பெற்றுச் செயல்படுத்தப்படும்.

**விடுதி மாணவ, மாணவிகளுக்கு தட்டு மற்றும் டம்ளர்கள் வழங்குதல்**

24 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் 65,402 மாணவ/மாணவிகளுக்கு உணவு உண்பதற்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்கள் ரூ. 49.05 இலட்சம் செலவில் வழங்கப்படும்.



2008 ஏப்ரல் 29]

**கல்லூரி விடுதி மாணவிகளின் பயன்பாட்டிற்கு கணினி வழங்குதல்**

25. 2008-09 ஆம் ஆண்டில் பின்தங்கியுள்ள ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள 25 பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவிகள் கணினியின் பயன்பாடுகளை அறிந்துகொள்ளவும், பாடக் குறிப்புகளைத் தெரிந்துகொள்ளவும் ஏதுவாக ரூ. 63.00 இலட்சம் செலவில் தலா 5 கணினிகள் வழங்கப்படுவதுடன், பயிற்றுநர்களும் நியமிக்கப்படுவார்கள்.

**பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம்**

26. அலுவலகங்களை மின்னாளுமைப்படுத்தும் வகையில் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககத்திற்குக் கூடுதலாக 5 கணினிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் அவற்றிற்கான அறைகலன்கள் ரூ. 2.50 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

27. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககத்தில் நேர்முக உதவியாளர், சிறப்பு அலுவலர், கணக்கு அலுவலர் ஆகியோருக்கு நேரடித் தொலைபேசி வசதி ரூ.0.63 இலட்சம் செலவில் செய்து தரப்படும்.

**சிறுபான்மையினர் நல இயக்ககம்**

28. சிறுபான்மையினர் நல இயக்ககத்திற்குத் தொலைபேசி இணைப்புடன்கூடிய நிகரி இயந்திரம் ரூ. 0.15 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

29. சிறுபான்மையினர் நல இயக்ககத்திற்கு டூப்ளெக்ஸ் வசதியுடன்கூடிய நகலெடுக்கும் இயந்திரம் ரூ. 1.40 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

30. சிறுபான்மையினர் நல இயக்ககத்திற்கு இரண்டு புதிய தொலைபேசி இணைப்புகள் ரூ.1.14 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

31. சிறுபான்மையினர் மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களைக் கண்காணிக்கவும், ஆய்வு மேற்கொள்ளவும், திட்டங்களைத் துரிதமாகச் செயல்படுத்தவும், சிறுபான்மையினர் நல இயக்ககத்தின் இரண்டாம் நிலை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக ரூ. 6.14 இலட்சம் செலவில் புதிய ஈப்பு வழங்கப்படும்.

[2008 ஏப்ரல் 29

**மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம்**

32. மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககத்திற்கு 6 கணினிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் 3 அச்சுப் பொறிகள் ரூ. 2.70 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

33. கள்ளர் சீரமைப்பு மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகத்திற்கு மின்னாளுமைத் திட்டத்தின்கீழ் 3 கணினிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் 1 அச்சுப் பொறி ரூ. 1.30 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

34. மாவட்ட வருவாய் அலுவலர் (கள்ளர் சீரமைப்பு), மதுரை அவர்களுக்கு பொலிரோ ஈப்பு ரூ. 5 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

35. மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககத்தின் நேர்முக உதவியாளர் மற்றும் கணக்கு அலுவலருக்குத் தொலைபேசி இணைப்பு செய்து தர ரூ.0.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

36. மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககத்திற்கு அகன்ற அலைவரிசையுடன்கூடிய இணைய தள இணைப்பு ரூ. 0.15 இலட்சம் செலவில் செய்து தரப்படும்.

**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்**

37. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணைய அலுவலகத்திற்கு 5 குளிர்சாதன பெட்டிகள், கணினி / அச்சுப் பொறிகள் மற்றும் நிகரி வாங்குவதற்கு முறையே ரூ. 1.59 இலட்சம், ரூ. 1.03 இலட்சம் மற்றும் ரூ.0.08 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**மாநில ஹஜ் குழு**

38. தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் அலுவலகச் செயல்பாட்டிற்காக நகலெடுக்கும் இயந்திரம் வாங்குவதற்கு ரூ. 1 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.



2008 ஏப்ரல் 29]

**பள்ளிவாசல்கள் மற்றும் தர்காக்களின் பழுதுபார்ப்புக்கு மானியம் வழங்குதல்**

39. போதிய வருவாய் இல்லாத மசூதிகள் மற்றும் தர்காக்களின் கட்டடங்கள் மிகப் பழமையாகவும், பழுதடைந்த நிலையிலும் உள்ளன. அவற்றின் பழுதுபார்ப்புக்காக 2008-09 ஆம் ஆண்டில் வக்ஃபு வாரியத்திற்கு ரூ. 60 இலட்சம் நிதி வழங்கப்படும்.

**வக்ஃபு வாரிய ஆவணங்களை இலக்கப் பதிவாக்கம் செய்தல்**

40. வக்ஃபு நிறுவனங்களின் சொத்து, நிர்வாகம் மற்றும் இதர விவரங்கள் அடங்கிய ஆவணங்களை காலப்போக்கில் அழிந்து விடாமல் பாதுகாக்க, அவற்றை இலக்கப் பதிவு செய்வதற்காக (Digitalise) வக்ஃபு வாரியத்திற்கு ரூ.5 இலட்சம் வழங்கப்படும்.

**மணவிலக்குப் பெற்ற முஸ்லீம் பெண்களுக்கு வாழ்க்கைச் செலவு மானியம் வழங்குதல்**

41. நீதிமன்ற ஆணையின்படி மணவிலக்குப் பெற்ற முஸ்லீம் பெண்களுக்கு வாழ்வாதாரச் செலவு வழங்க தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு ரூ. 1 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

**உலமா ஓய்வூதியம்**

42. இதுவரை உலமா ஓய்வூதியம் பெறும் பயனாளிகள் எண்ணிக்கை 2,200 ஆக இருந்ததை 2,400 ஆக உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கூடுதலாக 200 உலமா ஓய்வூதியதாரர்கள் மாதம் ரூ. 750/- ஓய்வூதியமாகப் பெறுவார்கள்.

**வக்ஃபு வாரிய அலுவலகத்திற்கு இருக்கை வசதிகள் செய்து தருதல்**

43. தமிழ்நாடு வக்ஃபு வாரிய அலுவலகத்திற்கு வருகை புரியும் பார்வையாளர்களுக்கு இருக்கை வசதி செய்து தருவதற்காக தேவையான நாற்காலிகள் வாங்குவதற்கு ரூ. 50,000/- வழங்கப்படும்.

V 21,3,1008
1008.51.1

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228384.
சென்னை-600 008

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Principal Secretary to Government and
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.